
பங்குனி 2023
3

# அபத்தம்



## சமர்ப்பணம்

தங்களைப் பற்றி எழுதப்பட்ட விமர்சனங்களை
'நாம் படிப்பதில்லை, படிக்க மாட்டோம்' என்று வீரசபதம் எடுத்து,
கழியறைக்குள் வைத்து வாசித்து சுயதுன்பம் துய்க்கும்

**இலக்கிய மேதகுக்களுக்கும், பெருந்தகைகளுக்கும்!**

# கொள்கைகளும் அதிகாரங்களும் சமூகப் பொறுப்பும்

மனிதர்கள் எல்லோருக்குமே ஏதோ ஒரு அறநெறி இருக்க வேண்டும். மதங்களோ, தத்துவங்களோ காட்டிய அறநெறிகளை விட, சுயநலங் கடந்து, தான் வாழும் சமூக நலன் சார்ந்த அறநெறி ஒன்று, இன, குழு வேறுபாடுகளுக்கும் அப்பால், குறைந்தபட்சம் சக மனிதனை சமமாக நினைக்கின்ற அளவுக்காவது, ஒவ்வொரு மனிதருக்கும் இருக்க வேண்டும் என்பது எப்போதுமே என் எதிர்பார்ப்பாக இருந்திருக்கிறது. சமூக நீதியும், தன் சமூகப் பொறுப்பும் சார்ந்த இந்த அறநெறிதான் மனிதர்களுக்கு அடிப்படைப் பண்பாகவும் இருக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன்.

பல இடங்களில் இதனால் ஏமாற்றங்களுக்கு உள்ளாகியிருக்கிறேன்.

நான் வேலை செய்த நிறுவனத்தில் தொழிற்சங்கப் போராட்டத்திற்கு தலைமை தாங்கி, வேலை பறிபோகக் கூடிய ஆபத்துக்களின் மத்தியிலும் அதை நடத்திய போது, தன்னைப் போன்ற சக தொழிலாளர்கள் மீது வெறுப்பும், அடிமைகளுக்கான எஜமான விசுவாசமும் கொண்ட பல ஈனர்களைக் கண்டு வெட்கமும் துயரமும் அடைந்திருக்கிறேன். தங்களைப் போன்றே சுரண்டப்பட்டு அநீதிக்குள்ளாகும் தொழிலாளர்களுக்கு எதிராக, தங்களுடைய விசுவாசத்திற்கு பிரதியுபகாரம் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில், எஜமானர்களுக்கு உளவு பார்த்தவர்கள், எதிராகச் செயற்பட்டவர்கள் எல்லாம் இறுதியில் எங்கள் போராட்டத்தினால் தவிர வேறெந்த வழியிலும் கிடைத்திருக்க முடியாத, அவர்கள் நினைத்துப் பார்த்திருக்கக் கூட முடியாத நலன்களை, நாங்கள் போராடிப் பெற்ற போது, எந்த வெட்கமும் இன்றி அனுபவித்துக் கொண்டார்கள். சிலர் தாங்களும் போராடினோம் என்று உரிமையும் கோரிக் கொண்டார்கள்.

மற்ற நண்பர்களுக்கு, நான் இவர்களை அறநெறி இல்லாத மனிதர்கள், people without principles என்பதுண்டு.

இந்த அறநெறிகள் கூட, அதிகாரங்களிற்குள்ளும் அடக்குமுறைகளுக்குள்ளும் எப்போதுமே சாத்தியமாவதும் இல்லை.

வாயைத் திறந்தால் வாய்க்குள் வெடி விழும் என்ற வன்னிக் காட்டுச் சட்டத்தின் கீழ், வாயை மூடிக் கொண்டிருந்தார்கள் என்று, வெளிநாட்டில் வாழும் நான் எப்படிக் குற்றம் சாட்ட முடியும்?

பிரித்தாளும் தந்திரத்தின் கீழ் மனிதர்களைப் பிரித்து, பரஸ்பர வெறுப்பை உருவாக்கிய அமைப்பின் கீழ், பிறந்து வளர்ந்தவர்களில் பலர் அடிமை மனோபாவத்தில், எஜமானனைக் குஷிப்படுத்த தன் உடன்பிறப்புகளை காட்டிக் கொடுக்கும் இயல்பு கொண்டிருப்பதைக் கண்டிருக்கிறேன்.

எனது தொழிற்சங்கப் போராட்டத்தில் அவ்வாறான இயல்பு கொண்டிருந்தவர்களில் பலர், கரிபியன் நாடுகளில் தோட்ட

**ஜோர்ஜ் இ.குருஷ்சேவ்**

வேலைக்காக ஆங்கிலேயர்களால் கொண்டு வரப்பட்ட இந்திய வம்சாவளியினர் என்பது துயரமான விடயம். தங்கள் இனத்தினர் சமூகமாகவே தங்களுக்குள்ளேயே ஆளை ஆள் வெறுக்கும் இயல்பைக் கொண்டிருப்பதைப் பற்றி, என்னோடு வேலை செய்த ஒருவன் கூறியும் இருந்தான்.

அவர்கள் செய்த விடயங்கள், யாழ்ப்பாணிக் கணிப்பீட்டின்படி துரோகம் என்றிருந்தாலும், அவ்வாறானதொரு மூடப்பட்ட அடக்குமுறை அடிமைச் சூழலில் வளர்ந்தவர்களின் உலகத்தின் அறநெறி அவ்வாறானதாகத் தானே இருக்கும். அவ்வாறான மனநிலை கொண்டிருக்க வேண்டியவர்களாகத் தானே அவர்கள் வளர்க்கப்பட்டார்கள்.

அடிமைகளின் இயலாமையை, அவர்கள் போராடாமல் அடங்கி இருக்கிறார்கள் என்று, வெளியில் இருக்கும் நாங்கள் குற்றம் சாட்ட முடியாது. அதனால் தான் இவர்களின் செயற்பாடுகளால் எனக்கு வெட்கமும் துயரமும் வந்ததேயல்லாமல், கோபம் வந்ததில்லை.

ஆனால், அதிகாரத்திற்கு அடங்கிப் போய் மௌனமாக இருக்க நேரிட்டாலும், தன்னைப் போன்ற தன் சகமனிதர்களின் நலன்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் அளவுக்கு, அதிகாரத்தை ஆராதித்துப் புகழ்ந்து சுயநலன் அடையக் கூடாது என்பது ஒவ்வொரு மனிதனுக்குமான குறைந்தபட்ச அறநெறியாக இருக்க வேண்டும் என்பது என்றைக்கும் என் எதிர்பார்ப்பாகத் தான் இருக்கும்.

ஆனால், தன் சுயநலனுக்காக மற்றவர்களின் பிள்ளைகளைப் பலி கொடுப்பதைக் கூட நியாயப்படுத்தி, அந்த ஈனச்செயலைச் செய்கின்ற ஒரு அமைப்பின் தலைமையைப் போற்றிப் புகழ் பாடிய ஒரு சமூகத்திற்குள்ளால் தான் நானும் வந்திருக்கிறேன்.

நவீன உலகில் ஜனநாயக அரசியலில் ஆட்சியைப் பிடிப்பதற்காக கொள்கை முரண்பாடுகள் உள்ள கட்சிகள் போட்டி போடுகின்றன. எங்கள் அறநெறிகளோடு ஒத்துப் போகின்ற கட்சிகள் ஆட்சிக்கு வர வேண்டும் என்று விரும்பி அதைத் தெரிவு செய்வதற்கான ஜனநாயக அரசியல் உரிமையாக வாக்குரிமை இருக்கிறது.

ஆனால் பெரும்பாலும் அந்த ஜனநாயக தெரிவு என்பது, முழுமையாக எங்கள் அறநெறிக் கொள்கையோடு ஒன்றித்துப் போக முடியாதபடிக்கு, அரசியல் கட்சிகள் நடைமுறைச் சிக்கல்களையும், அதிகாரத் துஷ்பிரயோகங்களையும் கொண்டிருப்பதாலும், நாங்கள் முழுமையாக விரும்பும் கட்சிகள் ஆட்சியமைக்க சந்தர்ப்பம் இல்லாமல் இருப்பதாலும், வாக்களிப்பு என்பது எப்போதுமே lesser of two evils என்று, மோசமானதில் ஓரளவு நல்லதைத் தெரிவு செய்வதாகவே இன்றைக்கு இருந்து வருகிறது.

கொள்கைக்கும் அதிகாரத்திற்குமான வித்தியாசம் அவ்வாறானது தான். போராட்டங்களுக்கான கொள்கைகள் புனிதமானவை, தூய்மையானவை என்று நம்பப்பட்டாலும், அந்த போராட்ட அமைப்புகள் அதிகார மையங்களாகும்போது, அவை இன்னொரு பரிமாணம் அடைகின்றன. அதன் தலைமைக்குள் வரும் தனிமனிதர்கள் அதிகாரங்களை தக்க வைத்துக் கொள்ள துஷ்பிரயோகங்கள் செய்கிறார்கள். அதிகாரத்தைப் பயன்படுத்தி எந்தக் கூச்சமும் குற்ற உணர்வும் இல்லாமல், ஊழல் செய்து கொள்ளை அடித்து குடும்பங்களை வளப்படுத்துகிறார்கள்.

அதை எனது தொழிற் சங்கப் போராட்டத்தின்போது, நாங்கள் உதவி கேட்ட பெரும் தொழிற் சங்கத் தலைமைகளிடம் கூடக் கண்டிருக்கிறேன்.

இப்படியாக புனிதப் போராட்டங்கள் அதிகாரத்திற்காக தங்கள் ஆதரவாளர்களையே சிறைப் பிடிக்கவும், கொலை செய்யவும் தயங்குவதில்லை.

மக்கள் போராட்டத்திற்கும் அதிகாரத்திற்குமான வேறுபாடு அது தான்.

ஆட்சி மாற்றங்களிற்கான போராட்டங்கள் பெரும்பாலும் ஏமாற்றமாகவே முடிவதன் காரணமும் இதுதான்.

போராட்டங்களின் மூலம் ஆட்சியைக் கைப்பற்றியவர்கள், தங்களுக்கு எதிரான போராட்டங்களை விரும்புவதில்லை.

மதத் தலைமைப்பீடங்கள் கூட இவ்வாறான தனி மனித அதிகார துஷ்பிரயோகங்களுக்கு அப்பாற்பட்டவையாக இருப்பதுமில்லை.

“அவர்கள் செய்த விடயங்கள், யாழ்ப்பாணிக் கணிப்பீட்டின்படி துரோகம் என்றிருந்தாலும், அவ்வாறானதொரு மூடப்பட்ட அடக்குமுறை அடிமைச் சூழலில் வளர்ந்தவர்களின் உலகத்தின் அறநெறி அவ்வாறானதாகத் தானே இருக்கும். அவ்வாறான மனநிலை கொண்டிருக்க வேண்டியவர்களாகத் தானே அவர்கள் வளர்க்கப்பட்டார்கள்.

அடிமைகளின் இயலாமையை, அவர்கள் போராடாமல் அடங்கி இருக்கிறார்கள் என்று, வெளியில் இருக்கும் நாங்கள் குற்றம் சாட்ட முடியாது.”



**facebook: George RC**

**சமூக நீதி சார்ந்த கொள்கைப்பிடிப்பு என்பது அறம் சார்ந்தது, பொதுநலன் சார்ந்தது. அதை ஆதரிப்பது என்பது பெரும்பாலும் அதிகாரத்திற்கு எதிரானது தான். தன் சக மக்களுக்கு எதிரானதாக இருப்பதில்லை.**

**அரசியல் அமைப்புக்கான ஆதரவு என்பது அவ்வாறானது இல்லை. அது சுயநலம் சார்ந்தது. அந்த அரசியல் அமைப்பின் எதிர்த்தரப்பினரான சக மனிதர்களைப் பகைத்துக் கொள்வதற்கும், இழிபிறவிகளாக கருதுவதற்கும் வழி சமைக்கக் கூடியது. கலவரங்கள் இவ்வாறான மனநிலையால் தானே நடைபெறுகின்றன.**

ஒரு சமூக நலன் சார்ந்த கொள்கையைப் பின்பற்றுவதற்கும், அந்தக்கொள்கையைமுன்னெடுக்கும் அரசியல் அமைப்புக்கு ஆதரவாளர்களாக இருப்பதற்கும் நிறைய வித்தியாசங்கள் உள்ளன.

சமூக நீதி சார்ந்த கொள்கைப்பிடிப்பு என்பது அறம் சார்ந்தது, பொதுநலன் சார்ந்தது. அதை ஆதரிப்பது என்பது பெரும்பாலும் அதிகாரத்திற்கு எதிரானது தான். தன் சக மக்களுக்கு எதிரானதாக இருப்பதில்லை.

அரசியல் அமைப்புக்கான ஆதரவு என்பது அவ்வாறானது இல்லை. அது சுயநலம் சார்ந்தது. அந்த அரசியல் அமைப்பின் எதிர்த்தரப்பினரான சக மனிதர்களைப் பகைத்துக் கொள்வதற்கும், இழிபிறவிகளாக கருதுவதற்கும் வழி சமைக்கக் கூடியது. கலவரங்கள் இவ்வாறான மனநிலையால் தானே நடைபெறுகின்றன.

தமிழ்நாட்டு அரசியல் என்பது ஜனநாயக அரசியல்நெறிகளுக்கு அப்பாற்பட்ட பல கேவலங்களைத் தன்னகத்தே கொண்டது.

பெரியாரின் பகுத்தறிவு, சுயமரியாதை இயக்கத்தில் கவரப்பட்டவர்களில் கலை, இலக்கிய முக்கியஸ்தர்கள் பலர் இருந்தார்கள். இதனால் அது அரசியல் அதிகாரத்தை நோக்கி நகர்ந்த போது, இலக்கிய தரப்பில் பெரும் எதிர்ப்புகள் இருந்ததாக நினைவில்லை. ஆட்சியமைப்பது அனுகூலமானது தான் என்ற எண்ணமாக இருந்திருக்கலாம். இந்தி என்ற பகைவன், நாடகக் காதல் செய்து, தமிழன்னையை முறைதவறிக் கர்ப்பந் தரிக்க வைத்து, இனத்திற்கு அவமானம் ஏற்படுத்தி விடுவான் என்று பொதுவெளியில் உருவாக்கப்பட்ட பயமும் அந்த அரசு உருவாக்கத்திற்கு பயன்பட்டது.

அந்த நேரத்து தீவிர இலக்கியம் பார்ப்பனப் பெரும்பான்மையின் பிடிக்குள் இருந்ததால், எதிர்ப்புணர்வில் இருந்தாலும், வெளியே காட்டிக் கொள்ளாமல் உள்ளே குமுறிக் கொண்டும் இருந்திருக்கலாம்.

அண்ணாவின் மறைவின் பின்னான திராவிட அரசியல் முழுமையாக, சுயமரியாதைச் சிந்தனையிலிருந்து விலகி, கேலிக்கூத்து நிலை வரை சென்ற போதும், தமிழ்நாட்டில் இலக்கியவாதிகள், ஊடக வியலாளர்கள் அந்த ஈனநிலை குறித்துக் குமுறியதாகக் கண்டதில்லை.

உண்மையில் தமிழ்நாட்டு அரசியலின் கேலிக்கூத்தை கேலிக்கூத்தாகவே காட்டியது, இந்துத்வ ஆதரவின் ஊற்றுமூலமான சோ மட்டும் தான். அவருக்கு அதற்கான காரணங்கள் வேறாக இருந்திருக்கலாம்.

(இன்றைக்கு அதே கேவலங்களை ஊற்றுக்கண்ணாக ஊக்குவிக்கும் குருமூர்த்தியும், மூளை ஜாஸ்தி புத்திஜீவிகளுக்கான துக்ளக்கும் திராவிடத்தால் கேலிக்கூத்தாக கேலி செய்யப்படும் நிலைக்கு வந்திருப்பது பெரும் முரண்நகை!)

இன்று வரையில், எம்.ஜி. ஆர், மனைவி, துணைவி, உயிர்த் தோழி, வளர்ப்பு மகன், மண்ணில் தவழ் அங்கப்பிரதிஷ்ட குழந்தைகள், போதாக்குறைக்கு சின்னவர், சின்ன சின்னவர் என்றெல்லாம் நீண்டு வந்திருக்கும் கேலிக்கூத்து அரசியல் பற்றி தமிழ்நாட்டு இலக்கியவாதிகள் மூச்சுக் கூட விட்டதை ஒரு போதும் கண்டதில்லை.

(ஒரு மிகவும் பிரபல நீண்ட நாள் Second-in-command கட்சிக்காரரை, 'அவன் துப்புவதற்குத் தான் வாய் திறப்பான்' என்று யாரோ சொன்னதைக் கேட்டிருக்கிறேன்.)

ஒரு இனத்தின் ஜனநாயக பாரம்பரியம் இவ்வாறு சிதைக்கப்பட்டு கேலிக்கூத்தாகி, பொதுச்சொத்துக்கள் முறையற்ற விதத்தில் கொள்ளையடிக்கப்பட்டு குவிக்கப்பட்ட போதும், இலக்கியக் கும்பலைப் பொறுத்தவரையில், அது ஒன்றில் மௌனமாகவோ, அல்லது ஜால்ராவாகவோ தான் இது வரை இருந்து வருகிறது.

ஒவ்வொரு முதல்வர் மாற்றத்தின் போதும், பாராட்டு விழா எடுக்கும் சினிமாக்காரர்கள் மாதிரி, இலக்கியகாரார்களும் எடுத்திருக்கக் கூடும். (எடுத்திருக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன். அதற்கான காரணங்களும் என் நியாயங்களும் பின் ஒருநாள்!)

அதற்கான எண்ணிக்கை பலமோ, பொருளாதார பலமோ, ஒற்றுமையோ, ஆதரவுத் தளமோ இவர்களுக்கு இருந்திருந்தால்!

Pdf please இலக்கிய ஆர்வலர்கள் மட்டும் இவர்களின் பின்னால் அணி திரண்டிருந்தால், கதையே வேறு.

'இந்தப் படை போதுமா? இன்னும் கொஞ்சம் வேணுமா?' தான்.

அரசியல் அமைப்புக்கான ஆதரவு என்பது அந்த அமைப்பு அதிகாரத்தில் இருக்கும் போது, இன்னொரு பரிமாணத்தை எட்டுகிறது. அந்த அதிகாரத்தின் எந்த முட்டாள்தனத்தையும், சமூக விரோதச் செயல்களையும், அரசியல் நெறிக்கும் சமூக நீதிக்கும் முரணான எந்த நடவடிக்கையையும் நியாயப்படுத்த வேண்டிய கட்டாயத்துக்குள்ளாக்குகிறது.

இதனால் தான், ஊழலைப் பற்றியும் வாரிசு அரசியலைப் பற்றியும் பேசும்போது அனாவசியமாக ஓடி வந்து முண்டு கொடுக்க வேண்டிய நிலை வருகிறது. தாங்கள் ஆதரிக்கும் அமைப்பின் நேர் அம்சங்களைக் காட்டி தர்க்கரீதியாக நியாயப்படுத்த முடியாமல், எதிர்த்தரப்பினரின் எதிர்மறை அம்சங்களைக் காட்டி, ''அவர்கள் என்ன புனிதர்களா?' என்றும், விமர்சிப்போரைப் பார்த்து 'அதன் போது கள்ள மௌனம் சாதித்தீர்களே?' என்றும், எங்கோ இருக்கும் சம்பந்தம் இல்லாத நியாயங்களை இழுத்து வந்து, எப்பாடுபட்டாவது நியாயம் சொல்லி, உருட்ட நேருகிறது.

'கை பத்திரம்' என்று, வன்முறை அரசியல் பேசக் கூட வைக்கிறது. இப்படி தரம் தாழ்ந்து பேசும் போது, அவனும் தன் தரத்திலேயே'கால் பத்திரம்!' என்றால்...?

உடன் பிறப்புகள் என்ன பாய்ந்து வந்து காப்பாற்றி விடவா போகிறார்கள்?

இந்த ஆதரவு சில நேரங்களில் கேலிக்கூத்தாகக் கூட அமைந்து விடுகிறது. உங்களுக்கும் தெரிந்த ஒரு பெரும் இலக்கியப்புள்ளி, டி.டி. தினகரன் அளித்த பேட்டியைப் பார்த்து, அவரை ஒரு chief minister material என்பது போல எழுதியதைப் பார்த்த போது தலையில் கை வைக்க வேண்டும் போல எனக்குத் தோன்றியது.

பழனிச்சாமிக்கும் பன்னீர்ச்செல்வத்திற்கும் இந்த இலக்கியவாதிகளின் கடைக்கண் பார்வை ஏன் இன்னமும் கிடைக்கவில்லையோ தெரியாது. திராவிடப் பாசறையின் ஏதோ ஒரு முகாமில் இருந்து தானே அவர்களும் வந்திருக்கிறார்கள். அவர்களிடம் இருக்கும் பணத்திற்கு, புத்தக வெளியீட்டு விழாக்களில் நூறு முதல் பிரதிகள் வாங்கினாலேயே, இலக்கியவாதிகள் சரணடைந்திருப்பார்களே!?

(அவர்கள் பெரும்பான்மை ஆட்சிக்கு வந்தால், முதல் வெள்ளைக் கொடி, அல்லது துண்டு, வைரமுத்து தான்!)

ஒன்றில், இந்த இலக்கியவாதிகளின் market value பற்றி அறிந்திருக்கும் அளவுக்கு அவர்கள் அறிவாளிகளாக இருந்திருக்கலாம்.

அல்லது, அவர்களே மண்ணில் தவழும் போது, அந்த மணிமுடிகளுக்கு அடி வருட, அடி முடி தேடி பன்றியாக மாறி, தலையால் நிலம் கிண்ட வேண்டி வருமோ என்பதில் இவர்களுக்கு ஏற்பட்ட குழப்பமாகவும் இருக்கலாம்.

ஆனால், ஒன்று மட்டும் உண்மை, சசிகலா தொடர்ந்தும் அரசியலில் இருந்து, மண் தோன்று முன் தோன்றிய மூத்த, பெருமை மிகு தமிழர் வாழும் பாருக்குள்ளே நல்ல நாடாம் தமிழ்நாட்டில் முதல்வராக வந்திருந்தால், இந்த இலக்கியவாதிகளில் பலர் பதவியேற்பு நிகழ்வின் பின் துண்டு போர்த்தி சின்னம்மாவிற்கு சிந்து பாடியிருக்கக் கூடியவர்கள் தான்.

இன்றைக்கு இயல் விருதுக்காக வடக்கு நோக்கியும், கனவு இல்லத்திற்காக கோட்டை நோக்கியும் தவம் இருக்கும் இந்த இலக்கியப் பெருந்தகைகளுக்கு, மிரட்டிப் பறித்த பங்களாக்களில் ஒன்றை கொடுப்பதில் சின்னம்மாவுக்கு அப்படி என்ன சிக்கல் இருந்து விடப் போகிறது?

ஒரு அதிகார அமைப்பான கட்சியை ஆதரித்து முண்டு கொடுத்து, அந்த அமைப்பின் முட்டாள்தனங்களை நியாயப்படுத்துவதில் பெரும் சிக்கல் ஒன்று இருக்கிறது.

முதலாவது, ஒருவரின் நடுநிலைத் தன்மை பற்றிய நம்பகத்தன்மையை அடியோடு தகர்த்து விடுகிறது. எப்படித்தான் ஊடக ஜால்ராக்கள் புகழ்ந்தேத்தினாலும், அதிகாரத்திற்கு வந்தவுடன் ஓடிப் போய் கட்சி மாறி

> “அரசியல் அமைப்புக்கான ஆதரவு என்பது அந்த அமைப்பு அதிகாரத்தில் இருக்கும் போது, இன்னொரு பரிமாணத்தை எட்டுகிறது. அந்த அதிகாரத்தின் எந்த முட்டாள்தனத்தையும், சமூக விரோதச் செயல்களையும், அரசியல் நெறிக்கும் சமூக நீதிக்கும் முரணான எந்த நடவடிக்கையையும் நியாயப்படுத்த வேண்டிய கட்டாயத்துக்குள்ளாக்குகிறது.
>
> இதனால் தான், ஊழலைப் பற்றியும் வாரிசு அரசியலைப் பற்றியும் பேசும்போது அனாவசியமாக ஓடி வந்து முண்டு கொடுக்க வேண்டிய நிலை வருகிறது. தாங்கள் ஆதரிக்கும் அமைப்பின் நேர் அம்சங்களைக் காட்டி தர்க்கரீதியாக நியாயப்படுத்த முடியாமல், எதிர்த்தரப்பினரின் எதிர்மறை அம்சங்களைக் காட்டி, "அவர்கள் என்ன புனிதர்களா?' என்றும், விமர்சிப்போரைப் பார்த்து 'அதன் போது கள்ள மௌனம் சாதித்தீர்களே?' என்றும், எங்கோ இருக்கும் சம்பந்தம் இல்லாத நியாயங்களை இழுத்து வந்து, எப்பாடுபட்டாவது நியாயம் சொல்லி, உருட்ட நேருகிறது.”

ஆதரிப்பவர்களுக்கும் இதே நிலை தான்.

சாதாரண மனிதர்களின் அடிமனதில் அந்த எண்ணம் இருந்து கொண்டே இருக்கும். காசுக்காகப் போய் காலில் விழுந்தவன் தானே என்று!

தமிழ்நாட்டு அரசியலில் இதெல்லாம் சகஜமாக இருக்கக் கூடும். துண்டைப் போர்த்தியவுடன் பாவங்கள் இலகுவாகக் கழுவப்படக் கூடும்.

இங்கே புலிகளை எதிர்த்து விட்டு, பின்னால் புகழ் பாடியவர்கள் பலருக்கு இது தான் நடந்தது. அவர்களைப் புலிகள் தேவைக்காகப் பயன்படுத்தினாலும், அவர்களை முழுமையாக நம்புவதுமில்லை. பொதுவெளியில் அவர்கள் பற்றி மதிப்பும் இல்லை.

இதனால் தங்களை புதிய எஜமானர்கள் நம்ப வேண்டும் என்பதற்காக, இவர்கள் தேவைக்கு அதிகமாகக் குரைக்க வேண்டியும் வருகிறது.

ஜனநாயக அரசியலில் பெரும்பான்மை வெற்றி என்பது தற்போது அதிகம் சாத்தியமாவதில்லை. அதற்கான காரணங்கள் பற்றி, எப்போதோ ஆங்கிலத்தில், இலங்கை இந்திய உறவுகள் பற்றி எழுதிய ஒன்றில் குறிப்பிட்ட ஞாபகம். இலங்கையில் தேர்தல் முடிந்து இலங்கை ஜனாதிபதி இந்தியாவிற்கு முதலில் விஜயம் செய்யும் பாரம்பரியம் பற்றி, இலங்கையின் புதிய ஜனாதிபதி இந்தியா செல்லும் தருணத்தில் எழுதி, இந்து பத்திரிகைக்கு அனுப்பி பிரசுரமாகாத கட்டுரை அது. (Shameless self-promotional plug!)

இதனால் கட்சிகள் தேர்தலின் போது கூட்டணிகள் வைத்துக் கொள்ள வேண்டி வருகிறது. ஒவ்வொரு கூட்டணியின் போதும் திட்டிய மற்றக் கட்சிகளுடன், மறுதேர்தலில் கூட்டணி வைக்கவும், அதே தலைவர்களை மேடையில் கட்டித் தழுவி, துண்டு போர்த்தவும் நேரிடுகிறது.

கட்சிகள் பதவிக்கு வர வேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காக, எந்த அறமும் இன்றி கூட்டணிகளை அமைக்கலாம். அது தனியே வெற்றி பெற முடியாத நடைமுறைச் சிக்கலும் சார்ந்தது.

இன்றைக்கு பாஜக தமிழ்நாட்டில் கால் ஊன்றக் கூடாது என்ற 'அறப்போருக்கு' தலைமை தாங்கும் திமுக, ஒரு காலத்தில் பாஜக உடன் தேர்தல் கூட்டணி அமைத்தது தானே!?

தற்போது இணைய உடன்பிறப்புகள் மூன்றாவது அணியை உருவாக்கி, தங்கள் தோல்விக்குக் காரணமானவர்கள் என்று திட்டுகிறவர்களோடு, நாளைக்கு திமுக தொகுதிப் பங்கீட்டு உடன்பாடு செய்ய நேரிட்டால், இன்றைக்கு திட்டிக் கொண்டிருக்கிறவர்கள் நாளைக்கு 'காகத்தை விழுங்க வேண்டியது' தான். (Eat the crow.)

எஜமானர்களைக் குஷிப்படுத்த, கொடுத்த காசுக்கு அதிகமாகவே குரைக்கிற நாய்கள் பலவற்றை நான் நேரடியாகக் கண்டிருக்கிறேன். எஜமான் எதிராளியோடு விருந்துண்ணும்போது, தாங்கள் எச்சில் இலைகளைக் கூட நக்க முடியாமல் விரட்டியடிக்கப்படுவோம் என்பதை இந்த நாய்கள் உணர்வதில்லை.

என்னுடைய புத்திமதி... அதிகமாகக் குலைக்காதீங்கடா!

அதிகாரத்தை ஆதரிப்பதால் வரும் ஆபத்து, அந்த அதிகாரம் பறி போகும் வரைக்கும், அந்த அதிகாரம் விலை போகும் வரைக்கும் தெரிவதில்லை.

அது தேவைப்பட்டால், பயன்படுத்தும். தேவை ஏற்படாதபோது தூக்கி எறிந்து விடும்.

விஜயகாந்தைக் கேலி செய்த வடிவேலு தன் சினிமா வாழ்வை அழித்தது ஒரு உதாரணம்.

அரசியல் ஆதரவு என்பது தனிப்பட்டது.

உரிமையும் கூட.

அது தனிமனிதர்களுக்கானது மட்டுமன்றி, கலை, இலக்கிய வாதிகளுக்குமான உரிமையுங் கூட.

தனிமனிதர்கள் அதை ஒரு பெருமையாகவே பேசிக் கொள்ளலாம்.

ஆனால், கலை, இலக்கியவாதிகள் அவ்வாறு நடந்து கொள்ள முடியாது.

தனிப்பட்ட ரீதியில் ஆதரிக்கலாம்.

அதிலும் அழிவுச் சக்திகள் ஆட்சிக்கு வரக்கூடாது என்பதற்காக lesser of two evils ஐ ஆதரிக்கலாம். அதற்காக பகிரங்கமாகக் கூட உழைக்கலாம்.

ஆனால், முண்டு கொடுக்க முடியாது.

காரணம், அவர்கள் சமூகத்திற்

> “
> கலை, இலக்கியவாதிகள்
> அவ்வாறு நடந்து கொள்ள முடியாது.
> தனிப்பட்ட ரீதியில் ஆதரிக்கலாம்.
> அதிலும் அழிவுச் சக்திகள் ஆட்சிக்கு வரக்கூடாது
> என்பதற்காக lesser of two evils ஐ ஆதரிக்கலாம். அதற்காக
> பகிரங்கமாகக் கூட உழைக்கலாம்.
> ஆனால், முண்டு கொடுக்க முடியாது.
>
> காரணம், அவர்கள் சமூகத்திற் கானவர்கள். அவர்களுடைய
> பொறுப்பு சமூகத்திற்கானதே அன்றி, அதிகாரத்திற்கானதில்லை.
>
> எப்படி ஊடகங்கள் ஒரு பொறுப்பு வாய்ந்த
> எதிர்க்கட்சியாகச் செயற்பட வேண்டும் என்று
> எதிர்பார்க்கிறோமோ, அதே போல கலை, இலக்கியவாதிகளும்
> எதிர்க்கட்சியாகத் தான் செயற்பட வேண்டும்.
> ”

கானவர்கள். அவர்களுடைய பொறுப்பு சமூகத்திற்கானதே அன்றி, அதிகாரத்திற்கானதில்லை.

எப்படி ஊடகங்கள் ஒரு பொறுப்பு வாய்ந்த எதிர்க்கட்சியாகச் செயற்பட வேண்டும் என்று எதிர்பார்க்கிறோமோ, அதே போல கலை, இலக்கியவாதிகளும் எதிர்க்கட்சியாகத் தான் செயற்பட வேண்டும்.

இதற்கும் சோவைத் தான் உதாரணம் காட்ட வேண்டி வருகிறது. ஆட்சி மாற்றத்திற்காக தான் எதிர்க்கட்சியை ஆதரித்தாலும், அவர்கள் ஆட்சிக்கு வந்த பின்னால் தான் அவர்களை ஆதரித்ததில்லை என்று கூறியிருந்தார்.

ஆனால் நிலைமை என்ன?

தமிழ்நாட்டில், ஆசான் தன்னை இந்துத்வத்தின் உத்தியோகப்பற்றற்ற இலாகா இல்லாத மந்திரியாகவே பிரகடனப் படுத்தியிருக்கிறார். தன்னுடைய பிற்போக்குச் சிந்தனையோடு முரண்படுவோரை, Either you are with us, or with them என்ற ஜோர்ஜ் புஷ் தத்துவம் போல, தேசத்துரோகிகள் என்றும், மத மாற்றம் செய்ய அந்நிய நிதி கிடைக்கிறது என்றும் ஆதாரங்கள் இல்லாமல் அடித்து விடுகிறார். அவரது முகத்திலும் தொனியிலும் அறமில்லாத சீற்றம் தெரிகிறது. அது இந்துத்வாவின் இலக்கிய உலகச் சீமான் நிலையை அடைவதில் தான் முடியும் போல தெரிகிறது.

தன்னை ஒரு இலக்கியக் காரனாகவும், ஊடகவியலாளராகவும் அடையாளப்படுத்திக் கொண்ட மாலன் இன்றைக்கு caricature of his former self என்ற நிலையில் வந்து முடிந்திருக்கிறார். இந்துத்வ அரசியலை எப்பாடுபட்டும் முட்டுக் கொடுப்பதற்காக, பன்றிகளுடன் மல்யுத்தம் செய்வதற்கும், தர்க்கரீதியான நியாயங்கள் இல்லாத வாதங்களுக்கும் அவர் தயாராக இருக்கிறார். அவர் மூளை ஜாஸ்தி இல்லாத 'புத்திஜீவிகளு'க்கான ஒரு குருமூர்த்தி. அவ்வளவு தான்!

சுஜாதா இருந்த போது, இந்த இந்துத்துவ எழுச்சி இருக்கவில்லை என்பதால் அவர் இந்த நிலைக்கு

> **தற்போது தமிழ் இலக்கிய உலகில் பலர் ஆளும் திமுகவிற்கு 'வெளியே நின்று ஆதரவு வழங்குகிறவர்களாகத்' தான் இருக்கிறார்கள். திமுக பற்றிய குற்றச்சாட்டுக்களுக்கு ஓடி வந்து ளாயஅநடநளளடல முட்டுக் கொடுக்கிறார்கள்.**
>
> **அரசும் அதற்குத் தகுந்தவாறே, கனவு இல்லக் கனவை விதைத்திருக்கிறது. அரசு கலை, இலக்கிய உலகை தர்ம பரிபாலனம் செய்து, தாபரிப்பது நல்ல விடயம். அவசியமானதும் கூட. ஆனால், அது அரசை ஆதரிப்பவர்களுக்கு மட்டும் தான் என்பதே நிலைமை என்றால், இனி 'துப்புவதற்காகத் தான் வாயைத் திறப்பார்கள்!'.**

போகாவிட்டாலும், அவரும் பரமார்த்த குருவும் சீடர்களும் கதை கிறிஸ்தவ பாதிரிகளால் இந்துக் குருக்களை கேலி செய்ய உருவாக்கப்பட்டது என்ற வகையில் எழுதியிருந்தார். அவர் தன் எழுத்து மூலமாக இந்துத்வத்தை முட்டுக்கொடுத்து நிமிர்த்த முடியாவிட்டாலும், வாக்களிப்பு இயந்திரத்தை வடிவமைத்ததற்கு பொறுப்பாக இருந்ததால், இன்றைக்கும் மாநில தேர்தல்களில் தோல்வியடையும் பாஜக, தேசிய தேர்தலில் வெற்றி பெறும் புதுமைக்கான வழியை திட்டமிட்டே அமைத்திருப்பாரோ என்ற சந்தேகம் (with exploitable vulnerabilities) எனக்கு எப்போதும் உண்டு.

இவர்கள் கொள்கை அடிப்படையிலோ, தங்கள் பார்ப்பனப் பாரம்பரியம், விசுவாசம் காரணமாகவோ, பிரபலங்களை பணத்தால் வளைத்துப்போடும் பாஜக திட்டத்தினாலோ, வருமான வரி மிரட்டலாலோ அல்லது இவற்றின் கூட்டு எதுவினாலோ இந்த நிலைப்பாடுகளை எடுக்கும் நிலைக்கும் வந்திருக்கலாம்.

இவர்களை எல்லாம் விட்டு, ஒருபடி மேல் போய், காதல் கவிஞர் மனுஷ்யபுத்திரன் உத்தியோகபூர்வ card carrying உடன் பிறப்பாகவே பிறப்பெடுத்து விட்டார். இணைய உ. பி. ஆகி, சீமானுக்கு 'கை பத்திரம்' என்று பதில் சவால் விடும் அளவில் இருக்கிறார். அவரது பாடல்களுக்கு பொற்காசுகள் அதிகமாகவே கிடைப்பதால், அவர் அதிகமாகக் குரைப்பதில் என்ன ஆச்சரியம்? 'சொம்புச் சித்தர்' பெருமை கொண்டதால், அடுத்த பரம்பரைத் தலைவர்களின் புகழ் பாடிக் கிடைக்கும் பொற்காசுகளையும் அந்த சொம்புலேயே வாங்கிக் கொள்ளலாம்.

பிறழ்வு சாருவுக்கு படுக்கை தானே பிரச்சனை? நித்தியானந்தாவின் ஆன்மீக அரசியல் அதற்கு வசதியாகவே இருப்பதால், இந்த philistine society யின் அரசியல் பற்றி அவருக்கு எதற்கு கவலை எல்லாம்!?

ஆசான் கொடுத்த விருதுக்கு, முதல்வரின் வாழ்த்துக்கு சாரு காத்திருந்தார். என்னாச்சு என்பதை விபரம் அறிந்தவர்கள் தெரியப்படுத்தினால் நன்றி உடையவனாக இருப்பேன். கிடைத்திருந்தால், அவரும் மனுஷ்யபுத்திரன் போல, உத்தியோகபூர்வ உறுப்பினராகியிருக்கவும் கூடும்.

எஸ்.ராமகிருஷ்ணனுக்கு என ஒரு அரசியல் இருப்பதாகவோ, ஏன் முதுகெலும்பு இருப்பதாகவோ எனக்கு ஒரு போதும் தோன்றியதில்லை.

தற்போது தமிழ் இலக்கிய உலகில் பலர் ஆளும் திமுகவிற்கு 'வெளியே நின்று ஆதரவு வழங்குகிறவர்களாகத்' தான் இருக்கிறார்கள். திமுக பற்றிய குற்றச்சாட்டுக்களுக்கு ஓடி வந்து shamelessly முட்டுக் கொடுக்கிறார்கள்.

அரசும் அதற்குத் தகுந்தவாறே, கனவு இல்லக் கனவை விதைத்திருக்கிறது. அரசு கலை, இலக்கிய உலகை தர்ம பரிபாலனம் செய்து, தாபரிப்பது நல்ல விடயம். அவசியமானதும் கூட. ஆனால், அது அரசை ஆதரிப்பவர்களுக்கு மட்டும்

தான் என்பதே நிலைமை என்றால், இனி ‘துப்புவதற்காகத் தான் வாயைத் திறப்பார்கள்!’.

(அரசின் நிலைமையைக் குற்றம் சாட்டுவதும் முறையானதோ என்றும் எனக்குத் தோன்றுகிறது. பிரசன்னா இராமசாமிக்கு விருது கொடுத்ததற்கு பொங்கிய உடன்பிறப்புகள் அதிகம்!)

எங்கள் யாழ்ப்பாணி ஈழத்திலும் இதே கதை தான். மாற்றுக்கருத்துத் துரோகிகள் என்று முத்திரை குத்தப்பட்டவர்கள் தவிர, மற்றவர்கள் எல்லோருமே எம் பெருமான் காலடி மண்ணை விழுந்து நமஸ்கரித்தவர்கள் தான். ஒரு தன்னம்பிக்கையில்லாத கொலைவெறியனை சூரியதேவன் என்று கொண்டாடியதனால் வந்த விளைவு தான் முள்ளிவாய்க்கால்.

தங்களை விடுதலைக்கான இலக்கியம் புரிவோர் என்று கதை விட்டபடி, புலிகளின் பிரசாரப் பொய்களை விழுங்கி வாந்தி எடுத்தபடியே, ‘வெளியே நின்று’ ஆதரித்தபடி, விட்டால் குடுமி, சிரைச்சால் மொட்டை என்று, வெற்றி அல்லது வீரமரணம் கதை சொன்னவர்கள் தான் இவர்கள் எல்லாம்.

தமிழ் மக்களின் நலன்களையோ, உரிமைகளையோ முதன்மைப்படுத்தாமல், வன்னியைக் குஷிப்படுத்துவதை முழுநேரத் தொழிலாகக் கொண்டிருந்தவர்கள் இவர்கள்.

இனிமேல் அவங்கள் தான் என்ற முடிவோடு, சூரியதேவனின் கடைக்கண் பார்வைக்காக வன்னி நோக்கி தவம் இருந்த இலக்கியவாதிகளை என்னால் பட்டியல் இட முடியும். வெளிநாட்டு அமைச்சராகும் கனவோடு இருந்த கவிஞர்களை அடையாளம் காட்ட முடியும்.

மக்கள் நலன் இவர்கள் மனதில் முக்கியமானதாக இருந்திருந்தால், கிடைக்கும் உரிமைகளைப் பெற்று அதிலிருந்து ஒரு நாட்டைக் கட்டியெழுப்ப முடியலாம் என்பதை புலித் தலைமைக்கு இவர்கள் எடுத்துரைத்திருக்கலாம்.

சமாதானப் பேச்சுவார்த்தை காலத்தில் ஒரு முடிவை ஏற்றுக் கொள்ள வேண்டிய அவசியத்தை வலியுறுத்தியிருக்க முடியும்.

இறுதி யுத்தத்தின் போது, மக்களைப் பணயம் வைக்காமல் வெளியேற அனுமதிக்குமாறு அழுத்தங்களைக் கொடுத்திருந்தால், பெரும் இன அழிவைத் தடுத்திருக்க முடியும்.

> **அண்ணை அடிச்சுப் பறிப்பார் என்ற யாழ்ப்பாணித் தம்பியிசத்தின் உத்தியோகபூர்வ பிரசாரப் பிரிவினராக இருந்ததால், இவர்களால் அதைச் செய்ய முடியவில்லை என்பது மட்டுமல்லாமல், இன்றைக்கும் எந்த வெட்கமும் கூச்சமும் இல்லாமல், சர்வதேசத்திலும் துரோகிகளிலும் பழியைப் போட்டு, அதை நியாயப்படுத்தவும் முடிகிறது.**
>
> **இவர்களுடைய விசுவாசம் தலைமைக்கானதாக, அதிகாரத்திற்கானதாக இருந்ததால், அறத்தின் வழி நின்று, மக்களுக்காக இவர்களால் குரல் கொடுக்க முடியவில்லை.**

அண்ணை அடிச்சுப் பறிப்பார் என்ற யாழ்ப்பாணித் தம்பியிசத்தின் உத்தியோகபூர்வ பிரசாரப் பிரிவினராக இருந்ததால், இவர்களால் அதைச் செய்ய முடியவில்லை என்பது மட்டுமல்லாமல், இன்றைக்கும் எந்த வெட்கமும் கூச்சமும் இல்லாமல், சர்வதேசத்திலும் துரோகிகளிலும் பழியைப் போட்டு, அதை நியாயப்படுத்தவும் முடிகிறது.

இவர்களுடைய விசுவாசம் தலைமைக்கானதாக, அதிகாரத்திற்கானதாக இருந்ததால், அறத்தின் வழி நின்று, மக்களுக்காக இவர்களால் குரல் கொடுக்க முடியவில்லை.

அவர்களும் இந்த யாழ்ப்பாணத் தமிழ்த் தேசியத்தில் ஊறியபடியால் தான் எந்த விலையையும் கொடுத்து, முழுத் தமிழ் மக்களையும் பலி கொடுத்தாவது, புலித்தலைமையைக் காக்கும் நினைப்புக்கு துணை போயிருந்தார்கள்.

புலிவாலில் தொங்கியபடியால் பூனைக்கு மணி கட்ட முடியவில்லை.

யாழ்ப்பாணத்துக் கத்தோலிக்க திருச்சபை புலிகளுக்கு பகிரங்க ஆதரவு தந்தது எல்லோருக்கும் தெரியும். கத்தோலிக்க திருச்சபை, மக்களுக்காகப் போராடுகின்றார்கள் என்று சொல்லி, புலிகளின் மனித உரிமை மீறல்களையும் அராஜகங்களையும், அரசியல் படுகொலைகளையும் சகோதரப் படுகொலைகளையும் கண்டும் காணாமலும், அங்கீகரித்தும் ஆதரவு வழங்கிக் கொண்டிருந்தது. யாழ்ப்பாண தமிழ்த்தேசியத்தையும் கடந்து, இனங்களுக்கு இடையிலான ஒற்றுமைக்கான முயற்சிகளை எடுத்திருக்க வேண்டிய திருச்சபை பிரபாகரனுக்கு ஒளி வட்டத்துடனான புனிதப்பட்டம் வழங்காதது ஒன்று தான் குறையாக இருந்தது.

புலிகளின் ஆதரவாளர்களாக மட்டுமன்றி, பேச்சாளர்களாகவும் அருட்தந்தையர்கள் இருந்தார்கள். யுத்தம் முடிந்த பின்னால், யாழ்.மறை மாவட்ட அருட்தந்தையர்களுக்கான கூட்டம் ஒன்றில் தான் தெரிவித்த கருத்துப் பற்றி அருட்தந்தையாக இருக்கும் என் அண்ணன், எனக்குச் சொல்லியிருந்தார்.

‘நாங்கள் கொள்கைக்கு (Cause) உண்மையானவர்களாக இருக்க வேண்டுமே தவிர, கொள்கைக் காவலர்களுக்கு (Cause bearers) உண்மையாக இருக்கக் கூடாது.’

அதைப் போலத் தான், சமூகத்தின் சிந்தனையை வழிப்படுத்தும் படைப்பாளிகளும் ஊடகவியலாளர்களும், கொள்கைக் கும் மக்களுக்கும் தான் விசுவாசமாக இருக்க வேண்டுமே தவிர, கொள்கைக் காவலர்களுக்கும் அதிகாரத்திற்கும் விசுவாசமாக இருக்கக்கூடாது.

# அபத்தம் உள்ளே...

மாசி 2023




## இழுக்க, இழுக்க இறுதி வரை இன்பம்!

எழுதிய, எழுதப்பட்ட ஆளுமைகள் குறித்து மேலும் அறிந்து கொள்ளவும், அவர்களை நேரடியாகத் தொடர்பு கொள்ளவும் அவர்களின் பேஸ்புக் அடையாளங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

எழுத விரும்புவோர் Read the fine print ஐ வாசிக்க..

ஆக்கங்களுக்கு ஆக்கியோர்களே பொறுப்பு. ஆயினும் அதைப் பிரசுரிப்பதற்கான பொறுப்புகளில் இருந்து அபத்தம் விலக மாட்டாது.

email: apaththam@gmail.com
www.thayagam/apaththam
www.facebook.com/apaththam

ஆசிரியர், வடிவமைப்பு
ஜோர்ஜ் இ.குருஷ்சேவ்
**Editor/Design**
**George R. Ckrhushchev**

## தேடிப் ப(பி)டியுங்கள்!



# இந்த மாத அட்டைப்படம்

இந்தப் படத்தை ரொறன்ரோவில் வாழும் இளம் தலைமுறைத் தமிழ்ப் பிள்ளையான அசுவினி அகிலன் வரைந்திருக்கிறார்.

எங்களைப் பிரமிப்பில் ஆழ்த்திய திறமையோடு உள்ள ஓவியரான இவர், ஆடை வடிவமைப்பாளரும் கூட.

நுண்கலைத் துறையில் தற்போது முதுமானிப் படிப்பை மேற்கொள்கிறார்.


தன்னுடைய படைப்புகள் அங்கீகாரத்தை வேண்டி நின்ற போது, தன் படைப்பு முயற்சியும் முனைப்பும் மீதான தன் ஆர்வம் குறைந்ததாகவும், தன்னுடைய படைப்புகளை தனக்காகவே படைத்த போதுதான் தன் படைப்புத்திறன் புத்தூக்கம் பெற்றது என்றும் குறிப்பிடுகிறார்.

வெளி அழுத்தங்கள் இல்லாமல், மற்றவர்களின் அங்கீகாரங்களை வேண்டி நிற்காத போது தான், தன் படைப்பாற்றல் பெருக்கெடுத்தது என்கிறார்.

அவரது படைப்புகளை இன்ஸ்டாகிராமில் பார்வையிடலாம்.
Instagram: asuvini7

அவரது எதிர்காலம் பெருமைகளோடு வளம் பெற்று மகிழ்ச்சி நிறைந்திருக்க வாழ்த்துகிறோம்.







Vini 2022


VII
Vini 2023





Vini 2023













# Asuvini,
# on her own words...

My name is Asuvini Ahilan, and I am an artist and fashion designer based in Toronto. Currently, I am in the Fashion Arts and Business program, and I am working towards getting my Masters in Fine Arts.

I believe my art journey started when I stopped trying to please everyone. As children, we are free to create, but as we get older there are external factors that can effect the creative process. I started doubting myself in many ways.

Will everyone like this piece I made? Will my pieces ever get any recognition? That’s the moment I started to lose my motivation and became someone that tried to please others. Art became a chore instead of a passion, and I stopped doing art for a while.

When I was faced with some obstacles in life, I started going back into expressing myself through art. I began doing art solely for myself, and without the external pressure, my creativity started flowing again. That's where I truly felt like an artist. Once we let that spark inside of us go, and stop pursuing our dreams, we are not being true to ourselves. This journey is what inspired me to create my own brand called “Don't let it die out”, showcasing my art, my inner child, beauty in my eyes, and emotion through fashion and visual media.

**(Congratulations, Asuvini. You make us all proud. We are wishing you all the success, bright future and happiness.)**

## எங்கே போய் முட்ட!

# சமர்ப்பணம்

அதை நாங்கள் வாசிக்கவில்லை,
வாசிக்க மாட்டோம் என்று வீர
சபதம் எடுத்துக் கொண்டே,
கழியறைக்குள் வைத்து யாரும்
பார்க்காமல்
வாசித்து சுய துன்பம் துய்க்கும்
இலக்கிய மேதகுக்களுக்கும்,
பெருந்தகைகளுக்கும்!

வேற என்னத்தச் சொல்ல!?

அதானியின் பங்குகள் சரிந்தபடியே இருக்கின்றன.

ஒருநாளும் கண்டு கேட்டறியாத Hindenberg Research வெளியிட்ட அறிக்கையின் கைங்கர்யம்.

ஹிண்டன்பேர்க் என்பது விமானப்பயணம் செய்யப் பயன்பட்ட பலூன் ஒன்று. வளியிலும் அடர்த்தி குறைந்த ஐதரசன் வாயுவை பெரிய பலூனில் நிரப்பி மேலெழ வைத்து, பயணிப்பது. பலூனின் அடிப்பகுதியில் பயணிகள் இருப்பர்.

ஏற்கனவே இவ்வாறான முயற்சிகள் விபத்துகளில் முடிந்தாலும், இம்முறை அப்படி இருக்காது என்ற உருட்டோடு நடந்த இந்த வான்பயணத்தின்போது பெரும் நெருப்பு விபத்து உண்டாகி பலர் இறந்தார்கள். 1937ல் அமெரிக்காவில் இந்த விபத்து நிகழ்ந்து அதில் 38 பேர் இறந்தார்கள். விபத்துக்கான காரணம் ஒரு சிறிய மின்பொறி என்றே கருதப்படுகிறது.

இவ்வாறாக, தவிர்த்திருக்கக் கூடிய ஆபத்துக்களை, கடந்த கால அனுபவங்களையும் மீறி, பாதுகாப்பானது என்று மக்களைப் பலியாக்கியது போல, பங்குச் சந்தையிலும் ஏற்கனவே நடந்த மோசடிகளைத் தெரிந்து கொண்டும், இம்முறை அப்படி இருக்காது என்று உருட்டுவதற்கு எதிராக தாங்கள் ஆராய்ச்சி செய்து பெரு நிறுவனங்களின் பங்குசந்தை மோசடிகளை வெளிக்கொணர்வதாக அந்த நிறுவனம் தெரிவிக்கிறது.

எனவே, இப்ப நாங்க என்ன சொல்ல வாறம்னா...

ஊதிப் பெருப்பித்த எதுவுமே நீண்ட நாள் நிலைப்பதில்லை.

முன்பின் கேட்டறியாத, யாராவது ஒரு சின்னப் பெடியன் எங்கிருந்தோ வந்து ஊசி குத்தினால், எல்லாமே புஸ்வாணமாகிப் போய் விடும்.

இலக்கியவாதிகளிடம் ஒரு பழக்கம் இருக்கிறது. தங்களைப் பற்றி முன்பின் தெரியாத ஒருவர் புகழ்ந்து எழுதினால்... உடனடியாகவே பேஸ்புக்கில் பெருமையோடு பகிர்ந்து கொள்வார்கள். தெரிந்தவர்கள் யாராவது விமர்சித்தால், கண்டு கொள்ளாத மாதிரி போய் விடுவார்கள். அதுவல்ல பிரச்சனை?

கேட்டால் 'நாங்கள் இன்னும் பாக்கேலை!' என்பார்கள். அடுத்து, 'பார்த்த நண்பர்கள் சொன்னார்கள்' என்று எங்காவது எழுதுவார்கள்.

ஆசான் அதைப் பெருமையாகக் கூடச் சொல்லியிருக்கிறார். 'அவர் மிகக் கடுமையாக என்னைப் பற்றி எழுதுகிறார் ன்று சொல்லி அறிந்திருக்கிறேன்.'.

ஆனா, ஆசானைப் புகழ்ந்து கடிதம் அனுப்பினால், அதை அவர் பிரசுரித்து அதற்கு பதிலும் எழுதுவார்.

எனக்கோ, யாராவது இப்படிச் சொன்னால், அதை நேரில் வாசித்துப் பார்க்கும் வரைக்கும் நித்திரை வராது. காரணம், சொல்லப்பட்ட தாற்பரியம் (context) நானாக வாசிக்கும்போது தான் தெரிய வரும். இந்தக் கேள்விச் செவியன் கதை எல்லாம் நமக்கு ஆகாது.

ஜோர்ஜ் இ.குருஷ்சேவ்

ஒருவர் சொல்வதை வைத்து எதையும் எவரையும் நான் மதிப்பீடு செய்வதில்லை. ஒருவர் என்னைப் பற்றிச் சொன்னதாக என்னிடம் சொல்லும் கதையைக் கூட, நான் உடனடியாக நம்புவதில்லை. ஒரு கதை ஒரு செவியையும் வாயையும் கடந்து வரும் போது, உப்புப்புளி சேர்த்து, உண்மைகள் திரிந்து தான் வரும். எனவே, நானாக அதை அறிந்து கொள்ளும் வரைக்கும்...
இயேசுவின் காயங்களுக்குள் கையை வைத்துப் பார்த்தால் ஒழிய நம்ப மாட்டேன் என்று அடம் பிடிக்கும் doubting Thomas போலத் தான்.

அதை வாசித்தோம், இதை வாசித்தோம் என்பதை பெருமையாகச் சொல்கிற இலக்கியக் கூட்டம், கழியறைக்குள் வைத்து வரிக்கு வரியும் வரிகளுக்கு இடையிலும் வாசித்ததை, 'இன்னும் வாசிக்கேலை', 'வாசிக்க மாட்டோம்' என்று சொல்வதைக் கேட்கும் போது...
பேசப்படாமல் இருப்பது கூட எங்களுக்குப் பெருமை தான்.

பாமுக்கை வாசித்தோம், முகாரமியை வாசித்தோம் என்று பெருமை கொள்கிறவர்கள், அபத்தத்தை வாசிக்க மாட்டோம் என்று விரதம் பிடிப்பது கூட எங்களுக்குப் பெருமை தான்.

ஆனா, ஒண்ணை மட்டும் தெரிஞ்சுக்கோங்க. நாங்கள் எழுதுவது உங்களுக்கு இல்லை. நீங்கள் வாசிக்க வேண்டும் என்று கூட இல்லை. உங்களுடைய உருட்டுக்களையும் புரட்டுகளையும் புலுடாக்களையும் பீலாக்களையும் ஒரு கூட்டம் நம்பிக் கொண்டு இருக்கே, அவர்களுக்குத் தான்.
இன்னொரு வாட்டி அவங்களைக் காணும்போது, இதையெல்லாம் வாசிச்சிருப்பாங்களோ? என்ற ஒரு கலக்கம் வருமே?

அல்லது, அதைப் பற்றி அவர்கள் ஏதாவது, 'என்ன அபத்தம் ஏதோ எழுதியிருக்கு போல' என்று சிரித்துக் கொண்டு கேட்கும் போது, மானம் போகுமே?

அதற்காகத் தான் எழுதுகிறோம்.
நீங்கள் வாசிக்கா விட்டால் எங்களுக்கு என்ன?

ஆனா, ஒண்ணை மட்டும் தெரிஞ்சுக்கோங்க. நாங்கள் எழுதுவது உங்களுக்கு இல்லை. நீங்கள் வாசிக்க வேண்டும் என்று கூட இல்லை. உங்களுடைய உருட்டுக்களையும் புரட்டுகளையும் புலுடாக்களையும் பீலாக்களையும் ஒரு கூட்டம் நம்பிக் கொண்டு இருக்கே, அவர்களுக்குத் தான். இன்னொரு வாட்டி அவங்களைக் காணும்போது, இதையெல்லாம் வாசிச்சிருப்பாங்களோ? என்ற ஒரு கலக்கம் வருமே?
அல்லது, அதைப் பற்றி அவர்கள் ஏதாவது, 'என்ன அபத்தம் ஏதோ எழுதியிருக்கு போல' என்று சிரித்துக் கொண்டு கேட்கும் போது, மானம் போகுமே? அதற்காகத் தான் எழுதுகிறோம்.

நாங்கள் யாருக்காக எழுதுகிறோமோ அவர்களை வாசிக்கப் பண்ணிக் கொண்டு தானே இருக்கிறோம்.

அட, வாய்க்குள் அன்னாசிப்பழத்தை திணித்ததற்கே இந்தப் பயம் என்றால்...

இன்னொருத்தன் வாயில் திணிப்பதற்காக பலாப்பழத்தோடு நிற்கிறான். அதற்கு என்ன பண்ணப் போகிறார்களோ?

Reincarnation of Peter Proud என்று ஒரு படம் எழுபதுகளின் நடுப்பகுதியில் வந்தது. யாழ்ப்பாணம் லிடோ தியேட்டரில் அதைப் பார்த்தேன்.

பெண் ஒருவர் தன் கணவனை தடாகம் ஒன்றில் படகு ஒன்றில் வைத்து துடுப்பால் அடித்துக் கொல்கிறார். அந்தக் கணவன் மறுபிறவி எடுத்து எங்கோ பிறக்கிறார். அந்தக் குழந்தை வளர்ந்து ஒரு பேராசிரியர் ஆகிறது. அவருக்கு தன் முன்னைய பிறவி நினைவுகள் கனவாக வருகின்றன. அதைப் பற்றி அறிந்து கொள்ள முயன்று, தன் முற்பிறவி மனைவியின் இடத்திற்கு வந்து சேருகிறார். அங்கே தனக்கு மகள் முறையான பெண்ணுடன் அவருக்கு காதலும் வருகிறது. அவர் தான் தான் கொலை செய்த முன்னாள் கணவரின் மறுபிறவி என்பதை அறிந்த அவரின் முற்பிறவி மனைவி, அதே இடத்தில் வள்ளத்தில் வைத்து அவரைச் சுட்டுக் கொல்கிறாள்.

அந்தக்கதை இங்கே எதற்கு? சினிமா விமர்சனமா? இல்லை.
பிரபாகரன் உயிரோடிருக்கிறார்!

வைரல் பணம் சம்பாதிப்புக்கு பரபரப்பு என்றைக்குமே அவசியம் தான்.

எரித்திரியாவில்!
வெள்ளை மாளிகை பேஸ்மெண்டில்!

ஆமா, எங்கள் மனங்களில்!

எத்தனை உருட்டுகளை கேட்டிருப்போம். நெடுமாறன் புதிசா கிளம்பியிருக்கிறார். கருமுடி காசி பக்க வாத்தியம். பிரபாகரன் இருந்த காலத்திலேயே, தலைவரோட இப்ப தான் கதைச்சனான் என்று கதை விட்ட எத்தனை பேரைக் கண்டிருப்போம். அதன் பின்னால், ஆவிகளுடன் பேசிய எத்தனை பேரைக் கண்டோம்.

வந்த பின்னர் சொத்துக்களை அவரின் காலடியில் ஒப்படைக்கக் காத்திருப்போர் எத்தனை பேர்?

அவர் வந்து என்னத்தைப் புடுங்குவார்? என்ற கேள்வியைக் கூட கேட்காத ஒரு கூட்டம் புல்லரிக்கத்தான் செய்யும்.

நெல்லியடிச் சந்தியில் கொத்து ரொட்டிக் கடை போடலாம்.

ஆமை இறைச்சிக் கொத்துரொட்டி யாழ்ப்பாணிக்கு புதிசாகவும் இருக்கும்.

சீமானைக் கூப்பிட்டு திறப்புவிழாவும் நடத்தலாம்.

கடைசி நேரத்தில் மரண ஓலம் எழுப்பிக் கதறிய போது, தொலைபேசியை அணைத்து விட்டு, ஓடி ஒளித்தவர்கள் இன்றைக்கு கதை பேசுவதைக் கேட்டு, அதில் உண்மை இருக்கலாம் என்று ஒரு கூட்டம் உருட்டுகிறது.

காரணம், இளிச்சவாய்க் கூட்டம் ஒன்று காசை அள்ளி எறியத் தயாராக இருக்கிறது.

ஆனால், ஒன்று மட்டும் உண்மை.

பிரபாகரன் உயிரோடு இன்றைக்குத் திரும்பி வந்தால்...

அவரது பெயரை வைத்துப் பிழைக்கின்ற சீமான் நெடுமாறன் முதல், இலங்கையில் அரசியல் செய்யும் சகல தமிழ் அரசியல்வாதிகளையும்... போராட்டத்திற்காக சேர்க்கப்பட்ட பணத்தை சுருட்டி, தலைவர் வந்தால் குடுப்பம் என்று உருட்டிக் கொண்டிருப்போர் எல்லாரையும் தான்

முதலில் மண்டையில் போடுவார்.

அல்லது அவர்களே அவரை மண்டையில் போடுவார்கள்.

பிரபாகரன் வந்தால் அவரது உயிருக்கு உத்தரவாதம் இல்லை.

மண்டையில் போட்டு, மண்டையில் போட்டதால் மரணமான அவரை, அவரது பெயரை வைத்து பிழைப்பு நடத்துகிறவர்களே மண்டையில் போடுவார்கள்.

அவர் வராமல் இருப்பது அவருக்குத் தான் நல்லது!

வைரமுத்து காதலர் தினத்திற்கு கவிதை ட்வீட் பண்ணியிருக்கிறார். மீ டூ புகழ் கவிஞர் காதல் பற்றி கவிதை எழுதினாராம் என்று புல்லரிக்கிறார்கள்.

பெண்ணின் அனுமதியும் விருப்பமும் இல்லாத அத்துமீறல் அயோக்கியன் காதல் பற்றி எழுதும் போது நன்றாகத் தான் இருக்கிறது.

திரும்பவும் எப்படியாவது தன்னை நுழைத்து உள்ளே தள்ள கவிப்பேரரசு படும் பாடு சொல்லி மாளாது.

உக்ரெய்ன் போருக்கு கவிதை, துருக்கி பூகம்பத்துக்கு கவிதை என்று எழுதிக் கொண்டே இருக்கிறார்.

அவரைச் சொல்லிக் குற்றமில்லை. அவர் சிட்டுவேஷனுக்கு பாட்டு எழுதுகிறவர்.

ஆனா, மணியடித்தால் பாட்டு எழுதுகிறவர் ஒருவர் இங்கே ஏற்கனவே இருக்கிறார். அவர் எழுதுவது கவிதை இல்லை, கதை சொல்லல், புனைவுகளே என்கிறார் ஆசான்.

இந்த கவிதாசாமிகளிடம் அகப்பட்டு காதலும் கவிதையும் படும் பாட்டை ஆரிட்டை சொல்லி அழலாம்?

காதலர் தினத்திற்கு பசுவை கட்டியணைக்கும்படி அரசே அறிவித்திருந்தது. அதுவே கேலிக்கூத்தாகி வாபஸ் பெற்றது இன்னொரு கதை.

பசுவை வழிபடச் சொல்லி, அது ஏற்கனவே ஓடிக்கிட்டிருக்குது. அப்புறம், காமதேனுவின் பயன்களைச் சொல்லி, கோமியம் குடிப்போரும் அதிகமாகி விட்டார்கள். இப்போது காமதேனுவில் காமத்தேன் குடிக்க இந்தக் கூட்டம் புறப்பட்டால் என்னாவது?

காமசூத்திரம் கண்ட நாட்டில், காதலுக்கு எதிர்ப்பு.

ஆனா, காமதேனுவைக் கட்டிப் பிடிடா என்றால், ஏடாகூடமாக எதையாவது செய்து விடப் போகிறார்கள்.

கேட்டா, காஜுராஹோ சிற்பங்களில் மிருகப் புணர்ச்சி இருக்கே என்று ஆதாரமும் காட்டக் கூடும்.

> பசுவை வழிபடச் சொல்லி, அது ஏற்கனவே ஓடிக்கிட்டிருக்குது. அப்புறம், காமதேனுவின் பயன்களைச் சொல்லி, கோமியம் குடிப்போரும அதிகமாகி விட்டார்கள். இப்போது காமதேனுவில் காமத்தேன் குடிக்க இந்தக் கூட்டம் புறப்பட்டால் என்னாவது?
> காமசூத்திரம் கண்ட நாட்டில், காதலுக்கு எதிர்ப்பு.
> ஆனா, காமதேனுவைக் கட்டிப் பிடிடா என்றால், ஏடாகூடமாக எதையாவது செய்து விடப் போகிறார்கள்.
> கேட்டா, காஜுராஹோ சிற்பங்களில் மிருகப் புணர்ச்சி இருக்கே என்று ஆதாரமும் காட்டக் கூடும்.

புலன் பெயர்ந்த நாடுகளில் இருந்து தான் தமிழக எழுத்தாளர்களுக்கு விருது கொடுக்கிறார்கள், தமிழகத்திலிருந்து புலன் பெயர்ந்த எழுத்தாளர்களுக்கு விருது கொடுப்பதில்லையே என்று யாரோ நம்ம எழுத்தாளர் புலம்பியதாக தமிழ்நாட்டு எழுத்தாளர் ஒருவர் குறிப்பிட்டிருந்தார்.

பிறகு, அவ்வாறு விருது கொடுக்கப்பட்ட இனிப்பான சேதியையும் பகிர்ந்திருந்தார்.

அட, இதென்னடா பட்ட மரத்தில பால் வடியுது என்று அந்தப் பெருமை யாருக்கு என்று பார்த்தால்...

நம்ம விருதுப்புரவலர் அ. முத்துலிங்கத்திற்குத் தான்.

ஆக, விருதுக்கே விருது!
பண்டமாற்று!
நல்லாத்தான் இருக்குது!

டாக்டர் பட்டம் கொஞ்சம் கைவசம் இருக்கு.

பிறந்த நாள் பண்டிகையையொட்டி விசேட கழிவும் உண்டு.

உட்பெட்டிக்குள் தொடர்பு கொள்க!

நம்முடையது உட்பெட்டி தான். விசயம் தெரியாமல் வேறு உட்பெட்டிக் கதவுகளைத் தட்டாதீர்கள்!

பிறந்த நாளை ஒட்டி, நகைக்கு விலை கழிவு வேண்டும் என்றால் தட்ட வேண்டியது வேறு உட்பெட்டி!



# வேடரும் காலனியமும்

இன்றைய நவீன உலகில் ஒவ்வொரு நாட்டின் பூர்வீக குடிகளுக்கும் அவரவர்களுக்கான பல சிறப்புரிமைகள் கொடுக்கப்பட்டுள்ளன. இது அமெரிக்கா, அவுஸ்திரேலியா, ஆபிரிக்கா ஏன் நமது அண்மைய நாடான இந்தியாவிலும் கூட மிகத்தீவிரமாகக் கடைப்பிடிக்கப்படுகின்றன. ஆனால் எமது நாடான இலங்கையில் பூர்வ குடிகளான வேடர் என்போர் அரும் பொருட்காட்சியகத்தில் இருக்கும் காட்சிப்பொருட்களாகவும், அழிந்து வரும் உயிரினம் ஒன்றை பாதுகாக்க வேண்டிய பச்சாதாபச் சிந்தனையுடனும் தான் பார்க்கப்படுகின்றனர். இன்னமும் வேடுவர் என்பவர்களுக்கான அடையாளமானது கொத்தும் குழையும், அம்பு வில்லும் கொண்ட மனித உருவங்களைச் சித்திரிக்கும் விம்பமாகவே பார்க்கப்படுகின்றது. இது சமூகத்தின் அனைத்து மட்டங்களிலும் பாரபட்சமின்றி புழக்கத்தில் உள்ளதும் கசப்பான உண்மை.

இலங்கைத்தீவின் பூர்வீக குடிகளாக வேடர்கள் காணப்படுகின்றமை பலருக்கும் தெரிந்த விடயமாகும். அண்மைக்காலமாக வேடர் பற்றிய மானுடவியல் சார் பார்வைகள் பல ஆய்வாளர்களிடையே அகலித்துள்ளன. இது இலங்கையர் நமக்கும் மிகத் தேவையான விடயப்பொருள்தான். காரணம் இன்றைய நவீன உலகானது வரலாறு, பண்பாட்டு மற்றும் மானிடவியல் சார்ந்த ஆய்வாளர்களையே பெரிதும் வேண்டி நிற்கிறது. இலங்கையைப் பொறுத்த மட்டில் இவ்வகையான மானிடவியலாய்வை வேடர் சமூகத்தின் பால் தொடக்கி விட்ட பெருமை “செலிக்மனையே” சாரும். இது இவ்வாறிருக்க அவரின் காலத்திலும் சரி, அவருக்குப் பின்னரான காலத்திலும் சரி இலங்கையின் ஆதிப்பிரசைகளான வேடர் சமூகத்தின் வாழ்வும், வளமும் ஓர் அரிய வகை ஆய்வுப்பொருளாகவே எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இது இவ்வகையான ஆய்வுப்பரப்பில் விடப்பட்ட அல்லது விட்டுக்கொண்டு இருக்கின்ற மிகப்பெரும் ஆய்வறிவுத்தவறாகும்.

வரலாற்றுக் காலம் முதல் இன்றைய காலம் வரை இலங்கையின் வேடர் சமூகம் சார்ந்தும், அவர் தம் பண்பாடு, சடங்கார்ந்த விடயங்கள் மற்றும் மரபு சார்ந்து பல ஆதாரங்கள் தீவின் நெடுகிலும் கொட்டிக்கிடக்கின்றன. அவ்வாறு இருக்கையில் ஏன் இச்சமூகம் சார்ந்த பார்வைகளானது, இன்னமும் ஓர் பாவப்பட்ட உயிரிக்கு உதவுவதாகவும், நம்மால் தான் உதவ முடியும் என்றெண்ணிக் கொண்டு இச்சமுக்கத்தின்பால் பூர்வ குடியென்ற உருவைச் சிதைப்புச் செய்வதாகவும் காணப்படுகின்றன. காணப்பட்டு வருகின்றன என்பதனை நுணுகி ஆராயும் போதுதான் சுனாமிச் சுழியாய் பீடித்துள்ள இக்காலனிய சிந்தனையும், அதன் சிலந்திச் சிக்கலும் பற்றி அறியக்கிடைக்கின்றது.

**கமல் பத்திநாதன்**

## காலனியம் என்றால் என்ன?

குடியேற்றவியல் (Colonialism) என்பது, ஒரு தேசத்தின் எல்லைகளுக்கு வெளியே உள்ள ஆட்சிப்பகுதி ஒன்றின் மீது, ஒரு குறித்த தேசமானது தனது இனத்தை குடியேற்றம் செய்வதன் மூலமோ, தனது நிர்வாக அலகினடிப்படையில் அடிமைப்படுத்துவது மூலமோ, அதன் இறைமையை விரிவாக்கம் செய்வதைக் குறிக்கும். இச் செயற்பாட்டின் போது குடியேற்றத்திற்கு ஆளான உள்ளூர் மக்கள் நேரடியாக அடிமைப்படுத்தப் படுகிறார்கள். அல்லது சொந்த நிலங்களைப் பறித்து, இடம்பெயரச் செய்விக்கப்பட்டு திக்கற்றவர்களாக ஆக்கப்படுகின்றார்கள்.

குடியேற்றம் செய்பவர்கள், பொதுவாகக் குடியேறிய பகுதிகளின் நில வளங்கள், சுதேசிகளின் உழைப்பு, சமயச்சடங்குகள் என்பவற்றின் மீது ஆதிக்கம் செலுத்துகிறார்கள். சில வேளைகளில் தமது பண்பாட்டு, சமய மற்றும் மொழிக் கட்டமைப்புகளை உள்ளூர் மக்கள் மீது திணிப்பதும் உண்டு. இவ்வாறான குடியேற்றவியம் என்பது மேற்படி செயற்பாடுகளை நியாயப் படுத்துவதற்கும், வளர்த்தெடுப்பதற்குமான ஒரு தொகுதி நம்பிக்கைகளைக் குறிக்கவும் பயன்படுத்தப்படுவதும் உண்டு.

பொதுவாக, குடியேறுபவர்களுடைய பழக்க வழக்கங்களும், நம்பிக்கைகளும், உள்ளூர் மக்களுடையவற்றைக் காட்டிலும்

> நாகரிகம் அடையாதவர்களை நாகரிகம் அடைய வைக்கப் போகின்றோம்.
> அபிவிருத்தி அடையாதவர்களை அபிவிருத்தி அடைய வைக்கப்போகின்றோம்.
> கல்வியறிவு இல்லாதவர்களுக்கு நவீன கல்வியைக் கொடுக்கப்போகின்றோம்.
> எனும் நயவஞ்சகத் தொனியில் உண்டு பண்ணிய தொண்ணூற்றி ஐந்து வீதமான வேலைப்பாடுகள் வேடர் இனக்குழுமத்தினை அவர்தம் தனித்துவப் போக்கில் இருந்து விடுபடச் செய்தனவாகவும், பண்பாட்டுச் சிதைப்புச் செய்தனவாகவுமே காணப்படுகின்றன.
> அவை இன்று வரை பல்வேறு பரிணாமங்களில் நீங்காத நோயாய் பீடித்த வண்ணமே உள்ளன.

உயர்ந்தவை என்ற நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டிருப்பது தான் குடியேற்றவியலின் உச்சகட்ட வெற்றி. குடியேற்றவியத்தின் தோற்றப்பாடு, பல்வேறு கால கட்டங்களிலும் உலகம் தழுவிய நிலையில் காணப்பட்டாலும், இது பொதுவாக ஐரோப்பியப் பேரரசுகள் தொடர்பிலேயே சிறப்பாகக் குறிப்பிடப்படுகின்றது.
(நன்றி: விக்கிபீடியா)

இவ்வாறான போக்குடன் தான் காலனியம் என்ற சொல்லாடலானதும், அதன் கருத்தியலும் இன்று வரையிலும் புரிந்து கொள்ளப்பட்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது. அதையொட்டிய பார்வையுடன் நவீன சிந்தனையையும், காலனியத்தினையும் பார்க்க பலரும் எத்தணிக்கின்றனர். அதனடிப்படையில் பார்க்க முனைந்ததன் விளைவாகவே காலனியவாதிகளாக ஐரோப்பியர் மாத்திரம் கருத்தில் எடுக்கப்படுவது ஆகும். இது இவ்வாறிருக்கையில் தான் இலங்கையின் வேட சமுகத்துள் காலனியப் பாதிப்பை ஐரோப்பியர் மாத்திரம் ஏற்படுத்தவில்லை எனும் பார்வையுடன் இப்பத்தி விரிகின்றது.

## ஐரோப்பியக் காலனியமும் வேடரும்

ஐரோப்பியருக்கும் அப்பால் எவ்வகையான காலனியவாதிகள் உள்ளனர், காலனியம் என்பது உண்மையில் எதைக்குறிக்கின்றது. முதலான சிந்தனைகளை அறிஞர் பல ஏற்படுத்தியுள்ளனர். அவ்வகையில் தான் ஐரோப்பியரும், அவர் தம் நவீன கல்வி, நவீன சிந்தனை என்பன இலங்கை வேடுவர்களின் மீது ஏற்படுத்திய காலனியத் தாக்கதினைச் சற்றுப் பார்க்கலாம்.

ஏலவே சொன்னது போல் நவீன கல்வியும், அதன் சிந்தனையும் பின்வாறான நடைமுறைகளை வேட இனக்குழுமம் சார்ந்து ஏவிவிட்டது. அதாவது,
01.நாகரிகம் அடையாதவர்களை நாகரிகம் அடைய வைக்கப் போகின்றோம்.
02.அபிவிருத்தி அடையாதவர்களை அபிவிருத்தி அடைய வைக்கப்போகின்றோம்.
03.கல்வியறிவு இல்லாதவர்களுக்கு நவீன கல்வியைக் கொடுக்கப்போகின்றோம்.
எனும் நயவஞ்சகத் தொனியில் உண்டு பண்ணிய தொண்ணூற்றி ஐந்து வீதமான வேலைப்பாடுகள் வேடர் இனக்குழுமத்தினை அவர்தம் தனித்துவப் போக்கில் இருந்து விடுபடச் செய்தனவாகவும், பண்பாட்டுச் சிதைப்புச் செய்தனவாகவுமே காணப்படுகின்றன. அவை இன்று வரை பல்வேறு பரிணாமங்களில் நீங்காத நோயாய் பீடித்த வண்ணமே உள்ளன.

முதலில் வேடர் தம் பண்பாட்டு மரபுகளான வாழ்க்கை முறை, மரபு, சடங்கார்ந்த நடவடிக்கைகள் என அனைத்துக் கூறுகளினையும் எளிய விடயங்களாகக் கருதும் மேட்டுமை சிந்தனையையும் , கல்விப்புலத்தினையும் ஏற்படுத்தினர். பின்னர் பொருளாதார ரீதியில் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துகிறோம் என்ற போர்வையில் இயற்கை வாழ்விட முறைகளைச் சிதைத்தனர்.

இவ்வாறான செயற்பாடுகளினால் வேடக்குழுக்களின் இயற்கையோடு இணைந்த வாழ்க்கை முறை, அவர் தம் சூழலியல் சார்ந்த அறிவுப்புலமை, இயற்கையைப் பேணி வந்த நற்திறக்கட்டமைப்புக்கள் என்பன எவ்வாறு அல்லோலகல்லோலப் பட்டுப்போயுள்ளன, போகின்றன என்பது பற்றி இன்னமும் ஆழமாக புரிந்து கொள்ளப்படாமலே உள்ளது.

இலங்கையில் இன்று வாழ்கின்ற வேட சமூகத்தின் மூத்த பிரதிநிதி ஒருவர் தனது மன ஆதங்கத்தினை இவ்வாறு வெளிப்படுத்தினார்.

“இந்த நாட்டில் பூர்வ குடிகளான நாம் எமது ஆதிப்பண்பாட்டினை எந்த வித நவீன சிந்தனைகளும் இடையில் புகுந்து கொள்ளா வண்ணம் மிகவும் சாதாரணமாகவும், சுதந்திரமாகவும் கற்றுக் கொள்வதற்கான ஏதாவது வாய்ப்புக்கள் உண்டா?

அன்று தொடங்கி இன்று வரைக்குமான அரசுகளால் ஏற்படுத்தப்படுகின்ற எந்த நடவடிக்கைகளை உங்களால் எமக்கான அபிவிருத்திச் செயற்பாடாகச் சொல்ல முடியும்?

எமது பிள்ளைகள் எங்கள் மொழியில் தமது கல்விப்புலமையை வளர்த்துக் கொள்வதற்கான வாய்ப்பும் இல்லை. எமது பண்பாட்டை எமது குஞ்சுகளுக்குக் கடத்தக்கூடிய சூழலும்

இல்லை. இது இவ்வாறு இருக்கையில் தான் இவற்றை வெறும் மனக்குமுறலாக மட்டும் இன்றைய அறிவுப்புலத்தினரால் கடந்து செல்ல இயலுமா?"

இவரின் இக்கருத்தின் ஊடாக சில விடயங்களை நாம் கேள்விக்கு உள்ளாக்க வேண்டிய தேவையுண்டு.

## ஐரோப்பியரை விடுத்தும் காலனியவாதிகள் உண்டா?

இக்கேள்வி பலருக்கு வியப்பை உண்டு பண்ணலாம். காரணம் எமது அறிவுப்புலமானது காலனியம் சார்ந்து இவ்வாறான மீள் வாசிப்புக்கு வழிசமைத்தது குறைவு. வேடர் வழக்காற்றியலைப் பொறுத்த மட்டில் காலனியத் தாக்கமானது பல் நெடுங்காலமாக ஏற்படுத்தப்பட்டு வந்துள்ளமையினை நன்கறிய முடியும். அதற்கு வரலாற்று நெடுகிலும் இலங்கையில் வந்தேறிய சோழர் முதலான வந்தேறு குடிகளே சாட்சியாகும்.

காலனியம் சார்ந்தும், நவீனவாதத் தாக்கம் சார்ந்தும் ஒரு வேட்டுவ முதுசம் தனது வரலாற்றுப்புரிதலை இவ்வாறு பதிவு செய்தார். "குஞ்சான் (மகன்) நம்மட சமூகத்த கட்டுப் படுத்தினது வெள்ளக்காரன் மட்டுமில்ல. அந்தக் காலத்துல இருந்து இஞ்ச வந்து குடியேறின வந்தேறு குடிகளான சோழர் தாண்டா"

இவரது இம்மாணிக்கக் கருத்தின் ஆழமானது மிகப்பெரியது. உண்மையில் ஐரோப்பிய வருகைக்கு முன்னரான பிற நாட்டவரின் வருகையினை நாம் இவ்வாறுப் பிரித்துப் பார்க்க முடியும்.

1.இலங்கையின் தெற்கேயிருந்த ருகுணப் பேரரசு.
2.மட்டக்களப்பு மண்முனையில் உன்னரசகிரியைத் தோற்றுவித்தவர் எனக்கூறப்படும் வெளிலிருந்து வந்த ஆடகசவுந்தரியின் ஆட்சி .
3. சோழப்பேரரசின் ஆட்சி.
4. கிழக்கில் ஆட்சிபுரிந்த வெளியிலிருந்து வந்த மாஹோன் ஆட்சி.
5.ஐரோப்பியக் காலனியவாதிகளான போர்த்துகேயர், ஒல்லாந்தர் ஆங்கிலேயர் அரசு.
6.சுதந்திரத்திற்குப் பின்னரான சுதேசிய அரசு. (நன்றி- பேரா. மௌனகுரு)


மேற்சொல்லப்பட்ட. மற்றும் சொல்லத் தவறிய அனைத்து வகையான வந்தேறு குடிகளும் வேட்டுவக்குடிகளை தமக்கிசைந்த வகைகளில் சாதிகளாகவும், குடிகளாகவும், ஆரியச் சமய இடைச் செருகல்களினை மேற்கொண்டனர். மாஹோனின் வருகையின் பின்னர் தான் இயல்பாக இருந்த சமூகக்கட்டமைப்பானது குடிகள் எனும் ஏற்றத்தாழ்வுகளுக்குள் புகுந்து கொண்டமைக்கு வரலாறு சாட்சி.

ஆரியரும் சரி, ஐரோப்பியரும் சரி மதம் சார்ந்த விடயங்களிலும், சடங்கார்ந்த நடவடிக்கைகளிலும் தான் மிகப்பாரியளவிலான காலனியப் போர்களை மிக நுணுக்கமாகத் தொடுத்தனர். தன்னொடு வாழ்ந்த, தனக்காக வாழ்ந்த முன்னோரை வழிபட்டும், வாழ்வுக்கான ஆதாரமுமாகவுமே வேடுவர்கள் கொண்டு வாழ்ந்தனர். ஆனால் இந்தக் காலனியக் கூட்டங்கள் சொர்க்கத்திற்கு படையல் அனுப்ப வைத்தன. மனிதனை விட மாட்டை உயர்வாக நினைக்க வைத்தன. சக மனிதனிடம் நீர் வாங்கிக் குடிப்பதை விட மாட்டு மூத்திரத்தைக் குடிப்பது புனிதம் என்றன. பல்லாயிரமாண்டுகலாக பேசிய மொழியை நீச மொழி என்றன. இவ்வாறு படிப்படியாக முன்னேறிய இவர் தம் காலனியாதிக்கம் சொந்த நிலத்தையும் பறித்து திக்கற்றவர்களாக ஆக்கியதை பலர் அறிந்தும் அறியாமல் உள்ளனர்.

இன்றைய காலத்தில் காலனியாதிக்கம் பல பரிணாமங்களை மிகச்சாதுரியமாக வாழைப்பழத்தில் ஊசியேற்றுவதைப் போல் தனது வேலையைக் காட்டிக் கொண்டுதான் இருக்கின்றது. அண்மைய கால இலங்கையைப் பொறுத்த மட்டில் தமிழர் பிரதேசங்களில் புத்தர் சிலையை வைத்தல் பெரும்பான்மைச் சிந்தனை, ஆதிக்க மனோபாவம் ஆனால் வேடர் சமுகங்கள் பரந்து வாழும் கிராமங்களில் தமிழ் தெய்வங்களான அம்மனுக்கு கோயில் கட்டுவதோ, அதை நாகரிகமாக நினைத்து வணங்கப்பண்ண வைப்பதோ, கோயிலின் பெயருடன் சிறீ என்ற எழுத்தைப் புகுத்துவதோ, இன்னும் சொல்லப் போனால் ஒரு இனத்தினை அதன் பெயரையே பொதுவில் சொல்லத் தயங்கவைப்பதும் கூட பெரும்பான்மைச் சிந்தனையும் அல்ல, ஆதிக்க மனோபாவமும் அல்ல. இவ்வாறு பலவற்றைச் சொல்ல இப்பத்தி போதாது.

ஆகவேதான் காலனியம் என்பது ஐரோப்பியருடன் வந்த விடயம் மட்டுமல்ல. அது ஆரியக்காலம் முதல் ஏன் இன்றும் மேட்டுமைச் சிந்தனையுடன் காணப்படும் சாதிய ஒடுக்குதலும் என இன, மத , மொழி சார்ந்த சகல விடயங்களும் இன்று வரை வேடப்பழங்குடிகளை இன்றும் காலனியாதிக்கத்துள் வைத்திருப்பதை புத்திஜீவிகள் துரிதமாக உணர வேண்டிய காலம்.






# ஒரு வலசையின் நாட்பட்ட வாக்குமூலம்

## மாலினி

“டுப்“.

கனவில் கேட்பது போலிருந்தது அந்த ஒலி. இரவு பன்னிரண்டு கடந்து இரண்டு மணித்தியாலங்களுக்குள் இருக்கலாம் அப்போது. வெடிச் சத்தம் பழக்கப்பட்டுப் போன மூளை விழித்துக் கொண்டது.. எனினும் கனவா என்ற குழப்பமிருந்தது , கனவிலும் நனவிலும் அது தான் எமக்குப் பழக்கமாகவும் இருந்தது..

“டுப்“.

மீண்டும் அந்த ஒலி கேட்ட போது கனவல்ல என்பது தீர்மானமாகியது.. மூளையும் காதும் தம்மைக் கூர் தீட்டிக் கொண்டு இருட்டின் ஓசையை அவதானிக்கத் தொடங்கின..

மீண்டும் சில நிமிடங்கள் விட்டு அதே தனி ஒலி.

“டுப்“.

அம்மாவின் அருகில் நெருங்கிப் படுத்து “ம்மா“ என்றேன் காதுக்குள்..

அம்மாவும் இரகசியமாகவே “ம்” என்றார்.

“எங்கேயோ வெடிச்சுக் கேக்குதம்மா.”

“ஓம் சத்தம் போடாமல் படு“

“ம்மா கொழும்புத்துறைப் பக்கமாக் கேக்கிற மாதிரி இருக்கு.”

“ஆமிக்காரன் அலையுறான் போல சத்தம் போடாமல் படு விடிஞ்சப்பிறகு பாக்கலாம்.”

“ம்மா, அந்தச் சத்தம் கடலுக்குள்ளை கேக்குது. ஆமிக்காரன் ஏன் கடலுக்கை போறான்.”

“ஆரோ வெடிக்கட்டும். அடிவாங்காமல் படு”

அம்மா காதுக்குள் நெருமினார்

வெடிச்சத்தத்தின் நேர இடைவெளி குறுகியது. இடைக்கிடை அது இணையொலியாக டுப் டுப் என்று கேட்டது

“ம்மா கொழும்புத்துறைப் பக்கம் தான் அதுவும் கடற்கரையில இல்லை கடலுக்குள்ள கேக்கிற சத்தம் இது எதிரொலியும் கேக்குது.”

“சத்தம் போடாமல் கிட பார்ப்பம்.”

அம்மா காதில் இறுக்கி முறுக்கி வைத்தார்.

“அம்மா ஆமிக்காரன் வெடியில்லை. பெடியங்களின்ர சூடு” இது IPKF காரங்கள் கடலுக்குள்ள இறங்க மாட்டாங்கள். அதுவும் திரும்பிப் போறதா முடிவானப் பிறகு சுடுபட்டுச் சாக விசரே அவங்களுக்கு.”

அம்மாவுக்குப் பொறுமை இழந்தது.

ஆனாலும், வழமை போல அடிக்கத் துரத்தவும் நான் ஓடவும் முடியாத இரகசிய இரவுகளை அனுபவித்த காலங்கள் அவை..

இந்திய ராணுவம் வருமுன்பாக, எங்கள் வீட்டு வாசலில்,, வீதி சேர்ந்து இணையும் சந்தியில், பின் அது கிளை பிரிந்து சென்று இணையும் A 9 வீதியில் என நிரந்தரமாக வருடக் கணக்காக பெடியன்களின் சென்றிகள் இருந்தன.

அவர்களைத் தாண்டித்தான் நான் பாடசாலைக்கும் ரியூசனுக்கும் வேறு எங்கு செல்வதானாலும் வாசல் கடக்க வேண்டும். வாசல் கடந்து, ரயில்பாதைச் சந்திக்கு வந்து, அவர்களின் மற்றைய சென்றி கடந்து, பின்னர் காம்ப் கடந்து, கண்டி வீதியில் சென்றி கடந்து தான் நான் எங்கும் போக முடியும்

போராளிகள் அமளியாக இருந்த காலத்தில் தான் தாத்தா இறந்தார். தாத்தா இறந்து நாம் தனியான பின் இரவுகள் பாதுகாப்பற்ற அச்சத்தைக் கொடுத்தன. இவர்கள் தம் காவலுக்காக எம் வாசலைத் தேர்ந்து கொண்ட ஆரம்ப நாட்கள் அசௌகரியத்தையும், அச்சத்தையும், பின் படிப்படியாக பாதுகாப்புணர்வையும் கொடுக்கத் தொடங்கின.

அவர்கள் வாசலில் இருந்த காலத்தில் நாம் நிம்மதியாக உறங்கினோம்.

வழியெல்லாம் அவர்கள் இருக்கிறார்கள் என்ற துணிவில் இரவுத் திருவிழாக்களிலிருந்து தனியாக வீடு திரும்ப முடிந்தது. அதிகாலையில் திருவெம்பாவைக்குக் கோவிலுக்குச் செல்லத் துணை வரும் அம்மாவை மறித்து நீங்கள் வீட்டில இருங்கோ அம்மா வழியெல்லாம் நாங்கள் இருக்கிறோம் அவள் தனியாகப் போவாள் எனக் கூட வந்ததும், இவர்கள் என்னவர்கள் என் சகோதரர்கள் என்ற எண்ணத்தை ஏற்படுத்தியிருந்தது..

மாலை கடந்த மைமல் நேரத்தில் அவர்களுக்கு இரவுக்குத் தேவையான தண்ணீர் பானையை வாசலில் வைத்து கூடவே ஒரு டம்ளரும் வைத்து விட்டு நான் கேற்றைக் கட்டப் போகிறேன் தம்பிமார் என்று சொல்லி விட்டு கேற்றை

ஆமைப் பூட்டால் பூட்டுவார் அம்மா.

இரவு எட்டு ஒன்பது மணி வரை முற்றத்தில் விறாந்தையில் வழமையான வேலைகளுடன் உலவி விட்டு ஒன்பது மணிக்கு உள்ளே நுழைந்து கதவு பூட்டினால் மீண்டும் நிலம் தெரியும் வரை வெளியே வருவதில்லை நாம். மாடு கத்தினாலும் நாய் குறைத்தாலும் அவர்கள் வெளியே இருக்கிறார்கள் என்ற நம்பிக்கையிருந்தது.

அதுவே, இந்திய அமைதிப்படைக் காலத்தில் விளக்கு வைக்கும் நேரத்துக்கு முதல் இரவுச் சாப்பாடும் முடித்து உள்ளே நுழைந்து, கதவை பூட்டி விட்டால் சிறுநீர் கழிப்பதற்குக் கூட வெளியே வருவதில்லை. என்ற நிலைக்கு மனம் மட்டுமில்லை உடலும் பழக்கப்பட்டிருந்தது.

அயலில் ராசம் அக்கா வீட்டு ஆட்டுக் கட்டைக்குள் ராணி அக்காவுக்கு இராணுவத்தால் இரவில் நிகழ்ந்த கொடுமையை விடிகாலையில் ராசம் அக்கா குரலெடுத்துக் கத்தி அறிவித்து , அயலெல்லாம் கூடி அலங்கோலமாய் கிடந்த ராணி அக்காவையும் ராசம் அக்காவயும் கண்ட பின் விடியும் வரை சிறுநீர் கூட வருவதில்லை எமக்கு. எல்லா வீட்டு வெளிச்சமும், நடமாட்டமும் இரவு பட்டதும் அணைந்து கிடந்த காலம் அது.

ஜன்னலால் காலை வெளிச்சம் உள்ளே வந்து, அயலவர்கள் குரல்கள் சாதாரணமாகக் கேட்கும் வரை வெளியே வராத காலங்களும், வெளியே வந்த பின் கோழி அடிக்கக் கம்புடன் வரும் ராணுவத்தைக் கண்டால் கூட முற்றத்தைத் தவிர்த்து வீட்டுக்குள் நுழையப் பயந்த காலமும் அது.

என்றாவது இத்தனை ஆரவாரங்களுக்கும் முன் கதவு திறந்து வெளியே வர நேர்ந்ததெனில் அந்நாட்களில் சுந்தரலிங்கம் மாமா கதவைத்தட்டி "நான் தான் வெளியே நிக்கிறேன் பயப்படாமல் கதவைத் திற அக்கா" எனச் சொல்லி நம்பிக்கையூட்டினால் தவிர அம்மா கதவைத் திறக்கத் துணிந்ததேயில்லை.

சுந்தரலிங்கம் மாமா, அம்மா பிறந்து வளர்ந்த அயலில் பிறந்து வளர்ந்த அம்மாவின் உடன் பிறவாத தம்பி. என் மேல் இறுதிவரை அக்கறை கொண்டிருந்த என் நேசமிகு மாமா. மனிதர்களுடன் உறவு பூண விளையும் ஒரு மனைவியும், அன்பைக் கொட்டி என்னைக் கொண்டாடும் குழந்தைகளும் அவருக்கு இருந்தார்கள். என்பதால் அவர் எப்போதும் எமக்கு நெருக்கமானவராக இருந்தார்.

நாட்டுப் பிரச்சனை ஓடவைத்த போதெல்லாம் தன் குடும்பத்தையும் எம்முடன் இணைத்துக் கொண்டு கூடவேயிருந்து பாதுகாத்த மனிதன்.

அன்றும் சாமத்தில் இடைக்கிடை இடைவெளி விட்டு டுப் ... டுப் என்று கேட்ட வெடிச்சத்தம் நேரம் போகப் போக சடபுட என்று கேட்க ஆரம்பித்தது

"அம்மா கடலுக்கு வெளியில சுடுபடுகீனம்."

அம்மா அடித்தால் சத்தம் வரும் என்ற வழமையான பயத்தில் இருட்டில் காதைத் தேடிப்பிடித்து இன்னும் இறுக்கமாக முறுக்கினார், அந்த நேரம் தான் சுந்தரலிங்கம் மாமா அவசரமாக கதவை இரண்டு கைகளாலும் பலமாகத் தட்டி "அக்கா நான் தான் பதட்டப்படாமல் கதவைத் திறவுங்கோ" என்று குரல் கொடுத்து எழுப்பினார். அம்மாவுக்கு நம்பிக்கை வரவில்லை. "எங்கேயோ கிட்டவா ஆமி சுடுகுது. வெளிய வா அக்கா எல்லாரும் ஒண்டா இருந்தால் ஓட வசதி" அவசரப் படுத்தினார் .

அம்மா கதவைத் திறந்தார். நாமெல்லோரும் எங்கள் விறாந்தையில் வெளிச்சம் வராத நான்கு மணிப் பொழுதில் குறண்டிக் கொண்டு கூடியிருந்தோம்.

அது எந்த மாதம் என்று இப்போது என்னால் சரியாக ஞாபகப் படுத்திச் சொல்ல முடியாது விட்டாலும் 1990 தைமாதம் பொங்கல் கடந்த சில நாட்களின் பின் என நினைக்கிறேன். குளிரும் காலைப் புகாரும் அதிகமாக இருந்த காலம் அது.

வெடிச்சத்தம் உச்சத்துக்கு ஏறி. பெரும் பதட்டத்தைப் பரப்பி மெதுமெதுவாக ஓய்ந்திருந்தது. நிலம் வெளுத்தும் வெளுக்காத பொழுதில், அம்மா அசந்த நேரம், விறாந்தையிலிருந்து நழுவி வீட்டின் பக்கவாட்டில் வைக்கோற்போருக்குள் மறைந்து நின்று வீதியை நோட்டமிட்டேன்.

ஆளையாள் அடையாளம் தெரியாத நேரத்தில் பக்கத்தில் அசைகை உணர்ந்து பதட்டத்தில் திரும்ப, அருகே மாமா குந்திக்கொண்டிருந்தார். முறைத்துக் கொண்டு உள்ளே இழுத்துப் போகப் போகிறார் என்று நினைத்த போது , "போறதுக்கு முதல் சுட்டுக் கட்டியிருக்கிறாங்கள், வேற ஒண்டுமில்லையம்மா" என்றார் இரகசியமாக.

நான் மாமாவைச் சுரண்டி வெளியே லைட் போஸ்ட்டை, எதிரே, ஆச்சி வீட்டின் பழைய பாவிக்காத கக்கூசை என ஒவ்வொன்றாக விரல் சுட்டினேன்.

"ஓமடி ராசாத்தி பதுங்கியிருக்கிறாங்கள்.. என்ன மண்ணாங்கட்டிக்கு எங்கட வீடுகளுக்கருகில நிக்கிறாங்களோ தெரியாது. வீடுக்குள்ள நுளையிறதுக்கிடையில பொம்பிளைப்பிள்ளை உன்னை எங்காவது கொண்டு போயிட வேணும்". மாமாவின் குரலில் பயம் அப்பிக் கிடந்தது.

"நீங்கள் எங்கட வீட்டை ஓடி வரேக்குள்ள காணேல்லையே மாமா?"

மாமா நெஞ்சில் கையை வைத்து ஏங்கினார். பின் "காணேல்லையடி ராசாத்தி இருட்டேல்லோ" என்றார்.

நிலம் இன்னும் சற்று வெளுத்தது, அவர்கள் இன்னும் தெளிவாகப் புலப்பட்டார்கள். இந்திய ராணுவத்தைப் போல மதர்த்து விரிந்து அகலாத, உருவங்கள் . பக்கவாட்டாக நின்றால் லைட் போஸ்டில் தம்மை மறைக்கக் கூடிய பருமன் கொண்ட இளம் உடல்கள். எம் போராளிகளின் அடையாளங்கள். இன்னம் கூர்ந்து பார்த்த போது அந்தச் சீருடை இராணுவத்திரது போலல்லாது இதுவரை நாம் கண்டத்துக்கு மாறாக மெல்லிய வரிகளைக் கொண்டிருந்தது.

"மாமா இது ஆமியில்லை எங்கட ஆட்கள்."

"சீருடை போட்டிருக்கிறாங்கள் ஆமி பிள்ளை."

"இல்லை மாமா எனக்குத் தெரியும்."

மாமா சத்தம் போடாமல் வீதியையே பார்த்துக் கொண்டிருந்தார்.

"சனம் ரோட்டால திரிய வெளிக்கிட்டுது எண்டால் பெடியளோ ஆமியோ எண்டு தெரிஞ்சிடும்"

"எப்பிடி?"

"பெடியள் சும்மா போவாங்கள். ஆமிஎண்டால் தங்கட அதிகாரத்தைக் காட்ட எண்டாலும் மறிச்சு உறுக்கி

நாலு கேள்வி கேட்பான்."

"ஆங். போகச் சொல்லியாச்சு இன்னும் இங்க என்ன மண்ணுக்கு எங்களை அதிகாரம் பண்ணிக்கொண்டு வந்தேறியள்."

"சத்தம் போடாத அம்மாச்சி பாவியள் நாங்கள் அறியாமல் எங்கட வேலிக்குள்ளும் பதுங்கிக் கிடக்கக்கூடும்."

இன்னும் சற்றுப் புலர்ந்தது.

ஆனால் வீதியில் அதிகாலையில் வரும் பால்க்காரச் சைக்கிள், பாண் வண்டில், பாண் சைக்கிள் உட்பட எதுவும் வரவில்லை.

வைக்கற் போரிலிருந்து வேலிக்கரைக்கு நகர்ந்து ,பின், கேற்றுக் கருகில் தவழ்ந்து வந்து நின்று பார்த்தேன். மாமாவும் பாதுகாப்பாய் அருகில் வந்தார். பின் சற்று முன்னேறி வீதியில் இறங்கிய போது அவர்களைத் தெளிவாகக் காணக் கூடியதாக இருந்தது வீதி முழுதும் மறைவாக நிலையெடுத்து நின்றிருந்தார்கள்..

ஏற்கனவே இந்திய ராணுவத்துடன் போர் ஆரம்பித்த காலத்தில் அம்மன் கோவிலுக்குள் இருந்து வெளிவந்த போது சுப்பிரமணியம் மாமாவின் பிள்ளைகளையும் என்னையும் கோவில் சிவரோடு சாத்தி வைத்துவிட்டு ராணுவம் தோட்டாவால் அவுட்லைன் வரைந்த அனுபவம் இருந்ததால், இப்போது வெளியே வந்த போது சுடாததை வைத்து அது ஆமி இல்லை என்று முடிவு செய்தது மனம்.

அயல் முழுதும் உறவுகள்.. எல்லோரும் என் மனிதர்கள் என நான் நம்பிய காலம் அது, சித்தி வீடும் குழந்தைகளும் நினைவில் வர சீருடையைக்காரர் நின்ற வீதி கடந்து அங்கே ஓடும் எண்ணம் வந்தது. அவர்களைக் கடந்த போது வீதியில் உள்ள வளவுகள் முழுதும் நிறைந்திருக்கிறார்கள் என்பதும் அவர்கள் நிச்சயமாக ஆமியே இல்லை என்பதும் தெளிவானது .

சித்தி வீட்டில் சித்தியும் சிறு பிள்ளைகளும் சித்தப்பாவும் இருப்பார்கள். அடிபாடு நடந்தால் தவிர பயம் அதிகமில்லை.

அடுத்த வீதியில், பாட்டி வீட்டில் பாட்டியும் மாமாவும் தனியாக இருப்பார்கள். மாமா குழந்தை மனம் வளர்ச்சியுறாத மனிதர். இயல்பு நிலை மாறும் போது தடுமாறி விடக் கூடியவர். இப்போது இவர்களை எவர் என எண்ணுவார். இவர்களை மோப்பம் கொண்டு ராணுவம் வந்தால் மாமாவின் எதிர்வினை எப்படியிருக்கும் என்ற நினைவு மற்றெல்லா விடயங்களையும் பின்தள்ளி பாட்டி வீட்டுக்குச் செல்ல உந்தியது.

பாட்டி வீடு கோவில் வீதியில் இருந்தது. பாட்டிக்கு அதிகாலையில் நடைதிறக்கு முன்பே கோவிலை வலம்வரும் வழக்கம். இயல்பிலேயே ஆயுததாரிகள் எவரையும் பிடிக்காதவர் மட்டுமல்ல நிர்தாட்சணியமாக வெறுக்கவும் ஒதுக்கவும் பேசவும் கூடியவர். இப்போது இவர்களை அதிகாலையில் கண்டால் என்னாகும். அவரது எதிர்வினை எப்படியிருக்கும். பாட்டியின் உரத்த வெறுப்பான குரலுக்கு இவர்கள் என்ன விதமாகப் பதில் சொல்லக் கூடும்.

கடவுளே...... நினைத்த மாத்திரத்தில் அனைத்தும் மறந்தது. பாட்டி வீட்டை நோக்கி ஓடத் தொடங்கினேன்.

வீதியெங்கும் சீருடைகள் மட்டுமே நிறைந்திருந்தன.

"இதால போகக் கூடாது ஆட்கள் உலவாமல் மறிச்சு வைச்சிருக்கிறம்." அசல் யாழ்ப்பாணத் தமிழில் அவர்கள் தடுத்த போது இராணுவமாக இருந்தால் எனத் துளி அளவிருந்த சந்தேகமும் அற்றுப் போனது இனிப் பதில் சொல்லப் பதட்டமும் இல்லை.

"நான் அம்மம்மாவிட்டப் போக வேணும்".

"இதால திரியக் கூடாது."

> அவரது வீடிருந்த வீதி முழுவதும் போராளிகள் வரிச் சீருடையில் கண்களில் தூக்கமும் களைப்பும் சுமந்து நின்றிருந்தார்கள். கேற் இரும்புச் சங்கிலியால் சுற்றி ஆமைப்பூட்டால் பூட்டப்பட்டிருந்தது. எத்தனையோ முறை நான் குரல் கொடுத்தும் பாட்டி கேற்றைத் திறக்கத் தயாராக இருக்கவில்லை.

"ஏன்?"

என்ற கேள்விக்குப் அவர்கள் பதில் சொல்லுமுன், "அவள் போகட்டும். அந்த ஒழுங்கை வரைக்கும் தான் போவாள் பயமில்லை" என்றதுவீதியோர வேலியின் பன்னைப் பற்றைக்குள் இருந்த குரல்.

திரும்பிப் பார்த்தேன். முன்பு வாசலில் இருந்தவர்களில் ஒருவர்..

இவ்வளவும் கடந்து பாட்டி வீட்டுக்குப் போனால் பாட்டி கேற்றைப் பூட்டி வைத்திருந்தார்.

அவரது வீடிருந்த வீதி முழுவதும் போராளிகள் வரிச் சீருடையில்கண்களில் தூக்கமும் களைப்பும் சுமந்து நின்றிருந்தார்கள். கேற் இரும்புச் சங்கிலியால் சுற்றி ஆமைப்பூட்டால் பூட்டப்பட்டிருந்தது. எத்தனையோ முறை நான் குரல் கொடுத்தும் பாட்டி கேற்றைத் திறக்கத் தயாராக இருக்கவில்லை.

கேற்றுக்கு வெளியே வீதியில் நின்று "ஐயோ கடவுளே இது ஆமியே இல்லை திறவுங்கோ" என்று கெஞ்சினாலும், ஆயுதம் தாங்கிய எவரையும் பாட்டி நம்பவோ ஏற்கவோ தயாராக இருக்கவில்லை.

பாட்டி வீட்டு ஒழுங்கை , கோவில் வீதி என பதுங்கி இருந்தவர்களில் பலர் முகம் அறிந்தவர்களாக இருந்தார்கள். இந்நிலையில் ராணுவம் வந்தால் என்னாகும் என்பதும் பதட்டம் தந்தது. பாட்டியிடம் போகவேண்டும் சொல்லவேண்டும், எதற்கும் தயாராக் இருக்கும்படி அவர்கள் இருவரையும் ஆயத்தம் செய்ய வேண்டும். திறக்க மறுக்கும் பாட்டி வீட்டு கேற்றுக்கும் கதவுக்கும் வெளியே நின்றபடி எப்படி?

இதற்கு மேல் பாட்டியின் பிடிவாதத்தைத் தளர்த்த முடியாது. பாட்டி அப்படித்தான் என்பதால் பூட்டிய கேற்றின் மீதேறி உள்ளே குதித்து கதவை இடித்ததும் கதவைத் திறந்து, உள்ளே வா என இழுத்துக் கொண்டார். பிறகு பின் வளவுக்குள் சென்று பார்த்தபோது நான் எதிர்பார்த்துப் பயந்தது போல வளவு முழுவதும் பதுங்கியிருந்தார்கள். திறப்பை எடுத்து வந்து கேற்றைத் திறந்து விட்டு பாட்டியும் மாமாவும் பற்றிச் சொன்னபோது அவர்கள் உள்ளே வந்து கிணற்றில் தண்ணீர் அள்ளிக் குடித்து விட்டு, பின்கோடியில் மறைந்திருந்தவர்களைக் கூட்டிக் கொண்டு வெளியேறி கோவில் வீதியிலும் பாட்டி

வீட்டு ஒழுங்கையிலும் மறைந்திருந்தர்கள்.

இந்திய ராணுவத்துடனான மோதலின் பின் போனவர்கள் இரவோடு இரவாக கொழும்புத்துறைக் கடலுக்குள்ளால் பயணித்து குறுக்குத் தெருக்களுக்கூடாக முதன்முதலாக ஊர்மனைக்குள் நுழைந்திருந்தார்கள்.

அவர்களில் ஒருவன் ரட்ணா. தோழி ஒருத்தியின் அண்ணன். அண்ணா என்றேன் திரும்பியவன் கண்டு கொண்டதன் அடையாளமாய் கைகளால் சைகை செய்தான். அதற்கு மேல் அவனால் பேசாமல் போக முடியவில்லை என்று நினைக்கிறேன்.

"அம்மம்மாவையும் மாமாவையும் கூட்டிக் கொண்டு உங்கட வீட்டுப் பக்கம் போ. எங்கட ஆட்கள் இந்த இடம் முழுவதும் ஒளிச்சிருக்கினம். ஆமி வந்தால் அனேகமா இதில அடிபாடு நடக்கும்"

எங்கள் வீடு ரயில் பாதையின் அந்தப்பக்கமும் பாட்டி வீடு ரயில் பாதையின் இந்தப் பக்கமும் அமைந்திருந்தன. எங்கள் வீடு அமைந்திருந்த அதே பக்கமாகத்தான் அருகே ஸ்ரீபார்வதி வித்தியாசாலையில் அமைதிப்படை என்று சொல்லப்பட்ட ராணுவம் முகாம் அமைத்திருந்தது.

கொழும்புத்துறைக் கடலில் வந்து, குறுக்குத் தெருக்களால் ஊருக்குள் இறங்கி நேராக வந்தால் பாட்டி வீட்டுப் பகுதிக்கு வரலாம். கொழும்புத்துறையில் துறைமுகத்தை அண்டிய பக்கம் இராணுவ முகாம் இருக்கவில்லை ஆதலால் இரவோடு இரவாக அவர்கள் அப்படித்தான் வந்திருந்தார்கள்.

"இவையளைக் கூட்டிக் கொண்டு கெதியா உங்கட வீட்டுப் பக்கம் போ. தங்கட ஆளுகைக்குள் இருக்கிற பக்கத்து ஆட்களுக்கு அதிகம் பிரச்சனை தர மாட்டாங்கள். இதுக்குள்ளை வந்தாங்கள் எண்டால் கரைச்சல். எங்களோட சேர்ந்து நடுவில மாட்டுப்படவேண்டி வரும்."

"நீங்கள் வந்தது தெரிஞ்சிருக்குமோ?"

"அது தான் சனத்தை ரயில்பாதை கடந்து ஆமிப்பக்கம் போகாமல் மறிச்சு வைச்சிருக்கிறம் ஆனாலும் தெரிஞ்சிருக்கும். அவங்கள் அறிவிச்சிருப்பாங்கள். கெதியாப் போ. நின்று கதைக்கவெல்லாம் எங்களுக்கு அனுமதியில்லை."

அவன் சொன்ன "அவங்கள் "இன்னொரு போராளிக் குழு".

இவர்கள் வெளியேறிய பின் அவர்களும் ராணுவமும் தான் இருந்தார்கள்.

"பின்ன இரவு வரேக்குள்ள சுட்டுக் கொண்டோடா அண்ணா வந்தனீங்கள் ?"

"ஐயோ கதை கேட்டுக் கொண்டு நிக்காமல் உங்கட வீட்டுப் பக்கம் போடீ கெதியா"

பொறுமை இழந்து சீறினான் அவன்.

கொழும்புத்துறைத் துறைமுகத் திலிருந்து town நோக்கிச் செல்லும் பிரதான வீதியில் நேராகப் போனால் துண்டிச் சந்தி வரும். அந்த நாற்சந்தி மூலை வீட்டில் அவர்கள் முகாமிட்டிருந்தார்கள். அந்த நாற்சந்தியிலிருந்து பிரிந்து நீண்டு வரும் பிரதான வீதி அல்லாத வீதி ஒன்றில் இப்போது இவர்கள் நின்று கொண்டிருந்தார்கள். அது ரயில் பாதையை ஊடறுத்துச் செல்லும் அந்த வீதியில் வெடிச்சத்தம் கேட்கத் தொடங்கியது. ரயில்பாதையின் இந்தப்பக்கம் இவர்களும் அந்தப்பக்கம் ராணுவமுமாக வீதி வேலிகளுக்குள் மறைந்து கொண்டு சுடத் தொடங்கினார்கள். பொங்கல் பானை பொங்கி வழியும் நேரம் ஒன்றாகக் கட்டிப் போட்ட சீனவெடி வெடிப்பது போலிருந்தது அந்தச் சடசடப்பு. பின் சற்று நேரத்தில் சத்தம் ஓய்ந்தது.

ரட்ணாவுக்கும் இன்னொரு போராளிக்கும் கை கால்களில் காயம் பட்டிருந்தது. அந்த வீதியிலிருந்து பாட்டி வீட்டுக்குத் திரும்பும் ஒழுங்கையின் முடக்கில் ரட்ணாவின் தங்கை காயப்பட்டவர்களின் ரத்தத்தைக் கழுவ வாளியில் தண்ணீரை வைத்து கிண்ணத்தில் அள்ளி ஊற்றிக் கொண்டு நின்றாள். மேலும் வாளியில் நீர் எடுத்து வந்து அவளருகே வைத்த என்னிடம் "வெள்ளை வேட்டி எடுத்து வந்து குடு" என்றான் ரட்ணா.

"உனக்குக் கட்டவா. பஞ்சு கொண்டு வரவா?"

"ஐயோ என்னட்டை எல்லாமிருக்கு. கொஞ்ச நேரமாவது குறுக்க கதைக்காமல் சொல்லுறதைக் கேள் பாப்பம். அவங்களுக்கு வெள்ளைக் கொடி காட்ட ஓடிப்போய் மாமாவின்ர வேட்டியைக் கொண்டு வா."

மாமாவிடம் ஓடிப்போய் வேட்டி கேட்ட போது கிழித்துக் காயத்துக்குக் கட்டப் போகிறார்கள் என நினைத்து பொங்கலுக்கு வாங்கிய புது வேட்டியை மாமா அவசரமாக மடித்து வைத்து விட்டுப் பழைய வேட்டிகளையும் தரமாட்டேன் என அடம் பிடித்துக் கொண்டிருந்தார்.

பாட்டி முறைத்துப் பார்க்கப் பார்க்க அலுமாரியைத் திறந்து தாத்தாவின் வேட்டிகளில் ஒன்றை எடுத்து வந்து அவர்களிடம் கொடுத்த போது அதை விரித்து அசைத்தபடி இவர்களும் இன்னோர் வெள்ளைக் கொடியைக் காட்டிய படி இராணுவமும் வெடிச்சத்தமின்றி ஏதோ பேச்சுவார்த்தைக்கு நெருங்குவது போல ஒருவரை ஒருவர் நோக்கி நடக்கத் தொடங்கினர்.

வேலிகளுக்குள்ளும் மதில் களுக்குள்ளும் பதுங்கியிருந்த சனம், சமாதானத்துக்கு வந்து விட்டார்கள் என எண்ணிக் கொண்டு பெடியன்களின் பின்னால் மெது மெதுவாக நகர்ந்து வேடிக்கை பார்க்கத் தொடங்கினார்கள். அவர்கள் தடுத்ததையும் பொருட்படுத்தாமல் . எங்கள் வாசலில் நீண்ட காலம் இருந்த ஒருவன், ஆமியை நோக்கி முன்னேறிப் போகும் போது திரும்பி, "ஒழுங்கையோடு நில் சனத்தோடு வராதே அவங்கள் எப்படியும் சுடுவாங்கள் கவனம்" என்று விட்டுப் போனான்.

அவன் சொன்னது போல் தான் நிகழ்ந்தது. இருபகுதிக்குமிடையில் நூறு மீற்றர் கூட இடைவெளி இல்லாதளவு அண்மித்த போது போர் நிறுத்தமென்றும் வெளியேறுவதற்காக நாள் குறிக்கப்பட்டுக் காத்திருந்த நிலையிலும் நேருக்கு நேராய் ராணுவம் போராளிகளை இலக்கு வைத்துத் தாக்கியது .

ஒரு மணி நேரம் நீடித்த சண்டைக்குப் பின் வெற்றி தோல்வியின்றி இராணுவம் முகாமுக்குத் திரும்ப, போராளிகள் தாம் முன்பு உலவிய இடங்களில் நிலையெடுக்கத் தொடங்கினார்கள்.

எங்கள் வீடிருந்த காணியின் எல்லை தாண்டி பக்கவாட்டில் இருந்தது குகதாசனப்பா வளவு. அதைக் கடந்து பிரபா அண்ணா வீடு தாண்டி ஒழுங்கையில் இறங்கினால் பிள்ளையார் கோவில் வரும், பிள்ளையார் கோவில் வீதியோடு இணைந்த வீதியில் பாடசாலை இருக்கிறது அங்கு தான்

ராணுவம் தம் முகாமை அமைத்திருந்தது. எங்கள் வீட்டு முற்றத்துக்கு நேராக குட்டியண்ணா வீடும் நீண்ட பரப்புக் காணியும் வரும் அது கடக்க, வேதநாயகம் வாத்தியார் வீட்டுப் பின் முற்றமும் வீட்டுக் காணியும் வரும்.

அனைத்தும் ரயில் பாதைக்கு இங்கால் ராணுவம் தங்கியிருக்கும் பகுதிக்குள் அமைந்திருந்தது. இவ்விடம் அனைத்தும் முன்பு போராளிகளுக்கு மிகவும் பழக்கப்பட்ட இடங்களாக இருந்ததில் அவர்களுக்கு அங்கே தம்மை நிலைப்படுத்துவது இலகுவாக இருந்திருக்கலாம்.

அவர்கள் வேதநாயகம் வாத்தியார் வீட்டுப் பின் விறாந்தையில் பதுங்கிக் கொண்டார்கள். அது எங்கள் வீட்டு முற்றத்துக்கு நேரான பகுதி.

மதியத்தில் எல்லாம் இயல்புக்குத் திரும்பியது.

அம்மா உலை வைத்திருந்தார். நான் உள்ளே இருந்தேன். தூரத்தே நாய் குரைக்கும் ஒலி கேட்கத் தொடங்கியது.

அது ராணுவம் வரும் சமிக்ஞை.

“பிள்ளை அறையை விட்டு வெளியே வந்து முற்றத்தில் இரு” என்றார் அம்மா

நாய் குரைக்கும் சத்தம் குகதாசனப்பா வளவுப் பக்கமாக என்று புரிந்தது. அந்த வளவில் முன்பு இயக்கம் மரவள்ளித் தோட்டம் செய்து, அதைப்பிடுங்கி சிப்ஸ் செய்து விற்பார்கள். அவர்கள் போன பின் அது நிரந்தர மரவள்ளித் தோட்டமாக மாறியிருந்தது,. உயர்ந்து அடர்ந்த மரவள்ளித் தறைக்குள் பதுங்கி திடுதிப்பென வீடுகளுக்குள் நுழைவது இராணுவத்துக்கு வசதியாக இருந்தது.

எங்கள் வீட்டிற்கு வந்து முற்றத்திலிருந்து குட்டியண்ணா வளவுக்குள் இறங்கினார்கள் எனில் வேதநாயகம் வாத்தியார் வீட்டில் அதைச் சுற்றிய பகுதிகளில் பதுங்கிய அனைவரையும் சுற்றி வளைத்துக் கொன்று போடுவார்கள் என்ற பயம் வந்தது.

அவர்கள் வழமையாக அதைத்தான் செய்து கொண்டிருந்தார்கள். ஊரைச் சுற்றி வளைத்துப் பிடித்துச் சென்று பாடசாலையில் கொன்று அதன் சூழலில் புதைத்துக் கொண்டு தம்மை சமாதானப்படை என அடையாளப் படுத்திக் கொண்டிருந்தார்கள். ஊரில்

“ஓடுங்கோ வந்திட்டாங்கள் என்று கத்தி விட்டு வளவுக்குக் பாளை பொறுக்கத் தொடங்கினேன். சற்றைக்குள் எனக்கருகே மூன்றோ நான்கோ ராணுவத்தினர் சுற்றி நின்று கொண்டிருந்தனர்.”

அயலில் அப்படித்தான் பலர் காணாமற் போயிருந்தார்கள்.

இவர்களை ராணுவம் கொன்று விடக் கூடாது என்பதற்கு மேல் எதுவும் சிந்திக்கத் தெரியவில்லை. முன் வேலியிலேறி குட்டியண்ணா வளவுக்குக் குதித்து நேராக ஓடி அவர்களிடம் சொல்லிவிடும் உந்தலில் ஓடிய போது பாதி வழியில் ராணுவம் வளவுக்குள் இறங்கி என்னை நோக்கி வருவது தெரிந்தது. இனி ஓட முடியாது

ஓடுங்கோ வந்திட்டாங்கள் என்று கத்தி விட்டு வளவுக்குக் பாளை பொறுக்கத் தொடங்கினேன். சற்றைக்குள் எனக்கருகே மூன்றோ நான்கோ ராணுவத்தினர் சுற்றி நின்று கொண்டிருந்தனர்.

இனி அசையவும் ஓடவும் எதுவுமில்லை என்பது புரிந்ததும் பேசாமல் மார்பின் குறுக்கே கையைக் கட்டி நின்று கொண்டேன். கையை மேல் நோக்கி உயர்த்தச் சொன்னார்கள் . சுட்டால் பரவாயில்லை வேறொன்றும் செய்யாமல் விட்டால் சரி என்பது மட்டும் மனதில் இருந்தது. வேறேதும் செய்தால் தயாக்கா வீட்டில் இருப்பவர்கள் சுடுவார்கள் என்ற நினைவும் ஆறுதலும் வந்தது.

இந்திய ராணுவத்துக்குத் தமிழ் மொழிபெயர்க்க எப்போதும் யாராவது தமிழ் தெரிந்த ராணுவம் கூடவே இருந்தது. அவர்கள் எதோ சொல்லச் சொல்ல ஏன் வந்தாய். எதற்காக ஓடினாய், என்ன சொல்லிக் கத்தினாய் என்று என்று தமிழில் மொழிபெயர்த்துக் கொண்டிருந்த ராணுவத்திடம் “பயம் உங்களைக் கண்ட பயம்” என்ற பதில் மட்டுமே சொல்லிக் கொண்டிருந்தேன்.

இறுதியாக தலையில் துப்பாக்கி வைத்து மிரட்டினான் ஒருவன். அவர்கள் இங்கே எங்கே மறைந்திருக்கிறார்கள் என அதட்டினார்கள். பதில் சொல்லாமல் கண்களை மூடிக் கொண்டேன். எங்கள் முற்றத்தில் அயலின் ஓலம் கேட்டது. இனி மீட்சியில்லை எனும் போது பயமும் போய் விடும் என்று நினைக்கிறேன். எந்த ஆபத்துக் காலத்திலும் பயம் என்னை அதிகமாக ஆட்கொண்டதுமில்லை எவரிடமும். மண்டியிடுமளவும் உயிரின் மீதும் வாழ்வின் மீதும் அதிக பற்று எனக்கு ஏனோ எப்போதும் இருந்திருக்கவில்லை என இப்போது எண்ணிப் பார்க்கிறேன்.

அவர்கள் சுடவில்லை.

கூட்டிக் கொண்டு வந்து விறாந்தையில் இருத்தினார்கள். விறாந்தை அயல், உறவு மனிதர்களால் நிறைந்திருந்தது. நான் வளவுக்குள் ஓடியதால் அல்ல. தாம் மரவள்ளித் தோட்டக் காணிக்குள் புகுந்து தவழ்ந்து வரும் போது வழியில் அகப்பட்ட அனைவரையும் இழுத்துக் கொண்டு வந்து இருத்தியிருக்கிறார்கள் என்பது அப்போது தான் தெரிந்தது. அதுவரை ஹவுஸ் அரஸ்ட் என்பதை வாசித்துத் தான் அறிந்திருக்கிறேன் ஆனால் அன்று நேரில் உணர்ந்தேன்..

மதியம் கடந்து மாலையாகி பொழுது மங்கத் தொடங்கியும் அவர்களுக்கு எங்களை விடுவிக்கும் எண்ணமில்லை. எமக்கான உணவும் நீரும் சிறுநீரும் அவர்கள் கருத்தில் இருக்கவில்லை. எனினும் அவர்கள் பணிமாறி உண்டு குடித்துத் தென்பாக இருந்தார்கள். நாம் சங்கீதம் பாடப் போவது போல வரிசையாக சப்பாணி கட்டி விறாந்தையில் அமர்ந்திருந்தோம்.

எம்மைப் பிடித்து வைத்திருந்ததன் நோக்கம் எம்மால் ஏதும் ஆபத்து வரும் என்பதல்ல. அது ஒரு பாதுகாப்பு. நம்மை விறாந்தையில் இருத்தி வைத்து தாம் வளவு முழுதும் பதுங்கிக் கிடந்தது அவர்களை நெருங்கிச் செல்லும் வரை வீட்டில் உள்ள மக்களுக்காக அவர்கள் வீட்டை நோக்கி ஆயுதங்கள் பயன்படுத்த மாட்டார்கள் என நம்பினார்கள் என நினைக்கிறேன்.

ஆனாலும் இடைக்கிடை இவர்கள் ஏவுவதும் அவர்கள் திருப்பி ஏவுவதும் நடந்து கொண்டிருந்தது. எம் வீட்டுப் பக்கம் ஏவுபவர்களுக்கு வீடிருந்த பகுதியும் நாமிருந்த இடமும் மிகுதிக் காணியும் தெளிவாகத் தெரிந்திருக்க வேண்டும். விறாந்தை எல்லையைத் தவிர்த்து அவர்களின் சன்னங்கள் வந்து விழுந்தன. விழும் போதெல்லாம் எம் ஒரே பிரார்த்தனை இவர்கள் எவரும்

காயப்பட்டு அந்த விசரில் எம்மீது தாக்குதல் மேற்கொள்ளக் கூடாது என்பதாகவே இருந்தது.

மதியத்தில் இருந்தவர்களை விட மாலையில் வந்த தலைப்பாகைக் கூட்டத்தின் கண்களில் கொடூரமும் வெறியும் அதிகமாக இருந்தது. அதற்குள் இளையவளாய் ஒருத்தியாய் மாட்டிக் கொண்டிருந்த என்மீது அவர்கள் கண்கள் ஓடிய போதெல்லாம் அருவெருப்பும் பயமும் வந்தது. அனாவசியமாய் அடிக்கடி அருவருப்பாய் பார்த்தார்கள். எப்போதும் அவர்களில் தமிழ் தெரிந்த ஒருவரைக் கூட வைத்திருந்தார்கள். அவர்கள் எப்போதும் கட்டளைக்கு கடனே என அடங்குபவர்கள் போல இருந்தார்கள்.

மாலை மயங்கும் நேரம் திரும்பவும் பணியாட்கள் மாறினார்கள். இவர்கள் விலகி இன்னொரு கூட்டம் வரும் இடைவெளிக்குள் கிட்டத்தட்ட ஆளையாள் அடையாளம் தெரியாத இருள் கவிந்த பொழுதாகி யிருந்தது. அந்தத் தமிழ் சிப்பாய் கோடிப்பக்கத்தால் மெல்ல நெருங்கினார். பத்திக் கரையில் நின்று உள்ளே இருந்த எங்களைப்பார்த்து "அம்மா அடுத்தவங்கள் மாபாவிகள் அவங்கள் வாறதுக்கிடையில இந்தச் சின்னப் பெண்ணைக் கூட்டிக் கொண்டு இங்கிருந்து சென்று விடுங்கள்" என்றார்.

அம்மா எந்தப் பக்கம் போவது என்று தெரியாமல் தடுமாறினார். தாம் போகப்போகும் வழியையும், புதியவர்கள் வரப்போகும் வழியையும் கைகளால் காட்டி "அவ்விடத்தைச் சந்திக்காது வளவுகளுக்குள்ளால் போய் விடுங்கள். வீதி கடந்தால் அங்கால் ராணுவம் இல்லை. அவங்கள் வந்து கணக்கெடுத்த பின் இங்கிருந்து விலக முடியாது" என்றார்.

மற்றவர்களை விட்டு விட்டுப் போவது மிகுந்த வலி தந்தது எனினும் நீ போய் விடு என்பதே அவர்கள் அனைவரின் கண்களின் சேதியாக இருந்தது.

நானும் அம்மாவும் பதுங்கிப் பதுங்கி பின் கோடி வேலியைப் பிரித்துக் கொண்டு இறங்கினோம். வெறிச்சென்றிருந்த வீடுகளின் மறைவுகளுக்குள் பதுங்கி நடந்து வீதியை அண்மித்த போது வீதியில் இராணுவத் தலைகள் தெரிந்தன. அவர்கள் ரோந்து போய்க்கொண்டிருந்தார்கள்.

அது காலையின் ராணுவம் நின்றிருந்த வீதி. அதைக் கடந்து விட்டால் தப்பி விடலாம் எனினும் அதைக் கடப்பதற்கிடையில் அவர்கள் கண்டு கொண்டால் தப்பிச் செல்லும் குற்றமும் வந்து சேரும். அன்றைய இரவை எம்மைச் சின்னாபின்னப் படுத்தப் பயன்படுத்திக் கொள்வார்கள்.

அருகே இருந்த வீட்டு மதிலில் மனிதத் தலைகள் வேடிக்கை பார்த்தன. அவர்கள் எனக்கு உறவா என்பது தெரியவில்லை ஒட்டி உறவாடியவர்கள். அந்த வீட்டுப் பெண்ணை அம்மா அக்கா போட்டே அழைப்பார். நான் அவரின் மகள்களுடன் நட்புப் பூண்டு விளையாடி வளர்ந்திருக்கிறேன். இன்று அவர்கள் வேடிக்கை பார்த்திருக்க அம்மா கேட்டார் "பக்கத்து வேலியால் உங்கட வீட்டை வந்து நின்று விட்டு ஆமி போனதும் பாட்டி வீட்டுப் பக்கம் போய் விடுகிறோம்" என.

"ஐயையோ நீங்கள் ஆமி பிடிச்சு வைத்திருந்த ஆட்கள் எங்களுக்கு சோலி வேண்டாம்" என்று சொல்லி ஓடிப்போய் வீட்டுக்குள் புகுந்து பூட்டிக் கொண்டார்கள். அதன் பின் எந்தவொரு காலத்திலும் நான் அந்த வீட்டு முற்றதில் கால் வைக்கவில்லை

நாங்கள் மைமல் இருட்டில் பதுங்கி நின்று விட்டு ஆமி அகன்றபின் வீதியை எட்டிப் பார்த்த போது எம்மைப்போலவே வேறு சிலரும் வேறு வேறு காணிகளுக்குள் இருந்து வீதி கடக்கத் தலையை நீட்டிப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

காலையில் வந்தவர்களைச் சேர்ந்தவர்கள் மறுபக்கத்தில் பதுங்கியிருந்தார்கள். நாங்கள் மறைந்திருந்ததைக் கண்டிருக்கவேண்டும் இஞ்சால ஓடி வாங்கோ என்று அவசரப்படுத்தி அழைத்து மேற்கொண்டு பாதுகாப்பாக நகர வழி காட்டினார்கள்.

அது பாட்டி வீட்டுக்குப் போகும் சுற்றுப் பாதை.

இருட்டில் ஆமி நிற்குமோ என்று அம்மா பயந்தார். "ஆமி இல்லை. அங்கால அவங்கள் நிக்கிறாங்கள் நாங்கள் போனால் தான் சுடுபாடு வரும். நீங்கள் போங்கோ பயமில்லை உங்களை ஒன்றும் செய்ய மாட்டாங்கள்" என்றார்கள். சரியென அவர்கள் சொன்ன இடத்தைக் கடந்தோம்

அங்கால் அவர்கள் சொன்ன அவர்கள் நின்றார்கள்.

அவர்கள் எப்போதும் எனக்கு நம்பிக்கைக்கு உகந்தவர்களாகவே இருந்தார்கள். இந்திய ராணுவக்காலங்களில் வகுப்புகளுக்குச் சென்று திரும்ப இருட்டி விட்டால் மேற்கொண்டு வீதியில் செல்லப் பயந்து அவர்கள் முகாம் வாசலில் இறங்கி, வீடுவரை துணை வாருங்கள் என்பேன். ஒரு போதும் மறுத்ததில்லை அவர்கள்.. நான் உதவி கேட்பவர் வருவார் அல்லது வீட்டைக் குறிப்புச் சொல்லி வேறெவரையும் துணைக்கு அனுப்பி வைப்பார்கள். அவர்கள் கூடவே வந்து நான் வீட்டுக்குள் போனதும் திரும்பிப் போவார்கள்.

இன்றும் அதே போல பாட்டி வீட்டுக்குப் போகும் வரை ஆமி நெருங்காமல் பாதுகாப்பாக. கூட வந்தார்கள் .

அடுத்தநாள் எங்கள் பக்கம் பதட்டம் இருந்தது எனினும் பாட்டி வீட்டுப் பக்கம் ராணுவமும் இல்லை எந்தவொரு போராளிக் குழுவுமில்லை. கொழும்புத்துறையில் என் சிறுவகுப்பு நண்பிகள் பலர் இருக்கின்றார்கள். அவர்களில் ஒருத்தி நான் வேறு பாடசாலை, வேறு சூழல் என விலகிச் சென்ற போதும் தன் நட்பை விடாமல் இறுக்கிப் பிடித்து வைத்திருந்தாள்.

எங்கள் பக்கம் நிகழ்ந்த அமளியைக் கேள்விப்பட்டு கோவில் வரை ஓடி வந்து முதல் நாளையச் சங்கதி விசாரித்தாள். "அம்மாவையள் பெரியாக்கள். இப்ப பயமில்லை. பிடிச்சுக் கொண்டு போக மாட்டினம். நீ இங்க இருக்க வேண்டாம். ஏதும் செய்து போடுவங்கள் வா என்னோட. அங்கே பயமில்லை" என்று ஒற்றைக் காலில் நின்று அழைத்தாள்.

வாழ்வில் சில மனிதர்களின் வார்த்தைகளை என்னால் தட்ட முடிவதில்லை. நட்பெனும் வார்த்தைக்குள் நடிக்காத அவர்களின் நேசத்துக்குள் நான் எப்போதும் அடங்கியே கிடந்தேன். அவளும் அவளது தந்தையும் சொன்னதில் நியாயம் இருப்பதாக ஏற்று அவர்களுடன் அனுப்பி விட்டார்கள். கடற்கரை வீதியில் அவளது வீட்டு மதிலில் நாடியை வைத்துக் கொண்டு வெளியே பார்த்தால் கொழும்புத்துறைக்குள் அடங்கும் கடற்பரப்பு முழுவதையும் காண முடியும்..

நாம் போகும் போது கடற்கரை அல்லோலகல்லோலப் பட்டுக் கொண்டிருந்தது. அவளது

தந்தை எம்மை உள்ளே விட்டு விட்டு துறைமுகத்தில் விசாரிக்கப் போனார் திரும்பி வரும் போது அவரது முகம் விழுந்திருந்தது.

"என்ன ஐயா?"

"ஒண்டுமில்லை போய் உள்ளே இருங்கோ பிள்ளையள்".

நான் எப்போது அவளிடம் போனாலும் மதிலில் நாடிவைத்து கடலை வேடிக்கை பார்ப்பது வழக்கம். ஐயா தன் வேலைகளை முடித்து விட்டு இருவரையும் கூட்டிக் கொண்டு கடற்கரையில் நடப்பார், கடலில் கால் நனைக்க விட்டு வள்ளங்களில் ஏறி இருக்கவிட்டுக் காத்திருக்கும் ஐயா அன்று "உள்ளே போங்கோ" எனச் சொன்னது அதிசயமாக இருந்தது..

"பிள்ளைகளை உள்ளே கூப்பிடும். கடலில பிணம் மிதக்குது பயந்திடப் போகுதுகள்" என்றார் அம்மாவிடம்

நாம் உள்ளே போகவில்லை கரையோரம் சனம் குவியத் தொடங்கியது. பிணங்கள் கரையொதுங்கத் தொடங்கின. பிணம் தூரத்தில் மிதந்து தெரியும் போது வள்ளத்தில் சென்று இழுத்து வருவதாக அதில் நின்றவர்கள் பேசிக் கொண்டார்கள்.

எங்கே மிதக்கின்றது என்றோம்.

அங்கே தெரிகிறது பார் எனத் தூரங்களைச் சுட்டிக் காட்டிக் கொண்டார்கள்.

கடலின் கண்ணுக்கெட்டும் எல்லைவரை எம்மால் பிணங்களை அடையாளம் காண முடியவில்லை.

நானும் அவளும் எங்கே எங்கே என வினவிக் கொண்டோம்.

தூரத்தில் பாருங்கள் தலை மிதக்கிறது என்றார்கள்.

கொழும்புத்துறை, வீட்டுக் கைத்தொழிலாக தும்பும் கயிறும் செய்யும் கிராமம். அதற்கான தேங்காய் மட்டைகளை கடற்கரைச் சதுப்புப் பரப்பில் புதைப்பார்கள் சரியாகத் புதைக்கப் படாத மட்டைகள், அல்லது பெருமழையில் வெளிக்கிளம்பிய மட்டைகள், அல்லது எப்போதாவது அலை உயர்ந்து வீதிவரை வரும் வேகத்தில் இழுபட்டு கடலுக்குள் செல்லும் மட்டைகள் அலை குறைந்த ஆழப்பகுதியில் மிதந்து கொண்டிருக்கும் கடற்கரைச் சேற்றில் ஊறி அதன் மேற்தோல் நிறம் மாறி கருப்பாகத் தெரியும். நானும் அவளும் கடற்கரையில் நின்று பலமுறை அதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்போம்.

இன்றும் அவை போலத்தான் மிதந்து கொண்டிருந்தன. எனினும் அவை மட்டைகள் அல்ல. மண்டைகள் என்றார்கள். ஒவ்வொரு முறை மிதந்து தெரியும் போதும் வள்ளத்தில் ஓடி கரையில் இழுத்து வந்து வளர்த்திய போது தான் உடல்களைக் காண முடிந்தது. அவை சீருடையோடும் சீருடையற்ற சாதாரண உடைகளோடும் இருந்தன.

எனினும் எதுவும் ராணுவச் சீருடையை ஒத்திருக்கவில்லை. அவைகளைக் கரையேற்றிக் கொண்டிருந்தவர்களிடம் "என்ன தம்பி செய்யப் போறீங்கள்" என்றார் ஐயா.

"அவங்களும் ஓடிட்டாங்கள் , இவங்களும் ஓடீட்டாங்கள். மிதக்கிற பொடியளை கரையில கிடந்து நாறி நாயிழுத்து நாசமாகட்டும் எண்டு நாங்களும் விடேலுமே. எந்த இயக்கம் எண்டாலும் எல்லாம் எங்கட பிள்ளையள் எல்லோ?" என்றார் வழமையாக மீன் பிடிக்க வள்ளம் கொண்டு போகும் ஒரு ஐயா.

கரைமீட்ட உடல்களை ஊர்மனை தாண்டி அம்மன் கோவிலுக்குப் போகும் வீதிக் கரை நீளம் ஒன்றாகப் போட்டு எரியூட்டினார்கள் .

அவர்களுக்கு உதவச் சென்று விட்டு ஐயா உள்ளே வரும் போது "பாவிப் பெடியள். அவங்கள் வர இவங்களும், இவங்கள் ஓட அவங்களுமாக இது தான் இரவு முழுதும் கடலுக்குள்ள ஓடி ஓடி சுடுபட்டவங்கள் போல. சொந்தச் சகோதரங்களை அடிபடத் தூண்டி விட்டுப் போட்டு ஆமிக்காரன் அரியாலைக்குள்ள பாதுகாப்பாய் ஒளிச்சிருக்கிறான். அவங்களுக்கென்ன நினைச்சது நடக்குது.

எங்கடையளுக்கு எப்ப புத்தி வரப் போகுது. தங்கட எதிரி ஆர் என்று எப்ப புரியப் போகுதுகள்"

ஐயா புலம்பிக் கொண்டே இருந்தார்.

நான் வீட்டுக்கு வந்த பின்னும், மேலும் பல காலங்களுக்கும் , இப்போது வரை என் கண்களுக்குள் கடல் மிதந்து, கடலில் உடல்கள் மிதக்கத் தொடங்கின.

எத்தனை காதலாய், எத்தனை இனிமையாய் எத்தனையாயிரம் கனவுகளுடன் உங்களைப் பெற்று வளர்த்திருப்பார்கள். எவரோ சொடுக்கிழுக்க வெடித்த வேட்டுகளாய் உங்களுக்குள்ளேயே அடிபட்டு அனாதைப் பிணமாக தெருவழியே இரவல் கொள்ளி கேட்டுக் கிடப்பீர்கள் எனக் கனவாவது கண்டிருப்பார்களா உங்களைப் பெற்றுப் போற்றி வளர்த்தவர்கள என்ற கேள்வி எனக்குள் இடையறாது எழும்பத் தொடங்கியது. மனம் சோர்ந்து அனைத்தும் மறக்க விரும்பியது.

அது நிகழ்ந்து சில நாட்களில் நான் அவசரமாக யாழ்ப்பாணத்தைப் பிரிந்தேன். இந்தப் பிரிவும் பயணமும் என்னை நிரந்தரமாக அந்த மண்ணிலிருந்து தள்ளி வைத்துவிடப் போகிறது என்ற காலத்தின் கணிப்பீடுகள் தெரியாமல். நான், நடந்த, நான் விளையாடிய, நான் சிரித்த, பிடித்தவர்களோடு கூடி அலைந்த, போரை, அது சார்ந்த அனைவரையும் நேசித்த, அவர்களுக்காய் அழுத, மலர்கள் தூவிய, ஒரு வெடிச்சத்தாமோ, துக்க இசையோ கேட்க முடியாமல் நோய்ப்பட்டு முடங்கிய வீதியை பஸ் கடந்த போது குமுறிக்கொண்டு அழுகை வந்தது. அழுது ஓய்ந்த போது வாகனம் வேறு வேறு ஊர்களைத் தாண்டி விட்டிருந்தது.

அசோகச் சக்கரவர்த்திக்கு யுத்தகளத்தில் பிணங்களுக்கு நடுவில் ஞானம் பிறந்தது போல வெறுமையுற்றிருந்தது மனம். திரும்பத் திரும்ப கடலின் பிணங்கள் மனதுக்குள் மிதந்து அலைக்கழித்தன.

சகோதரர்கள் தமக்குள் மோத மாட்டார்கள். சகோதர யுத்தம் என்று ஒன்றில்லை. அப்படி ஒன்று இருக்குமானால் அது எங்கிருந்தோ யாரோ ஏவி விட மோதும் மூடர்களின் மோதல். மூடர்கள் சகோதரர்களாக ஒரு போதும் இருக்க முடியாது. என்றது மனம். மனதுக்குள் எதுவோ படபடவெனச் சரிந்தது.

இதுவரையான அனைத்துக் கற்பிதங்களிலிருந்தும் இறுதியாக நான் வெளியே வந்து கொண்டிருந்தேன். பஸ் நான், பிறந்த கொழும்பு நகரை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தது.

ஒரு சீவியத்தின் உன்னத காலப்பகுதியைச் சுமந்திருந்த மண்ணிலிருந்து நிரந்தரமாகப் பிரித்து!




# அரசியல் அனாதைகள்

"அரசியல் அநாதைகள்" என்ற இலங்கை தமிழர் போராட்ட வரலாறு என்னும் புத்தகம் கையில் கிடைத்து இரண்டு நாட்கள் இருக்கும். நண்பன் ஒருவன் போன் எடுத்து "புத்தகம் எப்பிடி?" என்றான். "புத்தகம் நன்றாக வந்திருக்கு" என்று சொல்ல ஆள் நம்பேல்ல. "அப்ப எழுதி தாங்கோவன். அபத்தம் இணைய சஞ்சிகையில போடுவம்" என்றான். "என்னடா இவன் அறுவான். நான் சும்மா நாலஞ்சு பக்கத்தை தட்டி நுனிப்புல் மேய்ஞ்சதை சொல்ல இவன் விடாப்பிடியா கேக்கிறானே வீண் வில்லங்கமாப் போச்சோ" என்று நினைச்சன். ஆனால் புத்தகத்தை வாசிக்க தொடங்க மனசு கனக்க தொடங்கியது. எழுதலாம் என தோன்றுகிறது.

எல்லோருக்கும் அரசியல் அநாதைகள் என்னும் இப்புத்தகத்தை தொகுத்தவர் பி.இரயாகரன் என்றதால் இரயாவின் எழுத்துக்களுக்கு பரீட்சயமானவர்களுக்கு ஒரு பார்வை இருக்கும் என்று நினைக்கிறேன். ஆனால் இந்த புத்தகம் யாருடைய விருப்பு வெறுப்புக்களுக்கும் அப்பால் ஒரு நேர்மையான ஆவண தொகுப்பாக வெளிவந்திருக்கிறது. எனக்கும் இரயாவின் அரசியல் அணுகுமுறைகள், அரசியல் எழுத்துக்களின் மீது விமர்சனங்கள், மாற்றுக் கருத்துக்கள் இருந்தாலும் இந் நூல் தொகுப்பை வாசிக்க தொடங்க இத் தொகுப்பின் மீதான நம்பக தன்மை அதிகரிக்க தொடங்கியது. இதற்காக தோழரும், நண்பருமான இரயாகரனுக்கு என் வாழ்த்துக்கள்.

**ஜீவன்**

நிகழ்ந்த அரசியல் நிகழ்வுகள், போராட்டங்கள், பிரசுரங்கள், அரசியல் அறிக்கைகள் எல்லாம் திகதி, மாதம், ஆண்டு என குறிக்கப்பட்டு சொல்லப்படுகின்றது.

தொடர்ந்து வாசிக்க 1985ம் ஆண்டு காலப்பகுதிக்கு இட்டு செல்லும் இவ் ஆவண புத்தகம், இனவிடுதலைக்கான ஆயுத போராட்டம் எவ்வாறு ஆயுதம் மூலம் மனித உரிமைகள் மறுக்கப்பட்டு ஆயுத வன்முறைகலாச்சாரம் தமிழ் பேசும் மக்களின் மீதும் அவர்களின் ஜனநாயக உரிமைகளின் மீதும் மண்ணை வாரி அள்ளிக்கொட்டி நின்றது என்பதனை ஒரு வரலாற்று பதிவாக்கி, நினைவுகளை தொலைத்து விடாமல் வரும் இளம் சமுதாயத்திற்கு இவ் வரலாற்றை கையளிப்பதாக தோன்றுகிறது.

இதனால் இந்த புத்தகம் மிகவும் கவனத்திற்கு உள்ளாக்கபட வேண்டியதொன்றாகும்.

இந்த உலகில் இதுவரையில் நிகழ்ந்த விடுதலைப் போராட்ட

வரலாறுகளில், நீண்ட காலம் நிகழ்ந்த அரசியல் மற்றும் ஆயுத போராட்ட வரலாறு எனில் இலங்கையில் நிகழ்ந்த தமிழ் பேசும் மக்களின் போராட்ட வரலாற்றைதவிர்த்து கூறிவிட முடியாது.

அவ்வாறு நிகழ்ந்த வரலாற்றுக் குறிப்புக்கள் ஆங்காங்கே எழுதப்பட்டு இருந்தாலும் பெரும் பாலும் எல்லாம் ஒரு குத்துமதிப்பு கணக்கில் சொல்லும் ஒரு மேம்போக்கான நிலையே பெரும்பாலும் எம்மிடம் உண்டு.

விடுதலைப் போராட்ட அமைப்புக்களில் அதிக எண்ணிக்கையில் உறுப்பினர்களைக் கொண்ட அமைப்பில் எவ்வளவு உறுப்பினர்கள் இருந்தார்கள் எனில் குத்து மதிப்பாக என்றே கணக்கு வரும். சவுக்கு தோட்டத்தில் புதைக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை என்னவென்றாலும் அதுவும் குத்து மதிப்புக் கணக்குத்தான்.

புலிகளால் கொல்லப்பட்ட ரெலோ உறுப்பினர்கள்?

மாத்தையாவுடன் கொல்லப்பட்டவர்கள்?

2009 இறுதிப்போரில் கொல்லப்பட்டவர்கள்?

வெள்ளைக் கொடியுடன் சரணடைந்தவர்கள்?

இவ்வாறு எதிலும் ஒரு குத்துமதிப்புக் கணக்குடன் தான் வரலாறு இருக்கிறது. அது மட்டுமல்லாமல் இன்றும் உயிருடன் வருவார், வரமாட்டார் என்னும் குத்து மதிப்பு கணக்குகளையே நாம் போடுகின்றோம்.

ஆனால் இந்த இலங்கை தமிழர் போராட்ட வரலாற்றுத் தொகுப்பில் முடிந்த அளவு ஆவண சேர்க்கைகள் இடம்பெற்றிருக்கிறது.

யாழ் பல்கலைக் கழகத்தில் நிகழ்ந்த பகிடிவதைக்கு (ராக்கிங்) எதிர், ஆதரவு மாணவர்களின் ஜனநாயக போராட்டத்தை ( மாணவர்களிடையே அவ்வப்போது சிறு கைகலப்புக்கள், சண்டைகள் நிகழ்ந்தாலும்) ஆயுத அச்சுறுத்தல் மூலம் முடிவுக்கு கொண்டுவர முற்பட்ட தமிழீழ விடுதலைப் புலி இயக்கத்தைஎதிர்த்து மாணவர்கள் போராடிய வரலாற்று நிகழ்வுகள் சொல்லப்பட்டிருக்கிறது. அது அன்று நிகழ்ந்த மேடைபேச்சுக்கள், எதிர்ப்பு ஊர்வலங்கள், சுவரொட்டிகள், அறிக்கைகள் மூலம் உத்தரவாத படுத்தப்பட்ட மொழியில் இருக்கிறது.


இவ்வாறான ஒலி, ஒளி வடிவ காணொளிகளையும், இயக்கங்களின்









துண்டு பிரசுரங்கள், வரலாற்று ஆவணகுறிப்புக்கள் என்பவை பெருமளவில் "படிப்பகம்" இணைய தளத்தில் காண கிடைக்கிறது. இதனை தொகுத்து படிப்பகத்க்கில் ஆவணப்படுத்தியதில் இரயாகரன், மற்றும் சிறி போன்றோரின் பங்களிப்பை குறைத்து மதித்துவிட முடியாது என்று நினைக்கிறேன்.

யாழ்.பல்கலைக்கழக பகிடி வதைக்கு எதிர் குழு மாணவர்களின் ஜனநாயக போராட்டம் ஆயுத அடக்குமுறைக்கு உட்பட, அதை எதிர்த்த அமைப்பு குழு மாணவர்களில் ஒருவரான விஜிதரன் கடத்தப்பட்டு 1986 இல் காணாமல் ஆக்கப்பட்டதுடன் அவரை நிபந்தனை எதுவும் இன்றி விடுதலை செய்ய கோரி நிகழ்ந்த சாகும் வரை உண்ணாவிரத போராட்டம், ஊர்வலம் போன்றன ஆயுதத்தால் ஒடுக்கப்பட்ட பொது மக்களின் குரலாகவும் ஒலிக்க, அவ் ஆயுத அடக்கு முறைக்கு எதிரான மாணவர் போராட்டம் பல கோரிக்கைகளை முன் வைத்து நின்றபோது, அவ் "ஒடுக்கப்பட்ட மக்கள்" ஜனநாயக உரிமைகளுக்காக போராடும் பல்கலைக்கழக மாணவர்களைஆதரிக்கவும் செய்த வரலாறு சொல்லப்பட்டிருக்கிறது.

இங்கு உண்ணாவிரத மேடையில் பேசியவர்கள் அவர்களின் குரல் ஒலி நாடாவில் பதிவு செய்யப்பட்டதை அப்பதிவில் பேசிய பேச்சு வழக்கு பேச்சாகவே பதியப்பட்டு இருக்கிறது. எழுத்து மொழி பேச்சு மொழியை பிரதிபலிக்கிறது. அந்த பெண் பேசினாள். அவள் சொற்கள் பதியப்படுகிறது. பின்னொருனாளில் பிறந்து ஒரு சிலமாதங்களேயுடைய தன் கைக்குழந்தையுடன் வன்னி காடுகள் ஊடாக தப்பி சென்ற வரலாறுகள் கண்கூடாக நிகழ்ந்தது. ஆனால் அவர்கள் தங்கள் ஆயுதங்களுக்கான அரசியலை எழுதுகின்றனர்.

ஏற்கனவே விஜிதரன் கொல்லப்பட்டு விடுகிறான்

விஜிதரனை விடுவிக்க கோரி சாகும் வரை உண்ணாவிரதமிருந்த விமலேஸ்வரன் பின் நாளொன்றில் இரண்டுவருடங்கள் கழித்து (1988) சுட்டு கொல்லப்படுகிறான். அவன் வெறும் கோரிக்கையை முன் வைத்து போராடும் உண்ணாவிரதி அல்ல, அவனிடம் ஒடுக்கப்படுபவர்களின் மீதான நேச அரசியல் இருந்திருக்கிறது. அவன் ஒடுக்கப்படுபவர்களின் மீது



அளவு கடந்த மனித நேயத்தை கொண்டவனாய் அம் மக்களை நேசிப்பவனாய் இருந்திருக்கிறான்.

அதுவே அனைத்து மாணவர் போராட்டங்களும் முடிந்த பின்பும் அவன் மீது பாய்ந்த துப்பாக்கி குண்டுகள் அரசியல் அறியாத ஞான சூனியங்களின் கைகளில் இருந்து புறப்பட்டிருக்கின்றன. அவர்கள் தங்கள் கைகளில் சக்திமிகு உயிர் கொல்லும் ஆயுதங்களை வைத்திருப்பினும் விமலேஸ்வரனின் அரசியலிற்கு பயந்து நடுங்கியபடியே இருந்திருக்கின்றனர். அதனாலேயே அவன் கொல்லப்படுகிறான்.

அதுவேஅவர்களின் அறிக்கையில், மக்களின் ஜனநாயக உரிமைகளான பேச, எழுத , வாசிக்க மற்றும் விரும்பிய அரசியலை செய்ய மறுதலித்து அது தங்களை "அரசியல் அநாதைகள்" ஆக்கிவிடும் என்று பயந்து பேச்சுவார்த்தையை தொடர முடியாது என ஆயுதங்களை இறுக கட்டியணைத்து திரிந்த கதை இங்குசொல்லப்படுகிறது.

இவை எல்லாவற்றையும் முறிந்த பனையில் பதிவாக்கிய இராஜினி திரணைகமவும் (1989)பின் நாள் ஒன்றில் கொல்லப்படுகிறார். அரசியல் இல்லாத கைகளில் உள்ள ஆயுதங்களுக்கு கொல்ல மட்டுமே தெரியும்.

சிறிலங்கா பேரினவாத அரசுக்கு எதிராக தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்காக போராட புறப்பட்டஇயக்கங்கள், ஆயுத வன்முறையை தமிழ் மக்கள் மீதும், தம் இயக்க உறுப்பினர்களின் மீதும், மாற்றுஇயக்கங்களை கொன்றொழிக்கவும் என புறப்பட்டு திசைமாறிய போராட்ட வடிவங்களின் நிதர்சனம்கண்கூடாக முள்ளிவாய்க்காலில் முடிந்து போன பெரு வரலாற்றை சொல்லி போய் இருக்கிறது.

இடதுசாரியம், வலதுசாரியம் போன்ற சொற் தொடர்கள் மட்டுப்படுத்தபட்டிருக்கலாம். தமிழச்சுபதிப்பகத்தினால் அச்சிடப்பட்டு விலை ரூபா 750.00 விற்கப்படும் இவ் ஆவண புத்தகமானது 616 பக்கங்களைக் கொண்டது. கனடாவில் இது 20 கனேடிய டொலர்களுக்கு கிடைக்கிறது. அனைவரும்வாசிக்க வேண்டிய ஆவண தொகுப்பு இது.



# “‘பார்த்தால்’/‘பார்த்து’” சூழ கோரங்களை விளைக்கும் மர்மக் கிழவனின்

# “பத்தாசி”



*3 (அ) -:*
பிரேதம் மிகவும் நாறியிருந்தது.

கோடி புழு ஏறி, நாறியிருந்தது.

நீள்நாள் பட்டிருக்கும்.

ஊரின் எல்லையை அண்டியிருந்த படு(ஊ) சிக்குத்தரு குறுங்காட்டு மத்தியில், ஏலவே ஆண்டுகளுக்கு முன் பாறி, நாறி, கோடி பெரும்புழுக்கள் சுழன்று, பிணைந்து, முடிவிற்கு வந்து, அழுகி, கலவிப்பதான விருத்தத்தில், வெளிவேர் நுதம்பியிருந்த பாரிய- “முன்னாள் விருட்சத்தின்” கோறை போந்த அடி மரக்குகையில் தான், நாறிப்புழுத்த சடலம் கண்கொண்டு பார்க்கவொண்ணா வகையில் அழுகிக் கிடந்தது.

சிறிதும் அடையாளம் தெரியாத வகையில் ஸுப்பென சிதிலப்பட்டிருந்தது.

மாமூற்படி, மர்மக்கிழவனால்தான் இந்த அழுகிக்கிடக்கும் ஆளின் மரணமும் சம்பவித்ததாய் ஊர் தன் வழக்கப்படி வதந்தித்தது.

அது வழமையும் எப்போதும்.

வசதியானதும்.

எதெப்படியாயினும், எல்லா வகைப்படிக்கும் அந்த பூரா ஊருமே படு(ஊ) மர்மமானதுதான்.

ஊரில் விழும் மர்ம மரணங்களுக்கெல்லாம் மர்மக்கிழவனே ஜவாப்தாரி, என எடுத்தாள்வது ஊருக்கு வசதியாக இருந்ததானது,

அதன் வழக்கத்தின் வழமை.

மர்மக்கிழவனால் படு(ஊ) கொடூரமான வகையில் எக்கச்சக்கமானோர் செத்துத் தொலைந்ததாகவே ஊர் “சாதாரண கிரமமாய்” பேசிக்கொண்டது.

“சாதாரண கிரமமாக”, மர்மமான முறையில் எக்கச்சக்கமானோர் செத்துத் தொலைந்ததால்.

“ஆனால், உண்மை அதல்ல”!!

3(ஆ) ஐ கடைசியாய் பார்க்க.

இக்கணத்தில் பார்க்காதீர். பார்ப்பீரெனின் யாவுமே போய் விடும்.

*1:*
மர்மக்கிழவனைப்பற்றி ஊரில் யார்க்கும் சிறிதேனும் சரியான தகவல் தெரியாது. திடுமென்று வானத்திலிருந்து குதித்த ஒரு படு(ஊ) கோரக பேயாவியின் குறை-இரத்த-தசை-இழைய “முண்ட மாயத்தின்” எழுகையில், பெரு வெளியில் அச்சமூட்டும் வகையில் உறைந்திருக்கும், இருள் பவனத்திலிருந்து கிளர்ந்த ஒரு கரு-உருவாயும் ஊர் அவனை கற்பிதம் செய்திருக்க வேண்டும்.

அந்த சின்ன ஊரின் நடுவில், அங்கத்தைய அளவின்படிக்கு, ஆகப் பெரியதாகவிருந்த, -இடையிடை கிடங்குகள் வெடித்து, பாதிக்கு பாதியாக மட்டுமே செப்பம் கொண்ட தெருவிலிருந்து கிளைத்துச் செல்லும், அடர்ந்த பற்றைகள், சிக்குப்புதர்கள், நுதம்பல் சுரி, நாசியை பிசக்கும் மலக்கழியல்களூாடு செல்லும் ஒற்றைக் குச்சொழுங்கையின் நுனி அந்தலையில் இருந்தது, மர்மக்கிழவனின் மாளிகை.

அதை மாளிகை என்றுதான் சொல்லவேண்டும்.

மாளிகை, என சொல்ல மறுப்பின், அதை வேறெப்படியும் விளக்க இயலாது என்பது உண்மை

இரண்டு மாடிகளைக்கொண்ட பெரிய கட்டடந்தான், அது.

அதன் கட்டுமானமும் கிழவனைப்போல் மர்மமானதும் குழப்பமானதும்.

எப்போதும்.

அதை அடைய செல்ல வேண்டிய சீத்துவமற்ற ஒற்றை ஒழுங்கை போல, ஒரொழுங்கு இல்லாதிருந்தது மாளிகையும். மாளிகையின் பிரதான முகப்பு அமைந்த,

**சிறீனோ சிறீ சிறீசு**
**(முன்னாளைய அளவெட்டி சிறீசுக்கந்தராசா)**

குப்பை மேட்டு முத்த நிலத்திலிருந்து உயரமாய் எழும்பிய காறை மேடைத்தள முன் மண்டபத்தின் உள் பக்கமாய் இரண்டு,- இடையிடை உழுத்து, "குறுணி அமங்கல முத்து மணிகளாய்" மரத்தூ சு அரிகண்டமாய் கொட்டும் இரட்டை மரக்கதவுகள் இருந்தன.

அவற்றிற்கு நிறம் இல்லை. அந்த நிறமின்மையும் மர்மத்தை எல்லாவற்றிற்குமான மூலமாய் கொண்டிருக்கலாம்.

இல்லாதும் இருக்கலாம்.

அதில் வலதுபுறமிருந்த கதவின் பிறத்தால் தான் கொட்டுண்ட மாடிக்கேறும் உழுத்துக்கொட்டும் பதினெட்டு படிகளும் மர்மமயமாய் வளைந்து சென்றன.

மாடி எப்போதும் - எப்போதுமே இருட்டாய் இருந்தது. இதனால் அங்கு என்ன உண்டு, என்ன இல்லை, என்ன மர்மம், என்று கிஞ்சித்தும் எவருக்கும் தெரியாது.

அதோர் பழைய செங்கல் மாளிகை. அதன் பூச்சுக்கள் சொரிந்து, காறை கிளறலாகி, இடையிடை வடிவமற்ற வகையில் குதம்பலாய் செங்கல் அடுக்குகள் வெளிக்கு நீட்டிக்கும் கட்டுமான அமைவே, மர்மக்கிழவனைப்போல மர்மமும் பயங்கரமும் கொண்டதாயிருந்தது.

அந்த மர்ம மாளிகைக்கு, ஒருவருக்குமே தெரியா வகையில் ஒரு இருண்ட நிலவறை இருந்தது.

அது பற்றி, கடைசியில் பார்க்க.

இப்போ, இக்கணத்தில் பார்க்காதீர்.

முன்தள மேடையின் கோணல் மாணல் மூலையில் தான், மர்மக்கிழவன் பகல்பூரா சாய்ந்திருக்கும் ஊத்தை சாய்மனைக்கதிரை கோணல் மாணலாய் போடப்பட்டிருந்தது.

மர்மத்திலும் மர்மம் என்னவெனில், மர்மக்கிழவன் ஊத்தைக்கதிரையில் சாய்ந்திருப்பதை, எவருமே என்றுமே கண்டதில்லை. எனினும், அதுவும் ஊரின் ஊகமாகவே நிலைத்திருந்தது.

பகல் முழுதும், சாய்ந்திருப்பான், என்றது ஊரின் மர்மத்தின் பேரூகம்.

அவ்வளவே.

இரவில், ஒரு "கண்ணாடி மூடி விளக்கு", குப்பை முத்தத்துக்கு முன் திடுமென்று எழும்பியிருந்த மேடையின் சிறு மேசையில் செத்தவீட்டு அனுங்கலாய் மர்மத்தை சிமிட்டிச்சிமிட்டி எரியும். அது, கோணல்மாணல் மூலைக்கு

> "அரைவாசி பாறி விழுந்திருந்த அந்த குறுங்காட்டு பெருமரத்தின் கீழ் இரண்டு இளைஞர்களின் உடலங்களையும் ஊர் அச்சவச்சத்துடன் நெஞ்சு பிளக்க கண்டிருந்தது."

சாய்தளப்பாங்கில் எதிராகவிருந்த அடுத்த,- மர்மம் துப்பும் கோணல்மாணல் மூலையில் தான் இருந்தது.

சிதைவுண்ட கோணல் மாணல் மேசை சிறுதட்டில் ஏற்றப்பட்டிருக்கும். அதன் அனுங்கல் ஒளியில் ஒன்றுமே தெரியாது.

"கிழவனும்" தெரியாது."

"மர்மமும்" தெரியாது.

ஆக, இரவின், சூன்ய மாளிகைக் கிழவனின், சூழ் பயங்கரத்தின் மர்மம் மட்டுமே துலாம்பரமாக தெரியும்.

ஆனாலும், அந்த கண்ணாடி மூடி விளக்கு "மண்ணெண்ணெயில் எரிவதுதான்", என்பது சந்தேகம் வரா வகைக்கு "வெளிச்சமாய்" ஊருக்கு தெரிந்திருந்தது.

அதற்கும் மிகு காரணமுண்டு.

கிழவன் வாரத்தில் ஒருமுறை மட்டும், மர்ம மாளிகையை விட்டு வெளியேறி, வளைப்பற்றை மலஞ்சூழ், சிதை ஒழுங்கையைத் தாண்டி, சிறுதெருவில் ஏறி, ஸுப்பென வலப்புறம் திரும்பி நடந்து, ஊரிலிருந்த ஒரே சில்லறைக்கடையில் சாமான் வாங்குவான்.

அதுவும், கடை பூட்டப்பட தயாராகும், பகல் இரவில் கரையும் மைம்மல் பொழுதில்தான்.

அது, பிசிர் சாம்பல் இருளில், தூரத்து பயங்கரங்கள் கொழுவுண்டு பரக்கும் ஒரு மாந்திரீக பக்குவத்தில் ஊர் தொங்கும் காலம். அந்நேரம் ஊரவர் எவரும் கடைக்கு வரார். தெருவில் மர்மக்கிழவனின் அசுமாத்தம் தெரிகையிலெல்லாம் ஊரார் ஓடிப்போய் வீடுகளில் புகுந்து தாழ்ப்பாள் போட்டுக்கொள்வதும் பின்னடிக்கு வழக்கமாய்ப்போயிற்று.

அதுவும் பயப்பெரு மர்மம்.

வருஷங்களுக்கு முன், ஒரு தடவை, கிழவனின் கோரங்கள் பற்றி ஊர் பேசக்கிளம்பிய துவக்கத்தில், கடைக்காரர் பயந்து மர்மக்கிழவனுக்கு சாமான்கள் விற்க மறுத்திருந்தார்.

அன்றிரவு, கடைக்காரரின் சுகதேகி மனைவி ஸுப்பென இரத்தம் கக்கி செத்துப்போனாள். அதற்குப்பின், கிழவனுக்கு வியாபாரம் தங்கல் தடையற்று ஒழுங்காய் நடந்தது.

வேறு வழியும் இருக்கவில்லை.

இன்னொரு சாவைத்தாங்கும் பலம் கடைக்காரரிற்கு இருக்கவேயில்லை. இரண்டாம் தாரமாய் மணம் முடித்த இளம் மனைவியையும் இரத்த வழுக்கலில் அழுந்த காவு கொடுத்துவிட்டு, தான் கடை வியாபாரம் செய்து, காசு பண்ணுவதில் அர்த்தம் கிடையாது, என கடைக்காரர் எண்ணியிருக்கலாம்.

கிழவன் வாங்கும் பொருட்கள் விசித்திரமானவை.

அரிசி, மண்ணெண்ணெய், சிறுமீன் கருவாடு, பூந்திரி, சேற்றுப்பன்றிக்கொழுப்பு, இரத்த நெய், கும்கும் பூ, தீப்பெட்டி, பேட்டுக்கோழி இரத்தம், எலுமிச்சம்பழம், இப்படியானவை.!!!

பால், சீனி, பழம், கருப்பு புளி வாங்கியது கிடையாது.

ஒருமுறை, எலிக்கருவாடு கேட்க, "இல்லை"யென்று சொல்லி இரத்தவாந்திச்சாவை அழைக்க விரும்பாத கடைக்காரர், தானே பொறி வைத்துப்பிடித்த சுண்டெலிகளை நசித்துக் காயப்போட்டு விற்றிருந்தார்.

மர்மக்கிழவனின் முகத்தைப்பார்த்து அவர் வியாபாரம் செய்வதில்லை. இதனால் கிழவன் பார்ப்பதை என்றுமே அவர் பார்த்ததில்லை. பின்னடிக்கு, கோரம் விளையும் என்ற பயத்தில், ஊரார் யாருங்கூட கிழவன் முகத்தைப் பார்த்தது கிடையாது.

பேயாவி திடுமென சிதில மாளிகையில் வந்திறங்கியதாக ஊர் அல்லோலப்பட்ட காலத்தில் மர்மக்கிழவனின் கண்ணைக் கண்டவர்கள் இருந்ததாக கதை நிறைய்ய்ய இருந்தது.. ஆனால், அவர்கள் எவருமே இப்போ உயிருடன் இல்லை.

கொடுங்கோரம் துப்பிய இடை அவலத்தில், அகாலமாக செத்துத்போயினர். அநேகர் குருதி கக்கி செத்ததாகவே கதை மாமூற்படியான வழக்க பாந்தமாக உலவிற்று.

இந்த இரத்த பயங்கரம் தவிரவும்,-

ஆவலாதி தூக்கியதால் மர்மக்கிழவனின் மாளிகைக்கு மதில் மேலேறித்தாண்டிச் சென்ற மூன்று இளைஞர்களுக்கு நிகழ்ந்த கோரத்தின் வடு இன்னும் ஊரின் மண்டை உச்சியில் விருத்தமாக இருக்கிறது.

அது கீழ்முகமாக மூலமூடு இறங்கிச் சென்றமை சுமார் வழமையின்படி நடந்திருந்தாலும், இன்னும் பூரணமாய், மலமாய் கழிக்கப்படவில்லை.

நிஜத்தில் பெருங்கோரந்தான் அது.

கோரத்திலும் அச்சமூட்டும் பயங்கரம்.

ஊரின் 18, 22, 27 வயதுப பையன்கள் மூவர் கிழவன் சார்ந்த "சா மர்மத்தை" துலக்கியே ஆக வேண்டுமென முன்னர் ஒருகால் முக்க வெளிக்கிட்டனராம்.

அது ஊர்காணா படு(ஊ) கோரத்தில் முடிந்தது.

பயங்கரங்களின் உள் உறை சூக்ஷ்ஸூமமேதும் தெரியவே தெரியா ஊர் பையன்கள் மூவரும் மதில் பாய்ந்து, குப்பை கூழங்களை இடறிக்கடந்து, முத்தத்து முன் மேடை ஏறி, கோணல்மாணல் மூலை "சாக்கண்ணாடி" விளக்கு வரை போய், கிழவனது கண்ணை நேரே கண்டதாயும் அரக்கல் புரக்கலாக ஊர் படு(ஊ) கோர பதட்டத்துடன் அலட்டிக்கொண்டது.

அதுவே, பையன்களில் இருவர் ஊரெல்லையில் துண்ட முண்டங்களாக இறந்து கிடந்ததற்கும் காரணமென சொல்லிற்று.

அரைவாசி பாறி விழுந்திருந்த அந்த குறுங்காட்டு பெருமரத்தின் கீழ் இரண்டு இளைஞர்களின் உடலங்களையும் ஊர் அச்சவச்சத்துடன் நெஞ்சு பிளக்க கண்டிருந்தது.

இருபத்திரண்டு வயதுப்பையன் வயிறு கிழியுண்டு, நிணம் வழிய, தலைகீழாய், பாறு மரத்தின் கீழ்விழு கொம்பரில் தொங்கவிடப் பட்டிருந்ததை ஊர் பீதியுடன் பார்த்திருந்தது.

பதினெட்டு வயது பையன் நிறை பீசல் பட்டு, உடலுருகி, அழுகி, கோடி புழுவேறியிருந்தான்.

அவனது முகம் சற்றேனும் தெரியவேயில்லை.

இருபத்தேழு வயது இளைஞனின் உடல் ஊருக்கு எப்போதுமே கிடைக்கப்பெறவில்லை.

அது "உருகியிருக்கலாம்" அல்லாவிடில், மர்மக்கிழவன் அதை "தின்றுமிருக்கலாம்", என்று கூட ஊர் படு(ஊ) கோரமாய் வதந்தித்தது.

ஊர் எல்லாம் சொல்லும்.

2:-

ஊரின் படு(ஊ) மர்மாங்கத்தின், மர்மத்திலும் மர்மமான இன்னொரு விஷயமும் அதுசார் இடமொன்றும் அங்கு ஸ்தூலமாக இருக்கவே செய்தது. அது ஊரின் கோரத்தின் மையமெனப்படக்கூடிய சாம்பலிருட்டு சூழ்பரவிய புகாரான பிசிறிடமாகவே தோற்றிற்று.

இங்காற்பக்கத்து ஊரெல்லையின் சிக்குச்சிக்கான, ஒளியும் புகாரும் புகும் குறுங்காட்டுக்கு நேரெதிராக, அங்காற்பக்கத்தில் இருந்தது அது. சிறு குறுங்காடுதான் அதுவும்.

அதன் முடிவுக்கோடி எல்லை மர்மக்கிழவனது வீட்டு மர்மத்திற்கு வகை செய்யும் கோர வீட்டை சிக்காராய் சமாந்தரிக்கும் அல்லது வேளைகளில், அதையே அதீதமாய் மேவும் வகைத்தானதாய் இருந்தது. குழப்பச் செடிகள், நாறு புதர், பாறியழுகும் பாரிய மரங்கள் செறிந்து சில்லெடுத்துக் குதம்பும் வகையான குழப்பம் கொண்டதது.

அங்கொரு பிசிறலான சாம்பல்-புகார்-சூழ்-மர்ம வீடு இருப்பதாகவே ஊர் பறைந்து கொண்டது.

அதன் பயங்கரம் பற்றி அறிவது கூட மர்மத்தின் பாற்பட்டதுதான்.

அதை நோக்கிச்செல்லும் வழியிலும், ஒரு,- ஒளி சற்றும் விழாத வகையில் அழுகுப் பற்றை புரண்டிருந்த குச்சுப்பற்றை ஒற்றைக்கால் வழி ஒழுங்கை இருந்தது.

அதன் முடிவில், பாழால் பாறிய ஒரு ஒற்றை மாடி வீடு இருந்தது.

அதற்கு கூரை கிடையாது. கதவுகளும் இல்லை.

பூச்சும் இல்லை.

இருப்பும் இல்லை.!!!!

அந்த மர்ம வீட்டின் மர்மம் கிழவனினது பாழ் மாளிகையின் எல்லாவகை மர்மங்களையும் கசக்கி ஒரே கவளத்தில் தின்னக்கூடிய மாதிரி கோரமாக இருக்கவே செய்தது.

அதன் கொடு பயங்கரத்தின் வெக்கை கருதி, ஊர் அந்தப்பக்கம் தலை வைத்தும் படுப்பதில்லை.

ஆனால், முன்னரெல்லாம் ஊர்க்கிழவர் சிலர் அந்தப்பக்கம் போனதாய் கதை உண்டு. அவர்கள் எவரும் இப்போ உயிருடன் இல்லை. அவர்கள் சாதாரணமாய் செத்தார்களா, குருதி கக்கி, சிதறுண்டு செத்தார்களா, என்பது பற்றி விபரம் கிடையாது.

அந்த கூரையில்லா வீட்டில் கூனலான கிழவியொருத்தியை அவர்கள் பல தடவை கண்டிருக்கிறார்களாம். அவளது சிக்கிக் கலைந்திருந்த சிகையிலிருந்து, எந்நேரமும் சொட்டுச்சொட்டாய் இரத்தம் துளித்ததாகவும் சொல்லியிருந்தார்கள். கையில் கூட்டுமாறு ஒன்றை எப்போதும் வைத்திருப்பவளாம், அந்த கூனல் கிழவி.!!!

3(ஆ) :-

சில நாட்களாய் மர்மக்கிழவனின் மர்ம மாளிகையின் கண்ணாடி மூடி விளக்கு எரியவில்லை. அவ்விடச்சூழலை மூடி, ஒரு சாம்பல் பிசிறல் இருட்புகார் பரவியிருந்திற்று.

இப்படியாகப்பட்ட கச இருட்டு கவிந்த இரவொன்றில், திடீரென்று, கிழவனின் மர்ம மாளிகை கீழறை "பெரும்பெரும் ஸூப்பென" திறந்து கொண்டது.

சாம்பல் புகாரிருட்டு சூழந்த, அதன் குறுகிய அடித்தளத்திலிருந்த சிதிலப்பட்ட பத்தாசியிலிருந்து ஒரு "கூனல் கிழவி" வெளி வந்தாள்.

அவளது சிக்கிக்கலைந்திருந்த சிகையிலிருந்து துளித்துளியாய் இரத்தம் சொட்டிற்று.

கையில் கூட்டுமாறு வைத்திருந்தாள்.

குடுகுடுவென்று, ஊரின் எல்லையை அண்டியிருந்த, சிக்குத்தரு குறுங்காட்டை நோக்கி நடந்தாள்.

பாறி நாறியிருந்த விருட்சத்தின் கோறை போந்த அடிமரக்குகையில், நீள்நாள்பட்டு, கோடி புழு ஏறி, அழுகி நாறியிருந்த தன் "கணவனின்" பிரேதத்தை தூக்கி தோளில் போட்டுக்கொண்டு, திரும்பவும் கிழவனின் மர்மமாளிகைக்கு வந்தாள். முத்தத்து முன் மேடை ஏறி, "கிழவனை" கோணல் மாணல் மூலை, அழுக்கு சாய்மனைக்கதிரையில் கிடத்தினாள்.

பிறகு, இருவரும் சேர்ந்து, எதிர்மூலையிலிருந்த கண்ணாடி மூடி விளக்கை கொளுத்தினர்.!!!!!




# அதுவென்பது இதுு! இதுவென்பது அது!

# இளங்கோ கிருஷ்ணனின் அபத்தம்

## சில்வியா எம்.ஐ.

இலக்கியம் என்பது சமுதாயத்தின் பிரதிபலிப்பு. பல்வேறு நிலையில் சாத்தியப்பாடுகள் நிகழும் ஒரு களமாக கவிதையே அமைந்துள்ளது. மொழிக்கும் பொருளுக்கும் இடையில் அர்த்தத்தை ஒன்றுக்கொன்று உருவமைக்கும் தொடர்பை பிரதான பண்பாக கவிதைகளில் கட்டமைக்கப்படுவது பிரதானமானது. படைப்புகள் ஒரு தேர்ந்தெடுப்புச் செயல்முறைக்கு உள்ளாகியிருக்கின்றன. மதிப்புரையளிக்கப்படுகின்றன. அவை சார்பு அரசியலாக விமர்சனத்துக்குள்ளாகின்றன. இவற்றின் மூலம் கௌரவம் பெறுகின்றன. காலங்காலமாக இப்படித்தேர்ந்து எடுக்கப்பட்ட படைப்புகள் தாம் இலக்கியம் எனும் வெளிச்சப்பரப்பில் உலவுகின்றன.

ஜெயமோகன் போன்ற எழுத்துப்புள்ளிகள் அவர்களின் தேர்ந்தெடுப்புகளாக பரிந்துரைக்கப்படும் பிரதிகளை கேள்வியின்றி மேடையில் வெளிச்சம் போட்டு பிரச்சாரம் செய்யப்படுவது வாடிக்கையாகப் போய்விட்டது. ஜனரஞ்சக எழுத்துக்களையும் கலாச்சார மேட்டுக்குடி நடுவர்களும், ஒருசில ஒத்து ஊதும் ஊடகங்களும் பிரச்சாரம் செய்யும் போது ஒரு நேர்மையான எழுத்தாளனின் பிரதியொன்று நல்ல படைப்பாக இருந்தும் கூட வாசகப்பரப்பில் அதன் இலக்கை அடைவதிலிருந்து கவனக்கலைப்பு செய்யப்பட்டு தொலைந்து போகிறது

தமிழ் இலக்கியச்சூழலில் உயர்வாகக் கொண்டாடப்படும் யாவும் உழைக்கும் மக்களின் எளிய வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் எழுத்துக்களாக இல்லை. உழைக்கும் வர்க்கத்தின் மீது ஆளும் தரப்பு செய்யும் சுரண்டலாகவும், ஆளும் வர்க்கத்தினதும் உயர் சாதிய மேட்டுக்குடியினரின் தேவை, நலன்கள், இருப்பு, நீட்சி என்பவற்றைப் பாதுகாப்பானவையாகவே இருந்து வந்துள்ளன. அந்த உயர் வர்க்கத்தின் நுகர்வுக்கும் ரசனைக்கும் உரியவையாகவே அவை படைக்கப்பட்டுள்ளன. உழைப்பாளர்கள் விதியின் காரணமாகவே உழைக்கப் பிறந்தவர்களாகவும் அவர்கள் படும் துன்பங்கள் முற்பிறப்பின் காரணமானது என்றும் இக்கலை இலக்கியங்கள் ஊடாக எடுத்தியம்பப்பட்டது

அத்தகைய உயர் வர்க்கத்தையும் ஆள்வோரையும் அவர்களது கடவுளர்களையும் மையமாக வைத்தே தமது கலை இலக்கிய ஆக்கங்களை உருவாக்கினர்

மத நம்பிக்கைகளும் மூட தரிசன வழிபாட்டு முறைகளும் மக்கள் மீது விலங்குகளாகப் பூட்டப்படவை. இவை அனைத்தும் கலை இலக்கியப்

பண்பாட்டு செயற்பாடுகள் என்றவாறே முன்னெடுக்கப்பட்டன. மாக்ஸிசத்தின் தோற்றத்துடனும் லெனினிசத்தின் வளர்ச்சியின் ஊடாகவும் கலை இலக்கியத்திற்கும் அரசியலுக்கும் உள்ள உறவு பற்றிய தெளிவு விரிவு பெற்றது. நவீன காலத்தின் இலக்கியச் சூழலில் அபத்த நாடகங்களை அரங்கேற்றிக கொண்டே இருக்கும் பட்சத்தில் சகிப்பிற்கான எல்லையும் மட்டுப்படுகிறது.

இளங்கோ கிருஷ்ணன் எழுதிய "வியனுலகு வதியும் பெருமலர்" எனும் நூல் யாவரும் பதிப்பக வெளியீடாக (செப்டெம்பர் 2021) வந்தது.

சொல்கட்டுமானங்களும் அர்த்தமற்ற தன்மையில் கிறுக்கல்களாய் விரவிய ஒரு தொகுப்பினை. சிறந்த கவிதை நூலாய் விற்பனையாகும் பட்டியலில் எப்படி முன்நிலையில் வரிசைப்படுத்த முடிகிறது என்பது மிகவும் வியப்பு. அந்நூல் மீது பரப்பப்பட்ட ஜெயமோகனின் வெளிச்சமும், பெரிய பிரம்மாண்ட விழாக்களும் காணொளிகளும் சமூக ஊடகங்களில் ஒரு மாயையான தோற்றப்பாடை வாசகர்கள் மனதில் கட்டமைத்துவிடுகின்றன. திணிப்பின் கருத்தை மறுக்க முடியாத ஆமோதிக்கும் பாங்கை உடனிருக்கும் வட்டங்களும் சேர்த்தே பாடிக்கொண்டாடுகின்ற அவலம் நிகழ்கிறது.

நூலின் பசியின் கதை எனும் பகுதியில் வயிறுகள் எனும் தலைப்பில் கவிதை ஆரம்பிக்கிறது. (பக்14)

"வயிறுகள் தாங்கள் தனித்தனியானவை
என்பதைக் கண்டுபிடித்தது தான்
கடந்த இருநூற்றாண்டுகளின் சாதனை"
என்று ஆரம்பிக்கின்றது

சாதனை என்பது என்னவென்று விளங்கியுள்ளார்களா? சாதனை என்பது வழமையான ஒன்றிலிருந்து புதுமையாய் தோற்றுவிக்கும் ஒரு அரிய நிகழ்வு. பிறந்ததில் இருந்து மனிதன் தன் உடல் பாகங்களை அடையாளம் கண்டுணர்ந்து விடுகிறான். இது கை கால் தலை வயிறு என அனைத்தையும். அவ்வாறிருக்க தாயும் பிள்ளையும் ஒன்றென்றாலும் வாயும் வயிறும் வேறு என சொல்லும் ஊர்ப்பழமொழியை பிரதிபண்ணிய ஒரு கவிதை கேவலமாக இருக்கிறது. இதனையே சிலாகித்து ஜெயமோகன் நூல்வெளியீட்டு நிகழ்வில் குறிப்பிட்ட நேரம் பேசித்தள்ளுகிறார்.

> **இது என்பது அது, அது என்பது இது என சொல் விளையாட்டுக்களைப்போல நிறைய இடங்களில் வரட்சியான மனநிலையுடன் எழுதியுள்ளார். இவர்களைப் போன்றோர் சினிமா திரைப்பட வாய்ப்புகளுக்காகவும் தம்மைக் கவிஞராய் வெளிப்படுத்தும் தன்முனைப்புமே சமகால பெருவியாதியாய் இலக்கிய உலகில் மேலோங்கியிருக்கிறது.**

இவர்களுக்குள் தெளிவு எனும் நிலைப்பாடு இருப்பதாகவே தெரியவில்லை. வலிந்து உருவாக்கப்பட்ட தொகுப்பாக தான் இதனைப் பார்க்கமுடிகிறது.

"மனிதன் உருவாக்கிய மதங்களில் வெற்றிகரமானது வயிற்றின் மதம் தான்"

உலகம் தோன்றிய காலத்தில் இருந்தே பசிக்கான போராட்டம் மனிதனுக்கிடையில் இருந்து வந்துள்ளது என்பதை நாம் அறிவோம்.

மதங்கள் வெற்றியை அளிக்கவில்லை. மாறாக ஒரு கண்மூடித்தனமான பின்பற்றலை வளர்த்துவிடுகின்றன. இதில் ஒவ்வொருவருக்கும் அபிப்பிராயங்கள் மாறுபடலாம். மதங்களின் சார்பில் இருந்தும் அறிவார்ந்த வழியில் பயணிக்கும் கட்டுடைப்பு மேலோங்கியுள்ள நிலையில் மனிதனின் தரப்பில் உருவாக்கப்பட்ட வெற்றியான மதம் என பசியைக்குறிப்பிடுகிறார் கவிஞர்.

ஏழை வயிறு முதலாளி வயிறு என சோற்றில் பாகுபாடு காட்டும் ஏற்றத்தாழ்வு என்பது பத்தொன்பதாம் நூற்றாண்டில் தான் தோற்றுவிக்கப்பட்டது போன்ற வரிகளும் கவிதையின் இறுதி வரிகளில் சொல்லப்பட்டுள்ளன.

"பின்னவனை முன்னவன் வெற்றிகொண்ட கதை முதலாளித்துவத்தின் கதை எனப்படுகிறது".

இதில் என்ன புதுமையை கவிஞர் கண்டடைந்தார். வலிந்து திணிக்கும் கருத்துச் சித்தாத்தங்களை இப்பிரதியில் காணமுடிகிறது.

அத்துடன் இது என்பது அது, அது என்பது இது என சொல் விளையாட்டுக்களைப்போல நிறைய இடங்களில் வரட்சியான மனநிலையுடன் எழுதியுள்ளார். இவர்களைப் போன்றோர் சினிமா திரைப்பட வாய்ப்புகளுக்காகவும் தம்மைக் கவிஞராய் வெளிப்படுத்தும் தன்முனைப்புமே சமகால பெருவியாதியாய் இலக்கிய உலகில் மேலோங்கியிருக்கிறது.

வயிறுகள் கவிதையில் இருபதாவது வரியில் "முதலாளியாக்கிவன்" என வருமிடத்தில் வழுவும் இன்னும் பிரதியின் சில இடங்களில் ஆங்காங்கே எழுத்துவழுக்களும் காணப்படுகின்றது. ஒரு பிரதிக்கான உழைப்பு ஒற்றுப்பிழை பார்த்து நேர்த்தியாய் அமைக்கும் காலம். அதனை சரிவர செய்ய முடியாமல் விழா நடாத்தி வெளிச்சம் போடுவதையே இலக்கிய முன்னுதாரணங்களாக இங்கு காட்சிப்படுத்துவது பேரவலம்.

"பசியை எழுதுதுதல்"
ஆனால் பசியை நீங்கள் குறைத்து மதிப்பிடுகிறீர்கள் என்னிடம் ஒரு பசி தான் உள்ளது"

"மறுபுறம் இன்னமும் பல நூறு ஆண்டுகளுக்கான உணவு உள்ளது அதைக் கொண்டு ஆயிரம் பசிகளை பணியில் அமர்த்துவேன்"

"எதிர்த்து வரும் பசிகளுக்கு
ரொட்டித்துண்டுகள் வீசுவேன்
வாலாட்டும் பசிகளுக்கு
எலும்புத்துண்டுகள்
பசிதான் இவ்வுலகின் எஜமானன்
அதைக் கண்டுபிடிப்பவனைக்
கொலைசெய்பவன் வெற்றியாளன்"

ஆரம்பத்தில் பசியைக் குறைத்து மதிப்பிடவேண்டாம் என கூறிவிட்டு என்னிடம் ஒரு பசிதான் உள்ளது என்கிறார் கவிஞர். சுயநலம் மிகுந்த இந்த மனநிலை பொதுப்பார்வையில் மற்றவரை புறமொதுக்கி தன்னை முன்நிறுத்தி அணுகும் வழிமுறை மிகையான முகம் சுழிப்பையே அளிக்கிறது. பசியைக் கொலை செய்பவனே வெற்றியாளன் என முரண்நிலைப்பாடை முன்வைக்கிறது இக்கவிதை (பக்15)

"சிறுவயதில் நல்ல பசியில் சுரக்காத அம்மையின் முலையைக் கடித்துத்தின்றேன் ராட்சஷக் குழந்தை என்று

*தள்ளிவிட்டாள்" (பக்19)*

பத்து மாதம் சுமந்துபெற்ற குழந்தையை அரவணைப்பாக பாலூட்டி வளர்ப்பவளே அன்னை. அவள் எப்போதும் குழந்தையின் பசியைக் கடிந்து கொள்ள மாட்டாள். மாறாக அன்பையே ஊட்டுவாள். தாய்மையின் கண்ணியத்தை சிதைக்கும் விதமாக இவ்வாறான வரிகள் படுமோசமாகவே தோன்றுகிறது.

"பசி போல் துல்லியமான ஒரு தத்துவத்தை ரொட்டி போல் கருணையுள்ள ஒரு தலைவனை உங்களால் ஏன் உருவாக்க இயலவில்லை?" (பக்18) என கேட்கிறார் கவிஞர். ரொட்டி போல் ஒரு தலைவனைப் ப்ரியப்படுகையில் ஒரு நாளில் கெட்டு நமத்துப்போய்விடும். ரொட்டித்தலைவனை எறும்புகள் துகள்துகளாக தூக்கிச் சென்றுவிடும். அத்தோடு தலைவன் வலிந்து உருவாக்கப்படுவதில்லை எவராலும். சமத்துவமான சமூகநீதியையே தனிநபரோடு தனியனாய் போராடுவனையே தேர்ந்தெடுக்கிறது.

"அவர்கள் செல்கிறார்கள்
வயிற்றிலிருந்து எவ்வளவு தூரம் தப்ப முடியுமோ அவ்வளவு தூரம் தப்பிச்செல்பவர்களைப்போல"

அசாத்தியமான தப்பித்தலை வயிற்றிலிருந்து ஆரம்பிக்கிறார். ஒட்டியிருக்கும் அடிவயிறு காய்ந்துலர்ந்து உணவற்றுப் போகையில் எஞ்சும் கொடூரம் மரணத்திலேயே முடிவடையும். மரணத்தை பசிக்காக புசிக்க முடியுமா. அல்லது மரணத்திற்காக முப்பொழுதும் பசித்திருக்க முடியுமா? தப்பித்தலை விட போராடுதலே சிறந்தது. எங்கு தப்பித்து ஓடினாலும் பசியிலிருந்து தப்பிக்க முடியுமா? வாழ்தலே பசிக்கான அடுத்தவேளை உணவின் போராட்டமே முதன்மையானது.

"வயிற்றிலிருந்து வயிறு நோக்கிச்செல்கிறது இந்தப்பயணம்"( பக்19)

வாழ்வில் அங்கமாக உள்ள ஒரு பகுதியை முழுவதுமாய் வயிற்றுக்கு மட்டுமே அர்ப்பணித்த கவிஞரின் கண்டடைதல் மற்றுமொரு வயிறாக தான் இருந்துள்ளது. இதிலிருந்து தனக்குள் கிளர்த்திவிடப்பட்ட பசியை பற்றித்தான் கவலைப்படுகிறார்.

"உதிர்ந்த இலையில் தன் மரணத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறது மரம். குனிந்து அந்த மரத்தைப் பார்த்துக்கொண்டிருக்கிறது வானம்"

உதிர்வு இயற்கையின் சுழற்சியில் ஒரு புதுப்பித்தல் நிகழ்வு. உதிர்வினை ஒரு முற்றுப்பெறும் முடிவு எனவும் மரணம் எனவும் அச்சமடைந்து பார்த்துக்கொண்டேயிருக்கும் மரம் போலவும் குனிந்து அந்த மரத்தினைப் பார்த்துக்கொண்டிருக்கும் வானமும் எதனைச் சொல்ல விழைகின்றன. மரத்தின் சீவியக்காலம் முழுவதும் மரணத்தை எண்ணிச் செத்து செத்துப் பிழைத்தலையா போதிக்கிறது?

வானம் பரப்பில் பிரம்மாண்டமானது. மரம் ஒப்பீட்டில் சிறியது. வானம் குனிந்து மரத்தைப் பார்த்துக்கொண்டிருப்பது என்பது வானத்தை மிகைப்படுத்தி மரத்தை சிறுமைப்படுத்தி இலையின் மரணத்தை ரசிக்கின்றதா வானம்? அல்லது மரணத்தை எச்சரிக்கின்றதா? அமைதியற்ற பொருளற்ற யாப்பமைதியற்ற கவிதைகளின் மூலம் கவிஞரின் மனநிலை செயல்முறையற்ற வெறும் சிலை போன்ற உறைந்த மனநிலையின் பிரதிபலிப்பே. இலைகளின் மீது வானம் மழை மீதிறங்கி வருகிறது என வந்திருந்தால் கவிதையில் உயிர்ப்பும் பொருளமைதியும் இருந்திருக்கும்.

பசியைப் பற்றியும் மரணத்தைப் பற்றியும் காதலைப் பற்றியும் சொற்கள் பற்றியும் சரியான புரிதலற்ற பிதற்றல்களாய் வெற்றுக்கோதுகளை உடைய உள்ளீடுகளற்ற கவிதைகளாயும் இளங்கோ கிருஷ்ணனின் கவிதைகள் அமைந்துள்ளன. வாசிக்கையில் அவ்வளவு சலிப்பையும் சோர்வையும் அளித்தது. அத்துடன் முழுமையாக வாசிக்க முடியாத அபத்தமான கவிதைகளாயும் அமைதியை குலைக்கும் பக்குவமற்ற நிலைப்பாடுகளை கவிஞரின் மனநிலை அகவயமாய் பிரதிபலித்துள்ளது. புத்தகத்தின் சில பக்கங்களுக்கு மேல் கடந்து செல்ல முடியாத அவலமாக உள்ளது.

தனது நூலின் முன்னுரையில் இளங்கோ கிருஷ்ணன் தனது அபத்தங்களைப் பெருமையாக குறிப்பிட்டுள்ளார்.

இன்னும் மூன்று தொகுதிகள் அளவுக்கு கவிதைகள் தம்மிடம் உள்ளதாயும் அதனை அச்சிற்கு கொடுப்பதற்கென்று தனக்கு மனநிலை ஒன்று வேண்டும் எனவும் கூறுகிறார். சுயதம்பட்டம் அடித்து தனது கவிதைகளையே புகழ்ந்து எழுதியுள்ள அவலம் கவிஞரின் முன்னுரையில் நிகழ்ந்துள்ளது. அதிலும் ஏகப்பட்ட எழுத்துப்பிழைகள்.

இவர் பொன்னியின் செல்வன் படத்திற்கு பாடல் எழுதி பெருமை பெற்றது பற்றி இவரது சொந்தப்படைப்பு தானா என சந்தேகப்படும் அளவுக்கு இவரது சொல்லாட்சி அமைந்துள்ளது.

அது மட்டுமல்ல விஷ்ணுபுர கும்பலில் இவரும் சிஷ்யராக இருப்பதால் இவரை அந்த பெரிய புள்ளி பாடல்வரிகள் எழுதும் வெளிச்சத்திற்கான வாய்ப்பை சிபாரிசு செய்தோ இருக்கலாம் என எண்ண வைத்துவிட்டது இப்பிரதி.

தி இந்து நாளிதழில் சிறந்த புத்தகங்கள் 2022 தர வரிசையில் இந்நூலையும் பட்டியல்படுத்தியிருந்தது எப்படியென்று தெரியவில்லை. உள்ளடக்கங்களை வாசிக்காது வெளிப்படையாய் விளம்பரப்படுத்தலில் மயங்கி வாங்கி ஏமாறும் அவலம் வாசகர்களுக்கு நேர்ந்துள்ளது.

கோவிட் பெருந்தொற்றுக் காலத்தில் பசி எனும் பகுதியில் வரும் அத்தனை கவிதைகளையும் ஒரே நாளில் எழுதியுள்ளதாய் அதிமேதகு கவிஞர் முன்னுரையில் குறிப்பிடுகிறார். இவ்வாறு அவசரமாக தோன்றியவற்றையெல்லாம் எழுதி வெளியிடும் இது போன்ற போலி கும்பல்களால் தான் இலக்கிய உலகில் நல்ல படைப்புகள் தொலைந்து மறைந்துபோகின்றன.

எந்தக்காலமாயினும் ஒரு குறிப்பிட்ட கல்வி விமர்சன சமூகம் எதை இலக்கியம் என்று கருதுகிறதோ அது தான் இலக்கியமென கலாசார நடுவர்கள் அங்கீகரிக்கும் மனநிலை மேலோங்கி பெரும்பாலான பிரதிகளின் தனித்துவம் சிதைந்து ஊடகங்களின் வாயிலாக பேசப்படும் படைப்புகளையே சிறந்த இலக்கியம் என கருதப்படும் அபத்தம் பரவலாக இலக்கியவெளியில் உள்ளது.

போலியான படைப்புகள் கொண்டாடப்படுகின்றன. இதிலிருந்து மாற்றம் பெறும் சிந்தனை இயக்கங்களை தோற்றுவிக்கும் தேவையும் அது சார்ந்து விழிப்படையச்செய்யும் கருத்துக்களை சமூகப்பரப்பில் பரவலாக கொண்டு சேர்க்கும் பணியை இயன்றளவும் தொடர்ச்சியாக செய்துகொண்டிருக்க படைப்பாளர்களும் வாசகர்களும் தைரியமாக முன்வரவேண்டும்.

# தமிழர்கள் சுமக்கும் மாயப் பொதி



## சதீஸ் செல்வராஜ்

வெள்ளையர்கள் தம் விசுவாசிகளிடம் இந்நாட்டை ஒப்படைத்து சென்றது முதற்கொண்டு இன்றுவரையிலும் சிறுபான்மை மக்கள் பல்வேறு இனஒடுக்குமுறைகளுக்கு ஆளாகி வருகின்றமையை மூடிமறைத்துவிட இயலாது. இவ்வாறு இனஒடுக்குமுறை வரைபுகளை தீட்டுபவர்களில் பிரதானமானவர்கள் பெருந்தேசிய அரசியல் தலைவர்கள் என்பதும் அம்பலப்பட்டிருக்கிறது.

இந்த இனஒடுக்குமுறை திரையைக் கிழித்தெறிகையில், அங்கு ஆதிக்க கும்பலின் அதிகார இருப்பும் பாதுகாப்பும் மறைந்து கிடப்பதை அவதானிக்க முடிகிறது. இதனை மேலும் வலுப்படுத்தும் துருப்புச் சீட்டாக இதுவரை காலமும் சிங்கள மக்கள் பயன்படுத்தப்பட்டுள்ளமையை அச்சமூகமே இன்று உணர ஆரம்பித்துள்ளது. அந்த தெளிவடைதலின் ஒரு பிரதிபலனாக 13 பற்றிய கதையாடலின் பின்பு உருவெடுத்திருந்த பெரும் பிரளயம் முறியடிக்கப்பட்டதைக் குறிப்பிடலாம்.

ஆனாலும், மக்களின் இரத்தத்தை சூடேற்றுவதில் இருந்து அதிகார வர்க்கம் பின்வாங்கிவிடவில்லை என்பது கவனிக்கத்தக்கது. அத்துடன், அச்சதிகளை முறியடித்து இலங்கையராக நாட்டு மக்கள் அணித்திரள வேண்டுமென்பது கட்டாயமானது. அதைப்போல், யாழ். மையவாதத்துக்குள் இருந்து எழுந்துவரும் தமிழர் உரிமைகள் என்ற கோசத்தில் இருந்து வடக்கு, கிழக்கு தமிழ் வாக்காளர்களைத் தவிர்ந்த நாட்டின் ஏனையப் பகுதியில் வாழக்கூடிய தமிழர்கள் அந்நியப்பட்டுள்ளமை குறிப்பிடதக்கது. இனி இன்றைய களநிலவரத்துடன் இவற்றைப் பற்றியும் ஆராய்வோம்!

இலங்கையின் அரசியல் எதிர்காலத்தை தீர்மானிக்கக்கூடிய, தீர்வுகட்டமான தேர்தலாக அமையப்போகின்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடாத்துவதற்கான திகதியை தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்ததைத் தொடர்ந்து இலங்கையின் அரசியற் களம் எட்டுத்திக்கிலும் சூடுபிடித்துள்ளதையும் கடந்து, சர்வதேசத்தையும் கூட உலுக்கியுள்ளது.

ரணில் ராஜபக்ஸாக்களை நாட்டு மக்கள் புறக்கணித்துள்ளதையடுத்து, “வழமைப்போலவே இந்நாட்டு மக்கள் தமது முகாமைச் சேர்ந்த எதிரணி பக்கம் சேருவார்கள்!” என்று அவர்கள் போட்டிருந்த கணக்கு தப்பாகி, இம்முறை மக்கள் (குறிப்பாக சிங்களவர்கள்) அநுர குமார திசாநாயக்கவின் தலைமையிலான தேசிய மக்கள் சக்தியுடன் அணிதிரள்வதால் அச்சத்தின் உச்சியில் நின்று ஆடிப்போயிருக்கிறார்கள். தேர்தலில் தாம் தோற்கடிக்கப்பட போவதை அறிந்துகொண்டுள்ளார்கள். அதனால் ரணில், ராஜபக்ஸாக்களை உள்ளிட்டவர்கள் எப்படியாவது தேர்தலை பிற்போடுவதற்கு கங்கணங்கட்டிக்கொண்டு இருக்கிறார்கள். அதற்கு பல சாக்குப்போக்கு கதைகளையும் முன்வைக்கிறார்கள்.

அதாவது, உள்ளூராட்சி மன்றங்கள் காலாவதியாகி ஒரு வருடம் கடந்துள்ள நிலையில் “இது தேர்தலை நடத்துவதற்கான காலம் அல்ல.” என்கிறார்கள். “இந்த தேர்தல் மூலமாக ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த முடியாது.” என்று கூவுகின்றனர். பராமரிப்பு செலவுக்காக முன்னாள் ஜனாதிபதிகளுக்கும் ரணசிங்க பிரேமதாசவின் மனைவிக்கும் பில்லியன் கணக்கான பணத்தினை ஒதுக்கியுள்ள பாராளுமன்றத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க “தேர்தலை நடத்துவதற்கு பணம் இல்லை.” என்கிறார். தேர்தலை நிறுத்துமாறு கதறிக் கொண்டு நீதிமன்றத்திற்கு ஓடுகிறார்கள். இவ்வாறான பல தில்லுமுல்லு வேலைகளை அவர்கள் செய்துகொண்டிருப்பதை அவதானிக்க முடிகிறது.

ஆனால், தேர்தலை நிறுத்தி ஜனநாயகத்தைப் புதைக்கின்ற அரசாங்கத்தின் கோழைத்தனமான முயற்சியை தோற்கடிப்பதற்கான போராட்டம் நாடுமுழுவதும் வலுப்பெற்று வருகிறது. இந்நிலையிலேயே ஒன்றுபட்டுள்ள இலங்கை மக்களை பிளவுப்படுத்துவதற்கான சூழ்ச்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அதன் முதற்கட்ட காய்நகர்த்தலே 13 ஆவது திருத்தச் சட்டத்தை தருவதாக ரணில் விக்ரமசிங்க தெரிவித்தமை ஆகும்.

அச்சந்தர்ப்பத்திலேயே 2023

பெப்ரவரி 04 பருத்தித்துறையில் இருந்து பேரணியாக புறப்பட்டுவந்த தமிழ்த்தேசிய அரசியல்வாதிகள் 2023 பெப்.07 மட்டக்களப்புக்கு வந்தபோது வட இந்தியர்களைப் போல குல்லா அணிந்துகொண்டனர். ராஜபக்ஸக்கள் ஆட்சியமைப்பதற்கு பக்கபலமாக நின்ற தேரர்கள் பலர் 2023 பெப். 08 ஆம் திகதி பாராளுமன்றிற்கு அருகில் திரண்டு 13க்கு எதிர்ப்பு தெரிவித்து, “நாடு பிளவுப்படுவதை தடுக்கவேண்டும்.” என்ற கோசத்தை முன்வைத்து, தமிழர்களுக்கு எதிரான இனவாதத்தைக் கக்கினர். கிழக்கிலும் முஸ்லிம்கள் சிலரால் தமிழர்களுக்கு எதிரான கருத்துக்கள் விதைக்கப்பட்டன.

ஏதோ திட்டத்திற்கேற்பவே இவ்வனைத்தும் குறிப்பிட்ட காலப்பகுதியில் அரங்கேற்றப்பட்டிருந்தன. ஆனால், மக்கள் அதற்கு ஏமாறவில்லை. அந்தப் பொறியில் அகப்படவில்லை. ஏனென்றால், தோல்வி கண்டுள்ள ஆட்சியாளர்கள் இறுதியாக இந்த இடத்திற்கு வந்து சேர்வார்கள் என்ற அடிப்படை அறிவு மக்களுக்கு ஓரளவு இருந்தது.

1987 ஆம் ஆண்டு முதல் 13 ஆவது திருத்தச் சட்டம் பற்றி கதைக்கப்படுகிறது. நல்லாட்சி அரசாங்கத்தின் போதும் இதுபற்றி கதைக்கப்பட்டது. ஆனால், இன்றுவரையில் எதுவும் நிறைவேற்றப்படவில்லை. தவிர, 13 என்பது மாகாண சபையுடன் தொடர்புபட்டது. அதனை உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நேரத்தில் கதைக்க காரணம் என்ன? உள்ளூராட்சி மன்றத் தேர்தலையே நடத்துவதற்கு பணம் இல்லை என்று கூறும் அரசாங்கம் மாகாண சபைத் தேர்தலை எப்படி நடத்தும்? குட்டித் தேர்தலில் படுதோல்வியடைந்துவிடுவோமோ என்று பயந்து தொடை நடுங்கி நிற்கும் ரணில் ராஜபக்ஸாக்கள் மாகாண சபைத் தேர்தலை நடத்துவார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்? ஆக, மக்களை ஏமாற்றுவதற்கான பொறியே இந்த 13 ஆகும். இவர்களால் ஒருபோதும் சிறுபான்மை மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும் முடியாது. நாட்டை உருப்படியாக்கவும் முடியாது. இவர்களால் மக்களை பிளவுப்படுத்த மட்டுமே முடியும்.

அதைப்போல், வடக்கு, கிழக்கில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கே யார் அதிகாரத்தைக் கைப்பற்றுவார் என்று இந்தளவிற்கு கடும் போட்டி? வடக்கில் தேர்தல் மோதல்கள் சாதிய மோதல்களாக உருவெடுத்துள்ளமையையும் சமூகவலைத் தளங்களில் காணமுடிகிறது. அன்று ஒற்றை தமிழீழத்தை முன்வைத்து ஏகப்பட்ட இயக்கங்கள் உருவாகி தங்களுக்குள் மோதிக்கொண்டது போல இன்று தமிழர் உரிமைகள் என்ற விடயத்தை முன்வைத்து பல அரசியற் கட்சிகள் குடுமிப்பிடி சண்டையில் மல்லுக்கட்டுகின்றன. தமிழர்களின் உரிமைகளை வென்றெடுக்க எத்தனை தமிழ்த்தேசியக் கட்சிகள்? எத்தனை சின்னங்கள்? அப்படியென்றால் மாகாணசபை அதிகாரத்தின் நிலைமை? ஆக, 13 என்பது மக்களை ஏமாற்றுவதற்கு

“பெப்ரவரி 04 பருத்தித்துறையில் இருந்து பேரணியாக புறப்பட்டுவந்த தமிழ்த்தேசிய அரசியல்வாதிகள் 2023 பெப்.07 மட்டக்களப்புக்கு வந்தபோது வட இந்தியர்களைப் போல குல்லா அணிந்துகொண்டனர்.

ராஜபக்ஸக்கள் ஆட்சியமைப்பதற்கு பக்கபலமாக நின்ற தேரர்கள் பலர் 2023 பெப். 08 ஆம் திகதி பாராளுமன்றிற்கு அருகில் திரண்டு 13க்கு எதிர்ப்பு தெரிவித்து, “நாடு பிளவுப்படுவதை தடுக்கவேண்டும்.” என்ற கோசத்தை முன்வைத்து, தமிழர்களுக்கு எதிரான இனவாதத்தைக் கக்கினர்.

கிழக்கிலும் முஸ்லிம்கள் சிலரால் தமிழர்களுக்கு எதிரான கருத்துக்கள் விதைக்கப்பட்டன.

ஏதோ திட்டத்திற்கேற்பவே இவ்வனைத்தும் குறிப்பிட்ட காலப்பகுதியில் அரங்கேற்றப்பட்டிருந்தன.”



பயன்படுத்தப்படுகின்ற ஒரு யுக்தி மாத்திரமே! தமிழர்களின் பிரச்சினையை வைத்து அரசியல் நடத்துபவர்களிடம் தீர்வு எப்படி கிடைக்கும்?

13 என்ற விவகாரத்தை கையில் எடுத்து இனமோதலை ஏற்படுத்த முடியாமல் ஆளும் கூட்டம் தோற்றுப்போனதை தொடர்ந்து, அடுத்த வியூகத்தில் நகர்ந்தது. ஆம்! அவ்வாறு மக்களைப் பிளவுப்படுத்த முன்னெடுக்கப்பட்ட அடுத்தக்கட்ட நடவடிக்கைதான் புலி எழுச்சி அல்லது பிரபாகரனின் மறுபிறப்பு.

இதுவும் புதியவிடயமல்ல! தேர்தல் காலங்களில் வந்துபோகின்ற பழைய கதைதான். இந்தக் கதை இம்முறை இந்தியாவில் இருந்து பழ.நெடுமாறனால் தொடங்கப்பட்டது. பழ. நெடுமாறன், காசி

ஆனந்தன், சீமான் போன்றோர் ஈழத்துப் பிரச்சினையை விற்று தமிழ் நாட்டில் பிழைப்பு நடத்தும் திருட்டுக்கோஷ்டிகள் என்று பலருக்கும் தெரியும். மதவாத பா.ஜ.க. அண்ணாமலையை வரவழைத்து முள்ளிவாய்க்கால் நினைவுநாளை அனுஸ்டித்தவர்களும் இக்கோஷ்டிதான். அப்பேர்பட்ட பழ.நெடுமாறன் "பிரபாகரன் உயிருடன் இருக்கிறார். வருவார்." என்று நிருபர்கள் முன்னிலையில் வாசித்துக் காட்டியது பரபரப்பாகியது.

இதுகுறித்து வி.சி.க. தலைவர் தொல்.திருமாவளவன் "இந்திய உளவுத்துறையின் அச்சுறுத்தலின் காரணத்தினாலேயே பழ.நெடுமாறன் அவ்வாறு தெரிவித்தார்." என்றார். இக்கருத்தை மேலோட்டமாக அணுகிவிட இயலாது. "தமிழ்த் தேசியம் பேசிய பழ.நெடுமாறன் அவர்கள் கூட இன்று பா.ஜ.க.வை ஆதரித்து, மோடியைப் பாராட்டி பேசும் அளவுக்கு நிலைமை மாறிவிட்டது." எனும் அவரது கருத்தில் பல விடயங்கள் அடங்கியுள்ளது. இதன்மூலம் தமிழ்த்தேசியவாதிகள் தஞ்சமடைந்துள்ள இடம் அப்பட்டமாகத் தெரிகிறது. ஆக, புலி எழுச்சியில் பா.ஜ.க.வின் செல்வாக்கு எந்தளவிற்கு இருக்கிறது என்பது புலனாகிறது.

"பிரபாகரன் உயிரோடு இருக்கிறார். ராஜபக்ஸாக்கள் பலவீனமடைந்துள்ள இந்நிலையில் வெளியில் வருவார்." என்று பழ.நெடுமாறன் வாசித்துக் காட்டியதைத் தொடர்ந்து, தனது இல்லத்தின் ஊடக சந்திப்பினை ஏற்பாடு செய்திருந்த மஹிந்த ராஜபக்ஸ "இதுவல்ல நான் வெளியில் வருவதற்கான காலம். நான் கட்டாயம் வருவேன். நான் வரும்போது வேறுமாதிரி இருக்கும்." என்று தெரிவித்துள்ளார்.

ஆக, "புலி எழுச்சியின் பின்னணியில் தமிழ்த்தேசியம் மற்றும் பா.ஜ.க. கும்பல் யாரை பலப்படுத்தப்பார்க்கிறார்கள்? ராஜபக்ஸ ாக்களையா? இலங்கையில் இனமோதலை உருவாக்கவா திட்டமிடுகிறார்கள்?" என்ற நியாயமான கேள்வி எழுகிறது. பா.ஜ.க. அண்ணாமலை, பா.ஜ.க. எல்.முருகன் ஆகியோர் இலங்கைத் தமிழ்த்தேசிய அரசியல்வாதிகளை தேடிச் செல்வதற்கும், பா.ஜ.க. சுப்பிரமணியம் சுவாமி "ராஜபக்ஸ க்களுக்கு எதுவுமென்றால் இந்திய இராணுவத்தை இறக்குவோம்." என்று எச்சரிக்கை விடுவதற்கும் இடையில் தொடர்பில்லாமல் இருந்துவிடுமா?



மக்களைப் பிளவுப்படுத்தி தமக்கேற்ற தலைவர்களை ஆட்சியில் இருத்திக்கொள்ள பா.ஜ.க. முயற்சி செய்வது தெளிவாகவே தெரிகிறது. அதாவது தலையாட்டி பொம்மைகளை வைத்துக் கொள்ளப் பார்க்கிறது.

இந்நிலையிலேயே கடும் இனவாதியான அம்பிட்டிய சுமனரத்ன தேரரை இலக்குவைத்து அம்பாறையில் துப்பாக்கிச் சூடும் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படுகிறது. (இவர் 13க்கு எதிர்ப்பு தெரிவித்து தேரர்களால் கொழும்பில் முன்னெடுக்கப்பட்ட எதிர்ப்பில் முன்னணியில் இருந்தவர் என்பதும் குறிப்பிடதக்கது.) அதனைத் தொடர்ந்து தனக்கு பொலிஸ் பாதுகாப்பு வேண்டுமென்று அவர் கோரிக்கை விடுத்திருந்தார்.

இவ்வாறான விடயங்கள் "சிங்கள பௌத்த மக்களை உசுப்பிவிடும் வேலை" என்று புரியாமல் இல்லை. பழ. நெடுமாறன் வெளியிட்டுள்ள கருத்தின் பின்னணியில் இவை அரங்கேறுகிறது. இந்தியாவுக்கு எதிரான நாடுகள் எதையும் தங்கள் மண்ணில் காலூ ன்ற பிரபாகரன் விட்டதில்லை என்றும், எந்நிலைமையிலும் அந்நாடுகளிடம் உதவி கேட்கவில்லை என்றும் பழ.நெடுமாறன் ஊடக சந்திப்பில் தெரிவித்திருந்தார்.

இதன் உள்குத்து என்ன? சீனாவுக்கு எதிராக வடக்கு, கிழக்கு தமிழர்களை திருப்பிவிடுவதாகும். இந்து சமுத்திர ஆதிக்கம் சீனாவின் கைக்கு சென்றுவிடக்கூடாது என்ற அச்சம் ஆகும். இந்தியாவின் ஆளும் தரப்பின் கட்டளைக்கு இணங்கவே இலங்கைத் தமிழ்த்தேசிய அரசியல்வாதிகள் சீனாவுக்கு எதிராக கூவுகிறார்களோ என்ற கேள்வி எழுகிறது. அதானியின் மன்னார் காற்றாலை மின்திட்டம் தொடர்பில் இவர்கள் மூச்சுவிடாமல் இருப்பது மேலும் சந்தேகத்தை உறுதிசெய்வதாக இருக்கிறது.

இவ்விடத்தில் ஒருவிடயத்தை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன், சீனாவாக இருந்தாலும் சரி! இந்தியாவாக இருந்தாலும் சரி! எமது நாட்டுக்குள் அத்துமீறி அதிகாரம் செய்யமுடியாது. அதில் எமது பார்வை கறாரானது.

பழ.நெடுமாறன் வடக்கு-கிழக்கு தமிழர்கள் இந்தியாவுக்கு துணைநிற்க வேண்டும் என்று கேட்கிறார். இந்தியாவுக்கு என்றால்? இந்தியாவின் துன்பப்படுகின்ற விவசாயிகளுக்கா?

> **"பிரபாகரன் உயிரோடு இருக்கிறார். ராஜபக்ஸாக்கள் பலவீனமடைந்துள்ள இந்நிலையில் வெளியில் வருவார்." என்று பழ.நெடுமாறன் வாசித்துக் காட்டியதைத் தொடர்ந்து, தனது இல்லத்தின் ஊடக சந்திப்பினை ஏற்பாடு செய்திருந்த மஹிந்த ராஜபக்ஸ "இதுவல்ல நான் வெளியில் வருவதற்கான காலம். நான் கட்டாயம் வருவேன். நான் வரும்போது வேறுமாதிரி இருக்கும்." என்று தெரிவித்துள்ளார்.**

சாதாரண தொழிலாளர்களுக்காகவா? திட்டமிட்டு ஒடுக்கப்படுகின்ற சமூகத்துக்காவா? யாருக்காக?

பா.ஜ.க.வுக்கும் அதானிக்கும் துணைநிற்குமாறே அவர் வேண்டுகோள் விடுக்கிறார்.

"சீனாவின் சூரிய சக்தி மூலம் மின் வழங்கள் திட்டத்திற்கு எதிர்ப்பு காட்டி, மன்னார் காற்றாலை மின் உற்பத்தி திட்டத்தை ஏற்று அதனை அதானிக்கு வழங்கி வைக்க வடக்கு-கிழக்குத் தமிழர்களே துணை நில்லுங்கள்." என்று பழ.நெடுமாறன் மடிப்பிச்சைக் கேட்பது போலவே எனக்கு கேட்கிறது.

உலக முதற்தர பணக்காரன் என்ற அந்தஸ்த்தைக் காட்டி பின்னர் சரசரவென்று கீழே இழுத்துத் தள்ளிய அமெரிக்க அதிகார வர்க்கத்தின் கட்டுப்பாட்டின்கீழ் அதானி சீனாவுக்கு எதிராக ஆடுவதாகவும் எனக்கு ஓர் சந்தேகம்? இந்தோ பசுபிக் விவகாரங்களுக்கான அமெரிக்காவின் முதன்மை துணைப் பாதுகாப்புச் செயலாளர் ஜெடிடியா பி ரோயல் தலைமையிலான குழுவினர் 16 ஆம் திகதி இலங்கை வந்துள்ளனர். கட்டுநாயக்க-கொழும்பு நெடுஞ்சாலை வீதியை மூடி அவர்களை அழைத்து வந்திருந்தமை குறிப்பிடதக்கது.

அமெரிக்காவின் வாசிங்டனை தளமாகக் கொண்ட சர்வதேச நாணய நிதியத்தின் தலையீட்டின் பின் இலங்கையின் பொருளாதாரம் மேலும் இறுக்கம் கண்டுள்ளது. மின்கட்டணம் அதிகரிக்கப்படும் வரையில் தொடர்ந்து பல மணிநேர மின்வெட்டு அமுலில் இருந்தது. தற்போது 66 சதவீதத்தால் மின்கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், 90 அலகுகளுக்கு குறைவாக மின்சாரத்தைப் பயன்படுத்தும் சாதாரண மின்பாவணையாளர்கள் செலுத்த வேண்டிய மின்கட்டணம் 250 சதவீத்தால் அதிகரித்துள்ளது. இவ்விடயங்கள் எல்லாம் ஒன்றோடு ஒன்றாக பின்னப்பட்டள்ளது போலவே இருக்கிறது.

"தேர்தல் வரட்டும். நாங்கள் இதற்கெல்லாம் பதில் சொல்கிறோம்." என்றே ராஜபக்ஸாக்களை விரட்டியடித்தது போன்ற பெரும் போராட்டங்களில் இறங்காது அவர்கள் அமைதிகாக்கின்றனர். ஆனால், மக்களது உரிமைகள் மறுக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் எல்லோரும் ஒன்றுபட்டு கிளர்ந்தெழுவதை யாராலும் தடுக்கவியலாது.



எதுஎவ்வாறாயினும், இலங்கையின் விவகாரத்துக்குள் எந்தவொரு நாட்டுக்கும் அத்துமீறி தலையிட முடியாது. அதைப்போலவே மக்களை பிளவுப்படுத்தவும் இடமளிக்க முடியாது. தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியில் பேதமின்றி எல்லா சாதாரண மக்களும் சிக்கி சின்னாபின்னமாகிக் கொண்டிருக்கிறார்கள்.

"தேர்தல் வரட்டும். நாங்கள் இதற்கெல்லாம் பதில் சொல்கிறோம்." என்றே ராஜபக்ஸாக்களை விரட்டியடித்தது போன்ற பெரும் போராட்டங்களில் இறங்காது அவர்கள் அமைதிகாக்கின்றனர். ஆனால், மக்களது உரிமைகள் மறுக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் எல்லோரும் ஒன்றுபட்டு கிளர்ந்தெழுவதை யாராலும் தடுக்கவியலாது.


அவ்விடத்திற்கு மக்கள் ஒன்றுபட்டு செல்வதற்கு முன்பாக இனமோதலை உருவாக்க ஆட்சியாளர்கள் முயற்சிக்கிறார்கள். அந்த அட்டவணைப்படி அரங்கேறும் யாழ். மையவாதிகளின் கபட நாடகத்திற்கு வடக்கு-கிழக்குத் தமிழர்கள் மயங்கிடாமல் இருக்க வேண்டும். அது போல, தமிழ்த்தேசிய அரசியல்வாதிகளால் ஓரங்கட்டப்பட்டுள்ள மலையக மக்கள் வலிய சென்று அவர்கள் விரித்துள்ள வலையில் மாட்டுப்படவும் வேண்டாம். காலங்காலமாக தோற்றுவிக்கப்படும் இனஒடுக்குமுறைகளில் பெரிதும் பாதிக்கப்படுவது மலையக சமூகமாகவே இருக்கிறது.

83 கறுப்பு ஜூலையிலாகட்டும் வன்னி யுத்தத்திலாகட்டும் செத்து மடிந்தவர்கள் பலரும் மலையக மக்களே! இனியும் ஏமாற்று அரசியலுக்கும் திட்டங்களுக்கும் இலங்கையின் சாதாரண மக்கள் பலியாகிட வேண்டாம். அதற்காக பிரிவினைவாதத்தை வேரறுத்து சாய்ப்போம். ஒன்றுபட்டு எழுவோம்.

தேசிய ஒற்றுமையைக் கட்டியெழுப்புவதனூடாக மக்களுக்கான ஆட்சியதிகாரத்தை நிறுவுவோம். நாட்டை உருப்படியாக்குவோம்.



# பொட்டை



## ஜெயந்தீஸன் குட்டிக்கதைகள்

(ஆவணங்கள் அடிக்கடி தேடப்படுவதில்லை. அண்மையில் நான் நடத்திய தேடலின்போது ஒரு கதை கிடைத்தது. ஆம், இது பல ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட ஓர் கதை. ஆம், எமது போர் அரசியலின் ஓர் விமர்சனப் பிரதியாகவும் இதனை எடுத்துக் கொள்ளலாம் என்பது என் நினைப்பு. குட்டிக்கதைகளை எழுதும் நான் சில சிறுகதைகளையும் ஜெயந்தீசன் பெயரில் முதலில் எழுதினேன்)

குமுதினி பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டாள். அது ஓர் ராத்திரியில். படலை கட்டிக் கிடந்ததாம். வேலியால் பாய்ந்த அடையாளமும் இல்லை. “பொடியள்” பூந்து போகின்ற பொட்டுக்குளால்தான் அவன் உள்ளே நுழைந்திருக்கவேண்டும் என்ற கதை பலரது நாக்குகளிலிருந்தும் வந்தது.

அவளுக்கு ஆறுதல் கூற நிறையப்பேர் வந்திருந்தனர். ஆம், சண்முகலிங்கமும்தான். முகமூடி அணிந்து, அவளது வாயைத் தாவணிச் சேலையால் மூடி, அவளைக் கெடுத்தவன்தான் அவன் என்பது எவருக்குமே தெரியாது.

குமுதினி அழுதாள். கண்ணீர் சோகத்தை அழித்துவிடுமா? விக்கி விக்கி அழுதாள். “அழாதை பிள்ளை, அழாதை. எங்கடை முருகன் உன்னைக் கைவிடமாட்டான். எதுக்கும் பொன்னம்பலத்திட்டை போய் மை போட்டுப் பாத்திட்டா அவனைக் கையும் மெய்யுமாப் பிடிச்சிடலாம்.” என முதியவர் ஒருவர் அவளிடம் சொன்னார்.

இரண்டு கிழவிகள் குமுதினியைக் கெடுத்தவனைப் படு தூஷணத்தால் திட்டு திட்டென்று திட்டினார்கள்.

சண்முகலிங்கமும் அவளுக்கு ஆறுதல் சொல்லச் சென்றான்.

“தங்கச்சி அழாதையம்மா. ஆளை எப்பிடியும் பிடிச்சு, கட்டி வைச்சு நல்ல சவுக்கடி குடுப்பம்.”

“அண்ணை, இனி நான் எந்த முகத்தோடை வாழுறது?” அவனுடைய கால்களைப் பிடித்துக்கொண்டு அவள் கதறினாள்.

“தங்கச்சி, அவன்ரை சேப் எப்பிடி இருந்தது?”

“அண்ணை, அவன் முகமூடியோடைதான் வந்தவன். அவன் ஆரெண்டும் எப்படியெண்டும் என்னால சொல்ல முடியாம இருக்கு. ஐயோ அண்ணை. என்ரை வாழ்க்கை இப்பிடிச் சீரழிஞ்சு போயிட்டிது”

“உந்த நாசமாப்போனவன் ஊருக்கை உள்ளவனாத்தான் இருக்கும். இல்லாட்டி முகமூடி இல்லாமை வந்திருக்கமாட்டான். எப்படியாவது அவனைப் பிடிச்சிடலாம்.”

குமுதினி அழுகையினூடு அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

“மலிஞ்சாச் சந்தைக்கு வரும். என்னாலை ஒருமாதிரி ஊக்குவிக்கமுடியுது. ஒண்டுக்கும் நீ யோசியாதை. நான் வெண்டு தாறன்.”

முருகேசுக் கிழவன் அவனது செவியின் அருகில் நெருங்கிச் சொன்னான்: “தம்பி சண்முகலிங்கம், உம்மட அண்ணன்ர மகனெல்லே எங்கடை பகுதிக்கு லெப்டினன்ட். நீ மட்டும் தலையைப் போட்டா அவளைக் கெடுத்த போக்கிரியை நாளைக்கே கண்டு பிடிச்சிடலாம்.”

“அவனைச் சுட்டு தந்திப் போசிலை தூக்கவேணும்.!”

“உவங்களெல்லாம் ஓர் தேப்பனுக்குப் பிறந்திருக்க மாட்டாங்கள்.”

கிழவி ஒருத்தி, நிலத்து மண்ணைக் கிள்ளி அதன் மீது துப்பிவிட்டு “உந்த வேசைமோன் புழுத்துச் சாகவேணும்” என்று சாபம் செய்து வானத்தை நோக்கி எறிந்தாள்.

சண்முகலிங்கத்திற்கு அப்போது ஓர் பெரிய திருப்தி வந்தது. ஆம், அது ஓர் பேய்த் திருப்தி. தன் தலை தப்பிவிட்டது என்று நம்பினான். முருகேசுக் கிழவனின் ஆலோசனை அவனை முத்தமிட்டது. பாக்கியத்தின் கடைக் குட்டியையும் இந்த பாணியில் சுவைக்கலாம் என்ற விருப்பு அவனுக்குள் எரிந்தது. அவனது மனதின் தோணிக்குள் பல முகமூடிகள் வந்து விழுந்தன.

“அவன் வந்திட்டான்.”

கனகேஸ்வரியின் முன் ஜீப் தெரிந்தது. அது இயக்க ஜீப். அது படலையின் முன். இராணுவ வீரனின் உடையில், மிடுக்குடன், AK47 தனது தோளைத் தழுவ “அம்மா” என்று இனிய குரல் எழுப்பி அவள் முன் வந்தான் குமார். “சீனி ஐயா” எனச் சொல்லி மிகவும் மரியாதையுடன் சண்முகலிங்கத்தின் முன் அவன் தரித்தான். ஆம், அவனது உடலெங்கும் வீரக்களை பளிச்சிட்டது.

“சாப்பிடெண்டா, நீ வருவாய் எண்டு தெரிஞ்சு கோழிக்கறி சமைச்சு வைச்சிருக்கிறன்.”

“அம்மா, எனக்காகச் சமைக்கவேண்டாமெண்டு உனக்கு எத்தினை நாள்ச் சொன்னனான்?”

“உன்ரை அம்மா சமைக்கிறதும்,

காம்புக்கை சமைக்கிறதும் ஒண்டேயடா?. போராட வெளிக்கிட்டிறியள். வடிவாச் சாப்பிடவேணும். அப்பதான் தமிழீழம் கெதியாக் கிடைக்கும்." என்றான் சண்முகலிங்கன்.

"அம்மாவுக்கு விசர்." என்ற குமார் "சீனி ஐயா, ஜீப்புக்கை இருக்கிறவை இங்கை வந்தோண்ணை அவைக்கு முன்னுக்கு டேய், புடேய் போட்டு என்னோடை கதைக்காதையுங்கோ. நான் இப்ப லெப்டினன்ட் என்றபோது சீனி ஐயாவுக்கு நடுக்கம் ஏற்பட்டது.

ஜீப்பிலே வந்த ஏனைய போராளிகளையும் சாப்பிட அழைக்கக் குமார் சென்றபோது, சண்முகலிங்கம் அவனுக்குப் பின்னே சென்று "தம்பி உன்னோடை முக்கியமான விஷயமொண்டு கதைக்கவேணும். கொம்மாவுக்கு முன்னாலை கதைக்கமுடியாது. நீ போகேக்க நானும் உன்னோடை வாறன்." என அவன் காதுக்குள் இரகசியமாகச் சொன்னார்.

"ஓம், ஓம். காம்புக்கை போய் வடிவாக் கதைப்பம்."

அவர்கள் காக்கி உடைகளுடன். ஆனால் ஓர் சிரமமும் இல்லாமல் சப்பாணி கட்டியிருந்து சாப்பிடத் தொடங்கினார்கள். பொடியள் அவதியாகச் சாப்பிட்டபோதும், அவர்களது உதடுகளில் ரசம் வழிந்தது.

காம்பினை நோக்கி ஜீப் வேகமாக ஓடிக்கொண்டிருந்தது.

"என்ன சீனி ஐயா, கதைக்காம இருக்கிறியள்?"

"தனியாத்தான் நான் உன்னோடை கதைக்கவேணும்."

"ஜீப்புக்குள்ள ஆக்கள் இருக்கினமெண்டு யோசிக்கிறியள் போல. சமூகப் பிரச்சினையெண்டா எல்லாருக்கும் தானை. விஷயத்தைச் சொல்லுங்கோ, அவையளும் ஏதும் ஐடியாக்களைச் சொல்லுவினம்."

மிரட்சியுடன் பெடியர்களைப் பார்த்தார் சண்முகலிங்கம்.

"தம்பியள், உவள் குமுதினி ஒரு நல்ல பொட்டை, அடக்க ஒடுக்கமானவள். வேலியாலை எட்டிப் பாக்கும் பொட்டையுமில்லை. எங்கையோ வம்பிலை பிறந்தது ஒண்டு அவளைக் கெடுத்துப் போட்டுது."

"ஓமோம், எங்களுக்கும் தெரியும்."

"அவள் பாவம். கற்பழிச்சவனைப் பிடிச்சு தண்டனை குடுத்தமெண்டா, அவளுக்கு ஒரு நியாயம் வழங்கினது போலவும் இருக்கும். அதோடை உங்கடை இயக்கத்துக்கு அரசியல் லாபமும் இருக்கு"

"அரசியல் லாபமா?" அனைத்துப் பெடியன்களின் வாய்களும் திறபட்டன.

"நீங்கள் இயக்கப் பெடியன்கள். இப்ப உங்கட இயக்கத்துக்கு எங்கடை பகுதியிலைதான் நல்ல செல்வாக்கு. கற்பழிச்சவனைப் பிடிச்சு தண்டனை குடுத்தியள் எண்டா, யோசிச்சுப் பாருங்கோ. உங்கடை இயக்கம் சிவில் நிர்வாகத்தையுமெல்லே நடத்தும். பேந்து ஆக்கள் உங்களிட்டைத்தான் எதுக்கும் வருவினம்."

"அண்ணை, அது விளங்குது. ஆனா அவனைக் கண்டுபிடிக்கவெல்லவோ வேணும்."

"அண்ணை, ஊருக்கை நீங்கள் நல்லாத் தெரிஞ்சவர். உங்களுக்குச் சாடை மாடையாகவேணும் ஆர் இதைச் செய்திருப்பினம் எண்டது தெரியவரும். ஆளைக் காட்டித் தந்தா வடிவான வட்டப் பொட்டொண்டு வச்சுவிடுவம்." என்றான் ராசு. அவனை யம ராசு என்றும் இயக்கத்துள் அழைப்பதுண்டு.

விவகாரம் சூடு பிடிக்கத் தொடங்கியது.

"தம்பிமார், இந்தப் பிரச்சினையிலை நான் உங்களுக்கு உதவத் தயாரா இருக்கிறன். ஆனா நான்தான் காட்டிக் குடுத்தனான் எண்ட விஷயம் தெரியவே கூடாது."

"உங்களுக்கு அப்ப ஆளைத் தெரியும்தான்."

"தம்பி தெரியும் எண்டு சொல்லவேணாம். ஆனா ரெண்டு மூண்டு பேரிலை சந்தேகம்."

"அப்ப அவையளைப் பிடிச்சுத் தட்டவேண்டியதுதானே! பிறகெதுக்கு தலையைப் போட்டு உடைச்சுக் கொண்டிருக்க வேணும்?"

குமார் குறுக்கிட்டான்.

"சீனி ஐயா சொல்லிறதிலையும் ஞாயமிருக்கு. அவர் இந்தப் பிரச்சினையிலை தலையைப் போட்டாரெண்டு தெரியாமலிருக்கிறது நல்லது. இன்னுமொண்டு, எங்கடை இயக்கத்துக்கு இதில லாபம் இருக்கிறதாலை இதை நாங்க ரகசியமாகச் செய்யக் கூடாது."

"தம்பி குமார், கொம்மாவிட்டை நான் இதுக்கை தலையைப் போட்டனான் எண்டு மறந்தும் சொல்லிப் போடாதை. பிறகு வீட்டுப் பக்கம் என்னை வரவும் விடமாட்டா."

> "அண்ணை, ஊருக்கை நீங்கள் நல்லாத் தெரிஞ்சவர். உங்களுக்குச் சாடை மாடையாகவேணும் ஆர் இதைச் செய்திருப்பினம் எண்டது தெரியவரும். ஆளைக் காட்டித் தந்தா வடிவான வட்டப் பொட்டொண்டு வச்சுவிடுவம்." என்றான் ராசு. அவனை யம ராசு என்றும் இயக்கத்துள் அழைப்பதுண்டு.

"நீங்கள் ஒண்டுக்கும் யோசியாதையுங்கோ. ஊருக்குள்ள எல்லா ஆம்பிளையளையும் வரிசையில கொண்டுவந்து நிப்பாட்டிட்டு உங்களுக்கு தலையை ஆட்டச் சொல்வம்"

"நல்ல யோசினைதான். அப்ப நான் இறங்கிறன். நிப்பாட்டுங்கோ."

"காம்புக்கு வாருங்கோ."

ஓர் சிறிய பெடியன் சொன்னான்.

"தம்பி, அங்கை வாறதுக்கு முன்னம் எல்லாம் தெரிஞ்சிட்டுது. இதிலை இறக்கிறன்."

"இதிலையோ உங்கடை வீடு."

"இல்லை" என்றான் குமார்.

"உங்கடை வீட்டுக்கு முன்னாலை இறக்கி விடுறம்."

"உங்களோடை என்னைக் கண்டா சில ஆக்கள் உண்மையை மறைப்பினம்தானை. நான் சும்மாத் திரிஞ்சாதான் உண்மை தெரியும்." என்று அவர் இறங்கிக் கொண்டார்.

வெள்ளிக்கிழமை பத்து மணிக்கிடையில் கற்பழித்தவனைக் கண்டு பிடித்து, அவனுக்குத் தூக்குத் தண்டனையும் கொடுக்கப்படும். குமுதினியிடம் சொன்னது இயக்கம்.

"ஆர்? ஆர்?" பரபரப்புடன் கேட்டாள் அவள்.

"அது வெள்ளிக்கிழமைதான் தெரியவரும். தலையாட்டிதான் ஆளைக் காட்டும்."

"ஆர் அந்தத் தலையாட்டி?"

"தலையாட்டி ஆரெண்டு சொன்னா நாங்கள் குற்றங்களை எப்பிடிக் கண்டு

பிடிக்கிறது? அது ஆரெண்ட ரகசியம் எங்கடை தலைவருக்கு மட்டும்தான் தெரியும்."

அன்றுதான் வெள்ளிக்கிழமை. காலை ஆறு மணி. குமுதினி தன் உடல் முழுவதையும் தேய் தேய் என்று தேய்த்து முழுகினாள். அனைத்து அழுக்குகளையும் கழுவித் தள்ளும் அவதி. சூரிய ஒளியிலே அகப்பைக் காம்பொன்றினால் தனது நீழ் கூந்தலில் அலைந்த நீரைத் துடைத்தாள்.

இயக்கம் வந்தது. விறுவிறுவென்று கூந்தலை முடித்துக் கட்டினாள். எதுவும் பேசவில்லை. ஜீப்பில் அவள் ஏறினாள்.

எட்டு முப்பது.

முருகன் கோவில் முன் வீதியில் அங்கு வாழும் அனைத்து ஆண்களும் நின்றார்கள். கோவிலுக்கு முன் வழங்கப்படும் நீதி கடவுளின் நீதி என்பது இயக்கத்தின் கொள்கை. எவரையும் வலை போட்டுத் தேடவேண்டிய அவசியம் இயக்கத்திற்கு இருக்கவில்லை. மூன்று நாள்களின் முன்பே நோட்டீஸ் விநியோகிக்கப்பட்டுவிட்டது. அதற்குத் தலை பணியாதோரிற்கு என்ன நடக்கும் என்பது நன்றாகவே தெரியும்.

சரியாக ஒன்பதுக்கு ஐந்து நிமிடங்கள் இருக்கும்போது ஜீப் வந்தது. முகமூடி அணிந்திருந்த தலையாட்டியும், குமுதினியும் இயக்கப் பொடியன்களுடன் இறங்கினார்கள். தன்னைக் கெடுத்த முகமூடியை அறியாத குமுதினி தன்னோடு வந்த முகமூடியையும் அறியாள். அறியவேண்டும் என்ற விருப்பு அவளிடம் தோன்றவில்லை.

பத்து மணிக்கு AK47 பேசத் தொடங்கினான்.

"அவங்க எங்கடை சமூகத்தில தோன்றிய புல்லுருவியள். இவங்களைக் களையெடுக்கவேண்டும், இவங்களுக்குப் பகிரங்கமாகத் தண்டனை கொடுக்கவேண்டும். அப்பதான் இது மற்றவங்களுக்கு ஒரு பாடமா இருக்கும். நாங்க விசாரணையை நடத்திவிட்டம். இப்ப தலையாட்டியோடை வந்திருக்கிறம். அவன்தான் நீதிபதி. வாழ்க எங்கடை இயக்கம். வளர்க தமிழ் இனம். வெல்க தமிழீழப் போராட்டம்."

"குமுதினி எங்கடை சகோதரி. அவ முகமூடி போட்ட ஒருவனாலை கற்பழிக்கப்பட்டது கொடுமையிலும் கொடுமை. எங்கடை புனிதமான போரை மாசு படுத்திறத்துக்கு சமூக விரோதியள் முனையிறாங்கள். அவங்க எங்கடை சமூகத்தில தோன்றிய புல்லுருவியள். இவங்களைக் களையெடுக்கவேண்டும், இவங்களுக்குப் பகிரங்கமாகத் தண்டனை கொடுக்கவேண்டும். அப்பதான் இது மற்றவங்களுக்கு ஒரு பாடமா இருக்கும். நாங்க விசாரணையை நடத்திவிட்டம். இப்ப தலையாட்டியோடை வந்திருக்கிறம். அவன்தான் நீதிபதி. வாழ்க எங்கடை இயக்கம். வளர்க தமிழ் இனம். வெல்க தமிழீழப் போராட்டம்."

பேச்சு முடிந்ததும் "தலையாட்டி" கற்பழித்தவனைக் காட்டும் படலம் தொடங்கியது.

முதலாவது தரிசனம் ஓர் பதினாறு வயதுப் பெடியன் மீது.

"உவன் என்ரை நாய் ராமுவுக்குக் கல்லாலை எறிஞ்சவன்தான். பாவம். விடுவம்."

தலையாட்டி நகர்கின்றான்.

"வயித்திலிங்கண்ணை நல்ல மனிசன். ஆறு மாதத்துக்கு முந்தி எனக்குத் தந்த ஐநூறு ரூபாயை இன்னும் கேக்காமலிருக்கிறார்."

"தம்பிப்பிள்ளை, குடியெண்டாக் காணும். பாரன் கண்ணை. உந்த வெள்ளனவே சிவந்துபோய்க் கிடக்கு."

"முத்தையா! உந்த வயதிலை உவருக்கு ஒரு ரெண்டாம்தாரம். ஆனாலும் அவள் சுதியான சரக்குதான். உவனைத் தட்டினா அவளை எப்பிடியாவது கீப்பா வைச்சிருக்கலாம்தான். விடுவம். கெதியிலை தலையைப் போடுவான் போல இருக்குது."

ராஜலிங்கத்தைப் பார்த்ததும் தலையாட்டிக்கு விரோதம் வந்தது. இரண்டு கிழமைக்கு முன்னம்தான் சுலோசனாவுக்குத் தாலி கட்டியவன். எங்கை இருந்துதான் அந்தக் கிளியை கொத்திக் கொண்டுவந்தவன்? மணவறையில் வைத்தே சுலோசனாவை சண்முகலிங்கத்தின் நிர்வாணமாக்கிப் பார்த்து வெறித்து அடங்கியது.

வேலுப்பிள்ளை.

.....

ராஜன்.

.....

சிவானந்தன்.

"ஐயம்பிள்ளை. உவன்தான் உதிலை நிக்கிறவங்களிலை படு வேசைமோன்" என தனக்குள் கத்திக்கொண்டான் சண்முகலிங்கம்.

ஊரிலே ஐயம்பிள்ளை மரியாதைக்குரியவர். வயது 50 க்கு மேல் என்பதை யாவரும் நம்பமாட்டார்கள். உழைத்து உருகேறிய உடல். துள்ளும் புஜங்கள். அவரை எல்லோரும் "தோழர்" என்றே அழைப்பார்கள். மீன்பிடித் தொழில். "அவரிட்டைத்தான் மீன் மலிவு" என்று அனைத்துப் பெண்களும் அவரோடு ஒட்டு. இந்தச் செல்வாக்கு அவருக்குப் பகைவர்களையும் உருவாக்கியது என்பதை அவர் அறியார். ஆம், சண்முகலிங்கமும் அவனது பகைவன்.

கடைகெட்ட வேசைமோன். மீனும் புடிச்சுக்கொண்டு கம்யூனிசமும் பேசுறானாம். என்ரை திருவிழா உந்த முருகன் கோவிலுக்கை நடக்கேக்கை உவன் அந்தப் பக்கம் வந்தவன். நானும் வஞ்சகம் இல்லாமை உவனிட்டைத் திருநீறை நீட்டினன். அதுக்கவன் "ஆக்களுக்கு திருநீறு குடுக்கிறதுக்கு முதல், உன்ரை கடத்தல் வேலையை நிப்பாட்டிட்டு மனுசனா மாறி உடம்பை வருத்தி உழையும்" எண்டு ஆக்களுக்கு முன்னாலை சொன்னவன். அண்டைக்கு என்ரை வெட்டி உரிஞ்சது போலதான். எளிய கீழ்சாதி நாய். உவருக்கு ஒரு கம்யூனிஸப் பூனாவும் வேண்டிக் கிடக்கே! உவங்களையெல்லாம் விட்டு வைக்கக் கூடாது. பார். நெத்தியிலை விபூதி பூசமாட்டான். இண்டைக்கு ஆட்டி விடுறன். கொண்டுபோய் நல்ல பொட்டா வைச்சு விடட்டும்."

ஐயம்பிள்ளையின் முன் தலை ஆடியது.

சனிக்கிழமை விடியல்.

லைட் போஸ்ட்டில், விகாரம் செய்யப்பட்ட நிலையில் பிணம் ஒன்று தொங்குகின்றதாம்.

பகலில், பலர் பார்த்திருக்க முருகன் கோவில் வீதியில் தான் மீண்டும் கற்பழிக்கப்பட்டது போன்ற அவதியில் குமுதினி திடுக்கிட்டு விழிக்கின்றாள்.

"ஐயம்பிள்ளைக்கு நடந்த அநீதிக்கு ஒரு முடிவு கட்டுவன்" என்று சபதமெடுத்த ஒருவனின் முகத்தில் சூரியக் கதிர்கள் விழுந்தன.

அந்த வேளையில் நீதித் தேவதை பொட்டையாகி நின்றாள்.

(பொட்டை என்பதின் அர்த்தம் குருடு.)




# சைவத்தை விழுங்கப் பார்க்கும் கிறித்துவம், சுமார்த்த, இந்துத்துவப் பார்ப்பனியம்

இங்கான (தமிழகத்ததான), அங்கான (வட இந்தியாவினதான), உங்கான (ஈழத்ததான, இலங்கையதான) எனவே. சைவம்,பௌத்தம் இரண்டையுமே இவ்வாறே பாவிக்கலாம். தொகை வகை விரி எனவிரித்துப் பேச இங்கேஇடமில்லை.

இந்தியாவின் தலைமை அதிகாரமாக வேதமே வீற்றிருக்கின்றது. அங்கான இறை வேதமே. எனவே நாத்திகம் என்றால் கடவுள் மறுப்பன்று, மாறாக

வேதமறுப்பே. வேதத்தை மறுத்தலால் சைவமும் வேதக்கணக்கில் நாத்திகமே. இந்துமத வெளியில் இறைமறுப்பாளர்க்கும் இடமுண்டு. வேதமறுப்பாளரும் விவாதிப்போரும் "அலகை"யா வைக்கப்படுப!

இந்தியாவின் தலைமை அதிகாரமாக வேதமே கோலோச்சி வருகின்றது.

இந்தியா - "வேதங்களின் நாடு" என நூல் எழுதினார் கேரளத்து இ.எம்.எஸ். நம்பூதிரிபாடு.

"இந்தியா - சித்த(ர்) பூமி"(தி லேண்ட் ஆப் சித்) என எதிர்க்குரல் நூல் கொடுத்தார் காசிப்பாண்டியன் இ.ஆ.ப.,

உரையாசிரியர், விஞ்ஞானபூர்வ ஆய்வாளர், விமர்சகர், பேராசிரியர், மார்க்சியர் எனப்படுவோர் வரைக்கும் வேத மேலாண்மை அதிகாரத்துக்கும், தர்மசாத்திரங்களுக்கும் முன் மண்டியிட்டுக் கிடக்கும் பேரவலக் காட்சிகளே இங்கே கண்கூடாம்:

"வேதமே சுருதி. அறத்துணிபுதான் ஸ்மிருதி. இவற்றை வாதிட்டு சோதித்தறிய முயலக்கூடாது. இந்நூல்களின் விதிப்படி ஒழுகுதலன்றி உயிர்களுக்கு வேறு கடமைகள் எதுவும் இல்லை. இவற்றைக் கல்விநூல் அறிவாலும் தர்க்கவாதத் திறமையாலும் சோதித்து அவமதிப்பவன் எவனாயினும் அவன் நாத்திகன் ஆவான். அவன் சமுதாயத்திலிருந்து விலக்கப்பட வேண்டியவன்"-
மநுதர்மம்- கல்வி 7 -8.

"அறமாவது மநு முதலிய நூல்களில் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலும் ஆம்: அஃது ஒழுக்கம், வழக்கு, தண்டம் என மூவகைப்படும்"-
பரிமேலழகர்(உரைப்பாயிரம்)

"வேதத்தை விட்ட அறமில்லை வேதத்தில ஓதத் தகுமறம் எல் லாமுள தர்க்க வாதத்தை விட்டு மதிஞர் வளமுற்ற வேதத்தை ஓதியே வீடுபெற் றார்களே"-
திருமூலர் (திருமந்திரம்)

"ஏதுக்களாலும் எடுத்தமொழியாலும் மிக்குச்
சோதிக்க வேண்டா சுடர்விட்டுளான் எங்கள் சோதி" -
சம்பந்தர்(தேவாரம்)

"மனுஸ்மிருதி பாரதநாடு முழுவதிலும் உள்ள இந்து சமயத்தினர் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது"-
எஸ்.வையாபுரிப்பிள்ளை (தமிழாராய்ச்சியின் வளர்ச்சி)

"சிலநூல்கள் இலக்கிய விமர்சனத்துக்கு அப்பாற்பட்டவை. வேதங்கள், உபநிஷத்துகள், பகவத்கீதை, சீக்கிய கிரந்தங்கள் இவை இந்திய உதாரணம். இந்தியாவிற்கு அப்பாற்பட்ட உதாரணங்கள் என்றால் கொரான், பைபிள் முதலியவற்றைச் சொல்லலாம்"-
கநாசு (உலக இலக்கியம்)

"அரசியலில் கூட. எத்தனையோ சித்தாந்தங்கள் கொள்கைகள் என்று (இந்தியாவில் ) ஆட்சி செலுத்தினால்கூட அவ்வளவும் அந்நிய மண்ணில் விளைந்தவை. இப்படிப் பார்க்கும் போது ஆர்எஸ்எஸ் சித்தாந்தம்தான் நமது மண்ணில் விளைந்த சித்தாந்தமாகப்படுகிறது" - கநாசு (தினமணி, 7.10.1987)

"ஸ்வாமியில்லை என்றுசொல்லிக் கொண்டே கூட ஆஸ்திகர்களாக இருக்கமுடியும்.

ஆஸ்திகம் என்றால் வேததத்தில் நம்பிக்கை இருப்பது என்றுதான் அர்த்தம்

வைதிக வழக்கை ஆட்சேபிப்பதுதான் நாத்திகம் என்பதே ஞானசம்பந்தன் கொள்கையாகவும்

## பொதிகைச்சித்தர்

> "ஈழத்தமிழ்ப் பண்பாட்டு முகம்: இன்றைக்குள்ள ஈழத்துச்சூழலில் நாவலரைப்போன்று பண்பாட்டு அரசியலை முன்னெடுக்கக்கூடிய அரசியல் சக்திகள் தமிழர் தரப்புக்கு அவசியமாகின்றனர். ஆனால், துரதிர்ஷ்ட வசமாக அப்படியொரு அறிவுச்சமூகத்தின் தொடர்ச்சியை அந்நிலம் பேண மறந்துவிட்டது. மரபுகளையும் சமயங்களையும் அறவே தவிர்த்துவிட்டு மேற்குலகக் கோட்பாடுகளை நமது பண்பாட்டுக்குள் பிரதியிட்டுப் பார்க்கும் பரிதாபம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. நாவலரின் தீண்டாமைக் கருத்துகளை வெறுத்து ஒதுக்கும் அதே வேளையில், அவரது "சைவமும் தமிழும்" என்கிற இந்தக் கோஷம் இருபத்தோராம் நூற்றாண்டிலும் ஈழத்தமிழர்க்குத் தேவைப்படுகிறது என்பதை எவராலும் மறுக்க இயலாது."- அகரமுதல்வன் (தமிழ் இந்து -18.12.2022)

இருந்திருக்கிறது.

ஈசுவரபக்தி இல்லாமல் இருப்பதுகூட இல்லை- சங்கராச்சாரியார் (தெய்வத்தின் குரல் - தொகுதி : 7)

"வேதத்தை நம்புபவர் ஆத்திகர் என்றனர். அதன் மேலாண்மையை ஏற்க மறுப்பவர்களை நாத்திகர் என்றனர்.

"நாத்திகர் என்போர் வேதத்தின் மேலாண்மையை மறுப்பவர்கள் என்கிறார் மநு.

கடவுள் ஏற்பும், மறுப்பும் ஆத்திகத்துடனோ, நாத்திகத்துடனோ தொன்மை இந்தியாவில் சம்பந்தப்பட்டது இல்லை"

"இந்தியாவின் தொன்மைத் தத்துவங்களில், முற்றிலுமாகக் கடவுளை மறுத்த தத்துவங்கள் கூட ஆத்திக நிலைப்பாட்டில் ஏற்கப்பட்டிருப்பதைக் காணமுடியும். மாறாகக் கடவுளை ஏற்ற சைவ, பசுபதித் தத்துவங்கள் பெரும்பாலான மக்களால் பின்பற்றப்பட்ட போதும் அர்த்தமற்றவை என ஒதுக்கப்பட்டன. அதற்குக் காரணம் அவை வேதத்தின் தலைமையை ஏற்கவில்லை என்பதே."- உமேஷ் பட்ரி (சமூக. விஞ்ஞானம் -செப் 2007).

"நாத்திகம் என்ற சொல்லுக்குக் கடவுள் இல்லை என்று பொருளில்லை. வடமொழி ஆதாரங்களில் பார்த்தபடி சொல்கிறேன். நாத்திகன் என்றால் புராண, இதிகாசங்களை, வேதங்களை, சாஸ்திரங்களை, தத்துவங்களைப் பகுத்தறிவினாலே விவகாரம் விவாதம் பண்ணுகிறவன் என்று அர்த்தம். இந்த விவாதம் ஆரிய புராண இதிகாசங்களைப் பெரிதும் பாதிப்பதால் யார் ஒருவர் தங்களுடைய ஆதாரங்களில் கைவைக்கிறார்களோ அவர்களை நாஸ்திகன் எனச் சொல்லிவிட்டார்கள். இதிலிருந்து என்ன தெரிகிறது. கடவுள் நம்பிக்கைக்கும் இதற்கும் சம்பந்தமில்லே. ஆரிய கடவுள்களையும், ஆரிய சாஸ்திரங்களையும், மூடநம்பிக்கை களையும் பகுத்தறிவுடன் எதிர்த்துக் கேட்டால் நீ நாஸ்திகன் அவ்வளவுதான். அந்தவகையில் என்னை நாஸ்திகன் என்று தைரியமாகச் சொல்லிக்கொள்கிறேன். - ஈ.வெ.ராமசாமி.

இதிலவர் விவகாரங்களை விவாதம் பண்ணுகிறவன் என்கின்றாரே அவனையே, "வேதவிரோத தர்க்க வியவஹாரிண" என்கின்றது வேதாந்தத்தரப்பு. அவனை நோக்கியே, "சோதிக்க வேண்டா சுடர் விட்டுளான் எங்கள் சோதி" என்கின்றது சைவசித்தாந்தத் தரப்பும்.

பெரியார் வாசிப்பின் அரசியலைத் துல்லியமாகக் காட்டுகின்றது பெரியாரின் இப்பார்வை.

"சிந்தித்தால், தர்க்கித்தால், சந்தேகித்தால் பாவம் என்று அழுத்தி வைக்கப்பட்டிருந்தார்கள். எனவேதான் அறிவு வளரவில்லை. சமுதாயம் மேலோங்கவில்லை."- ஈ.வெ.ராமசாமி(விடுதலை12-1-1961)

"ஈழத்தமிழ்ப் பண்பாட்டு முகம்: இன்றைக்குள்ள ஈழத்துச்சூழலில் நாவலரைப்போன்று பண்பாட்டு அரசியலை முன்னெடுக்கக்கூடிய அரசியல் சக்திகள் தமிழர் தரப்புக்கு அவசியமாகின்றனர். ஆனால், துரதிர்ஷ்ட வசமாக அப்படியொரு அறிவுச்சமூகத்தின் தொடர்ச்சியை அந்நிலம் பேண மறந்துவிட்டது. மரபுகளையும் சமயங்களையும் அறவே தவிர்த்துவிட்டு மேற்குலகக் கோட்பாடுகளை நமது பண்பாட்டுக்குள் பிரதியிட்டுப் பார்க்கும் பரிதாபம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. நாவலரின் தீண்டாமைக் கருத்துகளை வெறுத்து ஒதுக்கும் அதே வேளையில்,அவரது "சைவமும் தமிழும்" என்கிற இந்தக் கோஷம் இருபத்தோராம் நூற்றாண்டிலும் ஈழத்தமிழர்க்குத் தேவைப்படுகிறது என்பதை எவராலும் மறுக்க இயலாது."- அகரமுதல்வன் (தமிழ் இந்து -18.12.2022)

இத்தொடர்பில் அழகியல், பண்பாட்டியலின் பேரிலான அடிப்படைவாத மத அரசியலில் "வேதாந்தத் தல" கநாசு "சித்தாந்தத் தல" ஆறுமுக நாவலர் பாணியிலான இங்கு "நாரோயல் மடத் தல" ஆசான் ஜெயமோகன் அணியில் அகரமுதல்வனும், தீபச்செல்வனும் ஏலவே காந்தளகம் சச்சியும், காசி ஆனந்தனும் "மோடி பஜன்" பாடி "அனுமார் சேனை".

ஆகமச்சைவ அடிப்படைவாத நோக்கில்: கிறித்துவம் சைவத்தைத் தின்று செரித்துவிடாமல்...
“ஆங்கில ஆட்சியாளர்களிடம் அதிகாரம் இருந்தது. பாதிரியார்களிடம் கிறித்துவம் என்னும் தத்துவம் இருந்தது.அதிகாரமும் தத்துவமும் சேர்ந்து ஐரோப்பிய நவீன வாழ்க்கையை இலங்கைச் சைவர்களுக்குக் காட்டிக் கொண்டிருந்தது. அது, ஏற்கெனவே கிறித்துவம் சைவத்தைத் தின்று செரித்துவிடும் என்பதான கணிப்புக்கு வந்திருந்த ஆறுமுக நாவலர்க்கு (ஆ.நா.) அதிர்ச்சியை உண்டாக்கியது. ஆட்சியாளர்களின் அதிகாரத்தைவிட பாதிரியார்களின் தத்துவம் அபாயகரமானது என்பது ஆ.நா.வின் நம்பிக்கை.

அர்ஜூன் சம்பத் , முள்ளிவாய்க்கால் முற்றத்தில் அண்ணன் “நின்றசீர் நெடுமாறன்” எனவாங்கும் ஈங்கு இந்துத்துவ அடிப்படை மதவாத சக்திகளுடன் கைகோர்க்கலாயினர்.

தற்போது இந்தியாவில் ஒரு நாடு,ஒரு மொழி, ஒரே கல்விமுறை, ஒரே மதம் என்ற நிலையை நோக்கி அரசியல் நகர்ந்து கொண்டுள்ளது. இந்த அரசியலை எதிர்கொள்ள நமக்கு வள்ளலாரும், மணிமேகலையின் - பௌத்த உரையாடலும், திருக்குறளும் பயன்படக் கூடும் -
ஆ.கிருட்டிணன் (மணிமேகலை தமிழ் அறம்)

ஆகமச்சைவ அடிப்படைவாத நோக்கில்: கிறித்துவம் சைவத்தைத் தின்று செரித்துவிடாமல்...
“ஆங்கில ஆட்சியாளர்களிடம் அதிகாரம் இருந்தது. பாதிரியார்களிடம் கிறித்துவம் என்னும் தத்துவம் இருந்தது.அதிகாரமும் தத்துவமும் சேர்ந்து ஐரோப்பிய நவீன வாழ்க்கையை இலங்கைச் சைவர்களுக்குக் காட்டிக் கொண்டிருந்தது. அது, ஏற்கெனவே கிறித்துவம் சைவத்தைத் தின்று செரித்துவிடும் என்பதான கணிப்புக்கு வந்திருந்த ஆறுமுக நாவலர்க்கு (ஆ.நா.) அதிர்ச்சியை உண்டாக்கியது. ஆட்சியாளர்களின் அதிகாரத்தைவிட பாதிரியார்களின் தத்துவம் அபாயகரமானது என்பது ஆ.நா.வின் நம்பிக்கை.

அதனாலேயே அவர் தம் சமயஞ்சார் சமூக மேன்மைக்கான வேலையை மிகுந்த எச்சரிக்கையோடும் கறாரான திட்டமிடலோடும் வடிவமைத்துக் கொண்டார்.”

“அதற்காக மடாதிபதிகளையும் கல்வியாளர்களையும் புரவலர்களையும் தன்னோடே இருக்கும்படி பார்த்துக் கொண்டார்”

“ஆங்கிலேயர்களின் புதிய சட்டங்கள் தம்மைப் பாதித்து விடாத படிக்குத் தடுத்தாட மடாதிபதிகளுக்கு ஓர் ஆள் தேவைப்பட்ட போது அதே எண்ணத்தில் இருந்த ஆ.நா. அவர்களுக்குத் துணையாக்கப்பட்டார். மடாதிபதிகளோடு நட்பைத் தொடர விரும்பிய சமஸ்தானர்களும் சமய அபிமானமுள்ள செல்வந்தர்களும் ஆ.நா.வுக்கு உதவிகள் செய்தனர்” - ஞா.குருசாமி
(காக்கைச் சிறகினிலே - திச. 2022)

சைவ சமய ஆய்வெனும்போது பொத்தாம் பொதுவில் பொதுமைப்படுத்தி விடாமல் இத்தொடர்பில் இவ்வாறு விழுங்கப் பார்க்கும் வெவ்வேறு கதைகளை விதந்தோதிக் காணத்தலைப்படடால் அன்றி உட்கிடையான மெய்ம்மை புலப்படவே மாட்டாது.

“சைவசித்தாந்தத்தின் பிராமணச் சார்பின்மையை அதன் அடிப்படைக் கோட்பாட்டிலேயே காணலாம். ஸ்மார்த்தப் பிராமணர்கள் சங்கரரின் அத்வைத வியாக்கியானத்தை ஏற்றுக் கொள்பவர்கள். ஆனால் சைவசித்தாந்தாமோ மாயாவாதத்தை எதிர்த்துத் தான் உண்மையான சுத்தாத்துவிதமெனக் கொள்வது.”

“சைவ சித்தாந்தத்ததின் பெருநூலாகிய சிவஞான போதத்தைப் பிராமணரல்லாதாராகிய மெய்கண்டாரே எழுதினார்” -கார்த்திகேசு சிவத்தம்பி (தமிழிலக்கியத்தில் மதமும் மானுடமும்)

பார்ப்பனியம் விதிக்கும் வருணாசிரம தருமத்தை சித்தாந்த அஷ்டகத்தை எழுதிய பார்ப்பனரான உமாபதி சிவாச்சாரியார் போற்றவில்லை. அவரது நடத்தைகளை வெறுத்த தில்லை வாழந்தணர்களால் சமூகப்பிரஷ்டம் செய்யப்பட்டார் எனத் தொடர்வார்.

“பகவத்கீதை”யை கொலைநூல் என்று கூறும் சைவ,சமண நூல்கள்:

“நீலகேசி” கடவுள் வாழ்த்துப் பகுதியில் இருந்தும் ”சிவஞான சித்தியா”ரில் இருந்தும் பக்கங்களை “வருடிநகல்” இணைத்துள்ளார் பொவே. நீலகேசிப் பகுதியை மட்டும் அதன் செய்யுள் புணர்த்திய நடையைப் பிரித்துக் காண்போம்:
“திருமால் முதலிய ஏனைய கடவுளர் சொற்களும்
உயிர்கட்கு இடராக்கும் சொற்களே ஆதல் கண்ணன்
அருச்சுனனைக் கொலைமேற் செலுத்திய “பகவத்கீதை”
முதலியவற்றான் உணர்க. இனி கண்ணன் முதலியோர்
பிறரைக் காத்தற் பொருட்டுப் பிறர்க்குந் துன்பஞ்
செய்தவர் எனில் ஆறலைக் கள்வரும் பிறரைக் காத்தற்
பொருட்டே ஆறலைப்பார் ஆகலின் அதுவும் நல்வினை
எனப்படும் என்க.”-
“நீலகேசி”

“சிவஞான சித்தியா”ரில் இத்தகு பகுதி இடம்பெறல் குறித்த இன்னொரு பதிவையும் காண்க:

“கீதை வன்முறையை - போரைப் - பிரச்சாரம் செய்வது என்று கூறுவது புதுவதன்று. இதை ஒரு தத்துவமாகவே போதிக்கின்றது என்று சைவ சித்தாந்திகளும் கருதுகின்றனர். அருள்நந்திச் சிவாச்சாரியார் கூறுகிறார்:

“பார்த்தனார் இரதமேறிப் படைதனைப் பார்த்துச் சார்பைக்
கூர்த்த அம்பாலே கொன்று அரசாளேன் என்னத்
தேர்(த்)தனில் இருந்து மாயைசெய்து மால்கொள்ளச் செப்பும்
வார்த்தை நூல்ஆக்கிக் கொண்டாய் புரங்கொல் நூல் மதித்தி டாயே.”
- சிவஞான சித்தியார் பரபக்கம்

பகவத்கீதைக்கு இப்படி சைவசிந்தாந்திகளிடமிருந்து ஒரு தீவிரமான எதிர்ப்புக் கிளம்பி இருக்குமானால் அது இந்து சமயத்திற்குரிய ஒரு பொதுவான, புனிதமான பனுவல் என்று உரிமை கொண்டாட முடியாது. கீதை, சாதி (வருண) வேறுபாடுகளைப் போதிக்கிறது. அதே குரலில் அது போர் செய்யவும் தூண்டுகிறது. அப்படியானால் சாதி (சமய) முரண்பாடுகளுக்கும் வன்முறைக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறதோ?

அதிலென்ன சந்தேகம்? இன்றும் பார்க்கிறோம். நேற்றும் பார்த்தோம்.”
-தி.சு.நடராசன் (தமிழின் அடையாளம்)

தமிழகத்தைப் பொறுத்தவரை சைவத்தை விழுங்கப் பார்ப்போர் சுமார்த்தப்பார்ப்பனர் என இனங்கண்டு எடுத்துரைத்தவர் காசுபிள்ளை எனவும் எம்எல் (சட்டப்பயில்வுப் பட்டப் பெயர்) பிள்ளை எனவும் சுட்டப்பட்ட கா.சுப்பிரமணியனாரே.

இத்தொடர்பின் யாழ்ப்பாண நவாலியூர் ந.சி.கந்தையா பிள்ளையின் “இந்து சமய வரலாறு”( History of Hinduism) எனும் 1960 -இல் தமிழ்நாட்டில் வெளியான நூல் “விழுதுகள்” பதிப்பக வெளியீடாக 2003 - இல் இரண்டாம் பதிப்பாக வெளியிடப்பட்டது, அதிலிருந்து: “இந்து சமயம் எவ்வாறு தந்திரமாகத் தன்னை வளர்த்துக்கொண்டது என்பதை இந்நூல் விளக்குகிறது“.

“தமிழ்ச்சமூகத்தின் தேவையை ஒட்டி இந்நூல் வெளியிடப்படுகிறது. தமிழரின் சமயம் பற்றிய பல ஆய்வுகளும், விவாதங்களும் உருவாக வேண்டும். ஏனெனில், இந்துசமயம் தமிழரின் சமயமல்ல என்பதை நிறுவ வேண்டிய வரலாற்றுக்கட்டத்தில் இருக்கிறோம்.தமிழர் சமயம் இதுதான் என்று நிறுவப்பட்டு விட்டால் தமிழக மக்களுக்கு விடுதலை கிடைத்துவிடும் என்று அர்த்தமல்ல. இன்று இந்துத்துவாவின் பாசிசப் போக்கிற்கு எதிராக அது ஓர் ஆயுதமாகத் திகழவேண்டும் என்பதுதான்.”

“தமிழர் சமயம் இதுதான் என்பதை உறுதிசெய்துவிட்டால், அதுவும் இன்றைய சூழைலில் பாசிசத்தன்மை பெற்றுவிடும் என்பது சாத்தியமே. இருந்தாலும் இந்துத்துவத்தின் பாசிசத்திற்கு எதிராக, தமிழர் சமயத்தை மீட்டெடுக்க வேண்டியது அவசியமே. தமிழர் சமயம் எது என்பதைப் பற்றிய விவாதத்தை, ஆய்வை இந்நூலை வெளியிடுவதன் மூலம் மீண்டும் தொடங்கி வைக்கிறோம்”
- ராயன் (இ.ச.வ. நூலின் பதிப்புரை)

“இந்து” என்ற சொல் வழியாக சைவத்தை விழுங்கப் பார்க்கும் முயற்சி கடந்த ஒரு நூற்றாண்டுக் காலமாகவே தொடர்ந்து நடைபெற்று வருகிறது எனலாம்.

இந்தப் பின்னணியில் ந.சி.கந்தையா பிள்ளையின் நூல் இன்று மறுவாசிப்பிற்கு உரியதாகிவிட்டது. “இந்து” என்ற சொல்லை எந்தவிதத் தடையுணர்ச்சியும் இல்லாமல் ஆறுமுக நாவலர் தொடங்கி, கந்தையா பிள்ளை வரையிலான ஈழத்து அறிஞர்கள் பயன்படுத்தி உள்ளனர்.

ஆனால் தமிழ்நாட்டில் இந்து என்ற சொல் எதிர்முகாமைச் சார்ந்ததாகவே சைவர்களால் அடையாளங் காணப்பட்டு வருகின்றது. ஈழத்தில் பேரினவாதத்தை அடையாளப்படுத்தும் என்ற சொல்லிற்கு எதிராக இந்து என்ற சொல்லைச் சைவஅறிஞர்கள் பயன்படுத்தி வருகின்றனர். இங்கே இந்து என்ற சொல் ஸ்மார்த்தப் பார்ப்பனர்களின் ஆன்மிக அதிகாரத்தின் மறைமுகமான குறியீடாகப் பேணப்பட்டு வருகிறது. இந்த மறுவாசிப்புப் பின்னணியிலேயே இந்நூலை அணுகவேண்டும்.” - தொ.பரமசிவன்:
(இ.ச.வ.நூலின் கருத்துரை)

இத்தொடர்பில் குடந்தை துரையனார் அடிகள் கட்டமைக்க முயன்ற “திருவியன் மதியம்”. அயோத்திதாசப் பண்டிதர் கட்டமைக்க முயன்ற “தமிழ்ப்பௌத்தம்” என் ஆசிரியர் பேராசான் க.நெடுஞ்செழியன் மீட்டெடுக்க முயன்ற ஆசீவக அய்யனார் வழிபாட்டுச் சமயம் ஆகியவை பரிசீலிக்கத்தக்கன. நாங்கள் (தேவநேயச்சித்திரன், விரியூர் நன்முல்லை, தரங்கை பன்னீர்ச்செல்வன்,நான், அரணமுறுவல், அரிமாப்பாகன்)

“தமிழம்” என ஒரு மாந்தவியற் பொருள்முதலியச் சமயத்தைக் கட்டமைக்க முயன்றோம். பொய்யாய்ப் பழங் கனவாய்ப் போயிற்றது. தமிழர் சமயம் எனக்கட்டமைப்பதில் எனக்கு இற்றைப்படுத்திய நோக்கில் உடன்பாடில்லை. ஒற்றைப்படுத்தும் உருவாக்க முயலும் எதுவும் பாசிசமே. தமிழர் சமயமும் பன்மைத்துவமாகவே காணப்பட வேண்டும்.தமிழர் இறையியல், மெய்யியல் எனவாங்கே கண்டடைதலே என் பாடு. இத்தொடர்பில் இதற்குமேற் பேச இங்கே இடமில்லை.

தொகு மொத்த மீள் நோக்கில் கநாசுவின் வேதாந்தம், ஆ.நா.வின் ஆகமச்சைவ அடிப்படைவாதம் எனும் இரண்டன் விதேசியத்திற்கு எதிரதான சுதேசியப் பண்பாட்டு மீட்டெடுப்பு எனக் கதைப்பதெல்லாம் தந்திரமான இந்துயிச - இந்துத்துவ மீட்புவாதமே.

அங்கான இந்தியத் தலைமை

> **அங்கான இந்தியத் தலைமை அதிகாரமான வேதப்பார்ப்பனியத்தோடு உங்கான சைவப்புலிகள் சங்கமிப்பின் கட்டியங் கூறலே அகரமுதல்வனின் “தமிழ் இந்து”ச் சீதபேதி வார்த்தைப் போக்கு.**

> வடலூரின் ஞானவள்ளல் மெய்காண் முறையே என் ஞானத்தேட்ட நெறியியல். எதிரியின் மூலபலத்தையே குறி இலக்காகத் தாக்கித் தகர்ப்பாக்கம் நிகழ்த்துவதே பொதிகைச்சித்தர் ஈரோட்டுப் பாசறையில் கற்றுத் தேர்ந்த போர்முறை.
> "கருணையில் ஆட்சி கடுகி ஒழிகெனக் கடையினை விரித்த வடலூ ராரும் கறுப்புஞ் சிவப்பும் வெகுளிப் பொருளெனக் கலகங்கள் வகுத்த ஈரோட்டாரும் எங்குலப் பெருமை எங்கணுந் துலங்க மீட்டெடுத்திங்கே நாட்டிவிட்டோரே."
> பொதிகைச்சித்தர்.

அதிகாரமான வேதப்பார்ப்பனியத்தோடு உங்கான சைவப்புலிகள் சங்கமிப்பின் கட்டியங் கூறலே அகரமுதல்வனின் "தமிழ் இந்து"ச் சீதபேதி வார்த்தைப் போக்கு. ஞா.குருசாமியின் கட்டுரையை "காக்கைச்சிறகினிலே" வெளியிட்டதே- அதுவும் காத்திரமான பா.செயப்பிரகாசம் - க.நெடுஞ்செழியனார் நினைவேந்தற் பன்முக ஆவணப் பெறுபேறான சிறப்பிதழில் சூரியக் கரும்புள்ளியாகக் கண்டனத்திற்கு உரியதே.

சைவத்தை விழுங்கப் பார்க்கும் சுமார்த்தப் பார்ப்பனியக் கட்டவிழ்ப்பையும் தமிழகச்சமயங்களையும், வடலூரின் அருட்பெருஞ்சோதியையும் தவமறைந்தே புட்சிமிழ்க்கும் ஊரன் அடிகள் பேரன்கள் பொள்ளாச்சி மகாலிங்கப் பிறங்கடைகளால் கபளீகரம் செய்ய மடிதற்று முந்துறும் இந்துத்துவப்பார்ப்பனிய ஆக்டோபஸ் கட்டவிழ்ப்புகளும் இனித் தொடரும்.

ஒன்றே ஒன்றை மட்டும் வலியுறுத்திச் சுட்டிக்காட்டி இதனை முடிக்கின்றேன். ஞா.குருசாமி கட்டுரையில் ஆ.நா. கட்டமைக்கும் ஆகமச்சைவ அமலாக்க முறையியலைத் தான் ஏலவே இங்கே சங்கி இந்துத்துவப் பரிபாலனமாகக் கையாண்டு வரலாகின்றது.

"இந்தியக் குடிமை அமைப்புகள் சனாதனத்தை அடிப்படையாகக் கொண்டே கட்டப்பட்டுள்ளன. இதைத் தகர்ப்பதற்கே சனாதன வைதிக மரபிற்கு மாற்றாக அவைதிக மரபில் புத்தர், அம்பேத்கர், அயோத்திதாசர், தொல்.திருமா வளவன் போன்ற சமய, தத்துவ, அரசியல் மேதைகள் வரலாறு நெடுகிலும் எதிர்ச்சொல்லாடல்களை உருவாக்குகிறார்கள்.
- ரமேஷ் பிரேதன்

வடலூரின் ஞானவள்ளல் மெய்காண் முறையே என் ஞானத்தேட்ட நெறியியல். எதிரியின் மூலபலத்தையே குறி இலக்காகத் தாக்கித் தகர்ப்பாக்கம் நிகழ்த்துவதே பொதிகைச்சித்தர் ஈரோட்டுப் பாசறையில் கற்றுத் தேர்ந்த போர்முறை.

"கருணையில் ஆட்சி கடுகி ஒழிகெனக் கடையினை விரித்த வடலூ ராரும் கறுப்புஞ் சிவப்பும் வெகுளிப் பொருளெனக் கலகங்கள் வகுத்த ஈரோட்டாரும் எங்குலப் பெருமை எங்கணுந் துலங்க மீட்டெடுத்திங்கே நாட்டிவிட்டோரே."
பொதிகைச்சித்தர்.

அடிப்படை வாதங்கள் எதிரெதிராய்ப் பொருதாலும் அந்தரங்கத்துள் தம்முள் கைகோக்கும்.

வேதம் ஏருழும் பையனும் வாசிக்கக்கூடியதாக இருக்க வேண்டும் என்றவர் சீகன்பால்க். மாறாக,வேதப்புத்தகம் நீசப் பறையனால் தீண்டப்படக் கூடாதெனவும் பற்றுறுதி மட்டும் போதாது நாவலர் பாணியில் கிரியைகளும் அவசியம் என வலியுறுத்தியவரே வீரமாமுனிவருங் கூட. (ஆதாரம் :சச்சிதானந்தம் சுகிர்தராஜா கட்டுரை-காலச்சுவடு: 272 - ஆக. 2022)

"ஹிந்து மதத்தில புறவழியே நம்மள் அனாத ரென்ன போல் சஞ்சரிச்சு கிறிஸ்து மதத்தின் புறவழியே நம்மள் அனாத ரென்னபோல் சஞ்சரிச்சு
இந்து மதத்தின் புறவழியே
ஏதிலி போலவே நாமலஞ்சோம்
ஏசு மதத்தின் புறவழியே
ஏதிலி போலவே நாமலஞ்சோம்".
பொய்கையில் அப்பச்சன்

*அடையாள இயக்கம்: மீட்டுருவாக்கமும் சீர்திருத்தமும்:

அடையாள இயக்க
"மூன்றாம் வெளி"யில் மரபின்
"நீர்மநிலைக் குறிப்பான்"
செயல்பாடு - மீளாக்கம்

பின்னைக்காலனியச் சிந்தனையாளர்கள் அடையாள இயக்கங்களின் வெளியை "மூன்றாம் வெளி" ('Third Space') என வரையறுப்பதாக ஹோமிபாபாவின் கருத்தாக்கத்தை எடுத்துரைப்பார் ந.முத்துமோகன் (முதல்வெளி முதலீட்டிய சனநாயகத் தாராளவாத இயக்கவெளி இரண்டாம்வெளி பொதுவுடைமை வர்க்க இயக்க வெளி)

மீட்டுருவாக்கம், சீர்திருத்தம் என்றிரு திசைவழிகளில் ஒரே நேரத்தில் இயங்கலாகும் அடிப்படை இயக்கங்கள் எவ்வாறு அவற்றைக் கையாள நேர்கின்றது என்பதைப் பொறுத்தே பழைமையையோ,புதுமையையோ சார்ந்தனவாதல் கூடுமென்பாரவர்.

இத்தகு புரிதல்களுடன் இனி ஆறுமுகநாவலர், "மனோன்மணியம்" சுந்தரனார், அயோத்திதாசப் பண்டிதர், இராமலிங்க வள்ளலார், பெரியார், அனைவரும் மரபை எவ்வெவ்வாறு கையாண்டனர் எனக்காண்போம்:

"ஐரோப்பிய நவீனத்துவத்தின் ஒரு கூறாகவே பதிப்பும், நூல் பரவலாக்கமும்,அதனையொட்டிய நூல்பயில் முறையும் உருப்பெற்றது. பின்னர் இதன் வழியே தேசியம் என்ற கருத்தும் திரள்வடிவம் கொண்டது.
-கா. இரவிச்சந்திரன்("புறனடை"- ஜன.2012)

பதிப்பரசியலைப் பேசுமுகமாகத்

தலைப்பட்டபோதே அ.மார்க்ஸ், பொவேல்சாமி "இரண்டாயிரமாண்டு இலக்கியம் யாவும் இங்கே பார்ப்பன வெள்ளாளக் கருத்தியலே" என்னுங் கருத்தாக்கத்தை முன்வைத்தனர்.

அண்மையில் 5.10.2022 இராமலிங்கர் அகவை நாளன்று பேரா.அ.மார்க்ஸ் இட்டுள்ள பதிவில் அவருடைய இராமலிங்கர் குறித்த முந்தைய நோக்கில் மாற்றம் ஏற்பட்டுள்ளதை புத்தர், காந்தியார் உடன் வள்ளலாரையும் அகப்படுத்தி "மதங்கடந்த ஆன்மிகம்" என்ற பதிவு உணர்த்துகின்றது. மகிழ்ச்சி.

"ஆறுமுக நாவலர் என்ற சைவஅறிஞர் இலங்கையில் காலனிஆதிக்கம் மற்றும் கிறித்து மதப்பரப்பலுக்கு எதிராக யாழ்ப்பாணத் தமிழரிடையே ஒருங்கிணைத்த தமிழர் அடையாளமே வரலாற்றால் முந்தியது"-
ந.முத்துமோகன்
("அடையாள. உருவாக்கமும் அடையாள வேறுபாடுகளும்"- குருநானக் ஆய்வு வட்ட வெளியீடு, மதுரை பல்கலை)

"வைதிகமயமாக்கலில் முழுமையும் கவனம் கொண்டிருந்த நாவலர் வைதிகமே தங்களது மரபெனக்
கொண்டு, அதற்கு மாற்றாக இருந்த எதையும் ஏற்க மறுத்தார். இது உண்மை மரபை உணருதலின்றி இடையில் நுழைந்த ஒன்றினை மரபாகக் கைக்கொண்ட முயல்வு என்பதனை உணராமல் நுழைவையே மரபாகக் கொண்டமையால் ஏற்பட்ட விளைவாகும். பெரியாரும் இதை ஒட்டியே மரபு என்னும் சொல்லையே வெறுத்தாரெனலாம்."- ஜெ.அரங்கராஜன்
( புதிய ஆராய்ச்சி: 3 நவ-2009)

"வேதத்தின் உயர்வும் வடமொழி உயர்வும் உயர்த்திப் பிடிக்கப்பெற்றன. தேசிய சமஸ்கிருத இயக்கம் என்ற ஒன்றும் பிரம்மஞான சபையாரால் தொடங்கப்பெற்றது. பிராமணிய நலன்களைப் பிரதிபலித்த இச்சபையாருக்கு எதிராகச் சைவர்கள் கிளர்ந்து எழுந்தனர். பாளையங்கோட்டை, தூத்துக்குடி ஆகிய இடங்களில் சைவசபைகள் தொடங்கப் பெற்றன. இதே நேரத்தில் தான் வேதமல்லாத மரபுகளை முன்னிறுத்தி, பிராமண எதிர்ப்புடன் தாழ்த்தப்பட்டோர் தலைவரான அயோத்திதாசப்பண்டிதர் "திராவிட" என்ற சொல்லை சமூக அரசியல்தளத்தில் வலிமையாக முன்வைத்தார்.

திராவிட பாண்டியன் என்ற இதழை 1886 இல் தொடங்கி, ஜான் இரத்தினம் அடிகளாரை அதன் ஆசிரியராக்கினார். அதனை அடுத்து தமிழ்ச்சைவ முன்னோடிகளில் ஒருவரும், திருவனந்தபுரம் சைவப்பிரகாச சபையினைத் தொடங்கியவரும், தத்துவப் பேராசிரியருமான மனோன்மணியம் சுந்தரம்பிள்ளை சமூக அரசியல் தளத்தில் ஆரியம். திராவிடம் என்ற எதிர்வினை முன்வைத்ததோடு மனுநீதி திருக்குறள் என்ற சாத்திர எதிர்வினையும் வெளிப்படையாக முன்வைத்தார். இதற்கிடையில் பௌத்தமதத்தின் பக்கம் சார்ந்து, சென்னை மகாபோதி சபையில் பங்கெடுத்துக் கொண்டிருந்த அயோத்திதாசப் பண்டிதர் திருக்குறளைப் பௌத்தத்தை மதச்சார்போடு விளக்கத் தொடங்கினார்.

மறுபுறத்திலே: "ஆரியராலே இந்தியாவில் விக்கிரகாராதனை தடிப்புக் கொண்டது மாத்திரமல்ல, இந்துக்களுக்குள் சதுர்வர்ண பேதங்களும் பஞ்சமருக்குள் தொண்ணூற்று சாதி விகற்பங்களும் உற்பத்தியாகின. இத்யாதி வேதங்களுக்கு காரணபூதராயிருந்தவர் ஆரியரே." என்றும் எழுதிச் செல்கிறார்."
தொ.பரமசிவன் (வழித்தடங்கள்)

"தமிழ்ச் சைவ அடையாளத்திற்கும், தமிழ்ப் பௌத்த அடையாளத்திற்கும் இடையே இருந்த முரண், பெரியார் தமிழக அரசியலில் நுழைந்தபோது சமரசமாகிறது. பெரியாரின் "சுயமரியாதை இயக்கம்" அடையாள உருவாக்கத்தில் இருந்த மதப்பரிமாணத்தைப் பின்னுக்குத் தள்ளிவிட்டுத் திராவிட அடையாளத்தை எல்லாத் தமிழர்களுக்கும் இன்னும் பரந்துபட்டஅளவில் எல்லாத் தென்னிந்தியர்களுக்கும் முன்நிறுத்தியது. இந்தத் திராவிட அடையாள உருவாக்கத்தின் வெற்றிகரமான, நெகிழ்வான ஒரு குறிப்பான் (லக்லவ்) ஆனது.

பிராமண எதிர்ப்பும் பெரியாரின் செயல்பாடுகளால் தீவிரப்படுத்தப்பட்டது. காங்கிரஸ் எதிர்ப்பை முன்வைத்ததால் பெரியார் தமிழ் அடையாள இயக்கத்திற்கு அரசியல் பரிமாணத்தைத் தருகிறார். கீழிருந்து உருவாகும் இந்த அடையாளத்தைத் தேசியஅளவில் டாக்டர் அம்பேத்கர் கூர்மைப்படுத்துகிறார்.
-ந.முத்துமோகன்

"நாவலர் மேலிருந்து தொடங்கி அடித்தளமக்களை அந்நியப்படுத்தி, சைவத்தை ஆகமச்சைவமாகக் குறுக்கிக் கொள்ள, வள்ளலார் அதனை விரித்துச் செல்கிறார். தமிழ் அடையாள உருவாக்கத்தில் இராமலிங்கர் ஒரு மடைமாற்றத்தை ஏற்படுத்துகிறார்.
- ந.முத்துமோகன்
(தமிழினி மு.சு.இதழ்)

வள்ளலார் அருளியது மாற்றுநிலை. எதிர்ப்பு எதிர்ப்பினை வளர்க்கும் மாற்று ஒருநாள் இல்லை என்றாலும் சிந்தனையை ஊக்கும் உயர்வை அளிக்கும். உள்ளதை அழிக்காமல் அதன்மீது கட்டப்பெற்ற பெருநெறி ஜோதி வழிபாட்டு நெறி.
-இராம. இருசுப்பிள்ளை(வள்ளலார் வாழ்வும் வாக்கும்)

ஜெ.அரங்கராஜன் சுட்டிக்காட்டும், "உண்மைமரபினை உணருதலின்றி இடையில் நுழைந்த ஒன்றினை மரபாகக் கொண்டமுயல்வு" என்பது குறித்தும் அவரவர் மீட்பாக்கம் குறித்தும் இனிக் காண்போம்.

"தமிழ்ச் சைவ அடையாளத்திற்கும், தமிழ்ப் பௌத்த அடையாளத்திற்கும் இடையே இருந்த முரண், பெரியார் தமிழக அரசியலில் நுழைந்தபோது சமரசமாகிறது. பெரியாரின் "சுயமரியாதை இயக்கம்" அடையாள உருவாக்கத்தில் இருந்த மதப்பரிமாணத்தைப் பின்னுக்குத் தள்ளிவிட்டுத் திராவிட அடையாளத்தை எல்லாத் தமிழர்களுக்கும் இன்னும் பரந்துபட்டஅளவில் எல்லாத் தென்னிந்தியர்களுக்கும் முன்நிறுத்தியது. இந்தத் திராவிட அடையாள உருவாக்கத்தின் வெற்றிகரமான, நெகிழ்வான ஒரு குறிப்பான் (லக்லவ்) ஆனது.

### தமிழடையாள மீட்பு: நாவலரின் ஆகமச்சைவ மீட்பாக்கமும் வள்ளலாரின் ஆதித்தமிழற மீட்பாக்கமும்

"அடையாள இயக்கங்கள் மரபையும் வரலாற்றையும் முக்கிய உரைகற்களாகச் சுட்டுகின்றன என்பது தவிர, தமது மரபு குறித்த திட்டமான திட்டவட்டமான, முடிந்த ஒரு மதிப்பீடு அவற்றிடம்

ஒரு தேடலாகவே அமைகிறது. மரபு இவ்வகையில் திரவநிலையிலுள்ள ஒரு குறிப்பானாகச் (fluid signifier) செயல்படுகிறது எனலாம். மரபும் வரலாறும் மீண்டும் மீண்டும் மறுவாசிப்பிற்குரிய, மறுமதிப்பீட்டிற்குரிய, மறுபொருண்மை ஆக்கத்திற்குரிய திறந்த புத்தங்களாகவே அமைகின்றன.

- ந.முத்துமோகன்
(புதியஆராய்ச்சி : 3-ஏப். 2009)

இதனை டெல்யுஸின் "மீள்வரலியல்" (Repetition) கருத்தாக்கத்தோடும் ஒப்பிட்டுக் காண்பர்.

ஜெ.அரங்கராஜன்,"உண்மை மரபினை உணருதலின்றி இடையில் நுழைந்தஒன்றினை மரபாகக் கைக்கொண்ட முயல்வு" என்பது அவரவரைப் பொறுத்தவரையிலும் எவ்வெவ்வாறு அமைந்தியல்கின்றது எனக் காண்போம்:

ஆறுமுக நாவலரைப் பொறுத்த வரையில் ஆகமச் சைவத்தை ஆரத்தழுவி முந்தைய தமிழற மாண்பை உணரமாட்டாமை என்பதாகும். அ.மார்க்ஸைப் பொறுத்தவரைக் குறளறமரபை உணர்தலின்றி இடையில் நுழைந்த பரிமேலழகரை வழிமொழிதலாகும்.

இராமலிங்க ஆன்மநேயத்தின் சித்த மரபான ஆறாந்திருமுறையின் தத்துவாதீத வெட்டவெளியை உணரொணாமல் முந்தைய அய்ந்திருமுறைகளை மட்டுமே அவர்மரபெனப் பிறழ்திரிபாக உணர்ந்திட நேர்ந்ததாகும்.

பெரியாரைப்பொறுத்தவரையில் ஆரம்பத்திலவர் பரிமேழகர் விளக்கத்தையே குறட்கருத்தாகக் கருதிக் கண்டனம் புரிந்திருப்பினும் பா.வே. மாணிக்கநாயக்கர்,நாவலர் சோமசுந்தர பாரதியார் தொடர்பால் குறளருமை உணரலாயினார்:

"கீதையை எறிந்துவிட்டு உண்மைத் திராவிடரான திருவள்ளுவரின் குறளை அனைவரும் படிக்க வேண்டும்" (குடி அரசு-1-5-1948)

"யாரேனும் நீ என்ன மதம் என்றால் குறள்மதம் என்று சொல்லுங்கள். மனுதருமத்திற்கு உண்மையான மறுப்புநூல் திருக்குறளேயாகும்."

--ஈ.வெ.ராமசாமி (பெரியார் சிந்தனைகள்)

"பெரியார் தமிழ் மறுமலர்ச்சி இயக்கத்தின் தூணாக விளங்கிய திருக்குறளைப் போற்றினார். தன் கலகச் செயல்பாட்டிற்கு ஏற்றவாறு திருக்குறளையும் ஆதிக்கத்திற்கு எதிரான ஒரு கலகப்பிரதியாகவே பெரியார் கண்டுபிடித்த போது, தமிழ் மறுமலர்ச்சி இயக்கத்திற்குத் திருக்குறளின் பங்களிப்பு பெரிய அளவில் போய்ச்சேர்ந்தது."

- க.பஞ்சாங்கம் (காக்கைச் சிறகினிலே- சூன் -2014)

திருக்குறளைத் "திரிக்குற" ளெனச்சுட்டி அயோத்திதாசப் பண்டிதர் பௌத்த நோக்கில் விரிவாகப் பொருள் கொண்டதனை அவர் காலத்திய தலித் அரசியல் செயல்பாடு என்பார் ராஜ்கௌதமன்
(தமிழினி, செப்.2010)

"இராமகிருஷ்ணரைப் போற்றுகின்ற தமிழனே! இராமலிங்கர் எந்த விதத்தில் தாழ்ந்தவர்?"- ஈ.வெ.ராமசாமி (குடி அரசு- 1-5- 1948) எனப்போற்றி வள்ளலாரின் ஆறாந்திருமுறையை மேலதிகப்படிகள் குறைந்த விலையில் வெளியிட்டதோடு அத்தொடர்பில் "குடி அரசி "ல் தொடர்ந்து பரப்புரையும் முன்னெடுத்தார்.

அடையாள இயக்கங்கள் மீட்டுருவாக்கம், சீர்திருத்தம் என்ற இரண்டு திசைவழிகளில் ஒரே நேரத்தில் பயணிக்கின்றன அவற்றை எந்தெந்த அளவிற்கு புதுமை நோக்கிலோ, பழமைநோக்கிலோ அவை கையாள்கின்றன என்பதைப் பொறுத்தே அவற்றைப்பற்றித் தீர்மானிக்க இயலும்.

தமிழடையாள மீட்பாக்கத்தில் முதலாமவர் வசனநடை கைவந்த வல்லாளர், ஒரு பிழைக்கு ஒரு பொற்காசென அறைகூவிப் பதிப்பித்த செம்பதிப்பாளர், தமிழ்ப்பதிப்பு மூவரில் முதலாமவர் என்றெலாம் போற்றப் பெற்றவரே ஆறுமுகநாவலர்.

அதியற்புதமான பதிப்புகள் துரதிர்ஷ்ட்ட வசமாக எல்லாமே சைவ நூல்கள். தொல்காப்பியம் (சொல்), நன்னூல் இப்படியான. சிலபொதுநூல்களைத்தவிர. - கார்த்திகேசு சிவத்தம்பி ("புதியகாற்று"- ஆக.2007)

"பரசமயக் கோளரி" எனப்பட்ட ஞானசம்பந்தரைப் போலவே, பிறசமயக் "கண்டனச் சண்டமாருதமாகி"நின்றவர். எனவே கலாநிதி சிவத்தம்பி கூறுமாப்போல் "துரதிர்ஷ்ட்டவசமாக" என்றல்லாமல் அவருக்கே இஷ்டமேயான ஆகமச்சைவ அடிப்படைவாத மீட்புநோக்கிலேயே அவர் பதிப்புப்பணி மையங் கொண்டிருந்தது எனலாம்.

நாவலரின் ஆகமச்சைவ மீட்பாக்கம் "பெந்தோகோஸ்தே" பாணியில் கறாராகவும் மிகக்கடுமையாகவும் கட்டமைக்க முயன்ற செல்நெறியினை- "பியூரிற்றணியம்" என்பார் சிவத்தம்பி. இத்தகு "கடுந்தூய்மைவாதம்" ஒருவகையான "அடிப்படைவாதம்" என்பார் தி.சு.நடராசன்

இத்தகு மேலாதிக்க "நெறி கட்டிய" "பக்கவாதம் பீடித்த" அவரின் "காமாலைக் கண்களுக்கு"க் கண்ணகி "சமணச்செட்டிச்சி" ஆகவவுந் "துட்டதேவதை" ஆகவுமே தென்பட்டார். வள்ளலாரின் "அருட்பா" "மருட்பா" ஆகவே தென்பட்டது. அருங்கலையான தெருக்கூத்து முதலான நாட்டார் கலைகளும், கோயிற்கலைகளும் கூட கேவலமானவையாகக் காட்சி அளித்தன. அடித்தள விளிம்பு மக்கள் புன்மைத் தேரைகளாய், புழு பூச்சிகளாகவே நிழலாடி நின்றனர்.

சோடா பாட்டில் எடுப்பேன் என்றாரே நம் கால ஜீயர் , அவரையும் விஞ்சும்படி பெரிய புராணத்தைப் பழித்தாரெனத் தம் தலைமயனாரையே வெட்டத்துணிந்த மதவெறியரே அவர். இத்தகு சைவமேலாண்மைக் குணமே வள்ளலாருடனான முரணின் தாக்கமெனலாம் என்பார் ஜெ. அரங்கராஜன்.


வள்ளலாரின் மீட்பாக்கம் குறித்து மீளமீள எடுத்துரைத்தாயிற்று. அவரது மரபை மறுத்தலை எமர்சன், நீட்சேயையும் விட வேகமான வரிகளில் சாடி வள்ளலார் எழுதுவது குறித்து உலகமகா சிந்தனையாளர்களுடன் ஒப்பிட்டு எடுத்துரைப்பார் இரா. குப்புசாமி. (தமிழினி- பிப் -2009):

தமிழில் எழுதப்பட்டதாலேயே கவனிக்கப்படாமல் போன துர்ப்பாக்கிய சாலி அவர். ஆனால் உண்மை வேறு. அவர் வெறும் பரதேசியல்லர். உலகில் எந்தச் சிந்தனையாளனுக்கும் அருகே அமர்ந்து உரையாடும் ஆற்றல் அவருக்கு உண்டு.

அரசியல் விலங்குகளை உடைத்தவன் ரூஸோ.

பொருளாதாரத் தளைகளை நீக்கியவர் மார்க்ஸ்.

அவற்றுடன் ஆன்மிகத தளைகளையும் ஒழித்து மனிதன்இறைநிலை வாலறிவு பெற வழிகாட்டியவர் இராமலிங்கர். இந்த உண்மையை உலகம் உணரும் காலம் வரும்." - இரா.குப்புசாமி (தமிழினி - ஆக.2009)




உருட்டும் புரட்டும்

# முத்திரை பொறிக்கும் Dumbளர்

**ஜோர்ஜ் இ.**

ஒரு சமூகம் முட்டாள்களை மட்டுமே கொண்டதாக இருந்தால், அதை ஏமாற்றிப் பிழைப்பதில் அயோக்கியர்களுக்கு எந்தச் சிக்கலும் இருப்பதில்லை. புலியின் வேட்டையில் மிஞ்சியதைத் தின்னும் கழுதைப் புலிகள் போலவும், அழுகியதைத் தின்னும் காகங்கள் போலவும், அந்த அயோக்கியர்களை நம்பிப் பிழைப்பு நடத்தும் இடைத் தரகர்கள் தான் இந்த ஏமாற்று வியாபாரம் தங்குதடையின்றி நடப்பதற்கு துணை போகிறவர்கள்.

எங்கள் புலன் பெயர்ந்த யாழ்ப்பாணி ஈழச் சமூகத்தில் ஏமாற்றுப்பிழைப்பு அயோக்கியர்களின் இடைத் தரகர்களாக இருப்பவர்கள் இந்த ஊடகவியலாளர்கள் எனப்படும் ஒட்டுண்ணிகள். அயோக்கியர்களின் பொய்களுக்கு உப்புப் புளி விட்டு, முத்திரை குத்தி விற்கும் பணியைச் செய்து கொண்டிருப்பார்கள். கிடைக்கும் அந்த விளம்பரப்பணத்திற்காக!

முற்பக்கத் தலைப்புச் செய்தி விளம்பரமாகவே இருக்கும் என்பதால், அயோக்கியர்களும் தரகர்களுக்கு சில்லறைகளை வீசுவார்கள். படங்களோடு போட்டும், பேட்டிகள் எடுத்தும், அயோக்கியர்களுக்குச் சமூக அந்தஸ்து தேடிக் கொடுப்பவர்கள் இந்த ஊடகவியலாளர்கள் தான்.

தாங்கள் ஏமாற்றப்படுவதையும் அறிந்து கொள்ளாமல், தலையங்கச் செய்தியை நம்பி ‘இந்தா பார், உலகத்தையே திரும்பிப் பார்க்க வைக்கும் தமிழன் பெருமையை’ என்று பேஸ்புக்கில் பகிர்ந்து இன்புறும் இந்த முட்டாள் கூட்டம்.

வெளிநாடுகளில் பொருட்களை வியாபாரம் செய்யும் பெருநிறுவனங்கள், அவற்றை உங்களுக்கே தனித்துவமானதாக customize பண்ண வழி பண்ணியிருப்பார்கள்.

அதற்கு மேலதிக செலவு ஆகும். அவ்வளவு தான்.

சப்பாத்து வாங்கும் போது, நீங்கள் விரும்பிய படத்தை அதில் பதிப்பிக்கலாம். உடனே, புலி படத்தை அதில் போட்டு பதிப்பித்து, பேஸ்புக்கில் போட, புலிகளுக்கு சப்பாத்துக் கம்பனி அங்கீகாரம் வழங்கியதாக யாழ்ப்பாணிகள் பெருமையோடு பகிர்ந்து கொள்வார்கள்.

அடுத்து கனடா புலிகளின் மீதான தடையை நீக்கும் என்று புல்லரிப்பார்கள்.

விஸ்கிப் போத்தலில் புலிப் படம்.

கிறடிட் காட்டுகளில் பிரபாகரன் படம்.

அயோக்கியர்களுக்கும் முட்டாள்களுக்கும் ஒரே போட்டி தான்.

அடுத்து மலரப் போவது தமிழீழம் தான் என்ற நினைப்பில்!

எங்கள் புலன் பெயர்ந்த யாழ்ப்பாணி ஈழச் சமூகத்தில் ஏமாற்றுப்பிழைப்பு அயோக்கியர்களின் இடைத் தரகர்களாக இருப்பவர்கள் இந்த ஊடகவியலாளர்கள் எனப்படும் ஒட்டுண்ணிகள். அயோக்கியர்களின் பொய்களுக்கு உப்புப் புளி விட்டு, முத்திரை குத்தி விற்கும் பணியைச் செய்து கொண்டிருப்பார்கள். கிடைக்கும் அந்த விளம்பரப்பணத்திற்காக!

இங்கே கனடிய தபால் நிறுவனம் நீங்கள் விரும்பிய படங்களை முத்திரைகளில் அச்சிடுவதற்கு வழி செய்திருக்கிறது. கனடியர்கள் தங்கள் பெற்றோர், பேரர் படங்களையும் வளர்ப்புப் பிராணிகளின் படங்களையும், பிறந்த நாளுக்கு குழந்தைளின் படங்களையும் அச்சிட்டு மகிழ்கிறார்கள்.

விடுவார்களா யாழ்ப்பாணி அயோக்கியர்கள்?

புலன் பெயர் யாழ்ப்பாணிகளுக்குப் பிடித்தமான, புலிவாலில் இன்றைக்கும் தொங்கும் அரசியல் தலைவர்களின் படங்களை அச்சிடுவித்து, கனடிய அரசு அவர்களுக்கு முத்திரை வெளியிட்டதாக விழா வைத்தார்கள்.

ஊடகவியலாளர்கள் மேடையேறி புகழாரம் சூடினார்கள். முற்பக்கச் செய்தி போட்டார்கள்.

இந்தச் செய்திகளை ஊரில் இருப்பவர்களும் நம்பி அங்கே செய்தி வெளியிடுவார்கள்.

பிரபாகரனுக்கு கனடிய அரசு முத்திரை வெளியிட்டது!

தமிழினத்திற்கு கிடைத்த அங்கீகாரமாக அரசியல் அவதானிகள் கருதுகிறார்கள்.

குமார் பொன்னம்பலத்துக்கு கனடிய அரசு முத்திரை வெளியிட்டது.

எவருக்குமே இது எந்த முட்டாளும் செய்யக் கூடியது என்று புரியவும் இல்லை.

யாரும் சொல்லவும் இல்லை.

ஏனெனில் இந்த முட்டாள்களுக்கு புத்தி வந்து விடக் கூடாது என்பதில் இந்த அயோக்கியர்கள் மிகவும் கவனமாகவே இருக்கிறார்கள்.

இப்போது புரிகிறதா, இந்த இனம் ஏன் முள்ளிவாய்க்காலில் மண் கவ்வியது என்று?




# கடைத்தெருவும் கத்தல் பேச்சும்

## பூங்கோதை

எப்போதாவது ஒரு முறை வீட்டில்ச் சமைக்காது, வெளியிலிருந்து உணவு எடுப்பதை என்ன தான் தவிர்க்க முயன்றாலும் அது என்னவோ முடிவதில்லை. பையன்கள் இருவரும் என்னை விட நன்றாகச் சமைப்பதால் அவர்களும் எப்போதாவது தான் தமக்கு விருப்பமான உணவு வகைகளை, வெளி உணவகங்களிலிருந்து வாங்குவது வழமை. இப்போது தான் எல்லாம் வீடு தேடி வருமாற் போல் இருக்கிறதே. பல நாட்டு உணவுகளும் வந்து சேரும்.

எனக்கு மாமிசம் தவிர்ந்த எந்த உணவும் பிடித்துக் கொள்ளும். என்ன இருந்தாலும் எமது தோசையையும் சம்பலையும் எந்த உணவும் ஈடு செய்ய முடியாது என்பது என் மிக ஆணித்தரமான கருத்து. அத்தோடு நான் மனது வைத்துத் தயாரிக்கும் உணவுகளில் அதுவும் ஒன்று என்பது குறிப்பிடத் தக்கது. ஆனால் அது தவிர்ந்த எமது உணவு வகைகள் என்றால் எனக்கென்னவோ நானே போய், எனக்குப் பிடித்ததைப் பார்த்து வாங்குவது தான் சரியாக இருக்கும்.

அப்படி வாங்க நேரிட்டால் நான் மகிழ்வுடன், “சம்பல்” என அழைக்கப்படும் ஒரு இலங்கையர்களின் உணவகத்தை தேடிப் போவேன். அங்கு உணவு வினியோகம் மட்டும்தான் நடைபெறும். கண்ணாடிப் பெட்டிகளில், வாடிக்கையாளர்கள் பார்த்து, வாங்கக்கூடிய வகையில் இலங்கை உணவுப்பண்டங்கள் அனைத்தும் வைக்கப்பட்டிருக்கும். அத்தோடு தனியாக இடியப்பம், பிட்டு, சொதி, சம்பலும் இருப்பதால், எனது தேவையை அது நிறைவு செய்வதாய் இருக்கும்.

> “எனக்கு சரியாக முன்னே நின்றவர் சிறிது வயதான கறுப்பின மனிதர். வெளியே நின்றபடி கண்ணாடிக் கதவுகளினூடே தெரிந்த உணவுகளை வளைந்தும், நெளிந்தும், நிமிர்ந்தும் என்று மிகக் கவனமாகப் பார்த்து, தன் மனதில் குறிப்பெடுத்துக் கொண்டிருந்தார். இடையிடையே மிக மெதுவாக ஏதோ சொல்லிக் கொண்டார். எனக்குப் பெரிதாக எதுவும் கேட்கவில்லை. என்னைத் திரும்பிப் பார்த்து புன்னகைத்தார். பதில் புன்னகையைவாங்கிக் கொண்டார்.”

இந்த “சம்பல்” உணவகம் இங்கிலாந்தின் பல்வேறு இடங்களில் அமைந்திருப்பதோடு, அவர்களது உணவு ஓரளவு தரமானது என்பது என் அபிப்பிராயம். வாடிக்கையாளர்கள் எப்போதும் அங்கு வரிசையில் நின்று கொண்டிருப்பார்கள். கோவிட் தொற்றுக்காலத்தில் அவர்கள் மூன்று வாடிக்கையாளர்கள் மட்டுமே உள்ளே வரலாம் என எழுதி, முன் கண்ணாடிக் கதவில் ஒட்டி வைத்திருந்தனர். ஆனால் அந்த உணவகத்தின் வடிவமைப்பிற்கு மூன்று அல்லது நான்கு வாடிக்கையாளர்கள் நிற்பது தான் எப்போதும் சரியாக இருக்கும் என்பது என் எண்ணம்.

அதனால் மேலதிக வாடிக்கையாளர்கள் உள்ளே நிற்பவர்கள் வரும் வரை வெளியே நிற்பார்கள். ஒரு நாள் நான் அங்கு போனபோது, ஏற்கனவே. வெளியே இருவர் நின்றிருந்தனர். நானும் அவர்களோடு இணைந்து கொண்டேன்.

எனக்கு சரியாக முன்னே நின்றவர் சிறிது வயதான கறுப்பின மனிதர். வெளியே நின்றபடி கண்ணாடிக் கதவுகளினூடே தெரிந்த உணவுகளை வளைந்தும், நெளிந்தும், நிமிர்ந்தும் என்று மிகக் கவனமாகப் பார்த்து, தன் மனதில் குறிப்பெடுத்துக்

கொண்டிருந்தார். இடையிடையே மிக மெதுவாக ஏதோ சொல்லிக் கொண்டார். எனக்குப் பெரிதாக எதுவும் கேட்கவில்லை. என்னைத் திரும்பிப் பார்த்து புன்னகைத்தார். பதில் புன்னகையைவாங்கிக் கொண்டார்.

என்னை மறைத்தபடி, குறைந்தது ஆறு அடி உயரத்தில் அந்த மனிதர் இருந்ததால், முதலில் அவர் தன் காதுகளில் வைத்திருந்த "இயர் ஃபோன்கள" (ear phones) சிலநிமிடங்களின் பின்னரே என் கண்களுக்குத் தென்பட்டன. அவர் தான் பார்க்கும் உணவுகளைப் பற்றி யாருக்கோ நேரடி வர்ணனை கொடுத்துக் கொண்டிருப்பது புரிந்தது. இடையிடையே தன் பலத்த சிரிப்பை அடக்கிக் கொள்ளச் சிரமப்பட்டுக் கொள்வது, என்னைச் சிரிக்க வைத்தது. அப்படி எமது உணவைப் பற்றி சிரிப்பு வரும்படி என்னதான் சொல்லுகிறாரோ என்று எண்ணிப் பார்த்ததில் அவர் சிரிக்கும் போதெல்லாம் எனக்கும் தான் சிரிப்பு வந்தது.

அதே வேளையில், உள்ளே நின்ற மூன்று மாமனிதர்களில் ஒருவர் வெற்றிகரமாகத் தனக்குப் பிடித்ததை வாங்கிக் கொண்டு முகமெல்லாம் வெற்றிக்களையும் சிரிப்பும் தாண்டவமாட, கைகளில் உணவுப் பைகளுடன் வெளியே வந்தார். நான் அப்படி வர நேரும் போது, அந்தக் கதவுகளைத் திறந்து வைத்துக் கொள்ள என் கைகள் போதாதாவிடத்து, என் முதுகுகள் அவற்றை இன்னொருவர் வரும் வரை அவர்களுக்காகப் பிடித்து வைத்துக் கொள்ளும். அநேகமானவர்கள் செய்பவை தான். ஆனால் அவருடைய ஒரு கைகளில் மட்டுமே பைகள் இருந்தவிடத்திலும் அவருக்கு அந்தக் கதவை வெளியேயிருந்து வருபவருக்காக பிடித்திருக்க மனதில்லாமல் அல்லது அது பற்றிய சிந்தனை இல்லாமல் வெளியே நின்ற எம்மைப் பார்த்து, தன் முகத்தை இடப்புறமும் வலப்புறமும் இரு தடவைகள் ஆட்டி, தனக்கு இந்த இயங்கு முறை பிடிக்கவில்லை என்று சோகமாக, சைகையில் தெரிவித்தபடி வெளியேறினார்.

குளிரும் மழையுமாக இருந்த கால நிலையில் எப்போது உள்ளே போகலாம் எனக் காத்தபடி அடுத்ததாக போக நின்றவர், அவரை இடித்தபடி உள்ளே போக, இப்போது புதிதாக, ஐம்பத்தைந்து அறுபது வயது மதிக்கத்தக்க முதிர் இளைஞர் ஒருவர் யாரையோ தமிழில் பாசமாய்த் திட்டியபடியே வந்து சேர்ந்தார்.

அவருக்கு இது ஒரு கடைத்தெரு என்பதோ, வாடிக்கையாளர்களில் தமிழர்களும் இவ்வுணவகத்தில் அதிகமாக இருக்கக்கூடும் என்பதோ தெரிந்திருக்கவில்லை என்பது போல, தொலைபேசி இல்லாமலே அவர் மனைவி அல்லது காதலிக்கு கேட்கும்படி பேசியபடியே எம்மோடு வந்து வரிசையில் இணைந்து கொண்டார்.

"என்னது? உளுந்து வடையோ...ம்ம்ம் வேற ? மோதகமோ? ஏனடி அம்மா, அதை வீட்டில செய்ய மாட்டியோ?"

அவர் சம்பாஷணை தொடர்ந்தது. அவரது குரல் காதில் நேரடியாகப் பாய்ந்ததில், நான் அந்த வரிசையை விட்டு வெளியே தள்ளி நின்றவாறு, அதே வேளையில் என் இடத்தை யாரும் கைப்பற்றிக் கொள்ளாதவாறு ஒரு அரண் அமைத்துக் கொண்டு, ஒலி பெருக்கியை அப்படியே விழுங்கிக் கொண்டிருப்பார் போலும் என எண்ணிக் கொண்டேன்.

பல்வேறு தலைப்புகளில் அவர் கலந்துரையாடிக் கொண்டிருந்தாலும் அடிக்கடி உணவகத்தின் உள்ளேயிருப்பவர்கள் வெளியே வருவதற்கான சாத்தியக்கூறுகளைக் கண்ணால் அவதானித்துக் கொண்டிருக்க, ஒருவாறு என் முன்னே நின்று

"

அவருக்கு இது ஒரு கடைத்தெரு என்பதோ, வாடிக்கையாளர்களில் தமிழர்களும் இவ்வுணவகத்தில் அதிகமாக இருக்கக்கூடும் என்பதோ தெரிந்திருக்கவில்லை என்பது போல, தொலைபேசி இல்லாமலே அவர் மனைவி அல்லது காதலிக்கு கேட்கும்படி பேசியபடியே எம்மோடு வந்து வரிசையில் இணைந்து கொண்டார்.

"என்னது? உளுந்து வடையோ...ம்ம்ம் வேற ? மோதகமோ? ஏனடி அம்மா, அதை வீட்டில செய்ய மாட்டியோ?"

"

கொண்டிருந்த கறுப்பு இனத்தவருக்கு உணவகத்தின் உள்ளே போகும் சுபவேளை வந்தது. அவர் என்னைத் திரும்பிப் பார்த்து, தான் போவதும் வருவதுமாய் வந்து விடுவேன், கவலைப்பட வேண்டாம் என்று நான் கேட்காமலே எனக்குச் சொன்னபடி உள்ளே போனார்.

எமது தொலைபேசிப் பிரமுகர், தன் கலந்துரையாடலை சில வினாடிகளுக்கு நிறுத்தி விட்டு என்னைப் பார்த்து, "என்னவாம் அவர்? ஏதும் சேட்டையோ?" என்றதை நான் எனக்கு கேளாதது போல் நின்றதில் என்னைக் காப்பாற்றிய பெருமையோடு தன் மேடைப் பேச்சைத் தொடர்ந்தார்.

இடையிடையே "எனக்குத் தெரியும் நீ கெட்டிக்காரியடி!" என்று சொல்லிக் கொண்டார்.

அவர்கள் குடும்ப விவகாரம் இப்போது ஓரளவுக்கு அந்த உணவகத்து வேலையாட்களுக்கும் எனக்கும் உள்ளே வெளியே நின்றவர்களுக்கும் விபரமாகத் தெரிந்திருக்க, நான் உள்ளே போகும் வேளை வந்திருந்தது.

திடீரென ஒரு நாகரீக உடையணிந்து மிகக் கண்ணியமான தோற்றத்துடனும் உடையுடனும் வந்த ஒருவர் என்னைக் கடந்து உள்ளே போக முனைந்ததை நான் பிரமிப்புடன் பார்த்து, நடப்பதை உணரும் முன்னே, மீண்டும் எமது தொலைபேசிப் பிரமுகர் மேடைக்கு வந்தார்.

"என்ன நீங்கள் தமிழோ?"

அதற்குப் பதில் கிடைக்க முன்பே தன் அடுத்த கேள்வியைத் தமிழில் அனாயாசமாய் அந்த கம்பீரமான மனிதரை நோக்கி வீசினார்.

"இந்தப் பிள்ளையும் நானும் இங்க நிக்கிறது உமக்குத் தெரியேல்லையோ அல்லது தெரியாத மாதிரி நடிச்சுக்கொண்டு உள்ள போறீரோ? நீர் உள்ள போனால் பெரிய பிரச்சனை வரும்!"

அவருக்கு சொன்னபடியே, அதே தொனியில் தொலைபேசியில், "அது நான் இங்க ஒருத்தர் கியூவை ஜம்ப் பண்ணப் பார்க்கிறார், அவரை நான் விடுவனே, நீ சொல்லு செல்லம், பிறகு என்ன நடந்தது?" கூறியது உள்ளே போய்க் கொண்டிருந்த எனக்கும் கேட்டது.

தொலைபேசிப் பிரமுகரிடம் தாக்குதலை எதிர் கொண்டவர், வெளியே வரிசையில் நிற்க விரும்பாது வீதியைக் கடந்து போய்க் கொண்டிருந்தார். ■

# மீட்கப்படா வீடு

## சி.திலகா

தந்தையின் கடின உழைப்பில் உருவான வீடு
அன்னையின் சீதனம் கொண்டு உதித்த வீடு
கல்லும் மண்ணும் கொண்டு கட்டியதல்ல இவ்வீடு
அன்பும் பாசமும் கலந்து ஒளிவீசிய வீடு
அறிவுச் செல்வம் வழிந்தோடிய அன்பு வீடு
பாசமே உருவான அன்னையின் அடைக்கல வீடு
கல்வியில் சாதித்த தந்தையின் சொந்த வீடு
நான்கு உடன்பிறப்புகள் ஓடி விளையாடிய வீடு
ஆட்டுக்குட்டி துள்ளி ஓடிய மைதானமான வீடு
நாய்க்குட்டி நால்வருடன் ஐவரான அருமை வீடு
கோழிகளும் கூடிக் குலாவிய செல்ல வீடு
நகைச்சுவை அளவின்றிப் பொங்கித் ததும்பிய வீடு

மல்லிகைப் பந்தல் எந்நாளும் மணம் வீசும்
முல்லையும் அப்பந்தலில் மெதுவாய் தேடும் புகலிடம்
மாதுளையோ அரிய முத்துக்களை அள்ளித் தரும்
மாமரங்களோ இனிய கனிகளை ஓய்வின்றி வழங்கும்
சமையலறையை எட்டிப் பார்க்கும் எலுமிச்சை மரம்
செவ்விளநீர் மரம் அயலவர்க்கும் மருந்து தரும்
வெண்டையோ அன்னையின் கையால் ருசியான கறியாகும்
பனை மரங்களோ வளம்தரும் அமுதசுரபி ஆகும்
அற்புத விருட்சமாய் சிறந்தோங்கும் முருங்கை மரம்
துளசியைக் கண்டு இருமலும் மருண்டு ஓடும்
வேம்பு கொசுக்களை விரட்டவும் பலமாகப் பயன்படும்
கறிவேப்பிலையின் இனிய சுகந்தம் ஊரையே கூட்டும்

முப்பது ஆண்டுகளின் பின் மீண்ட செய்தி
கடல் கடந்து காதுகளில் வந்து மோதியது.

இராணுவத்தின் கைப்பிடியில் இருந்து விடுபட்ட நிலம்
காணொலிகளில் வலிந்து தேடியும் காணாத வீடு.

தொழுது வழிபட்ட வைரவர் கோயில் புத்தகோயிலாகிட
அதைப் பார்த்த போது ஆத்திரம் தோன்றவில்லை.

மனதில் தோன்றிய உணர்வுகளுடன் முடிவில்லாப் போராட்டம்
உணர்த்தியது ஆதியும் அந்தமும் வீட்டிற்கும் உண்டு.

மறைந்து போவது மானிடர் மட்டுமல்ல இல்லமும்கூட!

பல்லாண்டுகள் காணாது கடக்க அந்நியமாய்த் தோன்றும்
தரைமட்டம் ஆனது
நிரந்தரம் அற்ற இல்லமா?
அல்லது
அருமைப் பெற்றோரின் எதிர்காலக் கனவுகளா?





# கவிதன்

**Kavithan Bourassa**

இளைய தலைமுறைப் படப்பிடிப்பாளன். ரொறன்ரோ றையேர்சன் பல்கலைக்கழகத்தில் எந்திரப் பொறியியல் படிப்பை முடித்தவர். ஓவியத்திலும் நிழற்படத்திலும் பெரும் ஆர்வம் உள்ளவர். தற்போது தன்னுடைய இலக்காகத் திரைப்பட ஒளிப்பதிவுத் துறையைத் தேர்ந்தெடுத்து, அதில் மிகுந்த ஆர்வம் காட்டி பெரும் முனைப்போடு செயற்பட்டு வருகிறார்.

அவருடைய இன்ஸ்டாகிராம் பக்கத்தில் அவரது படைப்புகளைக் காணலாம்.
Instagram:Rosexcrown

என்னை எங்கே கண்டாலும், ஜோர்ஜ் மாமா என்று கட்டியணைக்கும் இவன் கற்சுறா, ஜெபா தம்பதிகளின் மூத்த புதல்வன் என்பது அனாவசிய தகவல்.

*வாழ்த்துக்கள், கவிதன்!*
*கனவுகள் எல்லாம்*
*மெய்ப்படட்டும்!*













ROSE X CROWN


YVES KLEIN
TASCHEN
YVES KLEIN











## அலையும் ஆவியை வாலாயம் பண்ணிய

# ஒரு விண்ணானக் கதை

## விடுப்பாய்வு விண்ணன்

உங்க எல்லாருக்கும் வணக்கம்.

என்ர பேர் விண்ணன், “விடுப்பாய்வு விண்ணன்” எண்டுதான் சிலபேர் சொல்லுவாங்கள், இப்பவும் உங்களுக்கொரு விடுப்புச் சொல்லத்தான் வந்தனான், அதென்னெண்டால் எங்கட தலைவர் உயிரோட இருக்கிறாரா? இல்லையா? எண்டதில எனக்குக் கன காலமாச் சந்தேகமிருந்தது.

அப்பிடியிருக்க போன கிழமை எங்கட அறள ஐயாக்கள் நெடுமாறனும், காசியானந்தனும் பிரஸ் மீற்றிங்கைக் கூட்டி தலைவர் உயிரோட இருக்கிறார் எண்டு சொன்னவையல்லே. அண்டையில இருந்து எனக்குக் காலும் ஓடயில்ல, கையும் ஓடயில்ல, ஆனால் மண்டைக்குள்ள மூளை மட்டும் ஓடி முழிச்சதில எனக்கொரு ஐடியா வந்திச்சுது,

அதென்னெண்டு கேக்கிறியளே, அதுதான் இந்த S.V.சேகர் எண்ட கோமாளி நடிகன் தான் ஜெயலலிதாவின்ர ஆவியோட கதைக்கிறதெண்டு சொன்னவனல்லே. அதுதான் என்ர ஞாபகத்தில வந்திச்சுது, சரியெண்டு நானுமொருக்கா அதப்போல நம்மட தலைவற்ற ஆவியோட கதைக்கிறதுக்கு ரை பண்ணிப் பார்த்தாலென்ன எண்டும் தோணிச்சு, அப்பிடித் தலைவற்ற ஆவி கதைக்க வந்திச்சுதெண்டால் அவர் உயிரோட இருக்கிறாரா இல்லையா எண்ட என்ர சந்தேகத்துக்கும் விடை கிடைச்சிருமே எண்டு போட்டுத்தான் ஆவியோட எப்பிடிக் கதைக்கிறதெண்ட விசயத்தை அறிய இந்த யூற்ருப் கீற்ருப் எல்லாம் கிண்டிக் கிளறி ஒருமாதிரியா நேற்றுத்தான் ஆவிகளோட கதைக்கிறதெப்படி எண்டதைக் கண்டுபிடிச்சன்.

சரியெண்டு உடனேயே பார்க்கவேண்டிய அலுவல்களைப் பார்த்தபோது திரும்பவும் எனக்குக் காலும் ஓடயில்லக் கையும் ஓடயில்ல.

தலைவற்ற குரலைக் கேட்டதுமே உடம்பெல்லாம் புல்லரிச்சுப்போச்சு, சொன்னா நம்பமாட்டியள். நம்புறதென்ன சிலபேர் துரோகி எண்டு கூடச் சொல்லுவியள், அதெனக்குப் பிரச்சனையில்ல. அதுக்காக நான் தலைவரோட கதைச்சதச் சொல்லாம விடமுடியுமே?

எனக்கும் தலைவருக்குமிடையில நடந்த சம்பாசனையைச் சொல்லுறன் கேளுங்க.

“ஐயோ தலைவரே உண்மையாவே நீங்க செத்துட்டீங்களா?” எண்டு ஆச்சரியமும் திகைப்புமாய்க் கேட்டன்,

“யாரடா தம்பி நீ? உன்ரயிந்த ஆச்சரியமும் திகைப்பும் கவலையில வந்ததே? இல்லச் சந்தோசத்தில,,?”

“ஐயோ தலைவரே நீங்க செத்ததுக்குப்போய்ச் சந்தோசப்பட முடியுமே?”

“இல்லக் கொஞ்சப்பேர் கவலைப்பட்டாலும் நிறையப்பேர் சந்தோசப்படுறாங்களாம் எண்டு கேள்விப்பட்டன் அதுதான்” எண்டவரின் குரல் தெளிவா இருக்கயில்ல.

“என்ன தலைவரே குரல் ஒருமாதிரியா இருக்கு” எண்டு கேட்டன்,

“கொஞ்சம் பொறு பங்கருக்க இருந்து வெளிய வந்து கதைக்கிறன்” எண்டார்,

“என்ன தலைவரே அங்க போயும் உங்களுக்குப் பங்கர் வாழ்க்கைதானா?”

“பின்னயென்ன? நான் போட்டுத்தள்ளின முழுப்பேரும் இங்கதானே இருக்கிறாங்கள், அவங்களிட்டயிருந்து தப்பவேணாமே?” எண்டு கேட்டார்,

“என்ன தலைவரே அங்கயும் ஆபத்தே? ஆயுதங்கள் ஏதும் இருக்கே?”

“ஆயுதங்கள் இருந்தால் நான் பயப்பிடுவனே? போட்டுத் தள்ளுறதில இங்கயும் நானே முந்தியிருப்பனே” எண்டார்,

“அப்ப ஏன் தலைவரே பங்கருக்க கிடக்கிறீங்க?”

“வெளிய போனால் கண்டவங்கள் நிண்டவங்களெல்லாம் காறித் துப்புறாங்கடா அதுதான்.” எண்டவரின் குரலில் சோகம் இழையோடியது,

“ஐயோ தலைவரே உங்களுக்கா இந்த நிலைமை? உங்கட போராளிகள் ஒருத்தரும் பக்கத்தில இல்லையே?”

“இங்க அவங்கள் கூட என்னக் கிட்டவே அண்ட விடுறாங்கள் இல்லையே” எண்டார் ஆதங்கத்துடன்,

“அட துரோகிகளே!” எண்டன் நான்,

> இந்த S.V.சேகர் எண்ட கோமாளி நடிகன் தான் ஜெயலலிதாவின்ர ஆவியோட கதைக்கிறதெண்டு சொன்னவனல்லே. அதுதான் என்ர ஞாபகத்தில வந்திச்சுது, சரியெண்டு நானுமொருக்கா அதப்போல நம்மட தலைவற்ற ஆவியோட கதைக்கிறதுக்கு ரை பண்ணிப் பார்த்தாலென்ன எண்டும் தோணிச்சு,

"சீ, அந்த வார்த்தையச் சொல்லாத." எண்டார்,

"என்ன தலைவரே உங்களுக்குப் பிடிச்ச வார்த்தைதானே அது"

"ஓ.. துரோகிகள் துரோகிகள் எண்டுதான் நான் எல்லாரையும் போட்டுத்தள்ளினான்இ ஆனாலிங்க எல்லாரும் என்னையல்லே துரோகி துரோகி எண்டு திட்டுறாங்கள்."

"அட, நாசமறுப்பார் அப்பிடியா சொல்லுறாங்கள்?"

"ம், கிடைக்கவேண்டிய ஈழத்தைக் கிடைக்கவிடாமல் பண்ணின துரோகி நான்தானாம் எண்டுறாங்கள்."

"சரி, சரி, கவலைப்படாதிங்க. மனிசி, பிள்ளைகளாவது உங்களோட இருக்குதுகள் தானே."

"ம். இருந்துமென்ன, அதுகள்கூட என்னை அஞ்சியத்துக்கும் மதிக்குதுகள் இல்லையே, இங்கயும் என்ர கையில இருக்கவேண்டிய சாமான் இருந்திருந்தா எல்லாரும் என்னை மதிச்சிருப்பாங்க, பயந்திருப்பாங்க தான், அதுசரி அங்கயாவது சனங்கள் எனக்குச் சிலையைக் கிலையை வைச்சிருக்குதுகளே?"

"என்னது சிலையோ! என்ன தலைவரே பகிடியா விடுறியள்? பேஸ்புக்கில கூட உங்கட பேரை எழுத விடுறாங்களில்ல, இதுக்குள்ள நீங்க வேற, ஏன் அத விடுங்களன். இங்க எங்கட ஆக்களே தலைவர் வீரமரணம் எண்டு சொல்லி ஒரு அஞ்சலியைக் கூடச் செலுத்த விடுறாங்களில்லை எண்டால் பாருங்கோவன்."

"என்னடா தம்பி சொல்லுற?" திகைப்போடு கேட்டார்,

"ஐயோ தலைவரே. போன கிழமைகூட பிரஸ் மீற்றிங்கைக் கூட்டி தலைவர் உயிரோட இருக்கிறார் எண்டெல்லே பழ நெடுமாறன் சொல்லியிருக்கிறார்."

"அடி செருப்பால. நானிங்க வாறதுக்கு வழி காட்டிவிட்டவங்களே அவங்கள் தானே, நான் நம்பின சில தமிழ்நாட்டுத் தறுதலைகளாலும், புலம்பெயர்ந்த சில எங்கட தறுதலைகளாலுந்தானே எனக்கிந்த நிலைமை வந்தது. கடைசி வரைக்கும் கப்பல் வரும் கப்பல் வருமெண்டு காக்க வைச்சுக் கழுத்தறுத்துப்போட்டு இப்ப அவங்கள் என்னை வைச்சுப் பிழைப்பு நடத்துறாங்களோ!?"

"ஓம் தலைவரே. போராடி வீரமரணம் எண்டு சொல்லியிருந்தால் கொஞ்சமாவது மதிப்பு இருந்திருக்கும். ஆனால் இவங்களிங்க நீங்க மட்டும் உயிரோட தப்பி ஓடிப்போய் எங்கயோ ஒளிஞ்சிருக்கிறதாச் சொல்லி உங்களப் பரிசுகெடுத்திக் கொண்டெல்லே திரியிறாங்கள்"

"அட துரோகிகளே!"

"பாத்தீங்களா தலைவரே நீங்களே விட நினைச்சாலும் இந்தத் துரோகி எண்ட சொல் உங்கள விட்டுப்போகுதில்ல" எண்டன்,

"ம்,, ம்." எண்டு முக்கினார்,

"போற போக்கைப் பாத்தால் மிமிக்ரி ஆர்டிஸ்ட் சின்னி ஜெயந்தையோ அல்லது தாமுவையோ வைச்சு இந்த முறை மாவீரர் தின உரையையே நிகழ்த்திப் போடுவாங்கள் போலயெல்லே கிடக்குது" எண்டன்

"இங்க இருந்து கொண்டு என்னால என்னத்தையடா தம்பி செய்யமுடியும், அவங்களங்க பொட்டன், கிட்டன்,சிட்டன் எண்டு ஒருத்தனையும் விடாமல் வழிச்சுத் துடைச்சு எல்லாரையுமல்லே இங்க அனுப்பிப்போட்டாங்கள்."

"ஏன் தலைவரே நாங்களிங்க நாடு கடந்த அரசை உருவாக்கின மாதிரி நீங்களுமங்க எமலோகம் கடந்த அரசு ஒண்டை உருவாக்கி இவங்களுக்கொரு கண்டன அறிக்கை விட ஏலாதே?" எண்டு கேட்டன்,

"அதுக்குத்தானே இன்னுமிங்க உருத்திரகுமார் வரயில்லையே?" எண்டார் அவர் கவலையோடு,

"அதுசரி? என்னெண்டு தலைவரே உங்களுக்கு இந்த நிலைமை ஏற்பட்டது?

"அதவிடு. அதொரு துன்பியல் சம்பவம்."

"சரி தலைவரே, உங்களிட்ட இன்னொரு கேள்வி கேக்கவேணும் எண்டு நினைச்சனான், அதென்னெண்டால் அடுத்த தேசியத் தலைவராய் நீங்கள் சீமானைத்தான் கை காட்டிவிட்டுப் போனதாக இங்க அவரே சொல்லித் திரியிறார். அது உண்மையே?"

"சீமானோ? ஆரடா அந்தச் சாமான்?"

"என்ன தலைவரே நீங்கள் சீமானுக்கு ஆமைக்கறி சமைச்சுப் போட்டது. அரிசிக் கப்பலுக்குச் சுட்டுப் பழக்கினது எல்லாத்தையுமே மறந்திட்டீங்களா?"

"அட தம்பி. விசரைக் கிளப்பாமல் விபரமாச் சொல்லடா எனக்கொண்டும் விளங்குதில்ல."

"அவர்தான் தலைவரே, தமிழ்நாட்டில இருந்து வந்த "தம்பி" பட இயக்குனர் சீமான்."

"அடட அந்த வெறுவாயனையே சொல்லுறா? அதுவந்து கொளத்தூர் மணி அண்ணன் கேட்டதால ஒரு பத்து நிமிஷம் சந்திச்சுக் கதைச்சனான், ஆனால் அவனங்க வாயால சுட்டுத் தள்ளினதைத் தவிர துவக்கால ஒண்டயுமே சுடயில்ல. அவன் றோவின்ர ஆளாத்தான் இருக்கவேணும் அவன நம்பிப்போடாதீங்கடா" எண்டார்,

"சரி தலைவரே மக்களுக்கு என் மூலமா ஏதாவது சொல்ல விரும்புறீங்களா?"

"எனக்கென்னடா தம்பி சொல்லத்தெரியும், தேசத்தின் குரல் பக்கத்தில இருந்தாலாவது எழுதித்தரச் சொல்லி வாசிச்சிருக்கலாம், ஆனால் அந்தாள் எல்லே இங்க நான் இருக்கிற பக்கமே தலை வைச்சும் படுக்குதில்லையாம், நானென்ன செய்ய? அங்க நான் வளர்த்த என்ர கழுதை மட்டும் வன்னிக்க மாட்டுப்படாமல் இருந்திருந்தால் இங்கயும் சாமான்கள் வந்துதான் சேர்ந்திருக்கும், இங்கயும் நான் எல்லாரையும் என்ர காலடியிக்க கொண்டுவந்துதான் சேர்த்திருப்பன். அதெல்லாந்தானே பிழைச்சுப்போச்சு" எண்டு சொல்லிக் கொண்டிருந்தவர் "கொஞ்சம் பொறுடா தம்பி யாரே வாறமாதிரிச் சத்தம் கேக்குது" எண்டபோது "தொப்" எண்டு அவர் பங்கருக்குள் குதிக்கும் சத்தம் கேட்டது,

> "போற போக்கைப் பாத்தால் மிமிக்ரி ஆர்டிஸ்ட் சின்னி ஜெயந்தையோ அல்லது தாமுவையோ வைச்சு இந்த முறை மாவீரர் தின உரையையே நிகழ்த்திப் போடுவாங்கள் போலயெல்லே கிடக்குது"



# கண்ணீரும் சோறும்

## கற்சுறா

அது ஒரு இலையுதிர்காலம்.

நான் எனது மகனை, அவன் படிக்கும் பள்ளியிலிருந்து அழைத்துக் கொண்டு வந்தேன். வழியில் கிடைக்கும் கற்களையும் மரத் தடிகளையும் ஆள் மாறிக் கால் மாறி நாம் அடித்தபடி சென்றோம். ஒரு இடத்தில் என்காலை இழுத்துப் பிடித்தபடி "அப்பா! அதுக்குமேல காலால மிதிக்காதீங்க" என்று கத்தினான்.

அது ஒரு இலை.

"அத உழக்கக் கூடாதப்பா!"

அது மேப்பிள் இலை! என்றான்.

மேப்பிள் இலை குறித்து அவன் அன்று தனது பள்ளியில் கற்றதை எனக்கு ஒப்புவித்தபடியே வந்தான். எமக்கு முன்னே அவனது பள்ளியின் மூத்த மாணவர்களும் மாணவிகளும் ஒருவர் மாறி ஒருவர் சண்டையிட்டும் தள்ளி விட்டும் வேடிக்கையாக விளையாடிச் சென்றனர். பள்ளியின் வாசலில் காத்து நின்ற பெற்றோர்கள் தமது பிள்ளைகளைக் கவனமாக வாகனத்திற் ஏற்றிக் கொண்டு எங்களைக் கடந்துசென்றனர். வீதியில் விளையாடியபடி செல்லும் எங்களைப் போன்றவர்களுக்குக் அவர்கள் கைகாட்டிச் செல்வதைப் பார்க்க மிகவும் அழகாக இருந்தது.

எனது மகன் தனக்குத் தனது புத்தகப் பையைத் தூக்கிக் கொண்டு நடக்கப் பாரமாக இருப்பதாகச் சொன்னான். அதனைத் தூக்கி எனது முதுகில் போட்டேன். பின்னரும் இருவரும் தடிகளாலும் தண்டுகளாலும் அடித்துக் கொண்டு விளையாடிச் சென்றோம். சிறிது தூரத்தில் தனக்கு நடக்கக் கால் நோகிறது அப்பா என்றான். அவனைத் தூக்கித் தோளில் போட்டேன். ஆனந்தமாய் என் தோளில் இருந்தபடி அவனது தலையில் முட்டும் மேப்பிள் மரக் கிளைகளிலிருந்த இலைகளைப் பிய்த்துப் போட்டபடி வந்தான்.

"தம்பி! நீ பிய்த்துப் போடும் இந்த இலைகளை வேறு யாரும் உழக்கமாட்டார்களா?" எனக் கேட்டேன்.

"அவங்கள் உழக்கினா நாங்க என்ன செய்யுறது? நாங்க உழக்கக் கூடாது அதுமட்டுந்தான். ஆட்டம் குளோஸ், நீங்கள் பேசாமல் வாங்கோ" என்றான்..

குழந்தைகளின் வாழ்வு குழந்தைத் தனமாக இருக்க வழி செய்து விடுவதுதான் ஒரு சமூகத்திற்கு இருக்கும் மிகப்பெரிய பொறுப்பு என்று நான் நினைக்கிறேன்.

ஆனால் எனது சமூகம், ஒரு சமூகமாக இந்தக் குழந்தைத் தனத்தை மதித்ததும் இல்லை. ரசித்ததும் இல்லை. குழந்தைகளாக இருக்க விட்டதும் இல்லை.

எமது குழந்தைகளின் வாழ்வை, அதன் எதிர்காலத்தை எவ்வாறெல்லாம் நமது சமூகம் நாசமாக்கியது என்பதனை நான் எனது வாழ்காலத்தில் அதிகமாகப் பார்த்தேன். அந்த நாசம் எமது சமூகத்தை எந்தளவில் பாதிக்கவைத்திருக்கிறது என்று நாசப்படுத்தியவர்கள் யாருக்குமே இன்றுவரை ஒரு உறுத்தல் இல்லை. சந்தர்ப்பங்களும் சாத்தியங்களும் கிடைத்தால் இன்னொரு தடவை அந்த நாசத்தை விளைவிக்க அவர்கள் எல்லோரும் தயாராய் இருப்பதுதான் அதி ஆபத்தான விடயம்.

இந்த அதி ஆபத்தான விளைவினை நமது சமூகம் கண்டுணரக் காரணமாய் இருந்தவர்களில் மிக முக்கியமானவர்களாக நமது அறிவுஜீவிகள்- பல்கலைக்கழகப் பேராசிரியர்களை, உடகவியலாளர்கள்.- கவிஞர்கள், கதை சொல்லிகள், கட்டுரையாளர்கள் என்று நாம் முக்கியப்படுத்தும் எழுத்தாளர்கள், கலைஞர்கள் என்பவர்களே அதிகளவில் இருந்தார்கள்.

இவர்களைத்தான் நாங்கள் பாடகர், ஊடகர், நாடகர், வீடகர், தேடகர், பூடகர், ஆடகர் என்று அதிமரியாதைச் சொற்களுடன் அழைத்து அவர்களைத் தினம் தினம் கவுரவப்படுத்துகிறோம். தங்களுக்குக் கொடுக்கப்படும் இந்தக் கவுரவம் அளவிற்கு மிஞ்சியது என்பதும் அந்த மரியாதை வீண் மரியாதை என்பதும்

> **கோப்பையிலிருந்து ஒரு கவளம் சோற்றை அள்ளி தனது வாயிற்குள் திணிக்க முன்பு அதற்குள் கொட்டும் கண்ணீர்த் துளிகளோடேயே தினமும் பிசைந்து சோற்றை உண்ணும் தாய்மார்களைக் கொண்டதாகவே நமது ஈழதேசத்தை உருமாற்றிவிட்டிருக்கிறார்கள் இவர்கள்.**

கூச்சம் கொள்ளக் கூடியது என்பதும் இத்தனை “கர்”களாலும் இலகுவாக உணரக்கூடியது தான். ஆனாலும் தங்களை அண்டிப் பிழைக்கும் கூட்டத்திற்கு இவ்வாறன தகுதிகளைத் தமக்குக் கொடுத்துக் கொண்டிருக்க வேண்டிய நிலையுள்ளது என்பது அத்தனை “கர்”களுக்கும் நன்றாகத் தெரியும். அதனால் அந்த வீண்மரியாதைகளை எந்தக் கூச்சமும் இல்லாது ஏற்றுக் கொள்கிறார்கள். இவை ஒரு மீள்சுழற்சி மரியாதைகள். இந்த மரியாதைகளைக் கொண்டு அவர்களது எழுத்துக்களை அளவிடவும் முடியாது. அளவிடவும் கூடாது.

இவ்வாறு நமது சமூகத்தின் ஆளுமைகளாக அன்றும் இன்றும் அடையாளம் காட்டப்படுபவர்கள் கடந்த காலத்தில் எவ்வாறு நமது குழந்தைகளை வளர்ந்தவர்களாக ஆக்கினார்கள் என்றும், ஈழத்தில் நடந்த ஒரு கொடிய யுத்தத்தை விடுதலை என்ற பெயரில் எவ்வாறு எழுதித் திசை திருப்பினார்கள் என்றும் எழுதிவிட வேண்டிய காலத்தில் நாம் இருக்கிறோம். இந்த அயோக்கியர்களது எழுத்துக்களை வரிக்குவரி விளக்கம் கொள்ள முற்பட்டால் நமது சமூகம் பாழ்பட்டுப் போன கதையை எதிர்காலச் சந்ததி தெளிவாக உணர்ந்து கொள்ள முடியும்.

கோப்பையிலிருந்து ஒரு கவளம் சோற்றை அள்ளி தனது வாயிற்குள் திணிக்க முன்பு அதற்குள் கொட்டும் கண்ணீர்த் துளிகளோடேயே தினமும் பிசைந்து சோற்றை உண்ணும் தாய்மார்களைக் கொண்டதாகவே நமது ஈழதேசத்தை உருமாற்றிவிட்டிருக்கிறார்கள் இவர்கள்.

தனது நிலமென்றும், தனது மண்ணென்றும் தனது மொழியென்றும். மொழியின் பற்றென்றும் ஒரு குழந்தைக்கு மூளைச்சலவை செய்து கூட்டிச்சென்ற காலம் போய், அந்தக் குழந்தைகளை நித்திரைப் பாயிலும் பள்ளி சென்ற வழியிலும் கோயிலுக்குப் பூவைத்து விட்டு வீடு திரும்பும் வழியிலும் வைத்து அள்ளிச் சென்று ஆயுதங்களைக் கையில் செருகி மரணிக்க வைத்த கதைக்குக் காரணமானவர்கள், தனியே யுத்தத்தை மண்டைக்குள் வைத்திருந்து ஆயுதங்களோடு அலைந்தவர்கள் மட்டுமல்ல. அவர்களைக் காப்பாற்றி தொடர்ந்தும் வாழ வைத்தபடி இருந்து அவர்களுக்கு உத்தியோகம் பார்த்த நமது புத்திசீவிகளும், ஊடகவியலாளர்களும் தேசியக் கவிஞர்களும் கதை சொல்லிகளுமே.

நமது யுத்தகாலத்தில் இவர்களுக்கு நமது சமூகத்தின் மீது என்ன பற்று இருந்தது? அதனை எவ்வாறு வெளிப்படுத்தினார்கள்? ஈழத்தின் தாய்கள் இருளில் அழுது வடித்த கண்ணீரைப் பார்க்காது, இவர்கள் அனைவரும் கடந்த காலத்தில் என்ன கதை எழுதிக் கொண்டிருந்தார்கள்? என்பதனை நாம் பேசுவதினூடாகவே நமது சமூகத்தினை அறிவு சார்ந்து கணக்கிட்டுக் கொள்ள முடியும்.

அறிவார்ந்து கணக்கிடமுடியாதபடி அதனை விளங்கிக் கொள்ளாதபடி நமது மண்டைக்குள்ளும் விதைக்கப்பட்டிருப்பது நஞ்சு என்ற நஞ்சேதான். அந்த நஞ்சை மண்டைக்குள் வைத்துக்கொண்டு உழலுபவர்களால் வேறு விதமாகச் சிந்திக்கவே முடியாது. அவர்கள் சொல்லும் வார்த்தைகளையே உண்மை என்று மீண்டும் மீண்டும் நம்பவேண்டும். இல்லையென்று யோசிக்க எந்த அவகாசமும் அவர்கள் கொடுப்பது இல்லை.

தன்னுடைய குழந்தையைப் பிரிந்து அல்லது இழந்து அல்லலுறும் ஒரு தாய் தினந் தினம் தனது உணவை உண்ணும் தருணங்களிலெல்லாம் தாரையாகக் கண்ணீர் சிந்தியபடியேதான் உண்ண வைக்கப்பட்டிருப்பது இந்த வகை அயோக்கியர்களால் தான். ஒரு கவளம் சோற்றிற்குள் ஆயிரம் கண்ணீர்த்துளிகளைக் கொட்டும் தாய்களினால் இந்த அயோக்கியர்களை விளங்கிக் கொள்ளும் அவகாசம் இருந்து விடுவதில்லை.



"பொலிஸ் படையின் முன்னோ ராணுவத்தின் முன்னோ எதிர்ப்படுகிற எவரும் பால் வயது வேறுபாடின்றிப் பயங்கரவாதியாகக் கருதப்படலாமெனின் பயங்கரவாதியாகக் கருதக்கூடிய எவரும் பால் வயது வேறுபாடின்றிப் பயங்கரவாதியாகவே இருப்பது சற்றுப் பாதுகாப்பானது" என்று முன்னோடி ஈழக்கவிஞர் சிவசேகரம் அவர்களையும் எழுதவைத்த "அடங்காப் பற்று" இருக்கே! அதுதான் ஆபத்தானது என்கிறேன்.

"துரோகி எனத் தீர்த்து
அன்னொருநாள் சுட்ட வெடி
சுட்டவனைச் சுட்டது.
சுடக் கண்டவனைச் சுட்டது

என்று எழுதி

இறுதியில் சும்மா நின்றவனையும் சுட்டது என்று ஒரு காலத்தில் இந்த சமூகத்தின் பாடுகளை எழுதிய "முன்னோடிக்கவி"யா இதையும் எழுதியது என்று நினைத்தால் நாம் மயங்கி விழ நேரிடும்.

பால் வயது வேறு பாடின்றி பயங்கரவாதியாகவே இருப்பது சற்றுப் பாதுகாப்பானது என்று, புலிகள் குழந்தைகளைக் கொல்லப் பிடித்துச் சென்ற காலத்தில் எழுதுவது என்பது கலைஞன் என்பவன் செய்யக் கூடாதது. ஆனால் அதனை எந்தக் கூச்சமும் இல்லாது கவிஞர் சிவசேகரம் அவர்கள் இதனைச் செய்தார்.

இவ்வாறு ஒரு பெரும் ஈழக் கவிஞனது எழுத்தின் பின்னாலுள்ள பொறுப்பற்ற தர்க்கம் குறித்து நம்மில் யாரேனும் ஒருவர் ஒருபொழுதிலும் கேள்வி கேட்டதில்லை.

தமது தேவைக்காக எதையும் சிந்திக்காமல் விடுபவர்களையும், தமக்குக் கற்பிக்கப்பட்ட கதைகளுக்கேற்ப மட்டும் விளக்கக் கதைகளைச் சொல்பவர்களையும் மறுத்து நம்மால் சிந்திக்க முடியாதிருக்கிறது என்பதென்ன நமது தலைவிதியா? அல்லது தம் குழந்தைகளை தவிக்கவிட்டு அல்லும் பகலும் அங்கொன்றும் இங்கொன்றுமாயப் புலம்பியழுது திரியும் தாய்மார்கள் வாழ்வு என்ன காற்றில் விதிக் குரங்கு பிய்த்தெறியும் பஞ்சுத் தலையணையா?(நன்றி வ.ஐ.ச.ஜெ.)

"பிள்ளைகளின் பொன்னுடலம் வீழும்
ஒவ்வொரு கணமும்
பூமிப்பந்தே புல்லரித்துக் கொள்ளும்.

என்று புதுவை ரத்தினதுரை எழுதியபோது அதற்குள் இருந்த அயோக்கியத்தனம் குறித்து இன்றுவரை யாரும் கவலை கொள்ளவில்லை. எமது சமூகத்தின் குழந்தைகள் ஆயுதம் தரிக்கப்பட்டுக் கொல்லப்பட்ட காலத்தை பொற்காலமாகக் கொண்டாட எழுதப்பட்ட அசிங்கமான வரிகள் இவை. ஆனால் இது குறித்து எந்த விழிப்புணர்வும் இல்லாது நமது சமூகம் கொண்டடிய கவிதை இது.

ஆனால் புதுவை ரத்தினதுரை அவர்கள் தன் மகனையும், தான் எழுதிய அந்த வரிகள் காவிச் சென்ற பொழுது அதற்கெதிராகக் கொதித்தெழுந்து தன் மேலாடையைக் கழற்றி எறிந்து சண்டையிட்ட சண்டியனாக மாறினார் என்று ஒரு கதை இருக்கிறது.

இவ்வாறு தான் எமது கவிசொல்லிகள், கதைசொல்லிகள், கட்டுரை சொல்லிகள் அனைவரும் தமது சிறுவர்களைத் தவிர்த்து நமது சிறுவர்களை வளந்தவர்களாக்கினார்கள்.

வளர்ந்தவர்களாகிய சிறுவர்களது தாய்மாரை தாரை தாரையாய் கண்ணீர் சிந்தி தமது சோற்றுக்குள்ளே கொட்ட வைத்துச் சோறுண்ண வைத்தார்கள்.

அதன் கதைகளையே நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல முனைகிறேன்.

ஆனாலும் நான் இங்கே முதலில் குறிப்பிட்டுச் சொல்லும் தாய் இது எல்லாவற்றிலும் இல்லாத வேறு ஒருதாய்.

அவர்தான் எனது கிராமத்தில் கொலைசெய்யப்பட்ட யமுனாவின் தாய்.

எனது பள்ளியின் மாணவியான யமுனா பாக்கியநாதன் என்ற பதினாறுவயது கொண்ட பெண்ணினது கொலை பற்றி நான் பல்வேறு இடங்களில் பதிவு செய்து வந்திருக்கிறேன். ஆனாலும் யமுனாவின் பெற்றோருடன் அண்மையில் பேசிய விடயங்களை மட்டும் இங்கே பதிவு செய்கிறேன்.

நான் எனது பாடசாலைக் கல்வி முடிந்த பின் எனது பள்ளி நண்பர்களுடன் இணைந்து ஒரு கல்வி நிறுவனத்தை நடத்தி வந்தேன். அது

"பிள்ளைகளின் பொன்னுடலம் வீழும்
ஒவ்வொரு கணமும்
பூமிப்பந்தே புல்லரித்துக் கொள்ளும்.
என்று புதுவை ரத்தினதுரை எழுதியபோது அதற்குள் இருந்த அயோக்கியத்தனம் குறித்து இன்றுவரை யாரும் கவலை கொள்ளவில்லை. எமது சமூகத்தின் குழந்தைகள் ஆயுதம் தரிக்கப்பட்டுக் கொல்லப்பட்ட காலத்தை பொற்காலமாகக் கொண்டாட எழுதப்பட்ட அசிங்கமான வரிகள் இவை. ஆனால் இது குறித்து எந்த விழிப்புணர்வும் இல்லாது நமது சமூகம் கொண்டடிய கவிதை இது.
ஆனால் புதுவை ரத்தினதுரை அவர்கள் தன் மகனையும், தான் எழுதிய அந்த வரிகள் காவிச் சென்ற பொழுது அதற்கெதிராகக் கொதித்தெழுந்து தன் மேலாடையைக் கழற்றி எறிந்து சண்டையிட்ட சண்டியனாக மாறினார் என்று ஒரு கதை இருக்கிறது.

இந்திய இராணுவக் காலம். அது ஒன்றும் இலகுவான காலமல்ல. அன்றைய இலங்கை இராணுவத்தோடு இருக்கும் அனுபவங்களைக் கொண்டு இந்திய இராணுவத்தை நாம் அளவிடவே முடியாது. அவ்வாறு அளவிட்டு மாட்டுப்பட்டு அள்ளுப்பட்ட கதைகள் பலருக்கும் பலவாறாய் இருக்கும்.

பல்வேறு தருணங்களில் இந்திய இராணுவத்தினர் எமது கல்வி நிறுவனத்தின் சூழவுள்ள பகுதிகளில் இரகசியமாகப் படுத்துக்கிடந்தனர். எமக்குக் கடலை எண்ணை மணம் மட்டும் எங்கோ மணக்கிறது என உணர்ந்தாலும் அவர்களைக் கண்டறிய முடியாதிருந்தது.

எனது வீட்டின் முன்பக்கத்தில் இருந்தது அந்தக் கல்வி நிறுவனம். அதன் பக்கங்கள் குளத்தாலும் காடாலும் சூழ்ந்திருந்தபடியால் இந்திய இராணுவத்தினரைப் பிரித்தறிவது மிகவும் சிரமம். கடலை எண்ணை மணமும் நாய்களின் குரைப்புமே அக்காலத்தில் அவர்களைப் பிரித்தறியும் சந்தர்ப்பங்களை வழங்கின.

எமது கிராமத்திற்கு அருகிலில் துணுக்காய் என்ற கிராமத்தில் இருந்த இந்திய இராணுவ முகாமில் ஒரு தமிழ் நாட்டைச் சேர்ந்த சிப்பாயும் இருந்தார். ஒரு முறை அவர்கள் ரோந்து வந்த நேரம் மல்லாவிச் சந்தியிலிருந்த புடவைக் கடையில் பொருட்களைக் கொள்வனவு செய்தார்கள். கொள்வனவு செய்த பொருட்களை தாம் தூக்கிக் காவமுடியாது என்றபடியால் தமது முகாமிற்கு அருகிற்கு மல்லாவி வழியால் வரும் துணுக்காய் செல்லும் பஸ்சில் அதனைப் போட்டு விட்டு நடந்து போனார்கள். இதனை வேவு பார்த்துக் கொண்டிருந்த ஒரு புலியின் “வால்” ஒன்று வழியின் இடையில் பஸ்ஸை மறித்து அந்தப் பொருட்களை இறக்கிப் புலிகளிடம் ஒப்படைத்தது. புலிகள் அந்தப் பொருட்களைப் பிரித்துப் பார்த்த போது அதற்குள் இருந்தவையெல்லாம் அதிகமாக அந்த இராணுவத்தினர் தமது மனைவிமார்களுக்கு வாங்கிய உள்ளாடைகளே.

“தங்களுக்குக் கையில் கொடுக்கும் சொற்ப பணத்திற்கு வாங்கிய பொருட்கள் அவை. ஒரு இராணுவச் சிப்பாயின் ஆகக் குறைந்தளவு ஆசை அது. அதனைப் பறிப்பது இரக்கமற்ற செயல்- கீழ்த்தரமான செயல் அல்லவா” என்று அங்கிருந்த சொர்ணப்பன் என்ற அந்த ஒரு தமிழ்ச் சிப்பாய் ஊர் மக்களுக்கு மறுநாள் மல்லாவிச் சந்தியில் வைத்துச் சொல்லிக் கொண்டிருந்தான். அவன் இன்னும் சில வருடங்களில் ஓய்வு பெற இருப்பதாகவும் சொல்லிக் கொண்டிருந்தான்.

அந்த சொர்ணப்பனுக்கு யமுனா காதல் கடிதம் எழுதினாள் என்பதே புலிகள் யமுனாவைக் கொல்வதற்கு முன்வைத்த காரணம்.

ஒருநாள் எமது கல்வி நிறுவனத்தின் முன்னாலிருந்த வீரை மரத்தில் புலிகள் எழுதி வைத்திருந்த யமுனாவின் மரணதண்டனை குறித்த சுவரொட்டியை இளக்கயிற்றால் ஒருவன் சுற்றிக் கட்டிக் கொண்டிருந்தான். அதன் சில நிமிடங்களில் மல்லாவிச் சந்தியின் பக்கம் இருந்து வெடிச்சத்தம் வந்தது.

பாடசாலையின் வழியில் வைத்து யமுனாவைப் புலிகள் கடத்தியபின் ஏறத்தாழ ஒரு வாரத்தின் பின்னரே கொலை செய்தார்கள். அவள் வாழ்ந்த எமது சமூகத்தாலும் அவள் கல்வி கற்ற பாடசாலையினாலும் அவளை விடுதலை செய்யக் கூடிய எந்த நிர்ப்பந்தத்தையும் கொடுக்கமுடியாதிருந்த சூழலை இன்று யாராலும் புரிந்து கொள்ள முடியாது. அது வேறு ஒரு வகையான காலம்.

யார் எமக்கருகில் வேவு பார்த்த வண்ணம் இருப்பார்கள் என்று அறியவே முடியாத காலமாய்ப் புலிகள் உருவாக்கி வைத்திருந்தார்கள். “பாவம் யமுனா” என ஆறுதல் வார்த்தை ஒன்றைக் கூட உதிர்த்துவிட முடியாதபடி இருந்த காலம் அந்த 1989ம் ஆண்டு காலம்.

யமுனாவின் பேத்தி மட்டுமே ஓலமிட்டு அழுததைப் பார்த்தேன். எங்கள் ஊரில் வாழ்ந்திருந்த ஒரு பெண் நாங்கள் எல்லோரும் மதியாவர்ணம் பெஞ்சாதி (இந்தப் பெண் குறித்த கதை தனிக் கதை வேறு தளத்தில் எழுதப்பட வேண்டியது.) என்று அழைக்கும் அந்தப் பெண் மட்டும் மல்லாவிச் சந்தியிலிருந்து அந்தக் கொலைகாரரர்களை நோக்கி மண் அள்ளித் திட்டியதாக பின்நாளில் அறிந்தேன். ஊரே சேர்ந்து அழுதிருக்க வேண்டிய கொலை அது. ஆனால் அது நிகழவில்லை.

யமுனாவைக் கொலை செய்த நேரத்தில் வீரைமரத்தில் சுவரொட்டியைக் கட்டிய புலி அமைப்பாளன் (அவனை அப்பொழுது நிமால் என்று அழைத்தார்கள்.) சில தினங்களில் எமது கல்வி நிறுவனத்திற்குள் வந்து தாம் ஏன் யமுனாவைக் கொலை செய்தோம் என்ற நியாயத்தை மாணவர்களுக்குச் சொல்வதற்குச் சந்தர்ப்பம் கேட்டான். அவனுக்கான சந்தர்ப்பத்தை நாம் வழங்கினோம். வழங்கியே ஆகவேண்டும். அவன் மாணவர்களின் முன்னிருந்து அதன் கதையைச் சொல்லத் தொடங்கினான்.

துணுக்காயிலிருந்த இந்திய இராணுவத்திற்கும் யமுனாவிற்கும் தொடர்பு இருந்ததையும் அங்கிருந்த சொர்ணப்பன் என்ற இராணுவத்தானுக்கும் யமுனாவுக்கும் காதல் தொடர்பு இருந்தது என்றும் சொன்னான். யமுனா சொர்ணப்பனுக்கு எழுதிய காதல் கடிதம் தம்மிடம் இருப்பதாகச் சொல்லி அதனை வாசித்துக் காட்டினான். நான்



மாணவர்களின் பின்னால் நின்று கேட்டுக் கொண்டிருந்தேன்.

அவனுடைய விளக்கமளிப்பு முடிய அவன் யமுனா சொர்ணப்பனுக்கு எழுதிய கடிதத்தை வாசித்து முடியும் போது , அந்த வகுப்பிலிருந்த அவளது நண்பி "இந்தக் கடிதத்தை எனக்குப் பார்க்கத் தாருங்கள்" என்றாள். அவன் கொடுத்தான். பார்த்த உடனேயே அதனைத் திருப்பிக் கொடுத்து "இது எனது நண்பி யமுனாவின் கையெழுத்தல்ல" என்றாள்.

ஒரு முறை எச்சிலை விழுங்கிய அந்தப் புலி அமைப்பாளன் "ஒறிஜினல் கடிதத்தை நாம் தலைவருக்கு அனுப்பிவிட்டோம்" என்றான். "ஏன் நீங்கள் அந்த ஒறிஜினல் கடிதத்தை அவளுடைய அப்பாவுக்குக் காட்டவில்லை?" என்று திரும்பவும் கேட்டாள் நண்பி.

பின்னால் நின்ற எனக்குள் இரத்தம் உறைந்தது. அவனிடம் அதற்கு ஒரு பதிலும் இருக்கவில்லை.

அந்த நண்பியின் பெயரை இந்த இடத்தில் பாவிக்க வேண்டும் என்றே எனக்கு விருப்பம் அதிகம் உள்ளது. அவள் எங்கிருக்கிறாள்? எப்படியிருக்கிறாள்? என்ன மனநிலையில் இருக்கிறாள்? என்று எதுவும் தெரியாததால் அதனைத் தவிர்க்கிறேன்.

என்னுடைய வாழ்வில் அந்த நண்பிக்கு எப்பொழுதும் ஒரு தனி இடம், மரியாதை இருக்கிறது. அந்தக் காலத்தின் "இரத்த சாட்சியம்" அவள். அந்த இடர் அடைந்த காலத்தில் யாவரும் மவுனமான காலத்தில் யமுனாவினது நண்பியின் கேள்வி அதி முக்கியமானது. இப்பொழுது இதனைச் சொல்லும் பொழுது கேட்பதற்கு அது வெறும் கதையாக இருக்கும். ஆனால் அன்றைய நிலை கதைக்கானதல்ல. இன்னொரு கொலைக்கானது. ஆனால் யமுனாவின் நண்பியினது அந்தக் கேள்வியின் பின் சில மழுங்கிய பதில்களுடன் அந்த இடத்தை விட்டு அகன்றான் அந்தப் புலி அமைப்பாளன்.

யமுனாவின் தந்தை எமது பாடசாலையின் உடற்பயிற்சி (பி. ரி.) மாஸ்டர். விளையாட்டின் சட்டதிட்டங்களில் அதன் ஒழுங்குகளில் அந்த ஒழுங்குகளைக் கடைப்பிடிப்பதில் மிகவும் கடுமையானவர். ஆனால் மாணவர்கள் எல்லோருக்கும் அவரை நன்கு பிடிக்கும். அவரது நேர்மையான குணம் மாணவர்களை அவருக்கு அருகில் எப்பொழுதும் நிறுத்தும். விளையாட்டு மைதானத்தில் ஆசிரியர்கள் தவறு விட்டாலும் மாணவர்களை அடிப்பது போல் ஓங்கி அடித்து விடுவார். தனது கை ஓங்கிய கை என்பதையே அவர் அடிக்கடி சொல்லுவது. அதனாலும் மாணவர்களுக்கு அவரை நன்கு பிடித்திருந்தது. அவருடைய இளமைக்காலத்தில் கிளித்தட்டு விளையாட்டில் அகில இலங்கையில் "குருவி" என்று பட்டம் எடுத்தவர் அவர்.

அவனுடைய விளக்கமளிப்பு முடிய அவன் யமுனா சொர்ணப்பனுக்கு எழுதிய கடிதத்தை வாசித்து முடியும் போது , அந்த வகுப்பிலிருந்த அவளது நண்பி "இந்தக் கடிதத்தை எனக்குப் பார்க்கத் தாருங்கள்" என்றாள். அவன் கொடுத்தான். பார்த்த உடனேயே அதனைத் திருப்பிக் கொடுத்து "இது எனது நண்பி யமுனாவின் கையெழுத்தல்ல" என்றாள்.
ஒரு முறை எச்சிலை விழுங்கிய அந்தப் புலி அமைப்பாளன் "ஒறிஜினல் கடிதத்தை நாம் தலைவருக்கு அனுப்பிவிட்டோம்" என்றான். "ஏன் நீங்கள் அந்த ஒறிஜினல் கடிதத்தை அவளுடைய அப்பாவுக்குக் காட்டவில்லை?" என்று திரும்பவும் கேட்டாள் நண்பி.
பின்னால் நின்ற எனக்குள் இரத்தம் உறைந்தது.
அவனிடம் அதற்கு ஒரு பதிலும் இருக்கவில்லை.

தன்னைப் போல் ஒரு திறமை கொண்ட ஒரு பெண்ணாக தனது மகளையும் அவர் வளர்த்தார். விளையாட்டுப் போட்டிகளில் 100 மீட்டர், 200மீட்டர் என்ற வேக ஓட்டங்கள் என்றாலும் சரி, அஞ்சல் ஓட்டம் மற்றும் வலைப்பந்து விளையாட்டு, சைக்கிள் ஓட்டம் என்றாலும் மிக வேகத் திறமை கொண்ட பெண் அவள். இதனை அந்த ஊர் முழுவதும் அறியும். அதையும் விட தன்னுடைய இளவயதிலேயே கலப்பையில் மாடு பூட்டி தனது காணியை உழுது பயிர் விதைத்ததையும் என்னைப் போல் அந்த ஊர் அறியும். அதனையும் விட நாட்டுக் கூத்து மேடைகளில் தனது திறமையை வெளிக்காட்டி நின்றவள். அத்தனை தனித் திறமைகளுடனும் அந்த ஊரில் களை கட்டியவள் யமுனா.

அப்படியான ஒரு பெண்ணை எதுவுமேயற்ற ஒரு பொய்காரணம் சொல்லி புலிகள் படுகொலை செய்தார்கள். அவளைக் கொலை செய்வதற்காகச் சொன்ன காரணங்களைப் பொய் என்று சொல்ல இன்று வரை அந்த ஊர் மக்களுக்குச் சந்தர்ப்பம் வாய்க்கவில்லை.

அண்மையில் யமுனாவின் அப்பா பி.ரி. பாக்கியநாதன் அவர்களையும் அவளது அம்மாவையும் சந்திக்க முடிந்தது. நான் அவர்களிடம் நேரடியாகவே பேசத் தொடங்கினேன்.

யமுனாவின் கொலை தொடர்பாகவே நான் உங்களுடன் அதிகம் பேசவேண்டும் என்றேன்.

இருவரும் சற்று நிமிடம் பேசவில்லை. இத்தனை வருடங்களின் பின் அது குறித்த பேச்சை எடுப்பதில் அவர்களுக்குள் தன்னுணர்வு நெருடியிருக்க வேண்டும். யமுனாவின் மரணவீட்டில் பார்த்த பின் அன்றுதான் அவர்களைப் பார்த்தேன். அப்போது 33 வருடங்கள் கடந்திருந்தன.

சிறிது நேரம் மவுனம் காத்துவிட்டு சேர் பேசினார். யமுனாவின் அம்மா குனிந்தபடி அழுதுகொண்டிருந்தார்.

"தம்பி பின்பு கொஞ்ச நாட்களில் அவர்களுடைய வரிப்புலி ஆடைகளை அணியாத வெள்ளை உடுப்புகளை உடுத்தியபடி சில புலிகள் வீடுதேடி வந்தார்கள்" என்று சொன்னார்.

வந்தவர்கள் "அந்தக் கொலை தவறுதலாக நடைபெற்று விட்டது! பிள்ளைக்கும் காலம் வந்திட்டுது. எங்கட ஆக்களும் அவசரப்பட்டிட்டினம்" என்றும், அதற்கு பருப்பும் சீனியும் தர இருப்பதாகச் சொல்லி ஒரு பேப்பரில் ஒப்புதல் கையெழுத்து வாங்க வந்தார்கள்.

"அந்த இடத்தில் ஓங்கி அடித்திருப்பேன். என்னுடைய ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு, "உன்ர பருப்புக்கும் சீனிக்கும் நான் புள்ளப் பெறேல்ல" எண்டு சொல்லிவிட்டு நான் வீட்டுக்குள்ள போட்டன் தம்பி . என்ர மனிசியோட இருந்து கனநேரம் கதைச்சுக் கையெழுத்து வேண்டிக் கொண்டு போனாங்கள்." என்றார்.

அவரது மனைவியும் அன்று நடந்த கதையைச் சொல்லி தன்னைக் கட்டாயப் படுத்தி அந்தக் கொலைக்கான மன்னிப்பு ஒப்புதலை வாங்கிச் சென்றார்கள் என்றார். அன்றைய காலத்தில் இந்தக் கொலைக்கு மட்டுமல்ல எந்தக் கொலைக்கும் மக்கள் யாரும் ஒரு சிறிய எதிர்க் குரலையும் காட்டாது இருந்ததற்கான பயத்தை விளக்கியபடி அவர் பேசினார். வழமையை விடவும் மல்லாவிக் கிராமம் கொலைப் பயமுறுத்தலுக்குள்ளான காலம் அது என்றார்.

அமிர்தலிங்கத்தைப் படுகொலை செய்யச் சென்ற விசு என்ற புலிகளின் படுகொலையாளன் அப்பொழுது மல்லாவியில் தங்கி நின்றான். அவனே யமுனாவின் கொலைக்கும் முக்கிய காரணமானவன் என்பதனை பி.ரி பாக்கியநாதன் மாஸ்டர் தெளிவுபடக் கூறினார்.

நான் முன்னரே எழுதியது போல் யமுனா 26 மார்ச் 1989 இல் படுகொலை செய்யப்படும் வரை தான் கடத்தப்பட்டிருக்கிறேன் என்றோ புலிகளின் மொழியில் தான் ஒரு துரோகி என்றோ அல்லது தான் கொல்லப்படப் போகிறேன் என்றோ அவள் அறிந்திருக்கவில்லை. பாண்டியன் குளத்தில் அவளைத் தங்க வைத்திருந்த வீட்டிலும் அவள் ஏன் இங்கு வந்திருக்கிறாள் என்றோ தான் யாருடைய மகள் என்றோ தெரியப்படுத்தவில்லை. அது ஏன் என்று இன்று வரை தெரியவில்லை. அதன் பின்னாலுள்ள சூட்சுமம் அறியமுடியவில்லை.

கொலைக்காக அழைத்துச் செல்லும்போது அவளைத் தங்க வைத்திருந்த அந்த வீட்டிலிருந்து பெற்றோரிடம் கொண்டு போய் விடுவதாகச் சொல்லிக் கூட்டிச் சென்றிருக்கிறார்கள்.(இங்கே இயல்பாக எழக்கூடிய சந்தேகங்களை நான் தவிர்க்கிறேன். இது அதற்கான ஆய்வு இது அல்ல.)

வழமையாகப் புலிகள் மரணதண்டனை வழங்கும் மின்கம்பம் ஒன்று மல்லாவிச் சந்தியில் இருக்கிறது. இந்தப் படத்தில் காணும் கம்பம் புதியது. கிட்டத்தட்ட இதன் அருகிலேயே அது இருந்தது. ஆனால் புலிகள் யமுனாவைக் கம்பத்தில் கட்டவில்லை. அவளின் கொலைக்கு இரண்டு மாதங்களின் முன் தம்மிடம் உரிமை பெறாது அல்லது கப்பம் கட்டாது மரம் ஏற்றி வந்த லொறியிலிருந்த மரங்களைப் பறித்துப் புலிகள் கொழுத்தினர். அதில் மூன்று நீண்ட பெரிய மரக் குற்றிகள் எரிந்த குறையோடு சந்தியில் கிடந்தன. யமுனாவை அந்தக் குற்றி ஒன்றில் இருத்தியிருக்கிறார்கள். அழைத்து வந்தவர்களில் ஒருத்தி "உனக்கு எது விருப்பம்? பூவா? பொட்டா?" எனக் கேட்டாளாம்.

"எனக்கு விளங்கவில்லை" என்று யாமுனா பதில் சொல்லியிருக்கிறாள்.

திரும்பவும் "சும்மா சொல்லு. பூவா? பொட்டா? உனக்குப் பிடிக்கும் என்று சொல்லு" எனக் கேட்டிருக்கிறாள். புலிக்காரப் பெண்.

யமுனா எதேச்சையாக அதன் உள்விவகாரம் புரியாது "பொட்டு" என்றிருக்கிறாள். உடனே நெற்றியில் "பொட்டு" வைத்து விட்டிருக்கிறார்கள் புலிப் பெண்கள்.

யமுனாவைக் கொலை செய்த பெண்ணும் கொலை நடந்து சில மாதங்களில் ஓமந்தையிலிருந்து லொறியில் வந்த பொழுது இராணுவத்தின் கிளைமோரில் இறந்து விட்டாள். முக்கிய சூத்திரதாரியும் அமிர்தலிங்கம் கொலையுடன் இறந்து விட்டான். ஆனால் பாருங்கள், இந்த ஒரு கொலையில் மட்டும் சம்பந்தப்பட்ட பலர் இன்றும் உயிரோடு இருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் தாம் வாழும் காலத்தில் தாம் சம்பந்தப்பட்ட கொலை குறித்து மிகக் கடுமையான பொறுப்புக் கூறல் இருக்கிறது என்றே நம்புகிறேன். அந்தப் பொறுப்பினைத் தட்டிக்கழித்து உயிர் வாழ்தல் எந்த அர்த்தங்களையும் அவர்களது வாழ்விற்குத் தந்து விடாது.

யமுனாவின் ஒரு நிழற்படத்தைத் தன்னும் பெற்று விடவேண்டும் அல்லது பார்த்துவிட வேண்டும் என நினைத்து சேரிடம் கேட்டபொழுது, "தம்பி அவளது படங்களை மட்டுமல்ல, அவளது விளையாட்டுச் சான்றிதழ்கள், எனது விளையாட்டுச் சான்றிதழ்கள், யமுனாவின் நாடகப் படங்கள், உடுப்புக்கள் அனைத்தையும் வட்டுவாகலில் கைவிட்டுவிட்டேன். எதுவுமேயற்று வெறுங்கையுடன்தான் இங்கு திரும்பி வந்திருக்கிறேன். என்கையில் இப்பொழுது எதுவுமில்லை" என்று கண்கலங்கினார். ஆசைக்குப் பார்க்க ஒரு புகைப்படமும் இல்லையப்பு என்றார்.

புலிகள் முள்ளிவாய்க்கால் வரை மக்களை அழைத்துச் சென்று தமது வரலாற்றை மட்டும் அவர்கள் அழிக்கவில்லை.

"
யமுனாவை அந்தக் குற்றி ஒன்றில் இருத்தியிருக்கிறார்கள். அழைத்து வந்தவர்களில் ஒருத்தி "உனக்கு எது விருப்பம்? பூவா? பொட்டா?" எனக் கேட்டாளாம்.
"எனக்கு விளங்கவில்லை" என்று யாமுனா பதில் சொல்லியிருக்கிறாள்.
திரும்பவும் "சும்மா சொல்லு. பூவா? பொட்டா? உனக்குப் பிடிக்கும் என்று சொல்லு" எனக் கேட்டிருக்கிறாள். புலிக்காரப் பெண்.
யமுனா எதேச்சையாக அதன் உள்விவகாரம் புரியாது "பொட்டு" என்றிருக்கிறாள். உடனே நெற்றியில் "பொட்டு" வைத்து விட்டிருக்கிறார்கள் புலிப் பெண்கள்.
"



# நாயும் பிழைக்கும் இப் பிழைப்பு!

திலீபன் என்ற வஞ்சகப் போராளியை புனிதப் போராளியாகக் கட்டமைத்த கேவலமான சிறுகதை “மெய்யெழுத்து” என்ற தலைப்பில் உயிர்மை இதழில் வந்திருக்கிறது.

திலீபன் உண்ணாவிரதத்திற்கு முன் மாற்று இயக்கங்களை கொன்றழித்ததில் முன்னிலை வகித்ததும் அந்நாளில் கொலை வெறியோடு யாழ் பல்கலைக்கழகத்தில் துவக்கோடு அலைந்ததும்தான் திலீபனின் உண்மையான உருவம்.

இலங்கை அரசு தமிழீழ விடுதலை இயக்கங்களை அழித்தொழிக்க எப்படி முயன்றுகொண்டிருந்ததோ அதை கன கச்சிதமாக புலிகள் செய்துமுடித்தனர்.

இந்த மாற்று இயக்கங்களை அழித்திடும் கொலைவெறி நேரங்களில் திலீபன் மயில்குஞ்சுக்கு போர்வை வழங்கிக்கொண்டிருக்கவில்லை .

அந்த அழித்தொழிப்பின் பிரதான புலிகளின் தளபதிகளில் அவனும் ஒருவனாயிருந்தான்.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை தனது அயோக்கியத்தனமான தந்திரோபாய உண்ணா நோன்பு மூலம் திசை திருப்பி மக்களின் அமைதி -சமாதானம் - மற்றும் இந்தியாவை எதிர்பார்த்து நின்ற எதிர்பார்ப்புகளை ஒரு எமோசனல் உணர்வெழுச்சி மூலம் திருகி ஒரு பெரும் அரசியற் படுகுழியில் வீழ்த்தியதில் இந்த உண்ணாவிரதத்திற்கு முக்கியமான இடமுண்டு.

கிட்டத்தட்ட கைவிடப்பட்ட நிலையில் இருந்த புலிகளை அரங்கிற்குக் கொண்டுவந்த அபத்த நாடகமும் இந்த உண்ணாவிரதம் மூலமும் அதன் தொடர்ச்சியாகவும்தான் நடந்தது.

அதன் தொடர்ச்சியாக புலிகள் இலங்கை அரசுடன் ஒரு புரிதலுக்கு வந்து அவர்களிடம் ஆயுதங்களும் பணம் மற்றும் பாதுகாப்புகளும் பெற்று பிரேமதாசவின் கைக்கூலிகளாக இயங்கினார்கள் .

முதன் முதலில் இலங்கை அரசுடன் கைக்கூலிகளாக சேர்ந்து இயங்கியவர்கள் புலிகள்தான்.

எழுத்தாளர்களுக்கு குறைந்த பட்சம் இருண்ட பக்க உண்மைகளைக் காப்பாற்றும் சமநிலை வேண்டும் .

மலினமான இலக்கிய அங்கீகாரங்களுக்காகவோ, எது சந்தையில் செல்லும் என்பதற்காகவோ எழுதுவது இலக்கியபோர்வை போர்த்திக்கொண்ட கழுதைப்புலிகளின் வழி.

புலிகள் இருக்கும் வரை தனது புலி மனக்கட்டமைப்பை அடக்கி வாசித்த சோபாசக்தி, புலி மாதிரியும் இருக்கவேணும், இல்லாத மாதிரியும் இருக்கவேணும்! ஈயம் பூசுனமாதிரியும் இருக்கவேணும் பூசாத மாதிரியும் இருக்கவேணும் என்பதற்கொப்ப எழுதிவந்து புலிகளுக்குப் பின் “உடையார் பெருமைக்கு இடுப்பில் சலங்கை கட்டியவேகத்தில்” தன் மேற்போர்வைகளையும் உள்ளாடைகளையும் அவிழ்த்தெறியத்தொடங்கினார் . சரியாக அவர் தன்னை அவிழ்த்துக்காட்டியது ஜாக் ஒடியாரின் தீபன் படம் மூலம். அதுவரை பயங்கரவாதிகளாக சர்வதேசமெங்கும் நிராகரிக்கப்பட்ட புலிகளை ஔவர் நைட்டில் விடுதலைப்போராளிகளாக சர்வதேச திரை அரங்கிற்குக் கொண்டுவந்து, ஆல் இன் ஆல் அழகுராஜாவாக புலிகளின் பிரதிபிம்பமாக தன்னை முன்வைத்ததோடு விருதையும் வாங்கிக்கொண்டார்.

**சுகன்**

ஒரு நடிகருக்கும் போராளிக்கும் இடையில் வேறுபடும் பண்பு இது. குணமுங்கூட.

இதுவரை புலிகளின் எந்தவொரு பெரும் பிரச்சார சாதனங்களும் சர்வதேச மட்டத்தில் செய்யமுடியாததை தனியொரு ஆளாக மேற்போட்டுக்கொண்டு அப்படத்தின்மூலம் செய்துமுடித்தார்.

வெளிநாட்டவர்களுக்கு எதிரான, குடியேறிகளை மோசமானவர்களாக சித்தரித்த இப்படத்தின் பிரச்சாரம் பற்றி இங்கு பேசவரவில்லை .

பிரெஞ்சு இடதுசாரிப் பத்திரிகைகள் முடிந்தவரை அதன் இனவாதக் கூறுகளை தோலுரித்துக்காட்டின.

சோபாசக்திக்கோ வந்தவரை லாபம்.

அது தொட்டு அவர் புலிகளின் மீதிருந்த அனுதாப- பச்சாதாப- இரங்கல் உணர்வுகளையெல்லாம் தன்னை நோக்கி லாவகமாக இழுத்துக் கையகப்படுத்தத் தொடங்கினார்.

இச்சா, ஆலா என்று புலிகள் தரப்பில் புனிதப் போராளிகளாகப் புனைந்து மாற்று இயக்கப்போராளிகளை நகைச்சுவைப் பாத்திரங்களாக எழுதிக் கவனமாகப் பார்த்துக் கொண்டார்.

ஒரு பொதுப்புத்தி மட்டத்தில் புலிகள் செய்த அதே பிரச்சார வேலைகளைத்தான் பரம்பரைப் புலியான சோபாசக்தியும் இலக்கியப் போர்வை போர்த்திச் செய்து வருகிறார். இங்கே “பஞ்சத்துக்குப் புலியும் பரம்பரைப்

புலியும்" என்ற அவரது சொல்லாடலைக் கவனம் கொள்க !

புலி ஆதரவு நிலையில் நின்று தமிழக சஞ்சிகைகள் கொடுக்கும் ஆதரவு வழமைபோல இக் கதைக்கும் ஆனந்த விகடன் மூலம் கிடைத்திருக்கிறது . இந்த புலி ஆதரவு நிலையை கச்சிதமாக அறுவடை செய்துவருகிறார் சோபாசக்தி.

இதில் தன் சக ஓட்டப் போட்டியாளர்களான தீபச்செல்வன் ,குணா கவியழகன், அகரமுதல்வன் ,தமிழ்நதி போன்றோரை விட வேகமாக முன்னிலையில்தான் ஓடுகிறார். யார் வெல்வது என்பது ஒரு பிரச்சனையல்ல. எந்தத் தரப்பிற்காக விளையாட்டுக்களத்தில் நிற்கிறோம் என்பதும் கவனத்திற்குரியது.

பிழைப்புவாதம் என்று வந்துவிட்டால் செக்கும் சிவலிங்கமும் ஒன்றேதான்.

பிரபாகரனின் தொடக்க காலமுதலான சகோதரப் படுகொலைகள், இறுதிவரை தொடர்ந்த பாசிச நடவடிக்கைகள் இவற்றை மறைத்து பெருமதிப்பிற்குரிய தலைவர் பிம்பம் கட்டமைக்கப்பட்டு "மேதகு" என்ற படம் உலாவவிடப்பட்டதோ அதேபோல திலீபன் என்ற மெய்யெழுத்து கதையும் சோபாசக்தியால் தமிழக ரசிகர்களை மனதில் கொண்டு எழுதப்பட்டதேயன்றி அறத்தின் வழியில் அல்ல.

ஜெயகாந்தன் குறிப்பிட்டதுபோல உணர்வுச் சுரண்டலும் சுரண்டல்தான்.

---

திலீபனின் 5 கோரிக்கைகள் இந்தியாவிற்கு அதன் ஈடுபாட்டிற்காக சங்கடத்தை,மூக்கறுப்பை உருவாக்கும் நோக்கில் திட்டமிட்டு அந்நேரத்தில் முன்வைக்கப்பட்டவை என நேற்றுப் பார்த்தோம், மக்கள் இந்தியாவின் தலையீட்டை கண்ணீர் மல்க கும்பிட்டு வரவேற்ற அந்த நேர சூழ்நிலையை சீர்குலைத்து திரித்து ஒரு புதிய வஞ்சக வெளிக்குள் மக்கள் இழுத்துவிடப்பட்டார்கள்.அதுவே புலிகளுக்கு தேவையாக இருந்தது.

தீக்சிற் தியாக தீபம், தியாகத் திருவுரு, அஹிம்சாமூர்த்தி என நினைவுகூரப்பட்ட திலீபன் குறித்த மறுபக்கம் இது.

திலீபனை நெஞ்சில் இருத்துபவர்கள் இந்தக் கசப்பான உண்மைகளையும் அறிந்திருப்பது நல்லது.

"உண்மைகளில் இருந்து உண்மையைத் தேடுங்கள்" என்றொரு சீனப் பழமொழி இருக்கிறது.

வட்டுக்கோட்டையில் இந்தத் திலீபன் கும்பல் ரெலோ இயக்கச் சிறுவர் போராளிகள் 32 பேர் மீது நிகழ்த்திய கூட்டுப் படுகொலை இன்னும் பிரசித்தமானது.

ரெலோ படுகொலைகளின் தொடர்ச்சியாக நடந்த கொலைகள்இவை. யாழ் மாவட்டமெங்கும் பரவலாக ரெலோ போராளிகள் கொல்லப்பட்டபோது வட்டுக்கோட்டையில் ரெலோவுக்கு அறியப்பட்ட முகாம் இருந்தது. மாவடி முகாம் என அறியப்பட்டது.

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ரெலோ போராளிகளின் தொடர்பில் இளம் சிறுவர்களாக யாழ்ப்பாணம் வந்து வட்டுக்கோட்டை முகாமில் இருந்தவர்கள் பலர் கண் நோயினால் பாதிக்கப்பட்டிருந்தார்கள்.

வட்டுக்கோட்டை முகாமில் இருந்தவர்களை கொன்றழிக்க வந்த புலிகளின் முதல் குழு இவர்கள் சிறுவர்கள் என்பதால் கொல்லாமல் திரும்பி வந்துவிட்டனர். அப்போது வட்டுக்கோட்டை முழுதும் திலீபனின் கட்டுப்பாட்டில் இருந்தது.

திலீபன் நிச்சாமத்தை சேர்ந்த ரஷ்யன் என்பவரின் மனைவியான "சங்கானை அம்மா" என்பவர் வீட்டில் நிற்கிறார். அங்கே வந்து வட்டுக்கோட்டை சங்கரத்தை முகாமில் இருந்த சிறுவர்களை கொல்லாமல் திரும்பி வந்த விடுதலைப் புலிகள் விசயத்தைச் சொல்ல "அவங்களை ஏன் விட்டுவைத்தீர்கள்! " என சங்கானை அம்மா உளற, இந்த அஹிம்சைப் போராளி வாகனத்தை எடுத்துச் சென்று கொல்லாமல் விட்ட புலிகளையும் சுட்டு தப்பியோடாமல் மிச்சமிருந்தவர்களையும் சுட்டுதள்ளினான்.

(விஜயபாஸ்கரன்)

ரெலோவை அழிப்பதில் துவக்குடன் வெறி பிடித்த மிருகமாக அலைந்ததை நான் நேரில் கண்டேன். அதுவும் சிறீசபாரத்தினம் கட்டைப்பிராயில் இருந்து தப்பி தபால் பெட்டி ஒழுங்கையில் உள்ள குச்சுஒழுங்கையிற்குள் இருந்த கடைசி வீட்டில் (இது யாழ் மருத்துவ பீடத்தின் பின்புறம்) வைகுந்தம் (சண் இன் அண்ணர் வீட்டில்) உதவி கேட்டபோது அவர்களை தொடர்ந்து துரத்திவந்த சிறிய ஏகே குழுவிற்கு தலைவன் இந்த என் மாணவன் திலீபன். இதுபற்றி பெரிய வரலாறே எழுதலாம். இப்போது வேண்டாம். அவரின்...? கோரிக்கையை முன்வைத்து திலீபனை புனிதர் ஆக்கி கங்கையில் குளிப்பாட்டாதீர்கள் கருணாகரனே. ஹிட்லரை புனிதராக்கியது போல் ஆக்கி நடுவீட்டில் இருத்தியது போல் ஆகிவிடும். (சிவா முருகுப்பிள்ளை )

உரும்பிராயில் சிவகுமாரன் சிலைக்கு முன்பாக கோவிந்தசாமி என்ற முதியவருக்கும் மனோன்மணிக்கும் மரணதண்டனை வழங்கிய அகிம்சாவாதி யார்? (ரகு கதிரவேலு)

தியாக தீபம் திலீபன் என்ற ஒப்பாரி ஆரம்பமாகிவிட்டது. திலீபனுடன் சேர்ந்து இயங்கியவர்களுக்குத் தெரியும் அந்த தியாக தீபம் உயிரோடு எரித்த போது எழுந்த தீபத்தை.

நல்லூர் கோவிலுக்கு முன் உயிரோடு ரயர் போட்டு எரித்தபோது எழுந்த தீபம் உங்களைச் சுட்டுக்கொண்டே இருக்கும். (புதியவன் ராசய்யா)

> சோபாசக்திக்கோ வந்தவரை லாபம்.
> அது தொட்டு அவர் புலிகளின் மீதிருந்த அனுதாப- பச்சாதாப- இரங்கல் உணர்வுகளையெல்லாம் தன்னை நோக்கி லாவகமாக இழுத்துக் கையகப்படுத்தத் தொடங்கினார்.
> இச்சா, ஆலா என்று புலிகள் தரப்பில் புனிதப் போராளிகளாகப் புனைந்து மாற்று இயக்கப்போராளிகளை நகைச்சுவைப் பாத்திரங்களாக எழுதிக் கவனமாகப் பார்த்துக் கொண்டார்.
> ஒரு பொதுப்புத்தி மட்டத்தில் புலிகள் செய்த அதே பிரச்சார வேலைகளைத்தான் பரம்பரைப் புலியான சோபாசக்தியும் இலக்கியப் போர்வை போர்த்திச் செய்து வருகிறார்.

# விமர்சனம்

போராட்டங்கள் நிகழ்கின்றன

போராட்டக் குறிப்புகள்
எழுதப்படுகின்றன

போராடியவர்களும்
போராடத் தூண்டியவர்களும்

அவர்தம் குறிப்புகளை எழுதுகின்றனர்

போராட்டத் திசைகள்
இணைந்தும் பிரிந்தும்
திரிந்தும் செல்கின்றன

துயர் நிறைந்த
எமது வலிகளைக் கேளுங்கள்!

ஒடுக்கும் தளைகளை உடைத்தெறியும்
வரலாற்றை எழுதுவோம்!

எழுதுங்கள் எழுதுங்கள்

உரத்துச் சொல்லும் வரலாறாக
எமது கதைகள் இருக்கட்டும்!

எனது தாத்தாவை
பனையோடு தறித்தார்கள்

எனது ஆச்சியின்
ரவிக்கையைக் கிழித்தார்கள்

அருந்தும் நீரில்
மலத்தைக் கலந்தார்கள்

ஒடுக்குமுறைகள்
உலகெங்கும் உள்ளன

வன்முறைகளும் எங்கும் உள்ளன

இணைந்து போராடுவோம்

எங்கள் கதைகளைப்
படித்துப் பாருங்கள்

இல்லை

புதிய கதைகளை நீங்கள் படியுங்கள்

ஆதிக்க வேர்களை
இறுகப் பற்றிக்கொண்டு
நீங்கள் இருக்கும்வரை

உங்களால் எழுதா
வரலாறுகளை விமர்சிக்காதிருங்கள்!

# வளருதல்

சிட்டுக்குருவிகள் அழகாய்
கட்டிய சிறுகூட்டை
அவன் உடைத்து வீழ்த்தினான்.

உயிர்த்து உருமாறி
மஞ்சள் அலகு திறந்து
தாய்க்குருவி ஊட்டிய
உணவு எச்சங்களுடன்
சிதறி வீழ்ந்தன
கருஞ் சாம்பல் குஞ்சுகள்.

என்ன பாவம் செய்தன
என்னரும் குஞ்சுகள்?

காற்று மழை பாராது
நானும் அவனும்
சிறுகச் சேகரித்து
அடைகாத்து வளர்த்தோமே ..

உடல் கிழிந்து
குருதிக்குள் நிற்கும்
அவலத்தை நான்
எங்கு சென்றுரைப்பேன்?"

தாய்க்குருவியின் புலம்பல்
கீச்சொலியாய்
முரட்டுச் சாரளங்களில்
தெறித்து அதிர்ந்தன,

"விரைவாகச் சாமி கும்பிட்டிட்டு
மறக்காமல் திருநீறு பூசிக்கொண்டு
போயிருந்து படி"

நாளிதழில் மூழ்கி
அமர்ந்திருந்த தந்தையில் பட்டு

சமையலறையில் ஒலித்த
தாயின் வார்த்தைகள் மட்டுமே

அவன் காதில் விழுந்தன.

உமா
18.02.2023

# லுட்விக் விற்கென்ஸ்ரைன்



நடராஜா சுசீந்திரன்

செ.வே.காசிநாதன் அவர்கள் எழுதிய விற்கன்ஸ்ரைன்: மொழி, அர்த்தம், மனம் என்ற நூல், க்ரியா வெளியீடாக ஜூலை 2021 இல் வெளிவந்திருகின்றது. விற்கென்ஸ்ரைன் என்கிற பெயர் இருபதாம் நூற்றாண்டின் மெய்யியல் உலகில் அதிகம் பேசப்பட்டதாக இருக்கின்றபோதும், அவரது மெய்யியல் கோட்பாடுகள் என்ன என்பதில் துறைசார் புலமையாளர்களுக்கிடையிலும் அதற்கு வெளியிலும் அதிகம் உறுதியற்ற விளக்கங்களும், மாறுபாடான பொருள் கோடல்களும் உருவாகிய நிலையே காணப்பட்டபோதும், அவரது மறைவுக்குப் பின்னர் விற்கன்ஸ்ரைனிசம் என்ற ஒரு போக்குக்கூடக் காணப்படுகின்றது. இரண்டாவது உலகப்போருக்குப் பின்னரே மேற்குலகின் மெய்யியற் கோட்பாடுகள் தமிழில் பரவலடைகின்றன. கடந்த அறுபது, எழுபது ஆண்டுகளில் அவை பற்றிய நூல்கள் போதிய அளவில் தமிழில் வெளிவந்துள்ளன என்றும் கூறமுடியாது.

இந் நிலையில் செ.வே.காசிநாதன் அவர்கள் ஆக்கிய விற்கன்ஸ்ரைன்: மொழி, அர்த்தம், மனம் என்ற நூல், மொழி, அர்த்தம், மனம் போன்றவற்றில் விற்கென்ஸ்ரைனின் ஆய்வுகள், சிந்தனை வெளிப்பாடுகள் பற்றி நவீன, செழுமையான தமிழில் அளவையில், மெய்யியல் துறைகளில் நீண்டகாலக் கற்பித்தல் அனுபவமும், ஆழ்ந்த ஆய்ந்தறிவும் மிக்க சிந்தனையாளர் ஒருவரால் தமிழ் மொழி, தமிழின் இலக்கணக் கோட்பாடுகளுடன் ஒப்பிட்டு எழுதப்பட்டு மனம் ஈர்க்கும் அழகிய நூலாக வெளிவந்திருப்பது தமிழுலகில் மிக முக்கிய நிகழ்வாகப் பார்க்கப்படுகின்றது.

லுட்விக் விற்கென்ஸ்ரைன் அவர்கள் 26ம் திகதி ஏப்றில் மாதம் 1889 இல் ஆஸ்திரியாவின் வீயன்னா நகரில் பிறந்தார். அவரது பூர்வீகம்




யூதப் பரம்பரை எனினும் அவரது தந்தைவழிப் பாட்டனில் இருந்து, அவர்கள் புரட்டஸ்தாந்து மதத்திற்கு மாறியவர்கள். தாய் கத்தோலிக்கர் என்பதால் லுட்விக் விற்கென்ஸ்ரைன் அவர்களும் ஒரு கத்தோலிக்கனாகவே ஞானஸ்தானம் பெற்றார்.


தந்தை ஆஸ்திரியாவின் இரும்பு உருக்குத் தொழிற்சாலைகளின் உரிமையாளராக இருந்தார் செல்வந்தர். ஒன்பது பிள்ளைகளில் லுட்விக் விற்கென்ஸ்ரைனே, இளையவர். மூன்று ஆண் சகோதர்கள், இவரது அண்ணாக்கள் இளமையிலேயே தற்கொலை செய்துகொண்டனர். பவுல் என்ற இவரது எஞ்சிய ஒரே அண்ணன் முதலாம் உலகபோரில் ஒரு கையினை இழந்து, பின்னர் ஒருகையுடன் பியானோ இசைக்கும் இசைக் கலைஞனாக புகழ்பெற்றார்.

இவர்கள் செல்வந்தர்கள் ஆகையால் வீட்டிலேயே பிரத்தியேக ஆசிரியர்களிடம் பதினான்கு வயதுவரை கற்றபின்னர் மூன்று வருடங்கள்(1903-1905) பாடசாலைக்குச் சென்று கல்வி பெற்றார். பின்னர் விமான மற்றும் பறப்பாய்வுப் பொறியியலாளராக ஜெர்மனியின் பெர்லின் தொழில் நுட்பப் பல்கலைக்கழகத்தில்(1906-1908) படித்த பின்னர் 1908இல் இங்கிலாந்தின் மான்செஸ்டர் பல்கலைக் கழகத்தில் ஆய்வு மாணவனாகச் சேர்ந்து ஜெட் விமானம்

மற்றும் விமான இயங்குபொறிக்கான மாதிரி வடிவமைப்புக்களை ஆக்கும் ஆய்வுகளை மேற்கொண்டிருக்கின்றார். நிறையவே பட்டங்கள் வடிமைப்புச் செய்திருக்கின்றார்.

இயல்பிலேயே கணிதவியலின் ஆர்வம் காரணமாக பெர்றாண்ட் றஸ்ஸல் அவர்களது கணித விதிகள் என்ற நூலைப் படித்தபோது, ஜெர்மனியில் ஜேனா என்ற இடத்துப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியர் கோட்லோப் ஃபிறேக (Gottlob Frege- இவரை அரிஸ்டோட்டலுக்குப் பின்னர் மகத்தான அளவையியளாளர் என்று குறிப்பிடுகிறார் ஏ. ஜே. அயர்.) அவர்கள் பற்றி அறிந்து 1911 இல் பேராசிரியர் கோட்லோப் ஃபிறேக அவர்களைச் சந்தித்து அவரது ஆலோசனையின் பேரில் விற்கென்ஸ்ரைன் அவர்கள் கேம்பிறிஜ்க்கு வந்து றினிரி கல்லூரியில் உலகப் புகழ் பெற்ற மெய்யியலாளர்கள் பெர்றாண்ட் ரஸ்ஸல், ஜி.ஈ.மூர் போன்றவர்களிடம் சுமார் 5 தவணைகள் (1911 -1913) வரை படிக்கின்றார். அங்கிருந்து நோர்வே நாட்டுக்குச் சென்று தனிமையில் வாழ்கின்றார். 1914 இல் பேராசிரியர் ஜி.ஈ. மூர் அவர்கள் விற்கென்ஸ்ரைனிடம் சென்று அவரது சிந்தனைகளைக் குறிப்புக்களாக எடுத்துக்கொண்டார். இதற்கிடையில் ரஸ்ஸல் அவர்கள் அறிவு பற்றிய கோட்பாடு (Theory of Knowledge) என்ற அவர் நூலை விற்கென்ஸ்ரைன் அவர்களின் தீவிரமான விமர்சனத்தினால் வெளியிடாமலேயே தள்ளி வைத்துவிடுகின்றார். அதுமட்டுமல்லாமல், மெய்யியலின் அடிப்படைகள் என்ற துறையில் மேற்கொண்டு எதையாவது செய்யமுடியுமா என்று தெரியவில்லை என்று எழுதவும் செய்தார்.

இதில் இருந்து விற்கென்ஸ்ரைனின் விமர்சன உக்கிரம் பற்றி நாம் அறிந்து கொள்ளலாம். மேலும் புற உலகு பற்றிய எமது புரிதல்கள் (Our knowledge of the external world) என்ற அவரது விரிவுரைகளின் தொகுப்பினை 1914 இல் வெளியிட்டார். முதலாம் உலகப்போர் தொடங்கவும் விற்கென்ஸ்ரைன் அவர்கள் ஆஸ்திரிய இராணுவத்தில் இணைந்து போராடி 1918இல் இத்தாலில் கைதாகி 1919இல் விடுதலை செய்யப்பட்டார். போரின்போது விற்கென்ஸ்ரைன் அவர்கள் எடுத்துக் கொண்ட குறிப்புக்களைத் தொகுத்து பேராசிரியர் ஃப்ரேகே




அவர்களுக்கும் ரஸ்ஸல் அவர்களுக்கும் அனுப்பி வைத்தார். ஆனால் ரஸ்ஸல் மட்டுமே அதில் ஆர்வம் தெரிவித்தார். அதற்கு முன்னுரையும் எழுதினார். ஆனாலும் ரஸ்ஸல் அவர்கள் தனது நூலைப் புரிந்துகொள்ளவில்லை என்றே விற்கென்ஸ்ரைன் குற்றஞ்சாட்டினார். அதுவே ஜி.ஈ.மூர் அவர்கள் வைத்த தலைப்புடன் Tractatus logisch philosopicus- Logisch philosophische Abhandlung- தர்க்க மெய்யியல் விளக்கம் என்ற நூலாக 1921 இல் வெளிவந்துள்ளது.

தன் வாழ்நாளில் விற்கென்ஸ்ரைன் அச்சிட்ட நூலாகப் பார்த்தது அந்தப் புத்தகத்தை மட்டுமே.

சில காலங்கள்(1919-1920) அவர் ஆரம்பப்பள்ளி ஆசிரியராக இருந்தார். அவ்வேளையில் கலைச் சொற்கள் களஞ்சியம் ஒன்றையும் 1926 இல் ஆக்கியிருகின்றார். அந்த ஆண்டில் சகோதரியின் வீடு கட்டும் கட்டிடக் கலைஞராக இருந்திருக்கின்றார். 1927- 1929 இல் 'Tractatus logisch philosopicus' டாக்டர் பட்ட ஆய்வேடாகச் சமர்ப்பிக்கப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டது.

1930 இல் மீண்டும் கேம்பிறிஜ்க்கு வந்து அங்கே தனது விரிவுரைகளை ஆரம்பித்தார். ஒவ்வொரு வாரமும் விரிவுரை, விவாதம், விரிவுரை, விவாதம் என்றவாறாக அவரது வகுப்புக்கள் அமைந்தன. முன்நிபந்தனையாக "எனது வகுப்பிற்கு உல்லாசப் பயணிகள் வரவேண்டாம்" என்றே கூறிவிட்டார். அவர் உல்லாசப் பயணிகள் என்று குறிப்பிட்டது கிரமமாக வராதோரை. சுமார் 20 பேர்வரை மாணவர்கள். இவருக்குப் பேராசிரியரய் இருந்த மூர் அவர்களும் கூட முன்வரிசை மாணாக்கராக இருந்து கற்றுக்கொண்டு அனைத்தையும் குறிப்பெடுத்துக்கொண்டார். அவை மெய்யியல் பக்கங்கள் என்ற பெயரில் வெளியிடப்பட்டிருக்கின்றன.

1935 ஆம் ஆண்டு ரஷ்ஷியாவிற்குச் சென்ற விற்கென்ஸ்ரைன் அவர்கள் அங்கேயே தங்கிவிடலாம் என்று நினைத்ததுமுண்டு. பின்னர் மெய்யியல் ஆய்வுகள் என்ற அதிகம் புகழ்பெற்ற நூலின் முதற்பகுதியினை 1945 ஆம் ஆண்டளவில் நோர்வேயில் தனது சிறுவீட்டில் வைத்துப் பூரணப்படுத்தினார் 1951 இல் மரணமானார். அந்தப் பூரணப்படுத்திய நூல் இவரது மறைவுக்குப் பின்னர் 1953இல் மெய்யியல் ஆய்வுகள் என்ற பெயரில் வெளியாகியது.

அந்த நூலின் உள்ளடக்கங்கள் பற்றி அதிகமாகவும் மற்றும் அவற்றோடு தொடர்புடைய சிலவும் செ.வே. காசிநாதன் அவர்களின் விற்கன்ஸ்ரைன்: மொழி, அர்த்தம், மனம் என்ற நூலின் விவாதப் பொருள்களாகியிருக்கின்றன. இந் நூலில் ஏழு கட்டுரைகள் காணப்படுகின்றன. அவற்றை அணுகுவதற்கு ஏதுவாக முன்னுரையும் பின்னால் இருக்கும் அடிக்குறிப்புக்களும் முக்கிய பங்காற்றுகின்றன. இந் நூலின் நுழைவுச் சம்பிரதாயங்களான, நூலகக்குறிப்பு, காணிக்கை, வந்தனம் என்பவை முடியத் திருக்குறளில் தொடங்குகின்றது.

இருவேறு உலகத் தியற்கை திருவேறு
தெள்ளியராதலும் வேறு. - குறள் (374)

இதற்கு நாம் இப்படி ஒரு பொருள்கோடலைச் சொல்கிறோம்: உலகு இரண்டாகப் பிரிந்து கிடக்கிறது, அதுவே நியதியாகவும் இருக்கின்றது. செல்வத்தை வைத்திருப்பவர்கள் ஒரு சாரார். அறிவை வைத்திருப்பவர்கள் இன்னொரு சாரார்.

இக் குறள் ஏன் இதில் இடம்பெறவேண்டும் என்று சிந்திக்கும்போது, சிலவேளை இரு வைகையாகப் பிரித்து அறுதியிட்டுக் கூறுவதில் உள்ள அபத்தம் தெரிந்துகொள்வதற்காகவோ என்று நான்

நினைக்கின்றேன். எடுத்துக்காட்டாக திருவுமில்லாமல் தெளிவுமில்லாமல் இருக்கின்ற ஒரு உலகம் இல்லை என்ற முடிவுக்கு நாம் வந்துவிடக்கூடுமல்லவா!

அதற்கடுத்ததாக

"மெய்யியலாளன் எந்தக் கருத்துலகினதும் பிரஜை அல்ல, அவனை மெய்யியலாளன் ஆக்குவது அதுவே."

- விற்கன்ஸ்ரைன், Zettel 4551

இந்த மெய்யியல் உலகத்தின் முக்கியமான புதிர்கள் இறுதியிலும் இறுதியாகத் தீர்க்கப்பட்டுவிட்டன என்பதே எனது கருத்து என்று இளைய விற்கென்ஸ்ரைன் தன் முதற் புத்தகத்தில் குறிப்பிடுவார். ஆனால் பின்னர் அதனை மறுதலித்து அவரே எழுதியபோதும் அதனை அச்சுக்குக் கொடுக்கும் அளவிற்கு அவருக்குத் தன் எழுத்தில் திருப்தி இருக்கவில்லை. ஆனாலும் அவர் எழுதிக்கொண்டே இருந்தார். அவர் விட்டுச் சென்றிருப்பவை (Nachlaß) சுமார் பன்னீராயிரம் பக்கங்கள் கொண்ட கையெழுத்துப் படிவங்களும், சுமார் எட்டாயிரம் தட்டச்சுச் செய்த பக்கங்களுமாக எமக்குக் கிடைக்கின்றன. அப்படி ஒரு 455 ஆவது துண்டில்தான் மேற்படி மேற்கோள் இருக்கின்றது. தமிழ் மெய்யியல் உலகிற்கு மேற்குலகச் சிந்தனைகள், இலக்கியப் போக்குகள், டாடாயிசம், இருத்தலியல், அமைப்பியல், பின்நவீனத்துவம் இப்படிப் பல அவ்வப்போது வந்திருந்தபோதும் கூட அவை கருத்துமுதல் வாதச் சிந்தனைகள் என்று கறுப்பு வெள்ளையாகப் பார்த்து ஒதுக்கி விடும் போக்கு நிலவுகின்றது என்பதையும் நாம் கருத்தில் கொண்டால் எது ஒருவனை மெய்யியலாளன் ஆக்குகின்றது,என்ற விற்கென்ஸ்ரைனின் எடுகோள் "மெய்யியலாளன் என்பவன் எந்தக் கருத்துநிலையினதும் (Denkgemeinde; Think-society) பிரஜை இல்லாமல் இருப்பதுவே" என்பது கவனத்திற்குரியது.

மேலும் ஒரு குறும்பு செய்யப்படுகின்றது. எதிரெதிரான இரண்டு போட்டிச் சமூகங்களின் தலைவர்கள் விரோச்சனனும் இந்திரனும் மெய்யியல் அறிவுபெற பிரஜாபதியிடம் செல்கின்றனர். விரோச்சனன் பலசோலிக்காரான். இந்திரனுக்கு தாராளமாக நேரம் இருக்கின்றது. பிரஜாபதி தண்ணீரைக் காட்டுவார். இதுவே நீ என்பார். "அதுதான் தெளிவாகத் தெரிகிறதே" என்று கூறிவிட்டு விரோசன் திரும்பிப்போய்விடுவான். ஆனால் இந்திரன் இன்னொரு முத்திரண்டு வருஷங்கள் அதுவே சோலியாக இருப்பான். அகலிகை விடயத்தில், சாபத்தினால் அவன் பெற்ற விகாரமான உடல் அவனைச் சிலவேளை முனிவர் பிரஜாபதியே தஞ்சம் என அங்கே நிறுத்தியிருக்கலாம். ஆனால் விரோச்சனன் ஞான பாக்கியம் பெறுவதை இழந்தான் என்றே அறிஞர்கள் பேசிகொண்டார்கள். இந்தக் குறும்பு ஏன் இந்த நூலில் பேராசிரியர் செ.வே. காசிநாதன் அவர்களால் சொல்லப்பட்டது என்றும் நாம் எண்ணிப்பார்க்கலாம். அது நமது சிந்தனையினை நீட்டிச் செல்லத் தரப்பட்டிருக்கின்றது என்றே நம்புகிறேன். விற்கென்ஸ்ரைன் அவர்களின் மாணவன் நோர்மான் மல்கம் அவர்கள் கீழ்வருமாறு எழுதிச் செல்கிறார்கள்: விற்கென்ஸ்ரைன் அவர்கள் தான் எழுதியவற்றை மிகுந்த நம்பிக்கையோடும், அதிகாரத்தோடும் நியாயப்படுத்துவார். தனது மையக் கருத்தமைவில் தவறு இருக்கச் சாத்தியங்கள் உண்டு என்று அவர் சிந்திப்பதில்லை. ஆனால் தன்னைப் பின்தொடர்பவர்கள் தனது சிந்தனைகளின் முக்கியத்துவத்தினை மிகைபடுத்திச் சொல்கின்றனர் என்றும் அவர் யோசித்திருக்கவேண்டும். அதனாற்றான் நூலின் முகப்பில் கீழ்வரும் மேற்கோளை நெஸ்ட்றோய் என்பவரது நூலில் இருந்து எடுத்திருக்கின்றார்."

"முன்னேற்றம் என்பது இயல்பில் தன்னளவில் பெரியதாகத் தோன்றினாலும் உண்மையில் அது சிறியதாகவே இருக்கின்றது." நெஸ்ட்றோய்.2

இதனால் பேராசிரியர் காசிநாதன் அவர்கள் தனது நூலில் காணப்படும் கட்டுரைகளில் முகப்பு மேற்கோள்களைத் தரும்போது, இவை ஏன், எதற்கு என்று எம்மைச் சிந்திக்கவைக்கின்றன. "முகப்பு மேற்கோள்" என்பது விருட்சத்தினை விதையாக்கித் தரும் முயற்சி என்றும் கூறலாம்.

தர்க்க மெய்யியல் விளக்கம்

விற்கென்ஸ்ரைன் அவர்களின் புகழ்பெற்ற நூல் „Tractatus logico-philosophicus" (Logisch-philosophische Abhandlung) என்பது. முதலாம் உலகப்போரில் ஒரு இராணுவத்தினாக விற்கென்ஸ்ரைன் இருந்தபோது எழுதப்பட்டது. இந்த நூலின் முன்னுரை இரத்தினச் சுருக்கமானது. ஆனால் ஒவ்வொரு சொல்லும் அவை கிளப்பும் சிந்தனையின் வியாபகமும் விரிவடைந்து செல்வதைக் காண்கின்றோம். இந்த முன்னுரையில் இருந்து சில வரிகளைச் சிந்தனைச் சுலோகங்களாகவுங் கூட எழுதுகின்றனர். மூலத்தில் இருந்து தமிழில் இந்த முன்னுரையினை சொற்கள் மேற்படாதவாறு ஓர் சோதனையாக மொழியாக்கியுள்ளேன்.

தர்க்க மெய்யியல் விளக்கம்: முன்னுரை

இங்கே சொல்லப்பட்டிருக்கும் சிந்தனைகளையோ அல்லது இவை போன்ற சிந்தனைகளையோ ஏற்கனவே தானாகச் சிந்தித்த ஒருவரால் மட்டுமே இந்த நூலைச் சிலவேளை புரிந்துகொள்ள முடியும். எனவே இது ஒரு கற்கைநெறிப் புத்தகம் அல்ல. ஒருவர் புரிந்து கொண்டு வாசித்து, அதில் மகிழ்ச்சியும் அடைவாரேயெனில், இதன் நோக்கம் நிறைவேறிவிட்டதெனலாம்.

இந் நூல் மெய்யியல் பிரச்சினைகளைப் பற்றிப் பேசுகின்றது. இந்தப் பிரச்சினைகளையொட்டி எழுப்படும் கேள்விகள் மீது, எமது மொழியினுடைய தர்க்கத்தின் தவறான புரிதல்கள் எவ்வாறானவை என்பதை இது எடுத்துக் காட்டுகின்றது என்றே நான் நினைக்கின்றேன்.

இந் நூலின் பருப்பொருள் முழுவதையும் வார்த்தைகளிற் கோத்துவிடமுடியும்:

உண்மையில், பேசக் கூடியவற்றைத் தெளிவாகவே பேசிவிடவும், எதனைப் பற்றிப் பேசமுடியாதோ, அது பற்றி மௌனம் சாதிக்கவும் வேண்டும். ஆகவே இந் நூல் சிந்தனைக்கு ஒரு எல்லையினை வரையறை செய்யும். அல்லது இன்னும் சொல்லப்போனால், சிந்தனையினை அல்ல, மாறாக சிந்தனையினை வெளிப்படுத்துவதற்கு! ஏனெனில் நாம் சிந்தனைக்கு ஒரு எல்லையினை வரையறை செய்வதென்றால், எல்லையின் இருபக்கமும் பற்றிச் சிந்திக்க முடியும் என்று சிந்திக்க வேண்டும். (ஆகவே நாம் எம்மைச் சிந்திக்க விடாதவற்றைப் பற்றியும் சிந்திக்க முடியும் என்று சிந்திக்க வேண்டும்.)

எனவே அந்த எல்லையினை மொழியில் வரையறை செய்துவிடமுடியும். அத்தோடு அந்த எல்லைக்கு அப்பால் இருப்பவை இலகுவாய் அர்த்தமற்றவையாகவே இருக்கும்.

என்னுடைய முயற்சிகள் எதுவரை மற்றைய மெய்யியலாளர்களுடன் சேர்த்துக்கொள்ளப்படும் என்று தீர்மானமாகச் சொல்ல விரும்பவில்லை. ஆம், நான் இங்கே எழுதிவைத்திருப்பவை ஒவ்வொன்றும் பெரும்பாலும் புதியவை என்ற கோரிக்கை இல்லாதவை. எனவே நான் இவற்றின் மூலத் தகவல்கள் எதுவும் கொடுக்கவில்லை. ஏனெனில் நான் சிந்தித்தவையும் அவை எனக்கு முன் ஏற்கனவே சிந்திக்கப்பட்டவையா என்பதும், எல்லாமே எனக்கு ஒன்றுதான். எனது சிந்தனைகளுக்கான தூண்டுதலின் பெரும்பகுதிக்காக நான் ஃபேர்க அவர்களின் மகத்தான ஆக்கங்களுக்கும் மற்றும் எனது நண்பர் திரு பெர்றாண்ட் றஸ்ஸெல் அவர்களின் ஆய்வுகளுக்கும் கடன்பட்டிருக்கின்றேன் என்பதை மட்டும் சொல்ல விரும்புகின்றேன். எனது இந்த வேலைக்கு ஒரு பெறுமதி உண்டெனின், அவை இருவகைப்பட்டன. முதலாவது, இந்த வேலைக்குள் சிந்தனைகள் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்த வெளிப்பாட்டுத் திறன் எவ்வளவுக்கு மேம்பட்டதோ, எவ்வளவுக்கு அதிகமாக ஆணியின் குமிழில் அடிபடுகின்றதோ அவ்வளவுக்கு இதன் பெறுமதியும் அதிகரிக்கும். சாத்தியங்களுக்கு வெகு தொலைவிலேயே பின்தங்கிவிட்டமை எனக்கு இங்கே புலப்படுகின்றது. இந்த வேலையினைக் கையாளுவதற்கான எனது வலு மிகக் குறைவாக இருப்பதே இதன் எளிய காரணம். வேறொருவர் வரக்கூடும், இன்னும் சிறப்பாகச் செய்யவும் கூடும்.

மாறாக இங்கே பகிரப்பட்டிருக்கும் சிந்தனைகளினுடைய உண்மை ஊறுபடுத்தப்படமுடியாத தீர்க்கமானது என்றே எனக்குத் தென்படுகின்றது. ஆகவே முக்கியமான பிரச்சினைகள் இறுதியிலும் இறுதியாகத் தீர்க்கப்பட்டுவிட்டன என்பதே எனது கருத்து.

இரண்டாவதாக, இந்த வேலையின் பெறுமதி என்னவென்று நான் சந்தேகம் இல்லாமல் சொல்வதாயின் இந்தப் பிரச்சினைகளின் தீர்வுகளுக்கு வந்தடைய நான் குறைவாகவே முயற்சித்தேன் என்பதை இவை சுட்டி நிற்பதால் அறியலாம் என்பதுவே.

லுட்விக் விற்கென்ஸ்ரைன் அவர்களின் தர்க்க மெய்யியல் விளக்கம் என்ற நூல் இவ்வாறு ஆரம்பிக்கின்றது என்பதற்கு உதாரணமாகச் சில வரிகள் கீழே தருகின்றேன்.

I. எல்லாம் உலகே. அதுவே விடயம்.
II. உலகென்பது நிகழ்வுகளின் முழுமையேயன்றிப் பொருட்களினதுவல்ல.
III. உலகென்பது எல்லா நிகழ்வுகளின் மூலம் நிர்ணயிக்கப்படுகின்றது.
IV. ஆகவே எல்லா நிகழ்வுகளின் முழுமையே விடயம் எது விட்யம் எது இல்லை என்பதை நிர்ணயிக்கின்றது.
V. தர்க்கத்தின் எல்லைகளுக்குளான நிகழ்வுகள் தான் உலகு.
VI. உலகு நிகழ்வுகளாக உதிர்கின்றது.

உண்மையில் செ.வே.காசிநாதன் அவர்கள் எழுதிய விற்கன்ஸ்ரைன்: மொழி, அர்த்தம், மனம் என்ற நூலை முழுவதுமாகப் படித்த பின்னர் அதனை அறிமுகஞ் செய்து ஒரு கட்டுரை எழுதுவதே எனது நோக்கமாக இருந்ததெனினும் விற்கென்ஸ்ரைனின் அறிமுகத்துடன் முடித்துக்கொள்கின்றேன்.

## பிறமொழிப் பெயர்கள்

தமிழுக்கு வந்திருக்கும் இந்தியரல்லாத பிற மொழி எழுத்தாளர்களின் பெயர்கள் எழுதப்படுவதிலும் பின் அதனை உச்சரிப்பதிலும் திருப்தியளிக்ககூடிய விதிமுறைகளோ மொழியியற் கோட்பாட்டு இணக்கப்பாடுகளோ இருப்பதாகத் தெரியவில்லை. இது மற்றைய எல்லா மொழிகளிலும் பொதுவாக நிகழ்வது தானா என்றும் தெரியவில்லை.

இப்பொழுதெல்லாம் சொந்த மொழியில் ஒவ்வொருவரதும் பெயர்கள் எவ்வாறு உச்சரிக்கப்படுகின்றன என்று, குறைந்தது விக்கிபீடியா தன் விவரணைகளில் கொண்டிருக்கின்றமை ஆறுதலளிக்கின்றது. அதன்மூலம் ஒருவரின் பெயரை அவரது மொழியில் உள்ளவாறு உச்சரிக்க முடிகிறது.

லத்தின் எழுத்துக்களில் எழுதப்பட்டிருந்தால் அவை ஆங்கில உச்சரிப்பு முறையிலேயே சொல்லிவிடலாம் என்ற இலகுவான நடைமுறையினை தமிழ் அறிஞர்கள் கொண்டிருந்தனர் போலும். மேலும் வட எழுத்துக் களைப் புறக்கணித்ததும் தமிழில் பிறமொழிப் பெயர்களை எழுதுவதிலும் உச்சரிப்பதிலும் போதாமையினை உருவாக்கிவிட்டது. ஆனால் அது நல்லவேளையாக இப்போது நடைமுறையில் இல்லை. யாரும் அப்படித் தவிர்த்து எழுதுவதில்லை. (ஊம்: ஸ்மித்- இசுமிது)

மரபு என்று ஆகிவிட்டதாக அல்லது ஒரு விதியாக இந்தியத்தமிழர்கள் ரொல்ஸ்ரொய்- என்ற பெயரை டால்ஸ்டாய் என்று தான் எழுதப்படவேண்டும் என்று கூறுகின்றனர். இதில் ர என்ற எழுத்தினையும் ற என்ற எழுத்தினையும் நாம், தமிழர்கள் முறையாக உச்சரிப்பதில்லையோ என்ற சந்தேகமும் எழுகின்றது. இலங்கைத் தமிழர்கள் ழ உச்சரிப்பினை ள உச்சரிப்பில் இருந்து வேறுபடுத்துவதில்லை.

தமிழ் எழுத்துக்களின் உச்சரிப்பின் துணையோடு ஒரு வெளிநாட்டுப் பெயரினை முடிந்தவரை நிகரான உச்சரிப்பில் எழுத முடிகின்றபோதும் போதும், அதற்கான எழுத்துக்களும் உச்சரிப்புக்களும் இருக்கின்றபோதும், வரிக்கப்பட்டிருக்கும் விதியின் காரணமாக தாஸ்தாயெவெஸ்கி என்று தான் எழுத வேண்டியிருக்கின்றது. எங்கள் தமிழ்ப் பெயர்கள் எங்களால் எப்படி உச்சரிக்கப்படுகின்றதோ அப்படித்தான் தமிழர் அல்லாத ஒருவரும் உச்சரிக்க வேண்டும் என்றும் கோருகின்றவர்கள், விரும்புபவர்கள் நாங்கள்.

இப்பொழுதெல்லாம் சொந்த மொழியில் எவ்வாறோ அவ்வாறே எல்லாமொழிகளிலும் உச்சரிக்கவேண்டுமென்று கொள்ளப்படுகின்றது. இதனால் சிமோன் தி போவா, காமூ, சார்த்தர் மிகெல் பூகோ, தெரிதா என்று பிரெஞ்சுமொழி எழுத்தாளர்கள், அறிஞர்களை தமிழில் எழுதவும் பேசவும் தொடங்கிவிட்டோம். ஆனால் ஜெர்மன் மொழி மற்றும் ஏனைய ஐரோப்பிய மொழிகளுக்கு இது இன்னும் சாத்தியப்படவில்லை.

லுட்விக் விற்கென்ஸ்ரைன் என்ற பெயரை இதில் எழுதப்பட்டுள்ளது போலவே உச்சரித்தோமானால் அது ஜெர்மனியர்கள் அந்தப் பெயரைச் சொல்வது போலவே இருக்கின்றது. சீக்முண்ட் ஃப்றொயிட், லுட்விக் விற்கென்ஸ்ரைன் போன்ற பெயர்களை இப்படி உச்சரிப்பதில் அதிக சிரமங்கள் இல்லை என்றே எண்ணுகிறேன்.



# யுத்தகாலத்தின் கவிதை

கற்சுறா

நாம் வாழும் காலத்தைக் கவிதைகளால் மட்டும் கணக்கிட்டுவிட முடியும். அதேபோல் நம் காலக் கவிதைகளைக் கனவுகளாலும் காமத்தாலும் மட்டும் இட்டு நிரப்பிக் கணக்கிடவே முடியாது. வாழ்வில் கனவு முக்கியமானதுதான் அதேபோல் காமமும் உன்னதமானதுதான்.

ஆனால், இடிந்து நொருங்கும் சுவர்களிடையேயும் அந்தச் சுவர்களினுள்ளிருந்தபடி உயிருக்குத் திண்டாடும் நிலையிலேயும் துரோகியையும் தியாகியையும் தனக்குச் சொல்லப்பட்ட கதைகளிலிருந்தே பிரித்தெடுக்கும் கலைத் திறன் கொண்டதாய் வாழும் ஈழச் சமூகத்தில் முதற்பாதிக் கனவாய் லண்டன் செல்லும் ஆசையையும் கனவின் மீதியாய் திரும்பி ஊருக்குச் செல்லும் ஆசையையும் கவிதையாய் எழுதும் மனது என்னவாக இருந்திருக்கும்?

இது உதாரணத்திற்காகக் கேட்கப்படும் என் ஒரு கேள்வி மட்டுமே.

ஒரு யுத்தத்திற்குள் அகப்பட்டவர்கள் தனியே யுத்த விரும்பிகளாக மட்டும் இருப்பதில்லை. யுத்தத்தை வெறுப்பவர்களாகவும் பலர் இருப்பார்கள். ஆனால் யுத்தத்திலிருந்து வெளியேறிய பின்னாலும் யுத்தத்தை வழிநடத்திய கவிஞர்களால் நிறைந்திருந்த சமூகந்தான் எங்களுடைய கவிஞர் சமூகம் என்பதனை நாம் அந்த யுத்த காலத்தில் அன்றாடம் வாசிக்க நேர்ந்த பல்வேறு கவிதைகளைக் கொண்டு கண்டுவிடமுடிந்தது.

அதன் இன்னொரு பக்கத்தில் யுத்தம் குண்டுகளால் நம் வீடேறி வந்த பொழுதுகளில் தமது விந்து வெளியேற்றம் பற்றிக் கவிதை எழுதிக் கொண்டிருப்பவர்களாலும் சூழப்பட்டிருந்ததுதான் நமது கவிதைச் சமூகம் என்பதனையும் நீங்கள் மறந்து விடமுடியாது.

யுத்தத்திற்குள் இருந்து யுத்தத்தை ஆதரித்து நின்ற கவிஞர்களைப் போல் மேற்சொன்ன இருவகைக் கவிஞர்களது கவிதைகளை நீங்கள் வாசித்தீர்களானால் நமது சமூகத்தினை அலையவைத்த கொடிய யுத்தம் பற்றி எதையும் அறிய முடியாதிருக்கும். அதனை அவர்கள் போர் என்றே எழுதுவார்கள். விடுதலைக்கான போராட்டம் என்றே அவர்கள் அடையாளம் கொள்வார்கள். தமது தரப்பின் நியாயங்களில் அவை தியாகம் பொதிந்தவையாக எழுதப்படும்.

ஆனாலும் இதில் இருந்து தவறி எங்கேனும் இருக்கும் ஒருசிலர் தமது கவிதைகளால் இந்தக் கேடு கெட்ட தியாகச் சமூகத்தைக் காறித்துப்புவார்கள். அது நெஞ்சை அறுத்துச் செல்லும் வார்த்தைகளாக கவிதை முழுவதும் பரவிச் செல்லும்.

இதற்கு ஒரு உதாரணமாகத்தான் நான் சுகனின் கவிதைகளை முன்நிறுத்த முனைகிறேன். இந்தச் சமூகத்தின் முக்கிய தரப்புக்களுக்கு, நான் மேற்குறிப்பிட்ட கவிதையாளர்களுக்கு அல்லது கவிதை குறித்து ஆய்வு செய்யும் ஆய்வாளர்களுக்கு இவை வெறும் சொற்களாகவும் எதையுமே பலமாகச் சொல்லாத தேவையற்ற வார்த்தைகளின் கோர்ப்புக்களாகவும், சொல் விளையாட்டுக்களாகவும் காட்சியளிக்கும். ஏனெனில் ஏற்கனவே சொல்லப்பட்ட அடையாளக் குவியல்களைத் தவிர்த்து இந்த ஆராய்ச்சி ஆய்வாளர்களால் புதிதாக எதையும் கண்டடையமுடிவதில்லை. இவர்களெல்லாம் கீழே விழுந்துடைந்த ரேப் ரெக்கோடர் போன்றவர்கள். சொன்னதைத் திரும்பத்திரும்பச் சொல்லிக் கொண்டிருப்பவர்கள்.

அதனை விடவும் ஈழத்தின் கவிதைச் சூழல் என்றும் அல்லது போர்க்காலக் கதைகள் என்றும் அல்லது புலம்பெயர்ந்த கவிதைகள் என்றும் நமது கவிதைக்

**தொட்டால் தீட்டு 3**

கொள்கை பரப்புச் செயலாளர்களால்த் தொகுக்கப்பட்ட பல்வேறு கவிதைத் தொகுப்புக்களிலும் இந்த வகைக் கவிதைகள் இடம்பெறுவதில்லை. அது ஏன்? அது எதற்காக? என்று யாரும் கேள்வி கேட்பதுமில்லை.

ஈழத்தின் கவிதைகளில் புலம் பெயர் சிந்தனை என்றாலும் புகலிடச் சிந்தனை என்றாலும் தனியே பனையையும் பனியையும் எழுதுவதோடு மட்டுமல்ல கோப்பை கழுவும் வேலைப் பளுவையும் ஐம்பது வருடமாகச் சேடம் இழுத்து இழுத்து எழுதிக் கொண்டிருக்கிறார்கள். அதற்கே "சிறந்த கவிதை" என்று விருதும் கொடுக்கிறார்கள். இதனை முட்டாள்த்தனம் என்று சொல்லாது வேறு எதனால் அழைப்பது?

யாருக்கும் இடைஞ்சல் இல்லாத எழுத்துக்களையும் எதையும் உரத்த கேள்வியில் முன்நிறுத்தாத எழுத்துக்களையும் கொண்டாடுவதில் நம்மவர்களுக்கு இருக்கும் அக்கறை லேசுப்பட்ட அக்கறையில்லை.

நமது யுத்தகாலம் பூராவும் யுத்தத்தை ஆதரித்து நின்று எழுதுவதும் அல்லது அதனைத் தக்கபடி காக்க மவுனமாகக் கடந்து செல்வதுமாக இருந்த அயோக்கியர்கள் 2009க்குப் பின் தாம் யுத்த மறுப்பாளர்களாகவும் சிறுவர்களை யுத்தத்தில் இணைத்தது தவறு என்றும் அந்த யுத்தத்திற்குள் சாதி இருந்தது உண்மையென்றும் "பல்டி" அடியில் கருத்துச் சொல்பவர்களாகவும் புதிய வேடம் தரிக்கும் போது அவர்களை முக்கிய எழுத்தாளர்கள் என்று அடையாளம் காட்டும் நம்மவர்களது அக்கறையும் லேசுப்பட்ட அக்கறையில்லை.

நித்திரையில் மூத்திரம் பெய்த  
சிறுவனின் ஈரக் களிசானைக் கழட்டி  
இராணுவச் சீருடை தந்தனர்  
பெரியோர்.

களிசான் தளர்ந்து கீழே விழுகிறது

இறுக்கிக் கட்டுவதற்கு  
பெல்ற்றில் அதற்கு மேல் ஓட்டைகள்  
இருக்கவில்லை.

அரைநாண் கொடியை இழுத்து  
களிசானை இறுக்கினான் சிறுவன்.

களிசானைப்பிடித்தபடியே  
அவன் இறந்து போகிறான்.

இந்தக் கவிதையைச் சுகன் 1990களின் ஆரம்பத்தில் எழுதுகிறார். இதே 1990களின் ஆரம்பகாலத்தில் எமது ஈழத்தின் மற்றய கவிஞர்கள் என்பவர்கள் என்ன எழுதிக் கொண்டிருந்தார்கள் என்று நாம் கணக்கிடத் தவறக் கூடாது.

இறப்பதைப் போன்ற தோற்றத்தை  
அளித்துவிட்டு- தாங்கள்  
இருப்பதைப் போன்ற தோற்றத்தை  
ஒருவருக்கொருவர் கொடுக்கின்ற  
இந்த மக்களிடம் அச்சமுறாதவர் யார்?

இறந்தபின் வேறு உருவங்களில் நடமாடும்  
இந்த மக்கள்  
என்னைப் பயமுறுத்துகின்றனர்.

பசையற்ற, நருவல் நொருவலான,  
உப்புச்சப்பற்ற  
மந்த குணம் கொண்ட இந்த மக்களதும்  
அவரது நண்பர்கள், எதிரிகள், நேசிப்போர்  
எல்லோரிடமிருந்தும் நான் பயந்து  
போயுள்ளேன்.

எவரும் எவராலும் எவ்விடத்திலும்  
கொல்லப்படவில்லையென்கிற  
எவரும் எவராலும் எவ்விடத்திலும்  
துரத்தப்படவில்லையென்கிற

எவரும் எவரது தாலியையும்  
அறுக்கவில்லையென்கிற

எவரும் எவரையும் எட்டுக்கு  
வைக்கவில்லையென்கிற

எவரும் எவரது கொலையையும்  
ஏற்றுக் கொள்ளவில்லையென்கிற

எப்போதும் எல்லாவற்றிற்கும்  
காரணங்களை வைத்திருக்கிற

இந்த மக்கள் என்னை மிரட்டி  
வைத்துள்ளனர்.

என்று எழுதும் சுகனது கவிதை போர்க்காலக் கவிதையா? இல்லையா?

இரங்கற் செய்தியை எடுத்துவந்த காற்று  
யுத்தத்தால் நியாயப்படுத்தப்பட்டு சவ  
நாற்றமாய் வீசிற்று

குருத்தோலை விழ

"ஈழத்தின் கவிதைகளில் புலம் பெயர் சிந்தனை என்றாலும் புகலிடச் சிந்தனை என்றாலும் தனியே பனையையும் பனியையும் எழுதுவதோடு மட்டுமல்ல கோப்பை கழுவும் வேலைப் பளுவையும் ஐம்பது வருடமாகச் சேடம் இழுத்து இழுத்து எழுதிக் கொண்டிருக்கிறார்கள். அதற்கே "சிறந்த கவிதை" என்று விருதும் கொடுக்கிறார்கள். இதனை முட்டாள்த்தனம் என்று சொல்லாது வேறு எதனால் அழைப்பது?"

காவோலை சிரிக்கவும் சந்தோசப்படவும்  
நிர்ப்பந்திக்கப்பட்டது.

இறைச்சிக் கடையில் தூங்கும்  
கொழுக்கியில்  
வாயில் தூக்கி நண்பனைத் தூக்கவும்

பென்சிலைப் பறித்துத்  
தம்பியின் பொக்கற்றில் கிறனைட்டைத்  
திணிக்கவும்  
நேற்று இயலுமாயிற்று.

இண்டைக்கு!?

நாளைக்கு!?

என்று நுகத்தடிநாட்களை அடையாளம் காட்டிய கவிதை இது. இந்தக் கவிதை இன்று வரை ஒரு கவிதை விமர்சகராலும் சரி அல்லது கவிதைத் தொகுப்பாளர்களாலும் சரி அல்லது கவிதை குறித்த ஆய்வு- ஆளர்களாலும் சரி கருதப்படாத ஒன்று. இதனை விளங்கிக் கொள்ளும் ஒரு சிறிய அறிவுக்கும் உட்பட்டதல்ல ஈழத்தின் கவிதைச் சூழல். அதையும் தாண்டி ஈழக்கவிதைகளை அடையாளம் கொள்கிறோம் என்று தம்பட்டம் அடித்து "கலெக்ட்" பண்ணிய தமிழ்நாட்டுக் கவிதைக்கனவான்களாலும் கருத்திற்கு அகப்படாது போன கவிதை இது. அவர்கள் கண்ணில் படவே படாது இது என்பதுதான் அந்த இடைவெளி.

இற்றைத் திங்களில்  
அறுபதினாயிரம் மனிதவாடை முடிந்தது.

ஐந்து லட்சம் அகதி வாழ்வு தொடர்ந்தது.

ஒரு விசர்த் தமிழனின் விருப்பத்திற்கு முன்னூற்றிப் பதினைந்து மனிதர்கள் முடமானவர்களாகத் தனிமைப் படுத்தப்பட்டனர்.

பிள்ளை பெற்றுப் பலிகொடுக்கப் பெற்றுப் போடும் இயந்திரமாயினர் மக்கள்.

மரணம்!.

சிவந்த அப்பிளைக் கடிக்கும் போது

பல் நோதல் போல.

ஈழ வாழ்வியலில் 2009 வரை சிவந்த அப்பிளைக் கடிக்கும்போது பல்நோதல் போல நாம் மரணத்தை அதுவும் அவர்கள் குழந்தைகள் மரணத்தையல்ல, நம் குழந்தைகளது மரணத்தைக் கவனித்து நின்றதுதான் இந்தத் தமிழ்த் தேசிய இனவாதம்..

பிழையின் தொடக்கம்.

மாமா! கொழும்பில் அம்பது ஆமி சரி.



ஈபிள் கோபுரத்திற்கு அருகில் ரெஸ்ரோரண்ட் என்ற பெயரில் இயங்கும்
கட்டாய உழைப்பு முகாமில் வேலை.

பாலியல் குற்றத்தைத் தவிர மீதிக் குற்றமெல்லாம் என்மீது சுமத்தப்பட்டுவிட்டது.

செயின் ஆற்றில் விழுந்து தற்கொலை செய்யப் போகிறேன்.

மருமகன் செய்தி மிருகமாக மாறிச் சுகம் சொன்னான்.

அதற்குப் பிறகு என்ன நடந்தது என்று நான் கேட்கவில்லை.

உன்னுடைய தரப்பில் எத்தனைபேர் சரி என்றும் நான் கேட்கவில்லை.

பிரான்சில் வேலை கிடைக்காமல் இராணுவத்திற்குச் சென்று உழைக்கப் போய்கொண்டிருக்கும் தமிழர்கள் சிலர் என் நினைவில் வந்தனர்.

“ஈழத் திருநாடே என் அருமைத் தாயகமே இருகரம் கூப்பி எந்தன் வணக்கமம்மா.!

இங்கே சுகனது கவிதைகளைப்பற்றி, அது எதனைச் சொல்கிறது என்று விளக்கமளிக்காது அப்படியே இனங்காட்டிவிட்டுச் செல்வது எதற்காக என்றால் அவற்றை நீங்கள் வாசிப்பில் உணரவேண்டும் என்பதற்காகத்தான். நமது சூழலில் கவிஞர்கள், கவிஞர்கள், கவிஞர்கள் என்று அறைகூவிக் கொண்டிருக்கும் கவிஞர்கள் இந்தக் காலத்தில் என்ன எழுதியிருக்கிறார்கள்? எப்படி எழுதியிருக்கிறார்கள் என்றும் நீங்கள் தானே வாசித்து வித்தியாசத்தைக் கண்டு பிடிக்க வேண்டும். ஏன் இந்த வகைக் கவிதைகள் நமது தமிழ்ச் சூழலில் தொகுக்கப்பட்ட கவிதைத் தொகுப்புக்களில் இடம் பெறவில்லை என்பதையாவது ஏன் என்று நீங்கள் தான் தேட வேண்டும். அதற்காக மட்டுந்தான் இவற்றை அடையாளம் காட்டுகிறேன்.

சரி புலம் பெயர்ந்த அவலத்தைக் குறித்த பதிவுகளைக் கொண்டே அதிக தொகுப்புக்கள் வந்தன என்று நீங்கள் கருதக்கூடும். உங்களுக்கு அவர்களும் சொல்லி வைக்கக் கூடும்.
அதற்காகக் கேட்கிறேன்

முகம்மதுவிற்குச் சுகமில்லை.
ஐக்கிற்குச் சுகமில்லை.
பிராங்க் இற்குச் சுகமில்லை.
நசராவிற்குச் சுகமில்லை.

எனக்கு ஒருகிழமையாகச் சுகமில்லை.

பத்திறோன் வந்து சுகம் கேட்டுவிட்டுப் போய்விட்டார்.

நான் நல்ல சுகம் என்று சாகும்வரை சொல்ல வேண்டும்.

அவருக்குத் தெரியும் முகம்மதுவும் ஐக்குவும் பிராங்க்கும் நசராவும்

சுகமானவுடன் வருவார்களென்று.

என்ற கவிதையையோ

ஈபிள் கோபுரத்திற்கு அருகில்
ரெஸ்ரோரண்ட் என்ற பெயரில் இயங்கும்
கட்டாய உழைப்பு முகாமில் வேலை.

பாலியல் குற்றத்தைத் தவிர மீதிக் குற்றமெல்லாம் என்மீது சுமத்தப்பட்டுவிட்டது.

செயின் ஆற்றில் விழுந்து தற்கொலை செய்யப் போகிறேன்.

உல்லாசப்பிரயாணிகளின் கப்பல் பாலத்தைக் கடந்த பின் நான் விழவேண்டும்.

சைச!

பின்னிருந்து உல்லாசப் பிரையாணிப் பெண் தனது கமராவை நீட்டித்

தன்னைப் புகைப்படம் எடுத்துவிடக் கேட்கிறாள்.

என்ற கவிதையோ( இதன் சரியான வடிவம் கையில் இல்லை. நினைவில் நின்ற விடயம் குறித்து மட்டும்

எழுதப்பட்டுள்ளது)

அல்லது

நோர்வேயிலிருந்து விமானம் பறப்பட்டது.

குடிக்க என்ன வேண்டும் என்று கேட்டாள்
பணிப்பெண்.

முலைப்பால் வேண்டும் என்றேன் நான்.

என்று தொடரும் கவிதையையோ இவர்களால் கண்கொண்டு பார்த்துவிட முடியாதிருந்தது எதனால்?

சென்ற பதிவில் சுகன் பற்றி எழுதும் போது “அவர் தனது நடைமுறை வாழ்வில் எமக்கு இன்னொரு வகைக் கரைச்சலையும் தந்தபடி இருப்பார். அவர் அன்றாடம் நமக்குத் தரும் கரைச்சலுக்கும் அவர் தரும் கவிதையின் கரைச்சலுக்கும் மிகப்பெரிய வேறுபாடு இருக்கும்.நான் இங்கே அவரது கவிதையின் கரைச்சல் பற்றியே பேசத் தொடங்குகிறேன்.” என்று சொல்லியிருந்தேன்.

1993 காலத்தில் சுகனுடைய கவிதைகளை எடுத்துத் தொகுத்த இன்பா மற்றும் சுசிந்திரன் இருவரும் “நுகத்தடி நாட்கள்” என்று ஒரு தொகுப்பினைக் கொண்டுவந்திருந்தார்கள். அது ஒரு அற்புதமான தலைப்பும் தொகுப்பும். இன்று வரை சுகனது கவிதைத் தொகுப்பு என்று அதனைத்தான் இந்த சமூகம் அறிந்து கொள்ள முடியும்.

சுகனின் கவிதைத் தன்மையை அது இந்த சமூகத்திற்குள் செலுத்தும் ஒரு புதிய கரைச்சல்களை ரசித்த நான் எமது எக்ஸில் பதிப்பகத்தால் சுகனுடைய கவிதைகளைத் தொகுப்பதற்காகச் சேர்க்கத் தொடங்கினேன். அதன் பின் 2000இன் ஆரம்பகாலம் என நினைக்கிறேன். சேகரித்த கவிதைகளைச் சுகனிடம் காட்டி நாம் “எக்ஸில்” வெளியீடாக ஒரு தொகுப்பாகக் கொண்டுவர முயற்சிக்கிறோம் எனச் சொன்னோம். அதற்குச் சம்மதித்தபின் நாம் அனைத்தையும் ரைப் செய்து புறூவ்ப் பார்த்து முன்னுரை எழுதும் சந்தர்ப்பத்தில் அவருடைய வழமையான குளறுபடித் தனத்தால் அது கைவிடப்பட்டது.

இப்படித்தான் சுகன் என்ற ஒரு மனிதனுடனான கரைச்சலை நாம் எதிர்கொண்டபடியிருக்கிறோம்.

அவர் அன்றாடம் நமக்குத் தரும் கரைச்சலுக்கும் அவர் தரும் கவிதையின் கரைச்சலுக்கும் மிகப்பெரிய வேறுபாடு இருக்கும். நான் இங்கே கவிதையின் கரைச்சல் பற்றியே பேசுகிறேன்.

நம்முடைய இளமைக் காலத்தையும் எங்கள் குழந்தைகளுடைய இளமைக்காலத்தையும் அழித்தொழித்த யுத்தத்தை யாரும் இலகுவாகக் கடந்து போய்விட முடியாது. யுத்தத்தை விடுதலை என்று நம்பியவர்களையும் அது காடாத்திவிட்டுத்தான் போயிருக்கிறது. இந்த யுத்தம் ஆசிர்வதிக்கவோ ஆராதித்து நிற்கவோ தகுதியில்லாதது என்று காலம் பூராவும் பேசிவந்தவர்கள் சிலர். அதில் சுகனும் ஒருவர். அந்தத் தனித்துவம் பற்றிய கவனமே சுகனை நான் அடையாளப்படுத்தும் இடம்.

புலம்பெயர் தேசத்தில் வழக்கிடைத்த சமூகத்திற்கு பல்வேறு அனுபவமும் புதிய வாழ்சூழலும் அறிய வரம் கொண்டதான ஒரு காலம் கைவரப் பெற்றது. ஆனால் அது இந்தக் கொடிய யுத்தத்தை தனது விடுதலைக்கானது என நம்பியது. அதன் ஒரு புதிய தலைமுறை கூட ஈழத்தில் யுத்தவிரும்பிகளின் ஒவ்வொரு இராணுவ முகாமிற்கும் சென்று தன் அடையாளத்தைத் தக்கவைத்தது. ஒரு சமூகமாக எண்ணி எதனைச் செய்யக் கூடாததோ அதனைச் செய்தது நமது சமூகம்.. தன்னடையாளத்திற்காக எந்த அயோக்கியத்தனத்தை யார் செய்தாலும் அதனை வரவேற்றது யுத்தம். யுத்தத்திற்குத் தேவை தொடர் யுத்தம். ஆனால் இந்த யுத்த விரும்பிகள்தான் இன்று புதிய வேடம் போடத் தொடங்கியிருக்கிறார்கள். இவர்கள் கதை சொல்லிகளாகவும் நாடோடிக் கதையாளர்களாகவும் படம் காட்டி தம்மை குதருக்குள் மறைக்கப் பார்க்கிறார்கள்.

சுகனின் இந்தக் கவிதைகள் சுட்டி நிற்கும் சம்பவங்கள் எவையும் ஒரு சிறு சலசலப்பையும் ஏற்படுத்திவிடாதவைபோல் அவர்கள் கடந்து செல்வதுதான் இதன் பின்னாலிருக்கின்ற முக்கிய தரு.

இந்த வகை முக்கிய தருக்களாலே நமது ஈழச் சமூகத்தின் கவிதைகள் அடையாளப்படுத்தப்படும் போது அவை திட்டமிட்டு மட்டுமே தவிர்க்கப்படுபவை. அவர்களுக்கு நன்கு தெரியும் இந்தக் கவிதைகளால் தமது இருப்பிற்கும் தமது தொடர் வாழ்விற்கும் கேடு என்பது. அதனால்

நோர்வேயிலிருந்து விமானம் பறப்பட்டது.

குடிக்க என்ன வேண்டும் என்று கேட்டாள் பணிப்பெண்.

முலைப்பால் வேண்டும் என்றேன் நான்.

அவர்களால் அதனைப் பொருட்டிற்கும் காவமுடியாது. அதனால்தான் அவற்றைத் தவிர்த்தும் மவுனமாய்க் கடந்தும் செல்லவேண்டி நிலைக்கு அவர்கள் வந்து விட்டிருக்கிறார்கள்.

சுகனின் கவிதைகளின் முக்கியத்துவம் தன்காலத்தில் நிகழ்ந்த கொடிய யுத்தத்தின்மீது எதிர்க் கதையைத் தெரிவித்து அடையாளப்படுத்தி நின்றதுதான்.ஆனால் தனியே யுத்த மறுப்புக்களை மட்டும் பேசிநின்றவையல்ல அவை. ஒரு அகதி படும் பாட்டின் புள்ளியை மிகவும் கரிசனையோடு முன்வைப்பவை. பனியையும் பனியில் நனையும் கால்களையும் ஒரு வித சூடும் இல்லாது சுரணையுமில்லாது கவிதைகளை எழுதிக் கொண்டிருக்கும் ஈழச் சூழலில் ஒரு தனித்துவ அடையாளத்துடன் அதன் கதையைச் சொல்லத் தொடங்கியவர் சுகன். அதாவது அவர் “கவிஞர் சுகன்”.





# பொன் அருணாசலம் தொடங்கிய கோணல் அரசியல், நூறாண்டுகளில் தமிழர்களை முற்றும் குறுக்கி விட்டது

1923ம் ஆண்டு திரு பொன்னம்பலம் அருணாசலம் அவர்கள் இலங்கைத் தமிழர் பேரவை (Ceylon Tamils League) யை ஆரம்பித்ததோடுதான் இலங்கையில் தமிழர்களின் அரசியலை ஏனைய இலங்கை மக்களின் அரசியலிருந்து வேறுபட்ட இனவாரியான அரசியலாக அமைப்புரீதியில் ஆரம்பித்து வைத்தது. இதனுடைய அர்த்தம் இலங்கையில் இனவாத அரசியலை பொன் அருணாசலம் அவர்கள்தான் ஆரம்பித்து வைத்தார் என்பதல்ல. அவருக்கு முன்னரேயே கொழும்பு மைய சிங்களவர்களின் அரசியற் சிந்தனையிலும் யாழ்ப்பாண மேட்டுக்குடி இந்து மைய அரசியற் சிந்தனையிலும் இனரீதியான நலன் தொடர்பில் பிளவுபட்ட கருத்துக்கள் - கோரிக்கைகள் எழுந்து விட்டன. ஆனால் அது அப்போது இலங்கை முழுவதிலுமான அரசியற் போக்கில் குறிப்பிடத் தக்க அளவுக்கு முக்கியம் பெற்றதாக இருக்கவில்லை. அன்றைய சிங்கள அரசியற் தலைவர்களின் இனவாத நோக்குடனான அரசியலுக்கு எதிரான விளைவாகத்தான் அருணாசலம் அவர்களின் இனவாத அரசியலும் ஆரம்பித்தது என்ற விவாதத்தையும் மறுப்பதற்கில்லை. ஆனால் அது சரியான அரசியற் கோட்பாட்டின், தெளிவான கொள்கைகளின் அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்டதா? சரியான பாதையில் சரியான முறைகளில் பயணித்ததா என்பன ஆராயப்பட வேண்டிய விடயங்களாகும்.

அருணாசலம் அவர்கள் ஆரம்பித்து வைத்த தமிழின அடிப்படையிலான அரசியல் பொதுநல நோக்கிலிருந்து ஆரம்பிக்கப்பட்டதா அல்லது அவரது சுயநலப் பிரச்சினையில் இருந்து தோற்றம் பெற்றதா என்கிற முதற் கேள்வியில் இருந்தே அவர் தொடக்கி வைத்த அரசியல் இந்த நூறு ஆண்டுகளில் எவ்வாறானதொரு கட்டத்தை, எவ்வாறானதொரு நிலையை அடைந்திருக்கிறது என்பதனை அடையாளம் காண்பதற்கும் புரிந்து கொள்வதற்கும் அவசியமாக



அ.வரதராஜ பெருமாள்
இணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர்

உள்ளது. ஏனெனில், தமிழர்கள் மத்தியில் தமிழினம் என்ற அடிப்படையிலான அரசியலை முதலில் மூட்டி விட்டவர் அவர்தான். 1921ம் ஆண்டின் பிரித்தானிய காலனித்துவ ஆட்சியாளர்கள் இலங்கையில் மேற்கொண்ட அரசியற் சீர்திருத்தத்தைத் தொடர்ந்து உருவாக்கப்பட்ட கொழும்புத் தொகுதியிலிருந்து அவரை சட்ட சபைக்கு பிரதிநிதியாகத் தெரிவு செய்வதற்கு அன்றைய சிங்கள அரசியற் தலைவர்கள் அவருக்கு அளித்திருந்த வாக்குறுதியை மீறி அத்தொகுதிக்கு சேர். ஜேம்ஸ் பீரிஸ் அவர்களை தெரிவு செய்வதற்கு ஆதரவளித்தார்கள் என்பதனால் ஏற்பட்ட ஆத்திரமும் விரக்தியுமே அருணாசலம் அவர்களை இலங்கை தேசிய காங்கிரஸில் இருந்து விலகவும் இலங்கை தமிழர் பேரவையை உருவாக்கவும் தூண்டியது என்றால் தவறாகாது.

இலங்கையரின் ஒரே மக்கள் பிரதிநிதியாக பொன். ராமநாதன் மட்டுமே உறுப்பினராக இருந்த இலங்கை சட்டவாக்க சபை

1910ம் ஆண்டு அரசியற் சீர்திருத்தத்துக்கான ஏற்பாடுகளை அப்போது ஆளுநராக இருந்த மக்கலம் மேற்கொண்டார். அவ்வேளையில் சிங்களத் தலைவர்கள் சட்டவாக்க சபையில் இனவாரியான பிரதிநிதித்துவங்கள் இல்லாமல் ஆக்கப்பட்டு தொகுதிவாரியாக மக்களால் தேர்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டதாக சட்டவாக்க சபை ஆக்கப்பட வேண்டும் என வலியுறுத்தினார்கள். அப்போது யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்ட அரசியற் குரலாக யாழ்ப்பாண சங்கம் இருந்தது. அந்த சங்கம் ஆளுநரிடம் சட்டவாக்க சபையில் தமிழர்களுக்கு இனவாரியான பிரதிநிதித்துவத்தைக் கோரியது. அந்த இரண்டு வகையான கோரிக்கைகளில் எதனையும் கருத்திற் கொள்ளாத 1910ம் ஆண்டு சீர்திருத்தம் இலங்கை முழுவதிலுமிருந்து படித்த இலங்கையர்களால் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவரை

> *1915ம் ஆண்டு முஸ்லிம்களுக்கு எதிராக சிங்களவர்களைத் தூண்டி விட்டு பல இறப்புகளுக்கும், முஸ்லிம் வர்த்தகர்களின் பெருந்தொகையான உடைமைகள் எரிக்கப் பட்டமைக்கும் காரணகர்த்தாக்கள் என்ற அடிப்படையில் பிரதானமான சிங்கள அரசியற் தலைவர்கள் அரசினால் கைது செய்யப்பட்டனர்.*
>
> *அவர்களை விடுவிப்பதற்காக லண்டன் சென்று வழக்காடிய பொன்னம்பலம் ராமநாதனுக்கு நன்றி தெரிவிப்பதற்காக அந்தச் சிங்களத் தலைவர்கள் அவரை தேரில் இருத்தி இழுத்து ஊர்வலம் கொண்டு சென்றமை இலங்கையின் பிரபலமான வரலாற்றுச் சம்பவங்களில் ஒன்று.*

சட்டவாக்க சபையில் உள்ளடக்க ஏற்பாடு செய்தது. அந்த பிரதிநிதித்துவத்தை பொன்னம்பலம் ராமநாதன் பெறும் வகையாக சிங்களத் தலைவர்கள் அவருக்கு அதரவளித்தார்கள்.

1910ம் ஆண்டு படித்த இலங்கையர்களால் தெரிவு செய்யப்படும் ஒருவர் சட்டவாக்க சபையில் இடம் பெறுவதற்கான தேர்தலுக்கு திரு.மார்க்கஸ் பெர்னாண்டோ அவர்கள் வேட்பாளர் நியமன பத்திரத்தைத் தாக்கல் செய்தார். அவர் மிகப் படித்த, புகழ் பெற்ற ஒருவர் என்பதோடு மிகப் பெரும் பணக்கார குடும்பத்தைச் சேர்ந்தவர் என்பதும் கவனிக்கத்தக்கது. இருந்த போதிலும் அவர் சட்டசபைக்கு தெரிவு செய்யப்படுவதை அன்றைய மேட்டுக்குடி சிங்கள அரசியற் தலைவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. ஏனெனில், திரு. மார்க்கஸ் பெர்னாண்டோ சிங்களவர்களிடையே இருந்த உயர்சாதியினரைச் சேர்ந்தவரல்ல. அவர் கரையோர (Karava) சாதியைச் சேர்ந்தவர். அந்தக் காரணத்தை முன்வைத்து திரண்ட உயர்சாதி சிங்களத் தலைவர்களே அவர் தோற்கும் வகையாக திரு. பொன் ராமநாதனுக்கு 1911ம் ஆண்டுத் தேர்தலின் போது ஆதரவளித்து வெற்றி பெற வைத்தனர். அதேவேளை சட்டவாக்க சபையில் தமிழின பிரதிநிதித்துவம் கோரிய யாழ்ப்பாண சங்கத்தவர்கள் ஓர் இந்துத் தமிழரான ராமநாதன் தெரிவு செய்யப்படுகிறார் என்றவுடன் அமைதி கொண்டார்கள். அந்தத் தேர்தலின் போது திரு மார்க்கஸ் பெர்னாண்டோவின் தேர்தற் பிரச்சாரம் பொன் ராமநாதனுக்கு எதிராக ஒரு தமிழர் என்ற அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட்டது.

1915ம் ஆண்டு முஸ்லிம்களுக்கு எதிராக சிங்களவர்களைத் தூண்டி விட்டு பல இறப்புகளுக்கும்; முஸ்லிம் வர்த்தகர்களின் பெருந்தொகையான உடைமைகள் எரிக்கப் பட்டமைக்கும் காரணகர்த்தாக்கள் என்ற அடிப்படையில் பிரதானமான சிங்கள அரசியற் தலைவர்கள் அரசினால் கைது செய்யப்பட்டனர். அவர்களை விடுவிப்பதற்காக லண்டன் சென்று வழக்காடிய பொன்னம்பலம் ராமநாதனுக்கு நன்றி தெரிவிப்பதற்காக அந்தச் சிங்களத் தலைவர்கள் அவரை தேரில் இருத்தி இழுத்து ஊர்வலம் கொண்டு சென்றமை இலங்கையின் பிரபலமான வரலாற்றுச் சம்பவங்களில் ஒன்று. அத்துடன் 1916 ஆண்டும் சிங்களத் தலைவர்கள் திரு. பொன் ராமநாதனையே சட்டவாக்க சபைக்கு தெரிவு செய்தார்கள்.

1920ம் ஆண்டு நடைபெற்ற அரசியற் சீர்திருத்தற்கான உரையாடல்களின் போது சட்டவாக்க சபைக்கு ஆளுநரால் நியமிக்கப்படும் உறுப்பினர்களை விட அதிக எண்ணிக்கையில் பிரதேசவாரியாக மக்களால்

தெரிவு செய்யப்பட வேண்டுமென சிங்கள அரசியற் தலைவர்கள் கோரினார்கள். அவ்வேளை யாழ்ப்பாண சங்கத்தினர் சட்டவாக்க சபையில் இனவாரியான பிரதிநிதித்துவ ஒதுக்கீட்டை மீண்டும் கோரினார்கள். அந்தக் கோரிக்கை முக்கியத்துவம் பெற்று விடக் கூடாது என முயன்ற சிங்கள அரசியற் தலைவர்கள் திரு. அருணாசலத்தை முன்னிறுத்தியே அந்தக் கோரிக்கையைக் கைவிட வைத்தார்கள். அந்தளவுக்கு அவர் இலங்கைத் தேசியவாதியாக செயற்பட்டார்.

அந்தக் கால கட்டத்தில் இலங்கையில் ஏற்படும் அரசியற் சீர்திருத்தங்கள் எவ்வகைகளில் எல்லாம் இனவாரியாக பெரும்பான்மையினர், சிறு பான்மையினர் என்ற அரசியலையும் வளர்த்தெடுக்கும் என்பது பற்றி ராமநாதன் மற்றும் அருணாசலம் சகோதரர்கள் சிந்தித்துக் கூட பார்க்கவில்லை. ஆனால் அருணாசலம் அவர்கள் 1921ம் ஆண்டு சட்டவாக்க சபையில் தனது பிரதிநிதித்துவத்தை உறுதி செய்வதற்காக கொழும்பில் தமிழர்களுக்கென ஒரு தொகுதி வேண்டும் எனக் கோரினார். ஆனால் சிங்களத் தலைவர்களோ மேல் மாகாணத்திற்கான மூன்று தொகுதிகளில் கொழும்புக்கென அமையும் தொகுதியில் அருணாசலம் அவர்கள் தெரிவு செய்யப்படுவதை ஆதரவளிப்பதாக உறுதி அளித்தார்கள்.

ஆனால் தேர்தல் நடைபெற்ற போது மேல்மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட இலங்கையர்கள் மூன்று பேருமே சிங்களவர்களாக மட்டுமே இருப்பதை நடைமுறைப்படுத்தினார்கள். அருணாசலம் அவர்கள் தேர்தலில் போட்டியிடாதது மட்டுமல்லாது. இலங்கைத் தேசிய காங்கிரஸில் இருந்தும் விலகினார். அதுவரை இனவாரியான அரசியலைச் சிந்திக்காத அருணாசலம் தனக்கென்று பிரச்சினை வந்த போதுதான் தமிழர் அரசியல் என்ற ஒன்றைத் தொடங்கினார்.

தனது தமிழினவாத அரசியலைத் தொடர்வதற்காக 1923ம் ஆண்டு இலங்கைத் தமிழர் பேரவையை உருவாக்கிய திரு. அருணாசலம் அவர்கள் ஓராண்டுக்கு உள்ளேயே இறந்து விட்டார். 1924ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட அரசியற் சிர்திருத்தத்தின்படி கொழும்பிலிருந்து சட்டவாக்க சபைக்கு ஒரு தமிழ் பிரதிநிதி தெரிவு செய்யப்படுவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டது. அதற்கு திரு. அருணாசலம் மகாதேவா அவர்கள் சிங்களத் தலைவர்களின் ஆதரவோடு தெரிவு செய்யப்பட்டார். அருணாசலம் உயிரோடு இருந்திருந்தால் அந்த இடத்தை அவர் பெற்றிருப்பார், அவரது இலங்கைத் தமிழர் பேரவைக்கு என்ன நடந்திருக்கும் என்பது கேள்விக்குரிய ஒன்றே. ஆனால் அவர் வைத்த தமிழின அரசியல் எனும் நெருப்பு யாழ்ப்பாணத்தில் இருந்த அரசியல் சமூக அமைப்புக்களில் பற்றிக் கொண்டது என்பதில் சந்தேகமில்லை.

1913ம் ஆண்டு அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்ற அருணாசலம் அவர்கள் இலங்கை தேசிய சங்கத்தினூடாக (Ceylon National Association) அரசியற் களத்தில் காலடி எடுத்து வைத்தார். பின்னர் அரசியற் சீர்திருத்தங்கள் தொடர்பான செயற்பாடுகளுக்காக உருவாக்கப்பட்ட இலங்கை சீர்திருத்த பேரவை (The Ceylon Reform Leaque) யின் முதலாவது தலைவராகவும் செயற்பட்டார். பின்னர் அவரின் பெரும் முயற்சியால் 1919ம் ஆண்டு இலங்கைத் தேசிய காங்கிரஸ் உருவாக்கப்பட்டது. அதன் முதற் தலைவராகவும் அவரே தெரிவு செய்யப்பட்டார். அருணாசலம் அவர்கள் இலங்கைத் தேசிய காங்கிரஸில் இருந்து பிரிந்து இலங்கைத் தமிழர் பேரவையை ஆரம்பிக்கும் காலம் வரை தமிழர்களின் நலன் என்ற அடிப்படையில் பேசியதில்லை. பிரித்தானிய ஆட்சிக்கு முழு விசுவாசமானவராக இருந்த போதிலும் ஒரு இலங்கையராகவே செயற்பட்டார். பிரித்தானிய காலனித்துவத்துக்கு உட்பட்ட வகையில் அதிக அளவு பிரதிநிதித்துவத்தையும் அதிகாரங் களையும் கொண்டதாக இலங்கையில் சட்டவாக்க மற்றும் நிறைவேற்றதிகார சபைகள் அமைய வேண்டும் என்பதற்காக அவர் தீவிரமாக உழைத்தார் என்பதில் சந்தேகமில்லை.

ஆட்சிச் சபையில் சிங்களவர்களுக்குச் சமனான அதிகார அரசியலைக் கோரிய தமிழ் தலைவர்கள் மாகாண ஆட்சியையோ, சமஸ்டியையோ கோரவில்லை

இலங்கையின் அரசியற் சீர்திருத்த முன்னேற்றம் தொடர்பாக மேற் கொண்ட தனது உரைகளிலும், எழுத்துக்களிலும் அருணாசலம் அவர்கள் பிரித்தானிய ஆட்சியின் கீழ் இந்தியாவில் ஏற்படுத்தப்பட்ட அரசியற் சீரதிருத்தங்கள் பற்றி அடிக்கடி

> அருணாசலம் அவர்கள் இலங்கைத் தேசிய காங்கிரஸில் இருந்து பிரிந்து இலங்கைத் தமிழர் பேரவையை ஆரம்பிக்கும் காலம் வரை தமிழர்களின் நலன் என்ற அடிப்படையில் பேசியதில்லை.
>
> பிரித்தானிய ஆட்சிக்கு முழு விசுவாசமானவராக இருந்த போதிலும் ஒரு இலங்கையராகவே செயற்பட்டார்.

குறிப்பிடுவதை வழமையாகக் கொண்டிருந்தார். அத்துடன் பிரித்தானிய காலனித்துவத்துக்கு உட்பட்ட ஏனைய பல நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட அரசியற் சீரதிருத்தங்களின் முன்னேற்றங்கள் மற்றும் அவற்றின் அநுபவங்களையும் குறிப்பிட்டு அடிக்கடி பேசியிருக்கிறார், எழுதியிருக்கிறார். 1919ல் இந்தியாவில் மத்திய ஆட்சி மற்றும் மாநில ஆட்சி அமைப்பு முறைகள் தீர்க்கமாக உருவாக்கப்பட்டன. அந்த ஆட்சி அமைப்புக்கள் பிரித்தானிய காலனித்துவ ஆட்சிக்கு கட்டுப்பட்டதாகவே அமைந்த போதிலும் அவை வாக்காளர்களால் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகள் தொடர்பாகவும் அவர்களுக்கான அதிகாரங்கள் தொடர்பாகவும் முன்னேற்றகரமான பல ஏற்பாடுகளைக் கொண்டமைந்தன.

ஆனால், பிரித்தானிய ஆட்சியாளர்களிடம் இலங்கையின் உள்ளூராட்சி அமைப்புக்கள் தொடர்பில் ஏற்படுத்தப்பட வேண்டிய முன்னேற்றகரமான சீர்திருத்தங்கள் பற்றி நிறைய பேசியும் எழுதியும் வலியுறுத்திய அருணாசலம் அவர்களோ அல்லது இந்திய அரசியலோடு நெருக்கமான உறவுகளையும் அவதானிப்புகளையும் கொண்டிருந்த ஏனைய தமிழ் அரசியற் தலைவர்களோ அன்றைய காலகட்டத்தில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இலங்கையில் மாகாண அடிப்படையிலான ஆட்சிக் கட்டமைப்பைப் பற்றி பேசியதாகவோ எழுதியதாகவோ இல்லை. இலங்கை ஒற்றையாட்சி முறையிலான ஒரே நிர்வாகக் கட்டமைப்பை கொண்டதாக இருப்பதிலேயே அக்கறையாக இருந்தார்கள்.

1919ம் ஆண்டு இந்தியாவில் ஏற்படுத்தப்பட்ட மத்திய மற்றும் மாகாண ஆட்சி அமைப்பு முறைதான் 1935ம் ஆண்டு மேலும் முன்னேற்றகரமான சீரதிருத்தங்களுக்கு உள்ளானது. 1947ம் ஆண்டு சுதந்திரம் பெற்ற இந்தியா அதனது குடியரசு அரசியல் யாப்பின் மூலம் மாநிலங்களுக்கு சுயாட்சி அளவிலான கணிசமான அதிகாரங்களை வழங்கும் ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கு 1935ம் ஆண்டு மேற் கொள்ளப்பட்ட அரசியல் அமைப்பே அடிப்படையாக அமைந்தது. இந்த அநுபவங்களை இலங்கைத் தமிழ்த் தலைவர்கள் கொஞ்சம் கூட பாடமாக எடுத்துக் கொள்ளவில்லை. மாறாக கொழும்பு மைய அரசியலில் இருந்த மேல்மட்ட சிங்கள அரசியற் தலைவர்களோடு சமனான கூட்டாளிகளாக இருந்து முழு இலங்கையர்களையும் ஆளுவதிலேயே குறியாக இருந்தார்கள் என்றால் மிகையாகாது.

**“இலங்கையில் வாழும் தமிழர்கள் எண்ணிக்கை ரீதியில் குறைந்த சனத்தொகை கொண்டவர்களெனினும், பொன் இராமநாதன் மற்றும் பொன் அருணாசலம் போன்றவர்களின் தலைமையில் அன்றிருந்த தமிழர் அரசியல் தமிழர்களை இலங்கையில் வாழும் ஒரு சிறுபான்மைத் தேசிய இனத்தவர்கள் எனக் கருதவில்லை.**

**பிரித்தானியர்களின் ஆட்சியின் கீழ் பணக்காரர்கள் மற்றும் படித்தவர்களைக் கொண்ட மேட்டுக்குடியினரின் ஆட்சிதான் தொடர்ந்து நடக்கும் என்று நம்பியதால் அரசியல்ரீதியல் தமிழர்களும் சிங்களவர்களுக்குச் சமனான பெரும்பான்மையினர் என்றே கருதினார்கள் என்பது மிகத் தெளிவான ஒன்றாகும்.”**

இலங்கையில் வாழும் தமிழர்கள் எண்ணிக்கை ரீதியில் குறைந்த சனத்தொகை கொண்டவர்களெனினும், பொன் இராமநாதன் மற்றும் பொன் அருணாசலம் போன்றவர்களின் தலைமையில் அன்றிருந்த தமிழர் அரசியல் தமிழர்களை இலங்கையில் வாழும் ஒரு சிறுபான்மைத் தேசிய இனத்தவர்கள் எனக் கருதவில்லை. பிரித்தானியர்களின் ஆட்சியின் கீழ் பணக்காரர்கள் மற்றும் படித்தவர்களைக் கொண்ட மேட்டுக்குடியினரின் ஆட்சிதான் தொடர்ந்து நடக்கும் என்று நம்பியதால் அரசியல்ரீதியல் தமிழர்களும் சிங்களவர்களுக்குச் சமனான பெரும்பான்மையினர் என்றே கருதினார்கள் என்பது மிகத் தெளிவான ஒன்றாகும். சிங்கள - தமிழ் மேட்டுக் குடியினரைப் பொறுத்த வரையில் அன்றைய நிலையில் முஸ்லிம் மக்களையும், இந்தியத் தமிழர்களையும், பறங்கியரையும் மற்றும் மலே இனத்தர்களையுமே சிறுபான்மை இனத்தவர்கள் எனக் குறித்தனர்.

தமிழர்களுக்கான இனவாரியான பிரதிநிதித்துவம் சட்டவாக்க சபையில் வேண்டுமென்று கேட்ட தமிழ் மேட்டுக் குடியினர், அன்றைய நிலையில் இலங்கைத் தமிழர்களை விட சனத்தொகை ரீதியில் கூடுதலாக இலங்கையில் வாழ்ந்து கொண்டிருந்த இந்தியத் தமிழர்களுக்கு சனத் தொகையின் அடிப்படையில் இனவாரியான பிரதிநிதித்துவம் தரப்பட வேண்டுமென்று கோரவில்லை என்பது இங்கு குறிப்பிடப்பட வேண்டிய ஒன்றாகும். ஒரு குறிப்பிட்ட வயதினருக்கு மேல் அனைவருக்கும் வாக்குரிமை வழங்க வேண்டும் என்னும் எண்ணம் அப்போது தமிழன அரசியலில் இருக்கவில்லை. மாறாக, படித்தவர்களுக்கு மட்டுமே வாக்குரிமை வழங்கப்பட வேண்டும் என்பதே யாழ் மையவாத அரசியலின் சிந்தனையாக இருந்தது.

1924ம் ஆண்டு மேல் மாகாணத்துக்கு சமனாக வடக்கு மாகாணத்துக்கும் ஐந்து பிரதிநிதிகள் சட்ட சபையில் இடம் பெற ஏற்பாடு செய்யப்பட்டது. அப்போது வடக்கு மாகாணம் முழுமைக்கும் தெரிவு செய்யப்பட்ட ஐந்து பேரும் யாழ்ப்பாண உயர்சாதி

இந்துக்களே. அது மட்டுமல்லாது கொழும்பில் தமிழருக்கென ஒரு தனிப் பிரதிநிதித்துவம் தெரிவு செய்யப்படுவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டது. அந்த இடத்துக்கு தெரிவு செய்யப்பட்டவர் திரு பொன் அருணாசலத்தின் மகன் மகாதேவா அவர்கள். இவ்வாறான நிலைமை ஏற்பட்டவுடன் யாழ்ப்பாணத் தமிழனவாத அரசியற்காரரர்கள் அன்றைய அவர்களின் உடனடி அரசியற் தேவைகள் தொடர்பில் திருப்தி கொண்டார்கள்.

### அன்று சமஸ்டியை முற்றாக நிராகரித்த தமிழ் அரசியல்

அருணாசலம் அவர்கள், இலங்கைத் தேசிய காங்கிரஸில் இருந்த போதும் சரி அதை விட்டு வெளியேறிய போதும் சரி இலங்கையில் மத்திய மற்றும் மாகாண ஆட்சி முறைமை ஏற்படுத்தப்படும் வேண்டுமென்று கோரிக்கையை வலுவாக முன்வைத்திருக்க வேண்டும். அதன் மூலம் இலங்கையில் அப்போதே ஓர் அரசியற் கட்டமைப்பு மாற்றத்திற்கான அடித்தளம் இடப்பட்டிருக்கும். 1925ம் ஆண்டு அரசியற் தளத்தில் காலடி வைத்த எஸ். டபுள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா அவர்கள் கண்டிய சிங்களவர்களின் கோரிக்கையாக சமஸ்டிக் கோரிக்கையை வலியுறுத்திய போது தமிழர் பிரதிநிதிகளும் இணைந்திருந்தால், அது தமிழர்களின் கோரிக்கையாக மட்டும் இல்லாது, சிங்களவர்களும் தமிழர்களும் இணைந்த ஒரு கோரிக்கையாக இருந்திருக்கும். இந்தக் காலகட்டத்தில் பிரத்ததானியர்கள் இந்தியாவில் சமஸ்டி அடிப்படையிலான அரசியற் சீர்திருத்த முன்னேற்றங்களை மேற கொண்டிருந்தார்கள். இலங்கையில் அது நடக்கவில்லை. காரணம் தமிழினவாத அடிப்படையிலான அரசியலின் முதற்கட்டம் கோணலாகவே ஆரம்பித்தது.

தனக்கு கொழும்புப் பிரதிநிதித்துவம் கிடைக்கவில்லையென்றவுடன், தமிழர்களுக்கென பிரதிநிதித்துவம், அதற்காக தமிழர்களின் இனரீதியாக ஒற்றுமைப்பட வேண்டும், அதற்கான ஆதரவை இலங்கை முழுவதிலும், பிரித்தானிய காலனிக்குக் கீழ் இருந்த நாடுகள் அனைத்திலுமுள்ள தமிழர்களிடையேயும், தென்னிந்தியாவிலும் திரட்ட வேண்டுமெனப் புறப்பட்ட திரு. பொன் அருணாசலம், அவற்றிற்கு மாறாக இலங்கையில் மத்திய மற்றும் மாகாண ஆட்சி முறைகளைக் கோரியிருக்க வேண்டும். மாறாக, தமிழின அரசியல் என்ற ஒன்றைத் தோற்றுவித்து சிங்களத் தலைவர்களை மறைமுகமாக மிரட்டி தமது வழிக்குக் கொண்டு வரும் நோக்குடனான வேலைத் திட்டத்தையே அவர் முன்னெடுத்தார். ஏனெனில் 1924ம் ஆண்டு கொழும்பில் தமிழர்களுக்கென ஒரு பிரதிநிதித்துவம் கிடைத்த போது அவரது மகன் அருணாசலம் மகாதேவா கொழும்புமைய சிங்கள அரசியத் தலைமைகளோடு சமரசமாகிக் கொண்டார். அருணாசலம் உயிரோடு இருந்திருந்தாலும் அதையே செய்திருப்பார் என்பதில் சந்தேகமேயில்லை.

1924ம் ஆண்டின் சட்டவாக்க சபைக்காக மக்களால் தெரிவு செய்யப்பட்ட 29 உறுப்பினர்கள் இடம் பெறுவதற்கான ஏற்பாட்டு செய்யப்பட்டது. அப்போது வடக்கு மாகாணத்தில் இருந்து 5 தமிழர்களும், கிழக்கு மாகாணத்தில் இருந்து 2 தமிழர்களும், கொழும்பில் இருந்து தமிழர்களின் பிரதிநிதித்துவம் என ஒருவரும் இடம் பெற்றனர். அதேவேளை, இனவாரியாக 3 ஐரோப்பியர்களும், இரண்டு பறங்கியர்களும், இந்தியர்களுக்கென இரண்டு பிரதிநிதிகளும், முஸ்லிம்களுக்கென மூன்று பிரதிநிதிகளும் இடம் பெற்றனர். ஆக, அப்போது மக்களின் பிரதிநிதிகளாக சட்டவாக்க சபையில் இருந்த 37 பேரில் 13 பேர் தமிழ் பேசும் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தினர். சிங்கள மக்களின் பிரதிநிதிகளாக தென்னிலங்கையின் ஏழு மாவட்டங்களிலிருந்து 16 பேர் தெரிவு செய்யப்பட்டனர். அதை விட இரண்டு பேர் கரையோர சிங்கள மக்களைப் பிரதிநிதித்துவம் செய்பவர்களாக தெரிவு செய்யப்பட்டிருந்தனர், இந்தப் பதினெட்டுப் பேரில் இருவர் ஆங்கிலேய வம்சாவழியினர்.

இவ்வாறான ஒரு காலகட்டத்தில்த்தான் கண்டிய சிங்களவர்களும் தாங்களும் ஒரு தனித் தேசிய இனம் என்ற சிந்தனையில் செயற்பட்டனர். ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் படித்து முடித்து விட்டு நாடு திரும்பிய பண்டாரநாயக்கா கண்டிய தேசியப் பேரவையினால்

> பண்டாரநாயக்கா கண்டிய தேசியப் பேரவையினால் முன்வைக்கப்பட்ட சமஸ்டிக் கோரிக்கையைத் தாங்கியபடி தனது அரசியலை உரத்த குரலுடன் ஆரம்பித்தார். பண்டாரநாயக்கா அவர்கள் தமது சமஸ்டி அமைப்புக் கோரிக்கைக்கு ஆதரவு தேடி வடக்கு கிழக்கு மாகாண அரசியல் சமூகப் பிரமுகர்களை நாடிய போது யாருமே ஆதரவு கொடுக்கவில்லை.
>
> சட்டவாக்க சபையில் இலங்கைத் தமிழர்களுக்கான பிரதிநிதித்துவ எண்ணிக்கையைக் கூட்டி தம்மை சிங்களவர்களுக்குச் சமனாக நிலை நிறுத்த வேண்டும் என்ற எண்ணத்துக்கு அப்பால் அன்றைக்கு சமூக அரசியற் செல்லாக்கு மிக்கவர்களாக இருந்த தமிழர்கள் மத்தியில் முற்போக்கான அரசியற் சிந்தனைகள் எதுவும் இருக்கவில்லை.

முன்வைக்கப்பட்ட சமஸ்டிக் கோரிக்கையைத் தாங்கியபடி தனது அரசியலை உரத்த குரலுடன் ஆரம்பித்தார். பண்டாரநாயக்கா அவர்கள் தமது சமஸ்டி அமைப்புக் கோரிக்கைக்கு ஆதரவு தேடி வடக்கு கிழக்கு மாகாண அரசியல் சமூகப் பிரமுகர்களை நாடிய போது யாருமே ஆதரவு கொடுக்கவில்லை. சட்டவாக்க சபையில் இலங்கைத் தமிழர்களுக்கான பிரதிநிதித்துவ எண்ணிக்கையைக் கூட்டி தம்மை சிங்களவர்களுக்குச் சமனாக நிலை நிறுத்த வேண்டும் என்ற எண்ணத்துக்கு அப்பால் அன்றைக்கு சமூக அரசியற் செல்லாக்கு மிக்கவர்களாக இருந்த தமிழர்கள் மத்தியில் முற்போக்கான அரசியற் சிந்தனைகள் எதுவும் இருக்கவில்லை. கண்டிய சிங்களப் பேரவையின் குரலாக பண்டாரநாயக்கா சமஸ்டிக் கோரிக்கையை முன்வைத்த போது அதனையே தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகளும் ஒரே குரலாக எழுப்பியிருக்க வேண்டும். அது அப்போது அன்றைய சட்டவாக்க சபையில் பெரும்பான்மை யானவர்களின் கோரிக்கையாக இருந்திருக்கும்.

டொனமூர் ஆணைக்குழு 1927ல் இலங்கையில் அரசியற் சீர்திருத்தத்துக்கான சிபார்சுகளை திரட்டிய போது கண்டிய தேசியக்காரர்கள் இலங்கையை மூன்று மாநிலங்களாக பிரித்து சமஸ்டி ஆட்சி முறை ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தினார்கள். அதன்படி, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் ஒருங்கிணைந்த ஒரே மாநிலமாகவும், மத்திய மாகாணம், ஊவா மாகாணம் மற்றும் சபரகமுவா மாகாணம் ஆகியவற்றை இணைத்து ஒரு மாநிலமாகவும், ஏனைய நான்கு மாகாணங்களும் இணைக்கப்பட்டு ஒரு மாநிலமாகவும் ஆட்சி அமைப்பு ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதே. இந்தக் கோரிக்கையைக் கிசிற்றும் கண்டு கொள்ளாத அன்றைய தமிழ்ப் பிரதிநிதிகள் சர்வசன வாக்குரிமை வழங்கக் கூடாது, படித்த உயர்சாதியினருக்கு மட்டுமே வாக்குரிமை வழங்கப்பட வேண்டும், பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்படக்கூடாது என்பவற்றையே வலியுறுத்தினர். அத்துடன், சட்டவாக்க சபையில் சிங்களவர்கள் தனியே பெரும்பான்மைக் கொண்டிருக்காத வகையில் தமிழர்களுக்கு பிரதிநிதித்துவம் வழங்க வேண்டும் என்பதிலேயே குறியாக இருந்தனர்.



டொனமூர் அரசியற் சீர்திருத்தமானது

1) பிரதேச வாரியாக மக்களால் தெரிவு செய்யப்படும் 50 பிரதிகளை உள்ளடக்கிய அரச சபையை (State Council) உருவாக்கியது,

2) 21 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் வாக்குரிமையை வழங்கியது,

3) பாதுகாப்பு, சட்டம், நீதி மற்றும் ஒழுங்கு, நிதி ஆகியவற்றைத் தவிர ஏனைய விவகாரங்களையெல்லாம் இலங்கையர்களே தீர்மானிக்கும் வகையாக ஏழு அமைச்சர்களையும், அவர்கள் ஒவ்வொருவரினதும் தலைமையில் ஏழு நிறைவேற்றதிகார சபைகளும் (Executive Councils) செயற்பட ஏற்பாடு செய்தது. இவற்றோடு டொனமூர் அரசியற் சீர்திருத்த சிபார்சு அறிக்கையானது இலங்கையில் முதற் கட்டமாக (கண்டிய தேசியக் காரர்களால் குறிப்பிடப்பட்ட மூன்று மாநிலங்களில்) ஒரு மாநிலத்தில் மாகாண சபை அமைப்பினை பரீட்சார்த்தமாக மேற்கொண்டு அதனை மேலும் விருத்தி செய்யும்படி குறிப்பிட்டது.

டொனமூர் சிபார்சு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட இதனைத் தமிழ்ப் பிரதிநிதிகள் எவரும் ஏறெடுத்தும் பார்க்கவில்லை, அதன் மீது எந்த அக்கறையும் செலுத்தவுமில்லை.

1949ம் ஆண்டு தமிழரசுக் கட்சி சமஸ்டிக் கோரிக்கையை முன்வைக்கும் காலம் வரை தமிழ் அரசியற் தலைவர்கள் இலங்கையில் சமஸ்டி அமைப்பு முறையை எதிர்க்கும் அரசியலையே கொண்டிருந்தார்கள். ஏற்படுவதை எதிர்த்தே வந்திருக்கிறார்கள். 1939ம் ஆண்டு பண்டாரநாயக்கா அவர்கள் உள்ளூராட்சி நிர்வாக அமைச்சராக இருந்தார். அப்போது தமிழர் பிரதிநிதிகளின் கோரிக்கையாக இருந்த 50க்கு 50 பிரதிநிதித்துவம் என்ற கோரிக்கைக்கு மாற்றாக பண்டாரநாயக்கா தலைமையிலான நிறைவேற்று சபையானது டொனமூரினால் சிபார்சு செய்யப்பட்டபடியான மாநில ஆட்சி முறை ஏற்படுவதை பரிசீலனைக்கு எடுத்தது. ஆனால், அப்போது தமிழர் பிரதிநிதிகளில் மிகப் பிரபலமானவர்களாக இருந்த திரு ஜி.ஜி. பொன்னம்பலமும், திரு. எஸ் நடேசனும் அதனை மிகக் கடுமையாக எதிர்த்தார்கள். அது தமிழர்களின் 50க்கு 50 என்ற கோரிக்கையைத் திசை திருப்புவதற்காக சிங்களத் தலைவர்கள் மேற்கொள்ளும் வஞ்சகமான நடவடிக்கை என்றார்கள்.

> 1939ம் ஆண்டு பண்டாரநாயக்கா அவர்கள் உள்ளூராட்சி நிர்வாக அமைச்சராக இருந்தார். அப்போது தமிழர் பிரதிநிதிகளின் கோரிக்கையாக இருந்த 50க்கு 50 பிரதிநிதித்துவம் என்ற கோரிக்கைக்கு மாற்றாக பண்டாரநாயக்கா தலைமையிலான நிறைவேற்று சபையானது டொனமூரினால் சிபார்சு செய்யப்பட்டபடியான மாநில ஆட்சி முறை ஏற்படுவதை பரிசீலனைக்கு எடுத்தது.
>
> ஆனால், அப்போது தமிழர் பிரதிநிதிகளில் மிகப் பிரபலமானவர்களாக இருந்த திரு ஜி.ஜி. பொன்னம்பலமும், திரு. எஸ் நடேசனும் அதனை மிகக் கடுமையாக எதிர்த்தார்கள். அது தமிழர்களின் 50க்கு 50 என்ற கோரிக்கையைத் திசை திருப்புவதற்காக சிங்களத் தலைவர்கள் மேற்கொள்ளும் வஞ்சகமான நடவடிக்கை என்றார்கள்.

### நீறு பூத்த நெருப்பாக கிடந்த தமிழின அரசியலை ஊதிப் பெருக்கி உயர்த்திய ஜி.ஜி. பொன்னம்பலம்

1920களின் நடுப்பகுதியில் படித்த முற்போக்கான இளைஞர் குழாம் ஒன்று யாழ்ப்பாண மாணவர் காங்கிரஸ் (Jaffna Students Congress) என ஆரம்பித்து பின்னர் யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் - Jaffna Youth Congress எனும் இயக்கமாக செயற்பட்டது. அப்போது யாழ்ப்பாண அரசியல் சமூக விடயங்களில் பிரபல்யமாக இருந்த யாழ்ப்பாண சங்கம் உயர்சாதி இந்துக்களின் அமைப்பாக செயற்பட்டு வந்தது. யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸானது அது அரசியற் கொள்கைகள் கொண்ட இயக்கமாக மட்டுமல்லாது, சமூக சீர்திருத்த கருத்துக்களையும் செயற்பாடுகளையும் கொண்டதாக இருந்தது. அந்தக் காலகட்டத்தில் தெற்கில் முளைவிட்ட இடதுசாரி சிந்தனை கொண்டவர்களுக்கும் யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ்காரர்களுக்கும் இடையில் ஓர் அந்நியோன்யமான உறவுகள் ஏற்பட்டன. அந்த இயக்கமானது பிரித்தானிய காலனித்துவத்திலிருந்து இலங்கைக்கு சுதந்திரம் பெறும் கோரிக்கையைக் கொண்டதாகவும் இலங்கையர் அனைவரினது நலனையும் குறித்த பொதுவான அரசியலைக் கொண்ட இயக்கமாகவும் செயற்பட்டது. அத்துடன் பல்வேறு சமூக சீர்திருத்த நடவடிக்கைகளை முன்னெடுப்பதாகவும் வீறுடன் செயற்பட்டது. அந்த இயக்கம் இந்திய சுதந்திரத்துக்காகப் போராடிக் கொண்டிருந்த மகாத்மா காந்தி மற்றும் ஜவஹர்லால் நேரு போன்றவர்களை தமது ஆதர்ச அரசியல் வழிகாட்டிகளாக வரித்துக் கொண்டார்கள்:

1927ம் ஆண்டு மாகாத்மா காந்தி யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தபோது யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் தலைவர்கள் அவரோடு மிக நெருக்கமாக உரையாடல்களை மேற் கொண்டார்கள்: இந்திய தேசியக் காங்கிரஸின் அரசியலை ஒத்தாகவே பல்வேறு வகைகளிலும் தமது அரசியலையும் முன் கொண்டு செல்ல முயன்றார்கள். காலனித்துவ ஆட்சியிலிருந்து பூரண சுதந்திரம் பெறுதல் என்ற கோரிக்கையோடு செயற்பட்டதனால், பிரித்தானிய ஆட்சியாளர்களிடம் இலங்கையில் ஒரு சமஸ்டிக் கட்டமைப்பு ஏற்படுத்த வேண்டும் என்று பிரித்தானிய ஆட்சியாளர்களிடம் கோருவதை அவர்கள் ஏற்கவில்லை. 1926ம் ஆண்டு யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்து தமது சமஸ்டிக் கோரிக்கையை விரிவாக விளக்கி முன் வைத்தபோது யாழ்ப்பாண சங்கத்தினர் மாத்திரமல்ல, யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் தலைவர்களும் அதனை நிராகரித்தார்கள். அப்போது தமிழரின் அரசியலில் சமஸ்டி என்பது ஒரு தீண்டத் தகாத விடயமாகவே இருந்தது.

1931ம் ஆண்டுக்கான டொனமூர் அரசியற் சீர்திருத்தத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட அரச சபையில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட 50 பிரதிநிதிகளில் 40 பேர் சிங்கள மக்களின் பெரும்பான்மையான வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாகவும்,

10 பேர் மட்டுமே தமிழ் பேசும் மக்களால் தேர்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளாகவும் ஆகும் நிலை உருவானது. இது 1924ம் உருவாக்கப்பட்ட சட்டவாக்க சபையில் 18க்கு 13 என இருந்த நிலையிலிருந்து பெரும் மாற்றமான ஒரு நிலையை தோற்றுவித்தது.

1931ம் ஆண்டு அரச சபை உருவாக்கத்தைத் தொடர்ந்து கண்டிய சிங்களவர்களின் சமஸ்டிக் கோரிக்கை ஓயத் தொடங்கியது. அதனால் டொனமூர் அரசியற் சீர்திருத்த சிபார்சு அறிக்கையில் இடம் பெற்ற மாகாண ஆட்சி அமைப்பு முறை பற்றிய விடயம் சிங்களவர்களால் கவனிக்கப்படாத ஒரு விடயமானது. 1931ம் ஆண்டைத் தொடர்ந்து கண்டிய மேட்டுக்குடி அரசியல் சமூகத் தலைவர்களும், சிங்களவர்கள் எனும் மொழி அடிப்படையிலான பொது அடையாளத்தை நோக்கி செயற்படத் தொடங்கினர்: சிங்களவர்களின் ஒற்றுமை என்பது தென்னிலங்கையில் ஒரு பரந்துபட்ட வெகுஜன அரசியலாகியது: அது இலங்கைத் தேசிய உணர்வலைகளிலிருந்து விலகி சிங்களத் தேசிய வாதம் வீறு கொண்டெழுவதற்கான தளங்களை யெல்லாம் வலுப்படுத்தியது.

1931ம் ஆண்டு யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் அரச சபைக்கான தேர்தலைப் புறக்கணிக்கும் இயக்கத்தை நடாத்தியது. அதனால் யாழ்ப்பாணத்தில் யாரும் தேர்தலுக்கான வேட்பாளர் நியமனப் பத்திரங்களை சமர்ப்பிக்கவில்லை. ஆனாலும் திரு ஜி ஜி பொன்னம்பலம் சத்தமின்றி மன்னாருக்கான தேர்தற் தொகுதியில் போட்டியிட்டு அங்கு தோல்வி அடைந்தார். 1931ம் ஆண்டின் பின்னர் யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸின் வீரியம் குறைந்து போனதால் 1934ம் ஆண்டு யாழ்ப்பாணத்துக்கான நான்கு தொகுதிகளிலும் இடைத் தேர்தல் நடைபெற்றது. அதில் பருத்தித்துறைத் தொகுதியிற் போட்டியிட்டு ஜி ஜி பொன்னம்பலம் அவர்கள் அரச சபையின் உறுப்பினரானார்.

1931ம் ஆண்டு அரச சபையில் இலங்கைத் தமிழர்கள், இந்தியத் தமிழர்கள், மற்றும் முஸ்லிம்களுக்கான பிரதிநிதித்துவம் மொத்தத்தில் 10 பேர் மட்டுமே இருந்தனர். 7 இலங்கைத் தமிழர்களும், 2 இந்தியத் தமிழர்களும் ஒரு முஸ்லிம் பிரதிநிதியுமே தெரிவு செய்யப்பட்டனர். 1936ம் ஆண்டு நடைபெற்ற அரச சபைக்கான தேர்தலில் முஸ்லிம் மக்களின் பிரதிநிதியாக ஒருவர் கூட தெரிவு செய்யப்பட வில்லை என்பது குறிப்பிடத் தக்கது. 1931ம் ஆண்டு அரச சபையில் தமிழர்களின் பிரதிநிதித்துவ எண்ணிக்கை ஒப்பீட்டுரீதியல் மிகக் குறைவாக அமைந்தமை தமிழின அரசியலுக்கு மீண்டும் உயிர் கொடுத்தது. சிங்கள மேட்டுக் குடியோடு தமிழ் மேட்டுக் குடியினரும் பங்காளிகளாக இருந்து இலங்கை முழுவதிலும் அரசியல் செய்வது முடிவுக்கு வந்த போதிலும், கொழும்பு மைய சிங்களத் தேசியமும் யாழ்ப்பாண மைய தமிழ்த் தேசியமும் சரிக்குச் சமனாக ஆட்சிக் கதிரைகளில் இருந்து இலங்கை முழுவதுக்குமான அதிகாரத்தைச் செலுத்துவதற்கான எண்ணத்திலேயே தமிழர் அரசியல் தொடர்ந்தது. அதற்கு மாற்றாக தமிழர்களின் பிரதேசங்ளை மையமாகக் கொண்ட ஒரு சுயாட்சி முறையைப் பெறுவதற்கு தமிழர்களின் அரசியல் தயாராக இருக்கவில்லை. சங்கிலியன் ஆண்டான், பண்டார வன்னியன் ஆண்டான், ஐரோப்பியர் வருகைக்கு முதல் தமிழர் தேசம் வேறு, சிங்களவர் தேசம், பிரித்தானியர்களே தமிழர் தேசத்தை வலுக்கட்டாயமாக சிங்களவர் தேசத்தோடு இணைத்து விட்டார்கள் என்ற கதைகளெல்லாம் அப்போது தமிழர்களின் ஆதிக்க அரசியலில் இடம் பெற்றிருக்கவில்லை என்பது இங்கு குறிப்பிடப்பட வேண்டிய ஒன்றாகும்.

1931ம் ஆண்டு மன்னார் தொகுதியல் போட்டியிட்டு தோல்வி அடைந்தார் என்பதைத் தவிர வேறு எந்த முன்னைய அரசியற் பின்னணியும் இல்லாத ஜி.ஜி.பொன்னம்பலம் 1934ம் ஆண்டு பருத்தித்துறைத் தொகுதியிலிருந்து அரச சபைக்கு தெரிவு செய்யப்பட்டார். திரு ஜி.ஜி. பொன்னம்பலம் தனது அரசியல் முக்கியத்துவத்தை உணர்த்த சேர் அருணாசலத்தின் தமிழினத்துக்கான சம பிரதிநிதிநிதித்துவ அரசியல் கோசத்தையே உயர்த்திப் பிடித்தார். இதே காலகட்டத்தில் தனது குடும்ப செல்வாக்கையும் தனது பேச்சாற்றல் மற்றும் எழுத்தாற்றலையும் கொண்டு 1931ம் ஆண்டு வெயாங்கொடை தொகுதியிருந்து அரச சபைக்கு தெரிவு செய்யப்பட்ட பண்டாரநாயக்கா அவர்கள் தனது அரசியற் செல்வாக்கை சிங்கள அரசியற் தலைவர்கள் மத்தியில் தூக்கி நிறுத்துவதற்காக சிங்கள இன அரசியலை உயர்த்தினார். முன்னர் தான் உயர்த்திப் பிடித்த சமஸ்டிக் கோரிக்கை அரசியல் சிங்களவர்கள் மத்தியில் எடுபடாது என்பதனைக் கண்டு கொண்ட அவர் அதனைக் கை விட்டு விட்டு, சிங்களவர்களின் உரிமைகள், சிங்களவர்களுக்கான அரசியற் பாதுகாப்பு, சிங்களவர்களின் ஒற்றுமை என்பனவற்றை தனது முன்னிலை அரசியலாக்கினார்.

சிங்கள இனத்திரட்சிக்கான அரசியலும் அதற்கெதிரான தமிழினத் திரட்சிக்கான அரசியலும் 1930 களின் நடுப்பகுதியில் இரண்டு பக்கமும் இனவாத அரசியலை கிளப்பிவிட்டன. இலங்கையில் முன்னணிக்குக் கொண்டு வந்தன. பண்டாரநாயக்கா ஒரு பக்கம் சிங்களவர்களின உரிமைகளுக்காக உயிரையே கொடுப்பேன் என்று முழங்கினார். மறுபக்கம் ஜி.ஜி பொன்னம்பலம் “தமிழனென்று சொல்லடா, தலை நிமிர்ந்து நில்லடா” என முழங்கினார்.

1936ம் ஆண்டு, அரச சபைக்கான தேர்தலைத் தொடர்ந்து தனியே சிங்களவர்களை மட்டும் கொண்ட அமைச்சரவை (Pan-Sinhala Ministry) உருவாக்கப்பட்டது. 1931ம் ஆண்டுக்கும் 1936ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் 1931ம்

ஆண்டு ஹற்றனில் இருந்து தெரிவு செய்யப்பட்ட திரு பெரி சுந்தரம் அவர்கள் தொழிலாளர் நல, கைத்தொழில் துறை மற்றும் வர்த்தக துறை ஆகியவற்றின் அமைச்சராக. அதேவேளை மட்டக்களப்பு தெற்கு தொகுதியிலிருந்து 1931ம் ஆண்டு தெரிவு செய்யப்பட்ட திரு மாக்கான் மார்க்கர் அவர்கள் தொடர்புகள் துறை அமைச்சராக இருந்தார். ( அப்போது அம்பாறை மாவட்டம் இருக்கவில்லை. 1961ம் ஆண்டே மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து பிரித்து உருவாக்கப்பட்டது)

சிங்களவர்களுக்குச் சமமான இனவாரியான பிரதிநிதித்துவம் கேட்ட சிறுபான்மைத் தேசிய இனங்களுக்கு "இலங்கை சிங்களவருக்கே உரியது" என்பதை நிலைநாட்டிக் காட்டவே தனிச் சிங்கள மந்திரி சபை அமைக்கப்பட்டுள்ளது எனும் விதமாகவே டொண் பறண் ஜெயதிலகா போன்றவர்கள் தமது வீறாப்புகளை வெளியிட்டார்கள். சிங்கள மகா சபா (Sinhala Maha Sabha) வை ஆக்கி சிங்களவர்கள் மத்தியில் பிரபல்யம் பெற்றுக் கொண்டிருந்த பண்டாரநாயக்காவையும் 1936ம் ஆண்டு ஓர் அமைச்சராக டி. எஸ். சேனநாயக்கா மற்றும் பறண் ஜெயதிலகா போன்றோர் உள்வாங்கிக் கொண்டார்கள். சிங்களத் தீயும் தமிழ்த் தீயும் கொழுந்து விட்டு எரியத் தொடங்கிய வேளையில் அதற்கு மேலும் எண்ணெய் ஊற்றும் வகையாக 1939ம் ஆண்டு நாவலப்பிட்டியில் நடந்த ஒரு பகிரங்க கூட்டத்தில் ஜி.ஜி. பொன்னம்பலம் அவர்கள் சிங்கள இனத்தை ஒரு கலப்பினம் என்றும் பராக்கிரமபாகு உட்பட சிங்கள அரசர்கள் அனைவரும் அரைத் தமிழர்கள் என்றும் கருத்துக்களை வெளியிட்டார். அது சிங்களவர்கள் மத்தியில் தமிழர்களுக்கு எதிரான இனவாதத்தீயை மூட்டி விட்டது. இதன் விளைவாக, சில நாட்களில் பதுளை மாவட்டத்திலுள்ள பசறையில் சிங்களவர்கள் தமிழர்களுக்கு எதிராக வன்முறைகளை மேற் கொண்டார்கள். பொன்னம்பலம் அவர்களின் கருத்துகளுக்கு எதிராகவே அவர்களின் கோஸங்களும் இருந்தன. இதுவே இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான சிங்களவர்களின் முதற் கலவரம் என சில அரசியல் ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

திரு. பொன்னம்பலம் அவர்கள் நாவலப்பிட்டியல் வெளியிட்ட கருத்துக்களுக்கு எதிரான பிரச்சாரத்தை திரு பண்டாரநாயக்கா அவர்கள் தென்னிலங்கை முழுவதுவும் எடுத்துச் சென்று சிங்களத் தேசிய ஒற்றுமையை பரப்புரை செய்தார். பொன்னம்பலம் தமிழர் பிரதேசங்களிலும் பண்டாரநாயக்கா சிங்களவர் பிரதேசங்களிலும் தம்மைத் தனிப் பெரும் தலைவர்களாக நிலை நாட்டிக் கொள்ளும் இனவாத பேச்சுப் போட்டிகளில் தீவிரமாக ஈடுபட்டார்கள்.

இந்த விடயத்தில் பண்டாரநாயக்கா மிகச் சாதுரியமானவராக இருந்தார் என்பதை குறிப்பிட வேண்டும். சிங்களவர்களின் ஒற்றுமை, சிங்களவர் களின் உரிமை, சிங்களவர்களின் பாதுகாப்பு என்பவற்றை வலியுறுத்திய அதேவேளை அவர் தமிழர்களுக்கு எதிராகவோ தமிழர்களை இழிவுபடுத்தும் விதமாகவோ பிரச்சாரங்களை மேற் கொள்ளவில்லை. மேலும் சிங்களவர்களின் ஒற்றுமையை வலியுறுத்துகையில் சிங்களவர்கள் மத்தியிலுள்ள சாதி ஏற்றத்தாழ்வுகளுக்கு எதிராகவும் பிரச்சாரம் செய்தார். பௌத்தர்கள் கிறிஸ்த்தவர்கள் என்ற வேறுபாடின்றி ஒற்றுமைப்பட வேண்டுமென்றார். ஆனால் பொன்னம்பலமோ மீண்டும் மீண்டும் சிங்களவர்களை இழிவுபடுத்தும் விதமாகவும் அச்சுறுத்தும் விதமாகவும் செயற்பட்டதோடு யாழ் மைய இந்துத்துவ மேட்டுக்குடி அரசியலையே தொடர்ந்து நிலை நிறுத்தினார்.

1930களின் இறுதி ஆண்டுகளில் தொடங்கி சோல்பரி ஆணைக்குழு காலம் உட்பட இலங்கை 1948ல் சுதந்திரம் அடையும் வரை திரு பொன்னம்பலம் அவர்கள் தனது 50க்கு 50 பிரதிநிதித்துவம் என்றும் கோசத்தில் மிகவும் பிடிவாதமாகவே இருந்தார். தமிழர் பிரதிநிதிகளின் ஒத்துழைப்பு இல்லாவிட்டால் இலங்கைக்கு சுதந்திரம் கிடைப்பது சாத்தியமாகாது அல்லது பெரும் தாமதத்துக்கு உள்ளாகலாம் என்ற ஓர் அச்சம் சிங்களவர்களிடம் இருந்தது. அதனால் பல சிங்களத் தலைவர்கள் 50க்கு 50 என்ற விகிதாசாரத்திலிருந்து சற்றுக் குறைந்த விகிதாசாரத்தில் அதனை சமரசம் செய்வதற்கு முயற்சித்தார்கள். அதேவேளை இலங்கையில் மூன்று மாகாணங்கள் என்னும் அடிப்படையில் சமஸ்டி முறை பற்றியும் உரையாடினார்கள். ஆனால் பொன்னம்பலம் தனது பிடிவாதத்திலிரந்து இறங்கத் தயாராக இல்லை. அதற்குச் யாழ்ப்பாண சங்கத்தவர்களும் துணை நின்றார்கள்.

1. சிங்களத் தலைவர்களோடு விட்டுக் கொடுத்து சமரசமாக தீர்வு காண வேண்டும் என்ற திரு மகாதேவா அவர்கள் பொன்னம்பலத்தால் துரோகி எனப் பட்டம் சூட்டப்பட்டார்.

2. காலப் போக்கில் முஸ்லிம்களின் பிரதிநிதிகள் தம்மை பொன்னம்பலத்தின் அரசியற் கோசத்தில் இருந்து தூர விலக்கிக் கொண்டார்கள்.

3.அதேபோலவே கிழக்குத் தமிழர்களின் பிரதிநிதிகளும் பொன்னம்பலத்தின் கோசத்துக்கு பின்னால் செல்வதிலிருந்து ஒவ்வொருவராக விலகிக் கொண்டார்கள்.

4. ஏ.ஈ. குணசிங்கா போன்றவர்கள் இலங்கையிலிருந்த இந்தியர்களுக்கு எதிரான அரசியலை சிங்களவர்கள் மத்தியில் பெரிய அளவில் கிளப்பி விட்டனர் இந்தியர்களை படிப்படியாக இந்தியாவுக்கு

திருப்பி அனுப்பும் திட்டத்தை தீர்மானகரமாக இலங்கை அரசாங்கம் 1939லேயே ஆரம்பித்தது.

5. இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யும் பல பொருட்களுக்கான வரிகளை இலங்கை அரசாங்கம் அதிகரித்தது.

6. அதற்கு எதிராக இந்தியாவிலிருந்து மேற்கொள்ளப்பட்ட பொருளாதார நடவடிக்கைகளின் விளைவாக யாழ்ப்பாணத்திலிருந்து இந்தியாவுக்கு ஏற்றுமதியாகிக் கொண்டிருந்த புகையிலை வர்த்தகம் பாதிக்கப்பட்டது. அது யாழ்ப்பாணத்தின் பொருளாதாரத்தை பெரிதும் பாதித்தது. இது தமிழர்களுக்கு எதிரான சிங்களவர்களின் அரசியலாகவே யாழ்ப்பாணத்தவர்களால் பார்க்கப் பட்டது.

7. இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களையும் தமிழர்களின் பகுதிகளிலிருந்து சிங்களப் பகுதிகளுக்கு செல்லும் பொருட்களையும் பகிஸ்கரிக்கும்படி சிங்கள மக்கள் மத்தியில் இயக்கங்கள் தோன்றின.

8. இவை இந்திய இலங்கை உறவுகளை நெருக்கடிக்கு உள்ளாக்கின. அதனால் இலங்கைத் தலைவர்களைச் சந்தித்து தீர்வு காண ஜவஹர்லால் நேருவை மகாத்மா காந்தி இலங்கைக்கு அனுப்பி வைத்தார். ஆனால் நிலைமைகள் மேலும் மோசமடைவதாகவே தொடர்ந்தன.

9. தனித்துவமான அரசியலை முன்னெடுக்கும் வேலைத்திட்டத்தில் ஏற்கனவே இலங்கையிருந்த இந்தியர்களின் பிரமுகர்கள் முனைப்பாக செயற்பட்டுக் கொண்டிருந்தனர். அவர்கள் 1939ம் ஆண்டு இலங்கை இந்தியர்கள் காங்கிரஸை Ceylon Indian Congress உருவாக்கினார்கள். அதனை இலங்கைக்கு அப்போது விஜயம் மேற் கொண்ட நேருவே சம்பிரதாய பூர்வமாக தொடக்கி வைத்தார். இத்தோடு

> **ஆனாலும் இன்றும் திரு அருணாசலம் தொடக்கி வைத்து திரு பொன்னம்பலம் தொடர்ந்து முன்னெடுத்த மோட்டுத் தனமான அரசியலே தமிழர்கள் மத்தியில் தொடர்கிறது.**

இலங்கையிலிருந்த இந்திய மக்களின் பிரதிநிதிகளும் தமது அக்கறைகளை பொன்னம்பலத்தின் கோசத்தோடு தொடர்ந்து இணைத்துக் கொண்டு செல்ல முடியாதவர்களாக ஆயினர்.

இந்தக் கால கட்டத்தில் 2ம் உலக மகா யுத்தமும் உக்கிரமாகியது.

இத்தனைக்கும் பின்னரும் கூட பொன்னம்பலம் தனது 50க்கு 50 கோரிக்கையை மீள்பரிசிலனை செய்யத் தயாராக இருக்கவில்லை. தனது கோரிக்கையை ஏற்றுக் கொள்வதன் அடிப்படையிலேதான் இலங்கையின் சுதந்திரத்துக்கு தமிழர்களின் ஒத்துழைப்பு வழங்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தில்தான் திரு பொன்னம்பலம் இருந்தார். தமிழர்களின் ஒத்துழைப்பு இல்லாவிட்டால் பிரித்தானியர்கள் இலங்கைக்கு சுதந்திரம் வழங்கமாட்டார்கள் என்ற பெரும் நம்பிக்கையிலேயே அவர் மிதந்து கொண்டிருருந்தார். கொழும்பு மைய ஐரோப்பியர் பலரும் பொன்னம்பலத்துக்கு உற்சாகம் கொடுத்தார்கள். லண்டனிலும் பல ஆங்கிலேய அரசியல் வாதிகள் பொன்னம்பலத்துக்கு ஆதரவாக இருந்தார்கள். அன்று தமிழர்கள் மத்தியில் மிக செல்வாக்கு மிக்க தலைவராக பொன்னம்பலமே இருந்தார். இலங்கைக்கு சமஸ்டி அமைப்பு கூடாத ஒன்று என்பதோடு அது தமிழர்களின் நலன்களுக்கு மிக மோசமானது என்ற கருத்தையே மீண்டும் மீண்டும் பொன்னம்பலம் வலியுறுத்தினார்.

கடைசியாக, சோல்பரி ஆணைக்குழு பொன்னம்பலத்தின் கோரிக்கையை கணக்கிலும் எடுக்கவில்லை.

தமிழர்களுக்கும் சிங்களவரஷ்களுக்கும் இடையில் சமரசமான எந்தவொரு அரசியற் தீர்வு ஏற்படுவதற்கும் திரு பொன்னம்பலமோ அல்லது அவரைச் சேர்ந்தவர்களோ அனுமதிக்கவுமில்லை.

பிரித்தானிய ஆட்சியினர் இலங்கையில் தமது நலன்கள் தொடர்வதற்கான ஏற்பாடுகளை மட்டும் செய்து விட்டு, இலங்கைக்கான சுதந்திரத்தை சிங்களப் பெரும்பான்மையின் கைகளில் ஒப்படைத்து விட்டு சென்று விட்டனர்.

“தமிழர்கள் அரசியல் அரசியல் அனாதைகள் ஆக்கப்பட்டு விட்டார்கள்! பிரித்தானிய ஏகாதிபத்தியம் தமிழர்களை ஏமாற்றி விட்டது, ஆண்ட பரம்பரையை அடிமைப் பரம்பரை என ஆக்கி விட்டார்கள் என்று புலம்பும் அரசியலைத் தந்த பென்னம் பெரிய பொன்னம்பலத்தார் சுதந்திர இலங்கையில் டி.எஸ். சேனநாயக்காவோடு இணைந்து புத்திசாலித் தனமாக ஒரு அமைச்சராகி தனது சுய நலன்களைக் காப்பாற்றிக் கொண்டார்.

இதுவேதான் இப்போதும் நடக்கிறது. இப்போது தமிழர்கள் சிதைந்து சீரழிந்து சிதறி சின்னா பின்னமாகி மிகவும் பலயீனமான ஒரு சமூகமாக ஆக்கப்பட்டு கிடக்கிறது. ஆனாலும் இன்றும் திரு அருணாசலம் தொடக்கி வைத்து திரு பொன்னம்பலம் தொடர்ந்து முன்னெடுத்த மோட்டுத் தனமான அரசியலே தமிழர்கள் மத்தியில் தொடர்கிறது. பெரும் மரமாக இருந்து இப்போது ஓர் உலக்கையின் அளவுக்குப் போயிருக்கும் தமிழர்களின் அரசியல் இன்னும் ஓரிரு பத்தாண்டுகளில் உளிப்பிடியாக ஆவதற்குக் கூட முடியாத ஒன்றாகி விடும் என்ற பரிதாப நிலையிலேயே இருக்கிறது. இறுதியில் பார்த்தால் தமிழர்களின் அரசியல் சுத்த மோடயர்களின் செல்வாக்குக்கும் ஆதிக்கத்துக்கும் உட்பட்டதாகவே கடந்த நூறாண்டுகளாக பயணித்துக் கொண்டிருக்கிறது என்பது மிகத் தெளிவாகிறது.

# உள்ளங் கவர் கள்ளிகள்

இயற்கை அற்புதங்களையும் மர்மங்களையும் எங்களால் புரிந்து கொள்ள முடிவதில்லை.

எங்கள் வாழ்வில் இயற்கை எத்தனையோ சோதனைகளைத் தந்து கொண்டிருப்பது போல, எல்லா உயிர்களுக்கும் அவை தப்பிப் பிழைத்தல் என்பது சவாலாகவே இருக்கின்றன.

இந்தச் சவால்களையும் மீறி உயிர்கள் தங்கள் சூழலுக்கு இசைவாக்கம் அடைந்து வாழ்ந்து, தக்கன பிழைத்தபடியே இருக்கின்றன. கூர்ப்பின் அடிப்படையே அதுவாகத் தான் இருக்கிறது.

தாவரங்களின் உயிர் வாழுதலுக்கு நீர் முக்கியமானது. நீர் கிடைப்பது அரிதாகவே உள்ள பாலை நிலப்பகுதிகளில், தப்பிப் பிழைக்கும் உயிர்கள் கிடைக்கும் நீரை நீண்ட காலம் சேமிக்கக் கூடியனவாகவும், இருக்கும் நீர் நீராவியாகி விடாதபடிக்கும் இலைகள் அற்றும், முட்கள் நிறைந்தும், சதைப்படிப்பான தண்டுகளாகவும் உயிர் வாழ்கின்றன. அந்த எதிர் சூழலிலும் அவை பூத்துக் குலுங்கிக் கனியாகி, விதைகளாகி பரம்பிக் கொண்டே வருகின்றன.

இயற்கையைப் போல ஒரு ஓவியரோ, சிற்பியோ கிடையாது.

இந்த பாலை நில வரட்சிப் பகுதியில் வாழ்கின்ற தாவரங்கள் கூட, தங்கள் சூழல் கொடுமையானது என்பதற்காக தங்கள் அழகை இழந்து விடுவதில்லை. அவை கூட, ஏதோ வகையில் ஒரு அழகைக் கொண்டிருக்கின்றன. அந்த அழகுக்கும் ஒரு கணித ரீதியான அமைப்பு முறை உண்டு.

Fibonacci sequence எனப்படும் பூச்சியத்தில் தொடங்கி ஒன்று என்று, முதல் இரு இலக்கங்களின் கூட்டுத் தொகையாக வரும் அடுத்த இலக்கம் என்று, *0, 1, 1, 2, 3, 5, 8, 13* எனத் தொடரும் முறைப்படி தான் இயற்கை தனது வளர்ச்சியை வடிவமைக்கிறது. பூக்கள், இதழ்கள், இலைகள் என வளர்ச்சி இப்படியான கணித முறைப்படியே நடைபெறுகிறது. நத்தையின் உருவம், சூரிய காந்தியின் பூவில் விதைகள் அமைந்திருக்கும் அமைப்பு எல்லாம் இந்த கணித முறைப்படியே உருவாகின்றன.

இயற்கையின் அற்புதம் அது.

என் உள்ளம் கவர்ந்த இந்தக் கள்ளிகள் எல்லாம், இங்கே ரொறன்ரோவின் இவற்றை வளர்க்கும் ஆர்வலர்கள் வருடாந்தம் நடத்திப் பரிசில் வழங்கும் கண்காட்சி ஒன்றில் என்னால், Canon EF 100mm/f2.8 Macro lens இனால் படம் பிடிக்கப்பட்டவை.


**ஜோர்ஜ் இ.**































படங்கள்: ஜோர்ஜ் இ.

# தமிழ் இலக்கிய Gospel, according to ஆசான்

ஐந்தாம் வகுப்புக்கு முற்பட்ட காலங்களில் சிறுவயதில் பத்திரிகைகளில் வரும் குறுக்கெழுத்துப் போட்டிகளில் மிகுந்த ஆர்வம் எனக்கு இருந்தது. சிரித்திரன் மாத சஞ்சிகை, தினகரன் பத்திரிகை என, ஆசிரியராக இருந்தவரான என்னை வளர்த்த அப்பா வாங்கி வந்தவற்றில் இதெல்லாம் இருக்கும்.

நான் படித்த ஆண்களும் பெண்களும் படித்த கலவன் பாடசாலை முதலில் பத்தாம் வகுப்பு வரைக்கும் கொண்டிருந்தது. மிகவும் அடிப்படை வசதிகளை மட்டும் கொண்டிருந்த அந்தப் பாடசாலையின் பகுதிகள் முழுவதுமே திறந்ததாக இருந்த நிலையில் ஒரே ஒரு அறை மட்டுமே தலைமை ஆசிரியரின் அறையாக மூடப்பட்டு இருந்தது.

அதற்குள் இருந்த பூட்டுப் போட்டுப் பூட்டிய பெரும் அலுமாரிப் பெட்டி ஒன்றில் யாருமே பயன்படுத்தாமல் மூடி வைக்கப்பட்டிருந்த அகராதித் தொகுதியை அங்கு கற்பித்த அப்பா, ‘கெட்டிக்காரன்’ என்பதால் என் மேல் அன்பு பூண்ட அதிபர் மூலமாக, அந்தச் சிறுவயதில் குறுக்கெழுத்துச் சொற்களைத் தேட பெற்று தந்திருந்தார்.

அந்தப் பெட்டிக்குள் கண்ட மற்றப் புத்தகத் தொகுப்புத் தான் கலைக்களஞ்சியம். தொடுவதற்கான தேவை இருக்கவில்லை.

அது தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகம் ஏதோ வெளியிட்டதாக இருக்க வேண்டும். அதுதான் நான் முதல் முதலாவதாகக் கண்ட என்சைக்கிளோபீடியா.

கலைக்களஞ்சியம் என்றால் என்ன என்பதை அப்பாவைக் கேட்டுத் தான் தெரிந்து கொண்டேன்.

எவருமே எந்தக் காலத்திலும் அந்த ‘நூலகத்தில்’ இருந்த நூல்களை பயன்படுத்தியதாக நினைவு இல்லை. நான் ஒருவன் தான் பாடசாலை முடிந்து, அலுவல்களை முடித்துக் கொண்டிருக்கும் அதிபர் கடையைப் பூட்ட முதல், மலசல கூடம் போய் புறப்படும் வரைக்கும் அவரோடு நின்று, தேட வேண்டிய சொற்களைத் தேடிக் கொண்டிருப்பேன். அப்பா என்னை விட்டுப் போக, எங்கள் வீட்டைக் கடந்து பஸ்ஸிற்கு நடந்து போகும் அதிபருக்கு வழித்துணையாக நானும் வீடு வந்து சேர்வேன்.

என் கிறுக்கல் எழுத்தில் அவற்றை எழுதி அனுப்பினாலும் ஒருபோதும் பரிசில் கிடைத்ததில்லை. முத்திரைச் செலவு அறிவாளி ஒருவனுக்கான முதலீட்டுக் கணக்கில் சேர்க்கப்பட்டிருக்கலாம்.

பின்னர் பஸ் பிடித்து பட்டணத்திற்குப் படிக்கப் போனபோது, அங்கே கல்லூரியில் பெரிய நூலகமே இருந்தது. ஆனால் அங்கு எழுபதுகளில் படிக்கப் போன போது, இரண்டாம் உலக யுத்தத்திற்கு பிந்திய எந்த நூலும் இருந்ததில்லை. அந்த ‘புதிய’ புத்தகங்களை, அந்த கல்லூரியில் படித்தவரும், நான் பிறப்பதற்கு ஒரு வருடம் முன்னதாக இளம்வயதில் இறந்து போனவரும், எனது தந்தையின் கடைசித் தம்பியுமான என் இளையையா வாசித்திருக்கக் கூடும்.

முழுவதுமே பழுத்துப் போன காகிதங்களோடான நூல்கள் தான். தமிழ் புத்தகங்கள் மருந்துக்கும் கிடையாது.

அவ்வப்போது யுனெஸ்கோ கூரியர் தமிழ் இதழ் வரும். இதை விட வேறு கிடையாது.

எங்கள் ஆங்கில ஆசிரியராக இருந்த பிலிப் மாஸ்டர் மட்டும் அந்த நூலகம் ஒரு கலைக்களஞ்சியம் என்ற நினைப்பில் இருந்தவர். பெரும் பெருமிதத்தோடு அந்த நூல் தேட்டத்தைப் பற்றிச் சொல்லும் அவர், வாரத்தில் ஒரு முறை எங்கள் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்க எங்களை அழைத்துச் செல்வார். எங்களுக்கும் என்ன? வகுப்பு நடக்காமல் ஒரு பாட நேரத்தைக் கழிப்பதில் என்ன குறை? ஏதோ ஒரு ஆங்கிலப் புத்தகத்தை எடுத்து விரித்து வைத்துக் கொண்டு பக்கத்தில் இருப்பவனோடு கிசுகிசுத்துக் கொண்டிருப்போம்.

அங்கிருந்த நூலகரும் ஏதோ அந்த புத்தகங்களை நாங்கள் எடுத்தால், திருப்பி அதே இடத்தில் வைக்க மாட்டோம் என்றோ, தூசி தட்டப்பட்டு விடும் என்றோ, நாங்கள் அந்தப் புத்தகங்களை எடுப்பதை விரும்புவதும் இல்லை.

ஜோர்ஜ் இ. குருஷ்சேவ்

அதையெல்லாம் படித்து உலகத்தைத் தெரிந்து கொள்ள வேண்டிய தேவை இல்லாத அளவுக்கு அறிவு படைத்த யாழ்ப்பாணிகள் எதற்காக இவற்றை வாங்கினார்கள் என்பது எனக்கு அப்போதும் மர்மமாகவே இருந்தது.

இப்படி வாங்கிய கலைக்களஞ்சியங்களை வைக்க தமிழர்கள் புத்தக ஷெல்புகளையும் வேறு வாங்க வேண்டியிருந்தது.

வாசிக்கிறார்களோ இல்லையோ, தமிழர்கள் தாங்கள் வாங்கிய சோபா செட்டுகளுக்கும், திறீ இன் வண் ஒலிபெருக்கிச் சாதனங்களுக்கும் செய்வதைப் போலவே, இந்த என்சைக்கிளோபீடியாக்களையும் துண்டுகளால் போர்த்தி தூசி படாமல் வைத்திருந்தார்கள்.

அவருக்கும் ஒரு பட்டப் பெயர் இருந்தது. சொல்லப் போவதில்லை.

அங்கே கலைக்களஞ்சியங்கள் ஆங்கிலத்தில் இருந்திருக்கலாம். பழைய புத்தகங்கள் என்பதால் அலட்டிக் கொண்டதில்லை.

அங்கு இருந்த US News and World Report சஞ்சிகையில் கலிபோர்ணியபல்கலைக்கழகங்களில் சினிமாக் கல்வி பயின்று வந்த இளம் தலைமுறையைச் சேர்ந்த ஸ்ரீவன் ஸ்பீல்பேர்க், பிரான்சிஸ் போர்ட் கொப்போலா, வில்லியம் பிரீட்கின் போன்றவர்களும், நடிகர் பீட்டர் ஃபொன்டா போன்றவர்களும் ஏற்படுத்தும் தலைமுறை மாற்றம் பற்றியும், Easy Rider படத்தின் பின்னால் ஹொலிவூட்டில் பழைய தலைமுறை இயக்குனர்களினதும், ஸ்ரூடியோக்களினதும் ஆதிக்கத்தையும் உடைத்து, புதிதாகத் தோன்றிய இளைய தலைமுறையின் எழுச்சி பற்றிய கட்டுரை ஒன்றை வாசித்து, அதன் பக்கங்களைக் கிழித்துக் கபளீகரம் பண்ணி, பத்திரமாக பைல் பண்ணி எங்கள் வீட்டுத் திண்ணையில் படுத்திருந்தபடியே இந்த பொரிமாத்தோண்டி பல தடவைகள் மறுவாசிப்புச் செய்திருக்கிறேன்.

ஒருநாள் யாரும் எதிர்பாராத ஒரு வேளையில் யாரோ ஒரு புண்ணியவான் அமெரிக்க கல்லூரிக் கலைக்களஞ்சியத் தொகுதி ஒன்றை நூலகத்திற்கு தானம் பண்ணியிருந்தார். நீண்ட காலத்திற்கு பின் அங்கு சேர்ந்த புதுப்புத்தகத் தொகுதி அதுதான். அது தான் நான் வாசித்த முதல் கலைக்களஞ்சியம்.

அதில் முதலில் தேடியது ஹொலிவூட் சினிமா பற்றித்தான். சினிமா பற்றிய இந்தத் திண்ணைக் கனவுப் பொரிமாத் தோண்டியும், அதில் குறிப்பிட்டிருந்த அமெரிக்க பல்கலைக்கழகங்களில் இருந்த சினிமாப் பிரிவுகளுக்குக் கடிதம் எழுதி, அவர்களின் பாடத் திட்டங்கள் எல்லாம் வீடு தேடி தபாலில் வந்திருந்தன. இதில் ஸ்பீல்பேர்க் படித்த தென் கலிபோர்ணிய பல்கலைக்கழகம், பிரான்சிஸ் போர்ட் கொப்போலா படித்த கலிபோர்ணிய பல்கலைக்கழகம் லொஸ் ஏஞ்சலஸ் வளாகம் இரண்டினதும் பாடத்திட்டங்களை வாசித்தபடியே என் பகல் கனவுகள் கழிந்தன. இந்தக் கனவுகளால், பொரிமாத்தோண்டியும் பல்கலைக் கழக நுழைவுத் தேர்வில் கோட்டை விட்டாயிற்று.

இந்தக் காலத்தில் வாசித்த விகடனில் ஒரு மொக்கை ஜோக் வந்திருந்தது.

என்சைக்கிளோபீடியா என்றால் அர்த்தம் என்ன?

Hold my bicycle!

பின்னர் கனடா வந்து சேர்ந்த பின்னால் என்சைக்கிளோபீடியா புதுவிதத்தில் எனக்கு அறிமுகமாகியது. தமிழர்கள் பலர் என்சைக்கிளோபீடியா பிரிட்டானிக்கா வாங்கத் தொடங்கி விட்டார்கள்.

வேறொன்றுமில்லை.

அதன் தொகுதிகள் ஆயிரம் டொலர்களுக்கு மேற்பட்ட விலை என்பதால் அவற்றை மாதாந்தத் தவணைக் கட்டண அடிப்படையில் விற்பனை செய்யும் நடமாடும் சேல்ஸ்மென்களாக தமிழர்கள் பலர் மாறி, தமிழர்களுக்கு மூளையைக் கழுவி கலைக்களஞ்சியம் விற்றுக் கொண்டிருந்தார்கள். தற்போது பல்கிப் பெருகியிருக்கும் ஆயுட்காப்புறுதி, வீடு விற்பனை முகவர்கள் எண்ணிக்கை அளவு இல்லாவிட்டாலும், அந்தக் காலத்தில் அச்சிட்டு வெளிவந்த என்சைக்கிளோபீடியா சைஸ் தொலைபேசி இலக்க அட்டவணைப் புத்தகத்தில் உள்ள தமிழ்ப் பெயர்களைப் பார்த்து வீட்டுக்கு போன் அடித்து தொந்தரவு கொடுக்கும் அளவுக்கு, பல அறிவு விற்பனையாளர்கள் இருந்தார்கள்.

இவர்களில் பலர் எழுபதுகளில் நைஜீரியா சென்று, கல்வி கற்பித்துப் பணம் சம்பாதித்துக் கனடாவிற்கு குடும்பமாக இடம் பெயர்ந்த ‘நைஜீரிய மூளைசாலிகள்’. (முன்னைய தாயகம் வாசகர்கள் பலருக்கு நான் எழுதிய ‘ஒரு நைஜீரிய மூளைசாலியுடன்’ என்ற சிறுகதை இன்றும் ஞாபகம் இருக்கும்.)

அதையெல்லாம் படித்து உலகத்தைத் தெரிந்து கொள்ள வேண்டிய தேவை இல்லாத அளவுக்கு அறிவு படைத்த யாழ்ப்பாணிகள் எதற்காக இவற்றை வாங்கினார்கள் என்பது எனக்கு அப்போதும் மர்மமாகவே இருந்தது.

இப்படி வாங்கிய கலைக்களஞ்சியங்களை வைக்க தமிழர்கள் புத்தக ஷெல்புகளையும் வேறு வாங்க வேண்டியிருந்தது.

வாசிக்கிறார்களோ இல்லையோ, தமிழர்கள் தாங்கள் வாங்கிய சோபா செட்டுகளுக்கும், திறீ இன் வண் ஒலிபெருக்கிச் சாதனங்களுக்கும் செய்வதைப் போலவே, இந்த என்சைக்கிளோபீடியாக்களையும்

**இப்படி கணனி யுகம் வந்து, குறுந்தகடுகளில் கலைக்களஞ்சியங்கள் வெளிவந்த பின்னால், தமிழர்களின் என்சைக்கிளோபீடியாக்களும் அவர்கள் எறியாமல் வைத்திருக்கும் பழைய குளிர்கால ஜக்கட்டுகள், பாவித்த படுக்கைகளோடு, கார் நிரந்தரமாக வெளியே நிறுத்தப்பட்ட கராஜ்களுக்குள் 'பிள்ளையள் பிறகு படிப்பினம், இல்லாட்டி ஆருக்கும் குடுக்கலாம்' என்று பத்திரமாக பாதுகாத்து வைக்கப்பட்டன.**

**அவற்றை மூடியிருந்த அந்த போர்வைத் துணிகள், பின்னர் வாங்கிய 286, 386 கணனிகளையும், இலத்திரனியல் பியானோ கீபோர்டுகளையும் மூடப் பயன்பட்டன.**

துண்டுகளால் போர்த்தி தூசி படாமல் வைத்திருந்தார்கள்.

கணனி யுகம் வந்து CD-ROM பயன்பாட்டுக்கு வந்த போது முதன் முதலாக Grolier's encyclopaedia கணனியில் வாசிக்கக் கூடிய CD-ROM ஆக வெளிவந்தது. பல புத்தகங்களைக் கொண்ட என்சைக்கிளோபீடியா, வெறும் குறும் தகடு ஒன்றுக்குள் அடக்கப்பட்டிருந்தது. இது வெறும் சொற்களை (Text) மட்டுமே கொண்டதாக இருந்தது.

பின்னர் படங்கள், வீடியோக்கள், ஒலி என்பவற்றை உள்ளடக்கி Crompton's Multimedia Encyclopedia வெளிவந்தது. இவை இரண்டும் தற்போது பாவனைக்குள்ளாகா விட்டாலும் இன்றும் என்னிடம் உள்ளன.

இப்படி கணனி யுகம் வந்து, குறுந்தகடுகளில் கலைக்களஞ்சியங்கள் வெளிவந்த பின்னால், தமிழர்களின் என்சைக் கிளோபீடியாக்களும் அவர்கள் எறியாமல் வைத்திருக்கும் பழைய குளிர்கால ஜக்கட்டுகள், பாவித்த படுக்கைகளோடு, கார் நிரந்தரமாக வெளியே நிறுத்தப்பட்ட கராஜ்களுக்குள் 'பிள்ளையள் பிறகு படிப்பினம், இல்லாட்டி ஆருக்கும் குடுக்கலாம்' என்று பத்திரமாக பாதுகாத்து வைக்கப்பட்டன.

அவற்றை மூடியிருந்த அந்த போர்வைத் துணிகள், பின்னர் வாங்கிய 286, 386 கணனிகளையும், இலத்திரனியல் பியானோ கீபோர்டுகளையும் மூடப் பயன்பட்டன.

அத்தோடு தமிழர்களின் அறிவை வளர்க்க முயன்ற நடமாடும் என்சைக்ளோபீடியா சேல்ஸ்மன்கள் எல்லாம் Amway பிரமிட் மார்க்கட்டிங் முறைக்கு மாறிக் கொண்டார்கள். அவர்கள் வாழ்ந்த காலம் புலி காலம் என்பதால், அந்தக் கோட் போட்ட கனவான்கள் எல்லாம் தேர்தலில் போட்டியிடும் வாய்ப்புகள் இல்லாமல், முதிர்ந்தும் மறைந்தும் போனார்கள்.

கலைக்களஞ்சியங்களின் வரலாறு ஐரோப்பாவில் தொடங்கிய ஒன்றில்லை. அறிவை ஒரே இடத்தில் அறிந்து கொள்வதற்காக, தொகுத்து வரிசைப்படுத்தி ஆவணப்படுத்தும் நூல் தொகுப்பு முயற்சிகள் கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலங்களிலேயே இடம் பெற்றிருக்கின்றன. இந்தியாவில், சீனாவில், கிரேக்க, ரோம நாடுகளில், அராபிய பாரசீக தேசங்களில் என்றெல்லாம் வெவ்வேறு பண்பாடுகளில் அறிவைத் தொகுக்கும் முயற்சிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன.

பதினைந்தாம் நூற்றாண்டிலேயே அறிவு வளர்ச்சிக்கு பெயர் பெற்றிருந்த ஆபிரிக்காவின் மாலி நாட்டின் திம்புக்குத்து நகரில் இருந்த பல்கலைக்கழக காலத்தில், பல்வேறு அறிவியல் விடயங்களின் தொகுப்பான நூல்கள் வெளியாகியிருந்ததாகக் கூறப்படுகிறது.

ஐரோப்பாவில் கிறிஸ்துவுக்கு முற்பட்ட முதல் நூற்றாண்டில் Marcus Varro எழுதிய Nine Books of Disciplines என்ற தொகுப்பை மூல வடிவமாகக் கொண்டு, கிறிஸ்துவுக்கு பிந்திய முதலாம் நூற்றாண்டில் Pliny the Elder தொகுத்த Naturalis Historia ஐரோப்பாவில் வெளிவந்து இன்றைக்கும் கிடைக்கக் கூடிய கலைக்களஞ்சியமாகும். அதன் தொடர்ச்சியாக மத்திய காலங்களிலும் பல்வேறு கலைக்களஞ்சியங்கள் வெளியாகியிருந்தன. இவையெல்லாம் பெரும்பாலும் தனிமனித முயற்சிகளாகவும், கிறிஸ்தவ மத ஆசிரமங்களில் (monasteries) இருந்தவர்களால் கையெழுத்தால் பிரதி செய்யப்பட்டவையாகவுமே இருந்தன. குறைந்தளவு பிரதிகளே இருந்து, விலையும் அதிகமாக இருந்ததால், இவை செல்வந்தர்களாலேயும் கல்வி நிறுவனங்களாலேயுமே வாங்கப்பட்டிருந்தன.

அச்சியந்திரம் கண்டு பிடிக்கப்பட்ட பின்னர் இவை சாதாரண மனிதர்களுக்கும் கிடைக்கக்கூடிய விலையும், நிலையும் வந்தது.

தற்போதைய வடிவில் வெளிவந்து கொண்டிருக்கும் கலைக்களஞ்சியங்களின் மூல வடிவம் பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கப்பகுதியில், பிரான்சில் ஆரம்பித்தது.

அதைப் பின்பற்றி வந்த என்சைக்ளோபீடியா பிரிட்டானிக்கா தான் இங்கே ஆங்கில கலைக்களஞ்சியங்களின் நதிமூலம்.

1768 இல் அச்சுவடிவத்தில் வரத் தொடங்கிய அது, 2012 இல் தனது அச்சுப் பிரதிகளை நிறுத்தும் வரைக்கும் 244 வருடங்கள் தொடர்ச்சியாக வெளிவந்திருக்கிறது. 2010ம் ஆண்டுப் பதிப்புத் தான் அதன் இறுதியான பதிப்பு. ஒரு காலத்தில் வீடு வீடாக கதவைத் தட்டி விற்பதற்கான ஒரு மாபெரும் நடமாடும் விற்பனைப் பிரதிநிதிகள் அணியை வைத்திருந்தது. தற்போது முழுமையாக இணையத் தளத்திலேயே அது வெளிவருகிறது.

அதன் விவரண ஆக்கங்கள் துறைசார் நிபுணர்களைக் கொண்டு எழுதப்பட்டது தான் அதன் பலமாக இன்றைக்கும் இருக்கிறது.

நூறுக்கு மேற்பட்ட முழுநேர Editor களையும் நான்காயிரத்துக்கு மேற்பட்ட contributor களையும் அது கொண்டிருந்தது. எல்லா வகையான விடயங்கள் பற்றியுமான விபரங்களை உள்ளடக்கிய 32 புத்தகங்களின் தொகுதி அது.

அந்த கருத்தைப் பிரதிபண்ணியே உலக மொழிகளில் நவீன கலைக்களஞ்சியங்கள் வரத் தொடங்கின. கலைக்களஞ்சியம் என்பதற்காக அது கலையோடோ, இலக்கியத்தோடோ நின்று விடாத ஒன்று. எந்த விடயம் பற்றியும் குறைந்தபட்ச அறிவையோ, விபரத்தையோ பெறக் கூடியதான ஒப்புநோக்கல் வழியாக (Reference) ஆக அது அமைந்திருந்தது. எந்த வித தனிமனித அபிப்பிராயங்களுக்கும் (opinions) இடம் அளிக்காமல் முழுக்க முழுக்க தகவல்களும் தரவுகளும் உண்மைகளும் (Information, data and facts) தான் அதில் இடம் பெறுகின்றன. இருந்தாலும் அதற்கான பங்களிப்புச் செய்வோர் துறைசார்நிபுணர்களாக இருந்து அபிப்பிராயங்களை வெளியிடாது இருந்தாலும், அறிவார்ந்தவர்களுக்கே உரித்தான, சமூகம் அறிவைப் பெற வேண்டும் என்ற நோக்கத்தினால், அது அவர்களுக்கான நம்பிக்கைகள் தழுவிய வழமையான விபரல் சார்புத்தன்மை (liberal bias) கொண்டதாக இருக்கும்.

பெரும் கல்வியாளர்கள், ஆய்வாளர்களின் ஆய்வுக்கட்டுரைகள் எல்லாம் அந்தத் துறைகளுக்கான பிரசுரங்களில் வெளியாகும் போது, அந்தத் துறையில் சக விற்பன்னர்களின் பார்வைக்குப் பின்னால் தான் வெளிவருவது ஏற்றுக் கொள்ளப்பட்ட முறையாக இருக்கிறது. (peer review) ஆய்வுமட்டங்களுக்கு மட்டுமே புரியக்கூடியதான நிலையில் உள்ள அந்தக் கட்டுரைகள் போலன்றி, சாதாரணமானவர்கள் தாங்கள் ஒரு விடயம் பற்றிய அறிமுகத்தைப் பெற விளையும் போது, கலைக்களஞ்சியங்கள் அது பற்றிய அறிமுகத்தை தருகின்றன. இது உண்மையாகவும் தர்க்கரீதியாக நியாயமானதாகவும் இருப்பதற்காக அந்தந்த துறைசார் அறிவு கொண்டவர்களைக் கொண்டே அவை எழுதப்படுகின்றன.

இருந்தாலும் அதற்கான அரசியல் தலையீடுகள் இல்லாமலும் இல்லை.

அறிவு வளர்ச்சிக்கு வழிவகுத்ததன் மூலம் சிந்தனை எழுச்சியை உருவாக்கியதால், பிரெஞ்சுப் புரட்சிக்கான மூல காரணங்களில் ஒன்றாக முதலாவது பிரெஞ்சு கலைக் களஞ்சியம் கருதப்படுகிறது.

**சாதாரணமானவர்கள் தாங்கள் ஒரு விடயம் பற்றிய அறிமுகத்தைப் பெற விளையும் போது, கலைக்களஞ்சியங்கள் அது பற்றிய அறிமுகத்தை தருகின்றன. இது உண்மையாகவும் தர்க்கரீதியாக நியாயமானதாகவும் இருப்பதற்காக அந்தந்த துறைசார் அறிவு கொண்டவர்களைக் கொண்டே அவை எழுதப்படுகின்றன.**

**இருந்தாலும் அதற்கான அரசியல் தலையீடுகள் இல்லாமலும் இல்லை.**

**அறிவு வளர்ச்சிக்கு வழிவகுத்ததன் மூலம் சிந்தனை எழுச்சியை உருவாக்கியதால், பிரெஞ்சுப் புரட்சிக்கான மூல காரணங்களில் ஒன்றாக முதலாவது பிரெஞ்சு கலைக் களஞ்சியம் கருதப்படுகிறது.**

"No encyclopaedia perhaps has been of such political importance, or has occupied so conspicuous a place in the civil and literary history of its century. It sought not only to give information, but to guide opinion,"

தகவல்களை வழங்குவதுடன் நின்று விடாது, சிந்தனையை வழிநடத்துவதில் அதற்கிருந்த பங்கை 1911ல் வெளிவந்த என்சைக்கிளோபீடியா பிரிட்டானிக்கா இவ்வாறு கூறியிருந்தது.

பிரெஞ்சு கலைக்களஞ்சியம் அரசியல் அதிகாரத்தினதும், திருச்சபையினதும் முடிவுகளை முடிந்த முடிவாக ஏற்றுக்கொள்ளாத சிந்தனையை தனது பதிவுகளில் வெளிப்படுத்தியிருந்ததால், திருச் சபையைச் சமாளிக்க அரசியல் அதிகாரம் கலைக்களஞ்சியத்தைத் தடை செய்தும் இருந்தது. கத்தோலிக்க திருச்சபை ஒரு காலத்தில் கலைக்களஞ்சியத்தைத் தடை செய்யப்பட்ட புத்தகங்களின் வரிசையில் சேர்த்தும் இருந்தது.

இப்படி பெரும் தடைகளுக்கு மத்தியிலும், பொதுமக்களுக்கு அறிவை உண்மைத் தன்மையோடு ஊட்டும் பணியைத் தான் கலைக்களஞ்சியங்கள் செய்து கொண்டிருந்தன.

அச்சில் வருகின்ற காரணத்தினால் அடுத்த பதிப்பு வரைக்கும் புதிய விடயங்களைச் சேர்க்க முடியாதிருப்பது என்பதுடன், கணனி யுகத்தின் வருகை அச்சுவழி பிரசுரங்களின் மீதான ஆர்வம் குறைந்து, டிஜிட்டல் முறையில் கணனியிலும் குறுந்தட்டு வடிவில் வந்தாலும், குறுந்தட்டின் கொள்ளவின் குறுகிய எல்லை காரணமாகவும், இணையத்தில் உடனுக்குடனேயே மாற்றங்களைச் செய்ய முடியலாம் என்பதாலும், இந்த கலைக்களஞ்சியங்களும் தவிர்க்க முடியாமல் இணையத்தில் தங்கள் பிரசன்னத்தை நிலைநிறுத்த வேண்டிய கட்டாயத்துக்குள்ளாகின. எல்லையற்ற இணைய வெளியில் கணனியில் வெறும் எழுத்துக்கள், படங்கள் மட்டுமன்றி, ஒளிப்பதிவுகள், ஒலிப்பதிவுகள் என அவற்றில் சேர்க்க முடியும் என்பதும் ஒரு வசதியாக அமைந்தது.

ஏற்கனவே இருந்த மரபார்ந்த (Traditional) கலைக்களஞ்சியங்கள் போல, இணையத்தில் online

கலைக்களஞ்சியம் ஒன்றை உருவாக்க Jimmy Wales முயற்சித்து 2000 பங்குனியில் நியூபீடியாவை (Nupedia) உருவாக்கினார். இது வழமையானவை போன்றே துறைசார் அறிஞர்களைக் கொண்டு எழுதப்பட்டு, மற்றவர்களால் சரி பார்க்கப்பட்டு வெளியிடப்பட்டது. ஆனாலும் 2001 தை மாதம் வரை சுமார் இருபது தலைப்புகளிலேயே குறிப்புகள் எழுதப்பட்டன.

இதன் வளர்ச்சி மெதுவானதாக இருந்ததால், துறைசார் நிபுணர்களால் மட்டும் எழுதப்படாமல், ஒரு சமூக முயற்சியாக, எவருமே பங்களிக்கக் கூடிய வகையில் ஒரு திறந்த இணையவழி கலைக்களஞ்சியத்தை உருவாக்கும் முயற்சியில் 2001 தையில் நியூபீடியாவின் ஒரு அங்கமாக தொடங்கப்பட்டதுதான் விக்கிப்பீடியா. ஆனாலும் நியூபீடியாவின் ஆலோசகர்கள் ஆட்சேபம் தெரிவித்ததால், விக்கிப்பீடியா தனியான தளமாக்கப்பட்டது.

விக்கிப்பீடியா அடிப்படையில் துறைசார் நிபுணர்கள் உண்மைத்தன்மையை உறுதி செய்த பின்னால் பிரசுரிக்கும் நிலையை மாற்றி, ஜனநாயக முறையில் எவருமே எந்த தகவலையும் உடனுக்குடன் பதிவேற்றம் செய்யும் வகையில் அமைக்கப்பட்டிருக்கிறது. அத்தோடு, ஒரு தகவலில் உண்மைத்தன்மை இல்லை என்றால், எவருமே அதைத் திருத்தி அமைக்கக்கூடிய வசதியும் இருக்கிறது.

ஜனநாயகம் என்பது அதன் பிரஜைகளின் பகுத்தறிவையும் நேர்மையையும் சமூகப் பொறுப்புணர்வையும் வேண்டி நிற்பது. ஆனால் உலகம் அப்படி இயங்குவதில்லை.

விக்கிப்பீடியா சமூக நலனை மனதில் கொண்டு சமூகமாக செயற்படுவோரில் தங்கியிருந்தாலும், இந்த சமூகங்கள் தங்களை யார் ஆட்சி செய்வது என்பதைத் தெரிவு செய்யும் போதே சொதப்பும்போது, விக்கிபீடியா என்ன கேவலத்தில் இருக்கும் என்பதை சொல்லியா தெரிந்து கொள்ள வேண்டும்?

அப்பாவி மக்களை ஏமாற்றி, அதிகாரமும் லாபமும் பெறலாம் என்ற நினைப்போடு பொதுவெளிக்கு வரும் அயோக்கியர்களும், மூட நம்பிக்கைகளோடும் ஏதோ காரணங்களுக்காக குழுக்களாகப் பிரிந்து போய், தாங்கள் கேட்க விரும்பும் பொய்களைச் சொல்வோரை நம்பி, அவர்கள் பின்னால் செல்லும் மகாஜனங்களுமாகத் தான் உலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது.

இந்த இரு குழுக்களுக்கும் உண்மை என்பது ஒன்றில் அவர்களின் பிழைப்பில் மண்ணைப் போடுவதாகவோ, நம்பிக்கைகளைத் தகர்த்தெறிந்து அவர்களை முட்டாள்களாக வெளிச்சம் போட்டுக் காட்டுவதாகவோ இருந்து விடுகிறது. இதனால், இந்த இரு தரப்பினரும் உண்மைகளை எல்லோரும் அறிந்து கொள்வதை விரும்புவதில்லை.

எனவே, ஜனநாயகத்தில் நம்பிக்கை வைத்து முழு உலகுமே சமூக நீதிக்காக சமூக உணர்வோடு இயங்கும் என்ற எதிர்பார்ப்பு எப்போதுமே பொய்த்துத் தான் வருகிறது.

இப்படி சுதந்திரமாக எல்லோருமே பங்களிக்கக்கூடிய விக்கிப்பீடியாவில் எவருமே எதையும் பதிவு செய்யலாம் என்பது தான் அதன் பெரும் பலவீனமாக இருந்து வருகிறது.

பல தடவைகளில் வேண்டுமேன்றே பதிவு செய்யப்பட்ட பொய்கள், நீண்ட காலமாக கவனிக்கப்படாமலேயே இருந்திருக்கின்றன. தங்களைப் பற்றிய வேண்டப்படாத தகவல்களை அழித்து புதிய பொய்களைப் பதிவு செய்வதற்காகவே ஆட்களை வைத்திருந்ததாக அதானி குடும்பம் பற்றிக் குற்றச்சாட்டுகள் சமீபத்தில் வந்திருக்கின்றன.

பிடிக்காத தகவல்களை அகற்றுவதும் மற்றவர்கள் அதைக் கண்டுபிடித்து மீளப் பதிவேற்றுவதும் ஒரு போட்டியாகவே நடைபெறுவதால் அதற்கு edit warring என்ற சொல்லே புதிதாக உருவாக்கப்பட்டிருக்கிறது.

இந்தக் குளறுபடிகளால் விக்கிபீடியா தற்போது சில பகுதிகளில் மாற்றங்களைச் செய்வதற்கு தடுப்பு முறைகளையும் அதற்காக நிர்வாகிகளையும் உருவாக்கி வைத்திருக்கிறது. இந்த நிர்வாகிகள் விக்கிப்பீடியாவுக்கு அதிகளவில் பதிவுப் பங்களிப்புச் செய்தவர்களில் தொண்டர்களாக செயற்பட விரும்புவோர் விண்ணப்பித்து, விக்கிப்பீடியா பயன்படுத்தப்படுகிறவர்களால் தெரிவு செய்யப்படுகிறார்கள்.

முடிந்தளவில் ஜனநாயகம் மீதான நம்பிக்கையிலும், சமூக மேம்பாடு பற்றிய சிந்தனை கொண்டவர்கள் அறத்தோடு செயற்படுவார்கள் என்ற எதிர்பார்ப்பிலும் இந்த தெரிவுகள் நடைபெறுகின்றன.

அதனுடைய செல்வாக்கு அதிகரித்ததால், விக்கிப்பீடியா பிற மொழிகளிலும் உருவாக்கப்பட்டது. அப்படி தமிழிலும் உருவாக்கப்பட்டது. அதற்கு 31 நிர்வாகிகளும் உள்ளனர்.

தற்போது தமிழிலேயே எந்த விடயம் பற்றியும் ஓரளவுக்கு அறியக்கூடியதான பெரும் தகவல் களஞ்சியமாக இது இருக்கிறது.

கலைக்களஞ்சியம் என்பதற்காக, இதில் சொல்வதெல்லாம் உண்மை என்பது இல்லை என்பதற்கு முதல்

> **“விக்கிப்பீடியா சமூக நலனை மனதில் கொண்டு சமூகமாக செயற்படுவோரில் தங்கியிருந்தாலும், இந்த சமூகங்கள் தங்களை யார் ஆட்சி செய்வது என்பதைத் தெரிவு செய்யும் போதே சொதப்பும்போது, விக்கிபீடியா என்ன கேவலத்தில் இருக்கும் என்பதை சொல்லியா தெரிந்து கொள்ள வேண்டும்?”**

உதாரணம், நான் ஆசிரியராக இருந்து வெளியிட்ட தாயகம் பத்திரிகை பற்றி ஏதாவது இருக்குமா என்று தேடினேன்.

''தாயகம் இதழ் கனடாவில் 1990களின் நடுப்பகுதியில் வெளிவந்த மாதாந்த இதழ் ஆகும். இதனை புதிய சனநாயக மக்கள் முன்னணி அமைப்பு வெளியிட்டது. தீ'வ'ர அரசியல் கட்டுரைகள் இதில் வெளியிடப்பட்டன.''

தமிழ் விக்கிபீடியா தாயகம் பற்றி உரைக்கும் உண்மை இதுதான். வார இதழுக்கு மாத இதழ் என்றும் ஈபிடிபி இதை வெளியிட்டது என்ற புலிகளின் பிரசாரத்தை பதிவு செய்து இதுவரை கேட்டறியாத புதிய சனநாயக மக்கள் முன்னணி அமைப்பு வெளியிட்டது என்னும் அளவில் தான் விக்கிப்பீடியாவின் உண்மைத்தன்மை இருக்கிறது.

தாயகம் பத்திரிகையை கண்டிராத, யாரோ ஒரு கேள்விச்செவியன் அருளிச் செய்தது இது. இதுவே உண்மையாகவும், வரலாறாகவும் வந்து முடிந்திருக்கிறது.

இதற்குள் என்னைப் பற்றி ஏதாவது இருக்குமா என்று தேடிப்பார்த்தால் எதுவும் இல்லை.

இதையெல்லாம் பொய் என்றும், மகாஜனங்கள் உண்மையை அறிந்து கொள்ள வேண்டும் என்று என்னைப் பற்றி நானே சுயதம்பட்டம் அடிக்க வேண்டும் என்ற நிலையிலும் நான் இல்லை. விக்கிப்பீடியாவின் அங்கீகாரம் கிடைக்கவில்லையே என்று பொருமிக் குமுறும் அளவிலும் நான் இல்லை. எனவே, இதில் உண்மையைப் பதிவு செய்ய வேண்டும் என்ற எண்ணம் எனக்கு இல்லை.

> **கலைக்களஞ்சியம் என்பதற்காக, இதில் சொல்வதெல்லாம் உண்மை என்பது இல்லை என்பதற்கு முதல் உதாரணம், நான் ஆசிரியராக இருந்து வெளியிட்ட தாயகம் பத்திரிகை பற்றி ஏதாவது இருக்குமா என்று தேடினேன்.**
>
> **"தாயகம் இதழ் கனடாவில் 1990களின் நடுப்பகுதியில் வெளிவந்த மாதாந்த இதழ் ஆகும். இதனை புதிய சனநாயக மக்கள் முன்னணி அமைப்பு வெளியிட்டது. தீ'வ'ர அரசியல் கட்டுரைகள் இதில் வெளியிடப்பட்டன.''**

புலன் பெயர் இலக்கியத்தின் மூத்த எழுத்தாளர் எனப்படும் அ. முத்துலிங்கம் பற்றி விக்கிப்பீடியா என்ன சொல்கிறது என்று பார்த்தால்...

'நவீன தமிழ் இலக்கியத்திற்கு ஈழத்தமிழ் தந்திருக்கும் முக்கியமான கொடை என்று அ.முத்துலிங்கம் படைப்புகளைச் சொல்லலாம்.... நாம் அறிந்த உலகங்களுக்கு நாம் அறியாத பாதைகளில் அவை எம்மை இட்டுச் செல்கின்றன. பிரமிக்க வைக்கின்றன. அவரின் பார்வை அதிசயமான கூர்மை கொண்டது. வார்த்தைகளே தன்னை வசீகரிப்பதாக, சிந்திக்க வைப்பதாக, ஆட்கொள்ளுவதாகச் சொல்லும் அ.முத்துலிங்கத்தின் எழுத்தும் நம்மை அதே விதமான பாதிப்புக்கு உள்ளாக்குகிறது.'

இதெல்லாம் opinions எனப்படும் யாரோ ஒரு தனிமனிதருடைய அபிப்பிராயக் கருத்துக்களே அன்றி, தரவுகளோ உண்மைகளோ, ஏன் ஒரு பொதுமைப்பட்ட கருத்தோ இல்லை.

அ.முத்துலிங்கம் கூட இதை எழுதியிருக்கலாம். அல்லது அவரது பக்தகோடிகளில் ஒருவர் அல்லது அவரால் அமர்த்தப்பட்ட ஒருவர் எழுதியிருக்கலாம்.

விருதுப்புரவலராக மட்டும் இல்லாதிருந்தால், அ.முத்துலிங்கம் இன்றைக்கு இப்படி எல்லாம் தமிழ் இலக்கியத்தின் மேதகுவாக முடி சூட்டப்பட்டிருப்பாரா?

வாணீர் ஒழுக வடக்கு நோக்கித் தவம் இருக்கும் இலக்கியச் செம்மல்கள் எல்லாம் அவரது கடைக்கண் பார்வைக்காக தவம் இருப்பார்களா?

யாழ்ப்பாண மொழியில் சொல்வதாயின், 'நாயும் தேடாது!'.

தமிழ் விக்கிப்பீடியா ஒரு வரலாற்று ஆவணமோ, அல்லது உண்மைகள், தரவுகளின் தொகுப்பான களஞ்சியமாகவோ கூட இல்லை. இப்படி அபிப்பிராயங்களை வரலாறு ஆக்கும் அளவில் தான் தமிழ் விக்கிப்பீடியாவின் நிலைமை இருக்கிறது.

என்சைக்கிளோபீடியாவும் விக்கிப் பீடியாவும் அறிவுத்தேடலுக்கான ஆரம்பப்புள்ளிகள் மட்டுமே. அடி முடி தெரியாத, ஆழ அகலம் காணாத அறிவுக்களஞ்சியங்கள் இல்லை.

அறிவின் ஆரம்பமும் முடிவுமாக அவை இருப்பதில்லை. ஆழமான தேடலை அவற்றிலிருந்து ஆரம்பிக்கலாம்.

கூகிளில் இருந்தும் ஆரம்பிக்கலாம். ஆனால், விக்கிபீடியா போன்று ஒரு விடயம் பற்றிய பல விடயங்கள் ஒரே இடத்தில் இருப்பதில்லை .

விக்கிப்பீடியாவில் உள்ள குறைபாடுகள் இருந்தாலும், எதைப் பற்றிய எனது முதலாவது தேடலும் விக்கிப்பீடியாவில் ஆரம்பிக்கும். ஆனால் அது ஒரு போதும் எனது தேடலின் முடிவானதாக இருப்பதில்லை. அதைப் பற்றி கூகிள் தேடலும், பின்னர் ரொறன்ரோ நூலகத்தில் உள்ள அது பற்றிய நூல்களுமாகத் தான் எனது தேடல்கள் விரிவடைகின்றன.

ஆங்கில விக்கிப்பீடியாவுக்கும் தமிழ் விக்கிப்பீடியாவுக்குமான வேறுபாட்டைப் தெரிந்து கொள்ள, உலகப் பிரபல, கனடிய எழுத்தாளரான Margaret Atwood பற்றிய விக்கிப்பீடியா பதிவைப் பார்க்கலாம். அதில் அவரது வாழ்க்கை, அவரது படைப்புகள், அவரது சமூக மாற்றச் செயற்பாடுகள் (activism) என்று தரவுகள், உண்மைகள், தகவல்கள் தான் சொல்லப்படுகின்றனவே ஒழிய, எழுதியவர்களின் கருத்துகளோ, தமிழ் விக்கிப்பீடியா போன்று

உயர்வு நவிற்சி அணிகளோ பயன்படுத்தப்படவில்லை.

ஆங்கில விக்கிப்பீடியாவிற்குமான தமிழ் விக்கிப்பீடியாவிற்கும் வேறுபாடுகளை உணர்ந்து கொள்ள, அந்த சமூகங்களின் பாரம்பரியங்களைத் தெரிந்து கொள்ளவேண்டும்.

மேற்கத்திய ஜனநாயக, பண்பாட்டுப் பாரம்பரியம், மத்திய காலங்களில் மதங்களின் பிடியில் அரசுகள் இருந்த நிலைமை போய், மதங்களுக்கும் அரசுக்குமான வேறுபாடுகளை உறுதி செய்திருக்கிறது. (Separation of church and state)

அது செம்மறிச் சிந்தனையை நிராகரித்து, சுயாதீன சிந்தனையை வரவேற்கின்ற ஒன்று. பொதுச்சிந்தனைக்கு எதிரான போக்குகளைத் துரோகம் என்ற பெயரில் நிராகரிப்பதில்லை. அரசுகள் தொலைதூர யுத்தங்களை உருவாக்கினாலும், அதற்கு எதிரான பகிரங்க எதிர்ப்புப் போராட்டங்களை பொதுவெளியில் நடத்தலாம். அரசுக்கும் பொதுச்சிந்தனைக்கும் எதிரான கருத்துக்களை சுதந்திரமாக வெளியிடலாம்.

பெரும்பான்மை மக்கள் ஆதரிக்கும் எதையும் மிகச் சிறுபான்மையினர் கூட எதிர்க்க முடியும்.

மேற்கின் இந்த அரசியல் முறை தனக்கான பலவீனங்களைக் கொண்டிருப்பதையும், ஊடகங் களின் பொதுப்புத்திகளை திசை திருப்பும் செயற்பாடுகளையும் நான் இங்கே மறுக்கப் போவதில்லை. ஆனால், எதிர்ப்புக்கான சுதந்திர வெளி ஒன்று இருப்பதன் முக்கியத்துவத்தைத் தான் இங்கே வலியுறுத்துகிறேன்.

எங்கள் தென்னாசிய அரசியலில் இதெல்லாம் தற்போது சாத்தியமா?

ஊரோடு ஒத்தோடா விட்டால், தேசத் துரோகி, இனத்துரோகி என்ற முத்திரை குத்தலும், அதற்காக மனிதர்களைப் பலியிடலாம் என்ற நியாயப்படுத்தலும் இங்கே இருக்கின்றன.

உணர்வுபூர்வமான தென் னாசிய வாழ்க்கை முறைக்கும், புத்திபூர்வமான மேற்கத்திய சிந்தனைக்குமான இந்த வேறுபாடு தான் இன்றைக்கும் அறிவு வளர்ச்சியிலும் பொருளாதார ரீதியிலும் எங்களைப் பின்தங்க வைத்திருக்கின்றன.

மேற்கத்திய அரசியலில், இங்குள்ளது போல, அரசியல்வாதிகள் சொத்துக் குவிப்போ, வாரிசு அரசியலோ செய்ய முடியுமா? வாரிசுகள் கூட, தங்கள் திறமைகளைக் காட்டித் தான் முன்னே வர முடியுமே தவிர, பிறப்பை முன்வைத்து அதிகாரத்திற்கு உரிமை கோர முடியாது.

மேற்கின் சமூகம் சார்ந்த சிந்தனை பொருளாதார, அறிவு வளர்ச்சியில் அதை எங்கோ கொண்டு போய் விட, எங்களின் சாதி, மதம் சார்ந்த சிந்தனை எங்களை ஒரு குறுகிய மனநிலைக்குள்ளேயே வைத்திருக்கின்றன.

இணைய வெளியில் கருத்துப் பரிமாற்றங்களை எடுத்துக் கொண்டால், கிழக்கு ஐரோப்பிய சிந்தனை கூட, மேற்கு ஐரோப்பிய சிந்தனையில் இருந்து முற்றிலும் வேறுபட்டது. யூகோஸ்லாவியாவில் இனங்களுக்கு இடையிலான மோதல்கள், ரஷ்யா மீதான காலாகால வெறுப்பு எல்லாம் இணையக் கருத்துப் பரிமாற்றங்களில் எங்களின் சிந்தனை போன்ற குடுமிப்பிடிச் சண்டை தான்.

கருத்துப் பரிமாற்றங்களை நாகரீகமாக நடத்தக் கூடியளவில் மேற்குலகம் இருக்கிறது. அது எங்கள் பக்கத்தில் முடியுமா?

எனக்கு இன்னமும் ஆச்சரியமான விடயம், பிரபாகரன் பற்றிய விக்கிப்பீடியா பதிவில் அவரின் இறப்பு பதிவிடப்பட்டிருப்பது தான். ஏன் இன்னமும் எங்கள் யாழ்ப்பாணிகள், 'நீ கண்டனியோ?' என்றோ, விக்கிப்பீடியாவைப் பகிஷ்கரிப்போம் என்றோ தொடங்கவில்லை என்பது மர்மமாக இருக்கிறது.

ஒன்றில் அவர்களின் உலகப் பார்வை தமிழ்வின்னோடும், டியூப்தமிழோடும் முடிந்து விடுவதாலாக இருக்கலாம். அல்லது, இவர்களின் முட்டாள்தனமான கருத்துக்களுக்கு விக்கிப்பீடியா நிர்வாகிகள் அசைந்து கொடுக்காததாக இருக்கலாம்.

ஏன், என்னைப் பற்றி விக்கிப்பீடியாவில் பதிவிட்டாலும், சிங்கள அரசுகள் முதல் சிஐஏ வரைக்கும் பணம் வாங்கித் தான் பத்திரிகை நடத்தியதாக ஓடி வந்து பதிவு செய்யக்கூடிய அறிவார்ந்த கூட்டம் தான் இங்கே இருக்கிறது.

இவ்வாறான தொரு கூட்டத்தை வைத்துக் கொண்டு, ஒரு சுதந்திரமான கருத்துப் பரிமாற்றத்தைச் செய்து விட முடியுமா?

இது அறிவு வளர்ச்சி நிரம்பாத சாதாரண கூட்டத்திற்கு மட்டுமாக மட்டுப்படுத்தப்பட்டதல்ல.

இந்த பேஸ்புக் வருவதற்கு முன்பான காலத்தில் வெறும் ஈமெயில் சுற்றுக்களிலேயும் User groups எனப்படும் குழுக்களிடையேயும் கருத்துப்பரிமாற்றம் நடந்த காலத்திலேயே புலிகளுக்கு முட்டுக்கொடுக்க ஒட்டாவா, கார்ல்டன் பல்கலைக்கழகங்களில் கற்றுக் கொண்டிருந்த மாணவர் கூட்டம் ஒன்றிருந்ததையும் அதில் இருந்தவர்களையும் அறிவேன்.

> **உணர்வுபூர்வமான தென்னாசிய வாழ்க்கை முறைக்கும், புத்திபூர்வமான மேற்கத்திய சிந்தனைக்குமான இந்த வேறுபாடு தான் இன்றைக்கும் அறிவு வளர்ச்சியிலும் பொருளாதார ரீதியிலும் எங்களைப் பின்தங்க வைத்திருக்கின்றன...**
>
> **மேற்கின் சமூகம் சார்ந்த சிந்தனை பொருளாதார, அறிவு வளர்ச்சியில் அதை எங்கோ கொண்டு போய் விட, எங்களின் சாதி, மதம் சார்ந்த சிந்தனை எங்களை ஒரு குறுகிய மனநிலைக்குள்ளேயே வைத்திருக்கின்றன.**

**இந்த நடைமுறைப் பிரச்சனைகளுக்கும் அப்பால், ஆசானின் பிரச்சனை தனிநபர் பிரச்சனை சார்ந்தது. தன்னுடைய விஷ்ணுபுரம் நாவலுக்கு பக்கம் வைக்க அனுமதிக்கவில்லை, செயமோகன் என்று எழுதுகிறார்கள் என்று கோமாளித்தனமான வாதங்களைத் தான் அவர் முன்வைக்கிறார்.**

**அவருடைய வாதங்கள் கருத்தியல் ரீதியானவையோ, கருத்துச் சுதந்திரம் சம்பந்தமானதோ இல்லை.**

**இலக்கியத்தின் magic wand அளவுகோல் தன்னிடம் மட்டுமே இருப்பதாக நம்பிக் கொண்டிருக்கும் அவருக்கு, தன்னைத் தவிர்ந்தவர்கள் முக்கியத்தும் பெறுவதை ஏற்றுக் கொள்ள முடியாதபடிக்கு சுயமோகம் தலைக்கேறியிருக்கிறது. மொத்த தமிழ் இலக்கியம் பற்றிய தன்னுடைய அளவீடே அறுதியானதாகவும் இறுதியானதாகவும் இருக்க வேண்டும் என்று நம்புகிறார். அது நிரந்தரத் தன்மை பெற வேண்டும் என்றால், தன்னுடைய முழுமையான ஆதிக்கத்தில் ஒரு விக்கி களஞ்சியம் இருக்க வேண்டும் என்று நம்புகிறார்.**

பிரபலமான வாட்டர்லூ பல்கலைக்கழகத்தில் கற்பித்துக் கொண்டிருந்த விரிவுரையாளரான மீனன் விஷ்ணு என்பவரும் இந்த மாணவர் கூட்டமும் புலிகளுக்கு எதிரானவர்கள் மீது எவ்வாறான அவதூறுகளைகளையும் பொய்களையும் சொல்லிக் கொண்டிருந்ததற்கான ஆதாரங்கள் இன்றும் என் கணனியில் பதிவாகவே இருக்கின்றன. புலிகளின் அழிவோடு இவர்களில் பலர் காணாமலேயே போய் விட்டார்கள்.

ஆனாலும், இப்போது பேஸ்புக்கில் புலிகளுக்கு எதிரான கருத்துக்களைச் சொல்வோர் மீது அவதூறுகளை செய்கிறவர்கள் வெறும் முட்டாள் புலி வால்கள் மட்டுமில்லை, மிகவும் படித்துப் பட்டம் பெற்ற படிச்ச யாழ்ப்பாணிகளும் தான். இன்றைக்கும் புலிகளை நியாயப்படுத்தும் யாழ்ப்பாணிச் சிந்தனைக்குள் இருந்து இவர்கள் வெளியே வரவும் இல்லை.

புலிகளைப் பற்றி எதை எழுதினாலும், அதற்கு தர்க்க ரீதியான மறுப்புச் சொல்ல அறிவில்லாமல், துரோகிகள் மீது பழி போடும் இந்த படிச்ச யாழ்ப்பாணிகளை வைத்துக் கொண்டு, உண்மைகளையும் தரவுகளையும் தகவல்களையும் சுதந்திரமாகப் பரிமாற முடியுமா? முழுநேர வேலையாக முட்டாள்தனமாகப் பின்னூட்டம் விட்டுக் கொண்டிருக்கிற இவர்கள் விடுவார்களா?

தாங்களே சொல்லி, தாங்களே நம்பிக் கொண்டிருக்கிற பொய்களை வரலாறு ஆக்கும் முயற்சியில் தான் இவர்கள் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். காரணம், முட்டாள்தனமாக முட்டாள் ஒருவனை நம்பி ஏமாந்து போன உண்மையை ஏற்றுக் கொள்ளும் அளவில் இவர்கள் இல்லை.

தமிழ்நாட்டு நிலைமை கூட நம்பிக்கை தரக்கூடியதாக இல்லை. தமிழ்நாட்டில் உள்ள ஒரிஜினல் பார்ப்பனியச் சங்கிகளை விட, முத்திரை குத்தப்பட்ட கருப்பு, நீல, சிவப்பு சங்கிகள் அதிகம்.

நான் சொல்வது, தமிழர்கள் எனப்படுவோர், ஒரே மொழியைப் பேசும் சாதிக் குழுக்கள் மட்டுமே. அவர்களுடைய பற்று சாதிக்கு மட்டுமானதே. மதம் கூட அவர்களை ஒற்றுமைப்படுத்துவதில்லை. பகுத்தறிவுப் பகலவன்கள் கூட எல்லாம் சுத்திச் சுத்திப் போனால், சுயசாதிப் பெருமையோடு தமிழ்த் தேசியக் குட்டையில் ஊறிய சாதிமான்களாகத் தான் இருக்கிறார்கள்.

இந்த மனப்பாங்கோடு இருக்கும் ஒரு இனத்தில் விக்கிப்பீடியா போன்றதொரு சமூகத்தின் பங்களிப்பை வேண்டி நிற்கும் ஒரு கருத்துத் தளம் சாத்தியமாகுமா?

இந்த நடைமுறைப் பிரச்சனைகளுக்கும் அப்பால், ஆசானின் பிரச்சனை தனிநபர் பிரச்சனை சார்ந்தது. தன்னுடைய விஷ்ணுபுரம் நாவலுக்கு பக்கம் வைக்க அனுமதிக்கவில்லை, செயமோகன் என்று எழுதுகிறார்கள் என்று கோமாளித்தனமான வாதங்களைத் தான் அவர் முன்வைக்கிறார். அவருடைய வாதங்கள் கருத்தியல் ரீதியானவையோ, கருத்துச் சுதந்திரம் சம்பந்தமானதோ இல்லை.

ஜேஜே சில குறிப்புகளில் சே சே என்று தான் எழுதுவேன் என்று அடம் பிடிக்கும் இலக்கியர் பற்றி சுராவே எழுதியிருப்பார்.

இலக்கியத்தின் magic wand அளவுகோல் தன்னிடம் மட்டுமே இருப்பதாக நம்பிக் கொண்டிருக்கும் அவருக்கு, தன்னைத் தவிர்ந்தவர்கள் முக்கியத்தும் பெறுவதை ஏற்றுக் கொள்ள முடியாதபடிக்கு சுயமோகம் தலைக்கேறியிருக்கிறது. மொத்த தமிழ் இலக்கியம் பற்றிய தன்னுடைய அளவீடே அறுதியானதாகவும் இறுதியானதாகவும் இருக்க வேண்டும் என்று நம்புகிறார். அது நிரந்தரத் தன்மை பெற வேண்டும் என்றால், தன்னுடைய முழுமையான ஆதிக்கத்தில் ஒரு விக்கி களஞ்சியம் இருக்க வேண்டும் என்று நம்புகிறார்.

சரி, விக்கிப்பீடியாவை விட, அவர் வெள்ளோட்டம் விட்டிருக்கும் தமிழ் விக்கியில், அவர் முத்துலிங்கம் பற்றிச் சொல்லியிருப்பது என்னவென்று பார்த்தால்...

எழுத்தாளர் ஜெயமோகன் தமிழ் விக்கியில் விமர்சகர் ஜெயமோகனாக அவதாரம் எடுத்திருக்கிறார்.

தமிழ் விக்கியில் 'இலக்கிய இடம்' என்ற ஒன்றை உருவாக்கி, அதைத் தீர்மானிப்பவர் தானாகவே இருக்க வேண்டும் என்பதை உறுதி செய்து கொள்கிறார்.

"அ.முத்துலிங்கம் வாசிப்பின்பம் அளிக்கும் விதத்தில் கதையை உருவாக்குவதில் தனிக் கவனம் கொள்ளும் எழுத்தாளர். தமிழைப் பொருத்தவரை அவர் கதைசொல்லலில் கி.ராஜநாராயணனுக்கும் குறைத்துச் சொல்லலில் அசோகமித்திரனுக்கும் தொடர்ச்சி என்று விமர்சகர் ஜெயமோகன் சொல்கிறார். ஜ4ஸ அவருடைய கதைகளில் புன்னகையுடன் கதையைச் சொல்லும் ஒர் ஆசிரியர் இருந்து கொண்டிருக்கிறார். அக்கதைசொல்லி இலக்கிய மேற்கோள்கள், ஆர்வமூட்டும் தகவல்கள், புராணக்கதைகள் ஆகியவற்றை கலந்துகொண்டு கதை சொல்கிறார். அ.முத்துலிங்கத்தின் எழுத்து நிலம், பண்பாடு சார்ந்த எல்லைகளைக் கடந்து நிற்கும் ஒன்று. உலகளாவிய பார்வையையும், மானுடப் பண்பாட்டு அடையாளத்தையும் கொண்டது. புலம்பெயர்ந்தவர்கள் புதிய பண்பாடுகளுடன் கொள்ளும் அணுக்கமும் விலக்கமும் அதன் சிக்கல்களும் அவர் கதைகளில் உள்ளன. அதை எளிய வேடிக்கையாக ஆக்குவதில்லை. தீர்ப்புகளை சொல்வதில்லை தன் பண்பாட்டுப்புலம் பற்றிய பெருமிதமும் அவரிடம் இல்லை. உலகுதழுவிய பார்வையுடன் நின்று கதைகளைச் சொல்கிறார். உலகத்தின் வெவ்வேறு இன,மொழி, பண்பாட்டுப்பின்புலம் கொண்ட மக்களை ஒரேவகையான பரிவுடனும் அணுக்கத்துடனும் காட்டுபவை அவருடைய கதைகள். நவீன வாழ்க்கையில் இருந்து பெறப்படும் புதிய படிமங்களை அ.முத்துலிங்கத்தின் கதைகள் கையாள்கின்றன. உதாரணம், துணிதுவைக்கும் இயந்திரம் (பூமாதேவி). வாழ்க்கைச் சித்திரங்களை இப்படிமங்கள் வழியாக கவித்துவமாக உருமாற்றுகிறார். "புன்னகையே அ.முத்துலிங்கத்தின் இலக்கியத்தின் அடிப்படை. ஒரு புன்னகைக்கு அப்பால் போகும் ஏதும் இந்த வாழ்க்கையில் இல்லை என்ற பிரக்ஞையில் இருந்து பிறக்கும் கலை அவருடையது. இது வாழ்க்கையின் உக்கிரத்தையோ, சிக்கலையோ, புரிந்து கொள்ள முடியாத முடியாத ஆழத்தையோ பொருட்படுத்தாத மழுங்கலின் விளைவான புன்னகை அல்ல. மாறாக அவர் கதையுலகில் எப்போதும் அடியோட்டமாக அந்த அம்சங்கள் இருந்தபடியேதான் உள்ளன. முரண்பாடுகள், குரூரங்கள் ஆகியவற்றால் ஆனவை அவரது பெரும்பாலான கதைகள் என்றுகூட கூறலாம். இது ஒரு சமநிலை, ஒரு தரிசனம்" என்று ஜெயமோகன் குறிப்பிடுகிறார்.

> முத்துலிங்கம் பற்றிய தரவுகளும் தகவல்களும் தவிர்த்து, புதிதாக உருவாக்கப்பட்ட இலக்கிய இடம் என்பது முழுக்க முழுக்க, குறிப்பிட்ட எழுத்தாளர் பற்றிய ஆசானது அபிப்பிராயம் மட்டுமே முடிவான தீர்மானமாக முடிகிறது.
>
> மனுஷ்ய புத்திரனுக்கு இன்னமும் தமிழ் விக்கியில் பக்கம் இல்லை. இப்போதும் இருவருக்கும் இடையில் பரஸ்பர புளிச்ச தோசை மாவு வீச்சுக்கள் நடந்து கொண்டிருக்கின்றன. தான் இதுவரை எழுதியதை வைத்துக் கொண்டு, மனுஷ்யபுத்திரன் பற்றி பதிவு போடப் போனால், 'கை பத்திரம்' என்ற எச்சரிக்கையும் வரக் கூடும் என்ற பயமாக இருக்கலாம்.

முத்துலிங்கம் பற்றிய தரவுகளும் தகவல்களும் தவிர்த்து, புதிதாக உருவாக்கப்பட்ட இலக்கிய இடம் என்பது முழுக்க முழுக்க, குறிப்பிட்ட எழுத்தாளர் பற்றிய ஆசானது அபிப்பிராயம் மட்டுமே முடிவான தீர்மானமாக முடிகிறது.

மனுஷ்ய புத்திரனுக்கு இன்னமும் பக்கம் தமிழ் விக்கியில் பக்கம் இல்லை. இப்போதும் இருவருக்கும் இடையில் பரஸ்பர புளிச்ச தோசை மாவு வீச்சுக்கள் நடந்து கொண்டிருக்கின்றன. தான் இதுவரை எழுதியதை வைத்துக் கொண்டு, மனுஷ்யபுத்திரன் பற்றி பதிவு போடப் போனால், 'கை பத்திரம்' என்ற எச்சரிக்கையும் வரக் கூடும் என்ற பயமாக இருக்கலாம்.

தமிழ் விக்கிப்பீடியாவில் தனக்கு பக்கங்கள் தர மறுக்கிறார்கள் என்று குற்றம் சாட்டி தானே புதிய விக்கியை உருவாக்குகிற ஆசான், தனது வீக்கியில் யாருக்கு பக்கம் கிடைக்க வேண்டும் என்பதை தானே தீர்மானிக்கும் முரணை என்னவென்பது?

சாரு பற்றிய பக்கத்திலும் விஷ்ணுபுரம் விருதும் சாரு பற்றிய ஆசானின் இறுதியான தீர்ப்பும் உள்ளன. முன்பு சாருவோடு முட்டி மோதிய போது தானே எழுதியதை அங்கே பதிவு செய்யும் அளவுக்கு ஆசானுக்கு அறம் இருக்கும் என நான் எதிர்பார்க்கவில்லை.

ஆசான் தன் பெயர் பெற்ற சிறுகதை வெளிவந்ததாக சொன்ன புதிய நம்பிக்கை இதழின் ஆசிரியர் பொன்விஜயன் பற்றி விக்கியில் ஏதாவது வந்திருக்கிறதா என்று பார்த்தால்... ஊகூம்.. (இந்த இதழில் பொன் விஜயன் பற்றி எழுதியிருக்கிறோம்.)

இதெல்லாம் வெறுமனே விக்கி ஒரு work in progress என்று சாக்குப் போக்குச் சொல்லும் காரணங்கள் இல்லை.

இப்படி இன்றைக்கு யாரோ ஒரு எழுத்தாளர் பற்றி 'விமர்சகர் ஜெயமோகன்' எழுதும் கருத்து, அவருக்கும் இவருக்குமான மார்க்கட் நிலவரத்தால் நாளை மாறுவதற்கான சந்தர்ப்பங்கள் அதிகம் தானே. இணையம் என்பதாலும், பூட்டுக்கான சாவியைத் தனது இடுப்பிலேயே கட்டிக் கொண்டு இருப்பதாலும், அடையாளம், சுவடு தெரியாமல் மாற்றியும் கொள்ளலாம். யாராவது திரைப்பதிவு செய்திருந்தால், அதை பொய் என்று அவர் அப்பட்டமாக மறுக்கலாம் என்பதைத் தானே கடந்த கால 'அருஞ்சொல் ஆக்கம்' அனுபவம் சொல்லித் தருகிறது. இப்படியாக என்சைக்கிளோ

பீடியாவுக்கும் விக்கிப்பீடியாவுக்குமான வேறுபாடு இவருக்குத் தெரியவில்லை.

உண்மைகளையும் தர்க்கரீதியான நியாயங்களையும் மறுத்து, நான் சொல்வதெல்லாம் உண்மை, உண்மையைத் தவிர வேறொன்றுமில்லை, மற்றவர்கள் எல்லாம் சொல்வது பொய் என்கிற சுயமோகம் கொண்ட அவர் தனது கனவுலகத்தில் சஞ்சரித்தபடியே இருக்கிறார்.

துறைசார் நிபுணர்களை வைத்துக் கொண்டு, ஒரு நிறுவனம் உண்மைகளை உறுதி செய்து, தரம் கண்டு பிரசுரிப்பதற்கும், முழுச்சமூகத்தின் சமூகம் சார் சிந்தனையை நம்பி, அதுவே ஆக்கங்களை எழுதவும், அளவுகோல்களையும் உருவாக்கவும் சுயாதீனமான நெறிமுறைகளை உருவாக்கும் ஒரு பொது அமைப்பிற்குமான வித்தியாசம் அவருக்குப் புரியவில்லை.

அதெல்லாம் அவருக்குப் பிரச்சனையாக இருக்கவுமில்லை. அவருக்கு அடிவருடிகளையும் அல்லக்கைகளையும் கைக்குள் வைத்திருப்பதற்கு ஆளுக்குக் குறைவில்லை. தன்னுடைய கருத்துக்களுக்கு மறுப்புச் சொல்லாதவர்களாயும், தன் பின்னணியை மறைப்பதற்காக முன்னால் நிறுத்துவதற்காகவும், குற்றச்சாட்டுகள் வந்தால் பொறித்து விடக் கூடியவர்களாகவும் சிலரைத் தேர்ந்தெடுத்து, அவர்களின் நிர்வாகத்தில் நடப்பதாக படம் காட்டிக் கொண்டிருக்கிறார்.

அது ஒரு புறமிருக்க, ஒரு கவிதையை எழுதினாலேயே அங்கீகாரம் கிடைத்து விட வேண்டும் என்று அல்லலப்படும் இலக்கியகாரர்கள் எல்லாம், ஆசானின் விக்கியில் தாங்கள் யாரைத் திருமணம் செய்திருக்கிறோம் என்ற வரலாறு பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படும் போது பெருமிதம் கொள்ளாமலா இருப்பார்கள்?

நீண்ட நாளைக்கு முன்னால், புலன் பெயர் இலக்கிய ஆளுமை ஒருவர் தன்னைப் பற்றி விக்கிப்பீடியாவில் வந்திருக்கிறது என்று பெருமையுடன் பகிர்ந்திருந்தார். அதை அவரோ, ஆளை வைத்தோ தான் எழுதியிருக்க முடியும். இருந்தும், தனக்கான அங்கீகாரமாகத் தான் அதை அவர் கருதி பகிர்ந்திருந்தார்.

முன்பு ஒரு காலத்தில், இங்கே தொலைபேசிச் சேவை ஒரே நிறுவனத்தின் கையில் இருந்ததால், தொலைபேசி பாவனையாளர்கள் எல்லாருடைய பெயரும் பட்டியல் போட்டு, தடித்த அட்டவணைப் புத்தகம் ஒன்று வருடாந்தம் வெளிவரும். அதில் வந்த தனது பெயரை யாழ்ப்பாணி ஒருவர் வெட்டி, தனது பெயர் அச்சில் வந்திருப்பதாக புழுகி, ஊருக்கு அனுப்பியிருந்தார்.

தமிழ் இலக்கியச் சூழலில் விருது என்பது ஒரு மனநோய் நிலைக்கு வந்த பின்னால், இந்தச் சமூகத்தின் மனநிலையைச் சரியாகப் புரிந்து வைத்துக் கொண்டு தான் ஆசான் இந்த முயற்சியில் இறங்கியிருக்கிறார்.

விருதுப்புரவலர் வேறு வழிகாட்டி விட்டிருக்கிறார்.

விருதுக்கு வாணீர் ஊற்றுவோர், விக்கிக்கும் வாணீர் ஊற்றத் தானே செய்வார்கள்?

இவ்வாறானதில் பெருமை கொள்ளும் இலக்கியவாதிகளை தன்னை நோக்கித் தவம் இருக்க வைப்பதில், ஆசானுக்கு அப்படி என்ன தடை இருந்து விடப் போகிறது?

விரும்பினால் அதற்கு கட்டணமும் அறவிட்டுக் கொள்ளலாம். இணையத்தில் வெறும் தளம் வைத்திருக்கும் லெட்டர்ஹெட் பல்கலைக்கழகங்களுக்கே டாக்டர் பட்டங்களுக்காக ஆயிரக்கணக்கில் கொட்டும் தமிழர்கள், ஆசானின் விக்கிப்பீடியாவின் ஏடுகளில் பொன் னெழுத்துக்களால் பொறிக்கப்படுவதற்காக அள்ளி வீச மாட்டார்களா?

விசுவின் அரட்டை அரங்கத்தில், கவிஞர்களாகவும் சிந்தனையாளர்களாகவும் அறிமுக மாகும் போது, கரம் கூப்பி பல் இழித்த செம்மல்கள் எல்லாம், பாடல் பெற்ற தலங்கள் என்பது போல, விக்கியில் பதிவு பெற்ற பேறறிஞர்கள் ஆகாமலா விடுவார்கள்?

> விருதுக்கு வாணீர் ஊற்றுவோர்,
> விக்கிக்கும் வாணீர் ஊற்றத் தானே செய்வார்கள்?
>
> இவ்வாறானதில் பெருமை கொள்ளும் இலக்கியவாதிகளை
> தன்னை நோக்கித் தவம் இருக்க வைப்பதில்,
> ஆசானுக்கு அப்படி என்ன தடை இருந்து விடப் போகிறது?
>
> விரும்பினால் அதற்கு கட்டணமும் அறவிட்டுக் கொள்ளலாம்.
> இணையத்தில் வெறும் தளம் வைத்திருக்கும்
> லெட்டர்ஹெட் பல்கலைக்கழகங்களுக்கே டாக்டர் பட்டங்களுக்காக
> ஆயிரக்கணக்கில் கொட்டும் தமிழர்கள்,
> ஆசானின் விக்கிப்பீடியாவின் ஏடுகளில்
> பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படுவதற்காக
> அள்ளி வீச மாட்டார்களா?

பாவம், ஆசான். அவருக்கு தொழில் நுட்ப அறிவு கம்மி போலத் தான் இருக்கிறது. விக்கிப்பீடியா என்பது எதைப் பற்றியும் நீங்கள் அறிந்து கொள்வதற்கானது.

ஆனால், ஆசான் இன்று கட்டியெழுப்பும் விக்கி எதைப் பற்றியது? எல்லாம் பற்றியதா?

இல்லை. வெறுமனே, தமிழ் கலை, இலக்கியம் சம்பந்தப்பட்டது. அது ஒரு தமிழ் கலை, இலக்கியம் மட்டும் பற்றிய என்சைக்கிளோபீடியா தான்.

அவர் தேர்ந்தெடுத்திருக்கும் நிர்வாகிகள் அந்த துறைசார்ந்தவர்கள் தான். நிபுணர்களா என்பது பற்றி எனக்குத் தெரியாது.

என்சைக்கிளோபீடியாவுக்கும் விக்கிப்பீடியாவுக்குமான வித்தியாசமும் தெரியவில்லை, விக்கிப்பீடியா என்பதற்கான

> தற்போதைய தமிழர்கள் சமூகமாக முட்டாள்கள் என்பது என்னவோ உண்மை தான்.
> ஆனால், தமிழ் மொழிக்கும் இனத்திற்குமான புராதன பாரம்பரியத்தையும் தொன்மையையும் மறுக்கும் மனநிலையும், இடதுசாரியத்தையும் திராவிடத்தையும் வெறுக்கும் சிந்தனையும் என்ன செய்யும்?
>
> பல தமிழ்நாட்டு இலக்கியவாதிகள் இந்த இரண்டு வகைக்குள்ளும் தான் இருக்கிறார்கள். இவர்கள் பற்றிய ஆசானின் விக்கி மதிப்பீடுகள் உயர்வாக இருக்குமா?
> வெறும் தரவுகளாக இல்லாமல்,
> ஆசானின் opinion கள் தான் வரலாறு ஆகும் என்றால்,
> அவர்கள் பற்றிய விக்கி பதிவுகளுக்கு
> மறுப்பு சொல்வதற்கான வழி என்ன?
> வழக்கு எடுக்க முடியுமா?
> எங்களைப் பற்றிய பதிவுகளை நீக்கு என்று
> போராட்டம் நடத்த முடியுமா?

வரைவிலக்கணமும் தெரியவில்லை.

இவற்றின் எந்த வரைவிலக் கணங்களுக்கும் உட்படாத இது இவருடைய 'தமிழ் இலக்கிய gospel, according to ஆசான்' மட்டும்தான்.

ஆனால், என்னால் இதை ஒரு வெறும் இலக்கிய முயற்சியாகவோ, சர்ச்சையாகவோ கடந்து போக முடியவில்லை.

நான் முன்பு எங்கோ குறிப்பிட்ட மாதிரி, conspiracy theory களை வைத்துக் கொண்டு, இலுமினாட்டி உருட்டுகளை உருட்டுகிறவன் இல்லை.

இருந்தாலும் இதைச் சொல்ல வேண்டி இருக்கிறது.

ஆசான் பகிரங்கமாகவே இந்துத்வத்தை ஆதரிக்கும் ஒருவர். அதை விட, அதிதீவிர பழமைவாதி. இடதுசாரியத்தையும் திராவிட சிந்தனையையும் வெளிப் படையாகவே வெறுக்கும் ஒருவர். தமிழில் எந்த பாரம்பரியமும், பெருமையும் இல்லை என்று வாதம் செய்கிறவர்.

இம்முறை ஏடு இட்டோர் இயலில் குறிப்பிட்டது போல, மதமாற்றத்திற்கு அந்நிய நிதி என்று ஆதாரங்கள் இல்லாமல் குற்றம் சாட்டுகிறவர்.

இந்துத்வம் ஹிந்தி ஆக்கிரமிப்பை நோக்கமாகக் கொண்டது. கீழடி போன்ற ஆய்வுகள் தமிழின் புராதனப் பெருமையை உலகுக்குக் காட்டக் கூடும் என்பதால், அதைத் தோண்டுவதில் இந்துத்வாக்களுக்கு உடன்பாடு இல்லை.

தற்போதைய தமிழர்கள் சமூகமாக முட்டாள்கள் என்பது என்னவோ உண்மை தான்.

ஆனால், தமிழ் மொழிக்கும் இனத்திற்குமான புராதன பாரம்பரியத்தையும் தொன்மையையும் மறுக்கும் மனநிலையும், இடதுசாரியத்தையும் திராவிடத்தையும் வெறுக்கும் சிந்தனையும் என்ன செய்யும்?

பல தமிழ்நாட்டு இலக்கியவாதிகள் இந்த இரண்டு வகைக்குள்ளும்தான் இருக்கிறார்கள். இவர்கள் பற்றிய ஆசானின் விக்கி மதிப்பீடுகள் உயர்வாக இருக்குமா? வெறும் தரவுகளாக இல்லாமல், ஆசானின் opinion கள் தான் வரலாறு ஆகும் என்றால், அவர்கள் பற்றிய விக்கி பதிவுகளுக்கு மறுப்பு சொல்வதற்கான வழி என்ன? வழக்கு எடுக்க முடியுமா? எங்களைப் பற்றிய பதிவுகளை நீக்கு என்று போராட்டம் நடத்த முடியுமா?

தமிழின் தொன்மை பற்றிய பொய்களும் தவிர்ப்புகளும் பதிவுகளாகவும் போது, அதற்கான எதிர்வினை எந்த வடிவத்தில் இருக்கும்?

இதைப் பற்றி இப்போதே விழித்தெழுந்து, மோதிக் கொள்ளாவிட்டால், அது தான் வரலாறாகி விடும்.

அதை வரலாறு ஆக்கக் கூடிய அரசியல் பலமும் பொருளாதார பலமும் அவருக்கு கிடைப்பதற்கான வழிகள் நிறைய இருக்கின்றன. அவருடைய ஆரம்ப நிகழ்வு அமெரிக்காவில் கோலாகலமாக நடைபெறுகிறது. முக்கியஸ்தர்கள் கலந்து கொள்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் ஏற்கனவே இருக்கும் விக்கிப்பீடியாவுடனான இவருடைய முரண்டு பிடிப்பு பற்றி எவ்வளவு தெரிந்திருக்கும்? நல்லவர்களின் மௌனத்தினால்தான் அயோக்கியர்களின் அலப்பறைகள் வரலாறு ஆகியிருக்கிறது என்பதால் தான் அபத்தம் தொடங்கப்பட்டது.

தமிழ் கலை, இலக்கியம் பற்றிய தன்னுடைய கருத்துத் தான் last word ஆக இருக்க வேண்டும் என்று நினைக்கும் அவர், தமிழ் பற்றியும் அதன் தொன்மை பற்றியும், அது பற்றிய எல்லாம் குறித்தும் தன்னுடைய கருத்துத் தான் இறுதியானதும் முடிவானதுமாக இருக்கவேண்டும் என்று நினைக்கிறார்.

என்னுடைய எழுத்துக்கள் அங்கீ காரத்துக்காகவோ, வரலாற்றில் இடம் பெற வேண்டும் என்பதற்காகவோ ஒரு போதும் இருந்ததில்லை. நான் சொன்ன தீர்க்கதரிசனங்களைக் கேட்காமல், நாசமாகப் போன இனம் ஒன்று, இன்னும் உண்மைகளை அறிந்து கொள்ளவில்லை என்ற கோபத்துடன் தான் இன்றைக்கும் எனது எழுத்துக்கள் இருந்து வருகின்றன.

எனவே, என்னைப் பற்றிய வரலாற்றுப் பொய்கள் கூட என்னை ஒன்றும் செய்து விடுவதில்லை.

ஆனால், தங்களை அங்கீகரிக்க வேண்டும் என்று அலைகிறவர்கள், உலகத்திலேயே நாகரீகம் அடைந்த ஒரே இனம் என்ற தமிழ்த்தேசிய சிந்தனையில் உள்ளவர்கள் எல்லாரும் இந்த முயற்சியின் பின்னால் உள்ள நோக்கங்களைப் புரிந்து கொள்ளாமல் இருப்பதால் வரும் ஆபத்துக்களை, பொய்கள் வரலாறு ஆகப் போவதை, இன்னமும் உணர்ந்து கொள்ளவில்லை.

இதனால், எனக்கு எந்தப் பிரச்சனையும் பாதிப்பும் இல்லை. ஆனால், சொல்ல வேண்டியது என் கடமை.

You better be afraid.
Be really afraid! ■

# மட்டக்களப்புத் தமிழகம் என்னும் நாமம்:

# வரலாற்று தேடல்கள்



எம்.ஆர்.ஸ்டாலின்

Facebook: M R Stalin Gnanam

## முற்குகர்கள்

மட்டக்களப்பில் இன்றுள்ள தமிழர்களில் பெருபான்மையாக இருப்பவர்யகள் முற்குகர்களேயாகும். வேளாண்மை, விவசாய நிலங்களின் சொந்தக்காரர்களாகவும் மட்டக்களப்பின் சமூக பொருளாதார பலம் மிக்கவர்களாகவும் இந்த முற்குகர்களே காணப்படுகின்றனர். ஆனால் வரலாற்று ரீதியாக இவர்கள் மட்டக்களப்பின் பூர்வீக குடிகளோ முற்குடிகளோ அல்ல. இங்கே வாழ்ந்திருக்கக் கூடிய பூர்வீக குடிகளில் திமிலர்கள் என அழைக்கப்பட்டவர்கள் குறிப்பிடத்தக்கவர்களாகும். இந்த திமிலர்கள் மீன்பிடியை தொழிலாக கொண்டவர்களாகும்.

இவர்களோடு முட்டி மோதி அவர்களை பலமிழக்கச் செய்தபின்னரே இந்தியாவில் இருந்துவந்த முற்குகர்கள் இம்மண்ணில் காலூன்றியுள்ளனர். அதாவது திமிலர்களைத் துரத்தியடித்த பின்னரே முற்குகர்கள் இங்கு குடியேறி ஆதிக்கம் செலுத்தத் தொடங்கினர். காலப்போக்கில் மட்டக்களப்பின் ஆதிக்கம் மிகுந்த ஒரு சமூகக் குழுவாக முற்குவர்கள் பலம்பெற்றனர்.

இலங்கையின் பூர்வீக குடிகளில் ஒன்றான இயக்கர்களும் மீன்பிடித்தலையே தொழிலாக கொண்டிருந்தனர் என்பதுவும் இங்கே நோக்கற்பாலது. எனவே இந்த இயக்கர்களின் ஒரு பகுதியினரே திமிலர்கள் என காலப்போக்கில் அடையாளப்பட்டிருந்தல் கூடும் என்பது தனியான ஆய்வுக்குரிய விடயமாகும்.

இந்த திமிலர்களின் இருப்பிடங்கள் மீதான முற்குகர்களின் ஆக்கிரமிப்புச் சண்டையானது ஆங்காங்கே நீண்டகாலமாக இடம்பெற்று வந்துள்ளது. இறுதியில் அக்காலங்களில் வியாபார நிமித்தம் இந்தியா, ஆப்கானிஸ்தான், துருக்கி போன்ற பகுதிகளிலிருந்து கிழக்குக் கரைகளுக்கு வந்து சென்று கொண்டிருந்த பட்டாணிகளின் (இன்றைய முஸ்லிம்களின் முதாதையர்கள்) தலையீட்டுக்கும் வழிவகுத்துள்ளது.

திமிலர்களை வீழ்த்தி மட்டக்களப்பில் நிலைகொள்ள எத்தனித்த முற்குகர்களுக்கு உதவியாக இந்த பட்டாணிகளும் கலகங்களில் ஈடுபட்டுள்ளனர். திமிலர்கள் மீது முற்குகர்களால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களில் அவர்களும் பங்கெடுத்துள்ளனர். இறுதியாக பூர்வ குடிகளான திமிலர்களை மட்டக்களப்பின் வடக்கே இருக்கின்ற வெருகலாற்றுக்கு அப்பால் வரை துரத்தியடிப்பதில் முற்குகர்கள் வெற்றிகண்டுள்ளனர்.

இந்த முற்குகர்களை இந்தியாவின் வடபகுதியில் இருந்தது வந்தவர்களென வீ.சி.கந்தையா அவர்கள் குறிப்பிடுகின்றார். அப்படியானால் அவர்கள் இந்தியாவின் வடக்கேயுள்ள எந்தப்பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள்? முன்னொரு காலத்தில் இந்தியா எங்கும் பரந்துவாழ்ந்த திராவிடர்களின் ஒருபிரிவினரா? என்கின்ற மானுடவியல் நோக்கிலான ஆய்வுகள் இன்றுவரை செய்யப்படவில்லை.

இவ்வாறாக மட்டக்களப்பில் காலூன்றிய முற்குகர்கள் திமிலர்களை வென்று தமது இருப்புகளை உறுதிப்படுத்திக்கொள்ள ஏதுவாக தமக்குதவிய பட்டாணியர்களுக்கும் சில இடங்களில் இருப்பிடங்களை அமைத்துக்கொடுத்து அங்கிருந்து காவல்புரிய ஏற்பாடு செய்தனர். அவ்வாறாக மட்டக்களப்பின் வடக்கே அமைந்துள்ள பிரதேசங்களில் ஏற்படுத்தப்பட்ட காவலரண்களில் ஒன்றே ஏறாவூர் எனுமிடமாகும். இந்த ஊரைத் தாண்டி திமிலர்கள் உள்நுழைய கூடாது என்பதற்காக ஏறாவூர் என பெயரிடப்பட்டு அழைக்கப்படலாயிற்று

“மட்டக்களப்பில் காலூன்றிய முற்குகர்கள் திமிலர்களை வென்று தமது இருப்புகளை உறுதிப்படுத்திக்கொள்ள ஏதுவாக தமக்குதவிய பட்டாணியர்களுக்கும் சில இடங்களில் இருப்பிடங்களை அமைத்துக்கொடுத்து அங்கிருந்து காவல்புரிய ஏற்பாடு செய்தனர். அவ்வாறாக மட்டக்களப்பின் வடக்கே அமைந்துள்ள பிரதேசங்களில் ஏற்படுத்தப்பட்ட காவலரண்களில் ஒன்றே ஏறாவூர் எனுமிடமாகும்.”



காலப்போக்கில் இந்த பட்டாணியர்களுக்கும் முக்குவர்களுக்கும் இடையே திருமண உறவுகள் கூட இடம்பெறலாயிற்று. அதாவது முற்குகர்கள் தமது சகோதரிகளை பட்டாணிகளுக்கு மணம் முடித்து கொடுத்து காவல் பணிகளில் அவர்களை ஈடுபடுத்தினர். இந்த ஏறாவூரே காத்தான்குடிக்கு அடுத்ததாக மட்டக்களப்பில் முஸ்லிம்கள் சமூக பொருளாதார கட்டுமானத்தில் பலமாக வாழும் ஒரு நகரமாக இன்று வளர்ச்சியடைந்து நிற்கின்றது.

என விபரிக்கிறது மட்டக்களப்பு மான்மீக கல்வெட்டுபாடல்.

காலப்போக்கில் இந்த பட்டாணியர்களுக்கும் முக்குவர்களுக்கும் இடையே திருமண உறவுகள் கூட இடம்பெறலாயிற்று.அதாவது முற்குகர்கள் தமது சகோதரிகளை பட்டாணிகளுக்கு மணம் முடித்து கொடுத்து காவல் பணிகளில் அவர்களை ஈடுபடுத்தினர். இந்த ஏறாவூரே காத்தான்குடிக்கு அடுத்ததாக மட்டக்களப்பில் முஸ்லிம்கள் சமூக பொருளாதார கட்டுமானத்தில் பலமாக வாழும் ஒரு நகரமாக இன்று வளர்ச்சியடைந்து நிற்கின்றது.

அதேபோன்று திமிலரை துரத்தி சென்று திரும்பிவரும்போது பல முற்குக குழுக்களும் சந்தித்துக் கொண்ட வெளி சந்திவெளி எனவும் தமது சத்துருக்களான திமிலர்களை கொன்ற இடம் சத்துருக்கொண்டான் எனவும் சண்டையின் பின் வந்தேறிய (ஆறிய) இடம் வந்தாறுமூலை எனவும் மட்டக்களப்பில் முற்குகர்கள் நிலைகொண்டு வாழ்வதற்காக நடத்திய கலகங்களின் வரலாற்றுத் தடயங்கள் பல கிராமங்களின் பெயர்களாக இன்றும் காணப்படுகிறன. அதேபோல புளியந்தீவை அண்டிய மட்டக்களப்பு வாவியின் மேற்குக் கரையோரமாகக் காணப்படும் திமிலதீவு, வலையிறவு, போன்ற கரையோர கிராமங்கள் முற்குகர்களின் வருகைக்கு முன்னராக இருந்த பூர்வீக சமூகக் குழுவினரான திமிலர்களின் அடையாளங்களாக இன்றுவரை காணப்படுகின்றன.

இவ்வாறாக மட்டக்களப்பில் குடிகொண்டு காடுகளை அழித்து சேனைகள் செய்தும் மனைகளை ஏற்படுத்தியும் கிராமங்களை உருவாக்கினர். அத்தோடு இந்தியாவிலிருந்து மேலும் பல குடிகளையும் கொண்டுவந்து மட்டக்களப்பிலே குடியேற்றி சிறு சிறு சிற்றரசுகளுக்கு அடிகோலிட்டவர்கள் இந்த முற்குகர்களேயாகும்.

இந்த முற்குகர்களின் குடியேற்றங்கள் ஒவ்வொன்றிலும் இருந்து பல்கிப்பெருகிய பரம்பரையினர் தங்கள் மூதாதையரின் அல்லது அவர்கள் சமூகத்தில் கொண்டிருந்த அடையாளங்களின் நினைவுகளை தாங்கிய குடிப்பெயர்களால் தம்மை அடையாளப்படுத்திக்கொண்டனர். அதாவது வகுத்துவார் என்றழைக்கப் படக்கூடிய இத்தகைய குடிப்பெயர்கள் இன்றுவரை ஒரு சமூக அடையாளமாக மட்டக்களப்பில் பேணப்பட்டு வருகின்றது. அவையாவன உலகிப்போடி குடி, காலிங்கா குடி, படையாண்ட குடி,பெத்தாண்டகுடி, பணிக்கனா குடி,கச்சிலா குடி, பெத்தாண்ட பணிக்கனா குடி என்பனவாகும்.

அதன்பின்னரான காலங்களில் இந்தியாவிலிருந்து வந்து இலங்கையை ஆக்கிரமித்த மன்னர்களால் கொண்டு வரப்பட்ட வேளாளக்குடிகளின் பரம்பரையினரும் மிகச் சிறிய தொகையினராக மட்டக்களப்பில் குடியேறி வாழத்தொடங்கினர். இந்த வேளாளரிடையேயும் இத்தகைய ஏழு வகைக் குடிப்பெயர்கள் காணப்படுகின்றன.

உதாரணமாக கவுத்தன்குடி, அத்தியாகுடி, வயித்திகுடி, கோப்பிக்குடி, சங்கரப்பத்தான் குடி, போத்தான் குடி, செட்டிக்குடி போன்றனவாகும். குருக்கள் மடம், பழுகாமம், மண்டூர், களுவாஞ்சிகுடி, திருக்கோவில் போன்ற கிராமங்களில் இந்த வேளாள குடிகளின் சமூகப்பரம்பல் அதிகளவில் காணப்படுகின்றன.

அதுமட்டுமன்றி இந்த பட்டாணியர்கள் மணமுடித்து கொண்ட முற்குகப் பெண்களின் அடையாளமாக அத்தகை பெண்களின் பெயர்களையும் அடியொற்றி காவப்பட்டு வரும் குடிப்பெயர்கள் மட்டக்களப்பு முஸ்லிம்களிடையேயும் காணப்பட்டு வந்தமையும் ஒரு சிறப்பியல்பாகும். பொன்னாச்சிக்குடி, வரிசை நாச்சிக்குடி, பூமாலைக்கட்டிக் குடி, முகாந்திரம் நாச்சிக்குடி, உசவீடு குடி, மீராலெப்பை குடி, பண்ணையவீடு குடி என முஸ்லிம்களிடையேயும் இக்குடிபெயர்கள் ஏழுவகைகளாக அமைந்துள்ளன. எனினும் அண்மைக்காலங்களில் முஸ்லிம்களிடையே இக்குடிமுறைமைகள் மறைந்துவருவதும்

குறிப்பிடத்தக்கதாகும்.

இத்தகைய குடிப்பெயர் அடையாளங்கள் அல்லது தொடர்ச்சிகள் பெண்களின் பரம்பரை வழியாகவே உறுதி செய்யப்பட்டு வருகின்றன. அதாவது தாயானவள் ஊடாகவே இந்த குடிப்பெயர் பாரம்பரியங்கள் கடத்தப்பட்டு வருகின்றன. உதாரணமாக ஒரு குடும்பத்தில் பிறக்கும் குழந்தைகளின் குடியானது தாயினுடைய குடிபெயர் என்பது எதுவோ அதுவாகவே இருக்கும். இவ்விடத்தில் தந்தையின் குடிபெயர் கணக்கில் எடுக்கப்படுவதில்லை. அதேபோல அக்குழந்தைகளில் பெண்குழந்தைகள் வழியாகவே அடுத்த பரம்பரைக்கு இக்குடிப் பெயர்கள் கடத்தப்படுகின்றன. மாறாக ஆண் வாரிசுகள் ஊடாக “குடி” தொடர்ச்சிகள் ஒருபோதும் பேணப்படுவதில்லை. அந்த ஆண் வாரிசுகள் எங்கு திருமணம் செய்கின்றனரோ அவர்களின் மனைவியர்கள் கொண்டுள்ள குடித்தொடர்ச்சியே அடுத்த பரம்பரைக்கு கடத்தப்படும். ஆக மட்டக்களப்பு தமிழகத்தில் காணப்பட்ட தாய்வழி சமுதாய நடைமுறைகளில் எஞ்சியுள்ள விடயங்களில் இந்த “குடி” முறையும் ஒன்றாகும்.

இந்த குடிப்பெயர்கள் என்பன மட்டக்களப்பு தமிழகத்தின் கிராமிய பண்பாட்டில் இன்றுவரை மிக இறுக்கமாக தொடரப்பட்டுவருகின்றன என்பது ஆச்சரியமானதொன்றாகும். கோவில் நிர்வாக,மற்றும் திருவிழாக்களில் இந்த குடிமுறைகள் கொண்டுள்ள உரிமைகளும் கடமைகளும் ஒருபெரும் சமுதாய ஒப்பந்தமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு பலநூற்றாண்டுகளாகபரம்பரை பரம்பரையாக கைக்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதாவது ஒருவிதமான சாதிய முறைமைக்கு ஒத்ததான அதிகார படிநிலைகள் இக்குடிகளுக்குள்ளும் பேணப்பட்டு வருகின்றன. உதாரணமாக முற்குகர்களிடையே இருக்கக்கூடிய ஏழுவகை குடிகளும் சாதிய அடிப்படையில் ஒரே சாதியினராக இருக்கின்ற போதிலும் ஒவ்வொரு குடிகளுக்கிடையிலும் ஏற்றத்தாழ்வுகளுடனான வேறுபாடுகள் உண்டு. அதாவது ஒருவிதத்தில் சாதிகளுக்குள் சாதிகளாக இக்குடிபெயர் முறைமைகள் இயங்கிவருகின்றன. அதனடிப்படையில் ஒவ்வொரு குடிகளுக்கும் திருவிழா நாட்கள் குறித்தொதுக்கப்பட்டுள்ளன என்பதனால் போட்டி போட்டுக்கொண்டு கிராமங்களில் தத்தமது குடிகளுக்காக ஒவ்வொருவரும் பணிகளில் ஈடுபடுவர்.


இத்தகைய குடிகள் ஒவ்வொன்றுக்கும் அக்குடிகளில் உள்ள மூத்த பிரசையொருவர் தலைவராக இருப்பர். அவர் கடுக்கண்டவர் என்றழைக்கப்படுவார். தத்தமது குடியினரிடையே இடம்பெறும் இன்ப, துன்ப நிகழ்வுகள் அனைத்தும் கடுக்கண்டவருக்கே முதலாவதாக அறிவிக்கப்படல் வேண்டும் என்னும் நியதிகள் இன்றும் பல கிராமங்களில் பின்பற்றப்பட்டு வருகின்றன.

ஆனால் சாதிகள் தொடர்ந்து காப்பாற்றப்பட்டுவருவதற்கும் சாதிய ஒடுக்குமுறைகள் தொடர்வதற்கும் அடிப்படையான சமூக ஒழுங்கு

“ஒருவிதமான சாதிய முறைமைக்கு ஒத்ததான அதிகார படிநிலைகள் இக்குடிகளுக்குள்ளும் பேணப்பட்டு வருகின்றன.

உதாரணமாக முற்குகர்களிடையே இருக்கக்கூடிய ஏழுவகை குடிகளும் சாதிய அடிப்படையில் ஒரே சாதியினராக இருக்கின்ற போதிலும் ஒவ்வொரு குடிகளுக்கிடையிலும் ஏற்றத்தாழ்வுகளுடனான வேறுபாடுகள் உண்டு. அதாவது ஒருவிதத்தில் சாதிகளுக்குள் சாதிகளாக இக்குடிபெயர் முறைமைகள் இயங்கிவருகின்றன.

அதனடிப்படையில் ஒவ்வொரு குடிகளுக்கும் திருவிழா நாட்கள் குறித்தொதுக்கப்பட்டுள்ளன என்பதனால் போட்டி போட்டுக்கொண்டு கிராமங்களில் தத்தமது குடிகளுக்காக ஒவ்வொருவரும் பணிகளில் ஈடுபடுவர்.”



10(A) திருக்கோவிலிற் கிடைக்கும் கல்வெட்டுகள்

பாதுகாப்பை வழங்கிவரும் அகமண முறைமையை இக்குடி முறைமையானது தடைசெய்கின்றது. அதாவது ஒரு “குடி“ என்பது ஒருதாய் வயிற்றுப்பிள்ளைகள் என்பதனால் குறித்த ஒரு ஆணோ பெண்ணோ தன் தாய் வழியாக பெற்றுக்கொள்ளும் குடிப்பெயரைக்கொண்டுள்ள யாதொருவரையும் எவ்வேளையிலும் திருமணம் முடித்தல் கூடாது என்பது இக“குடி”முறையில் வகுக்கப்பட்டுள்ள விதியாகும். அவ்வகையில் சாதி முறைமை காப்பாற்றிவரும் அகமண முறையை நிராகரிக்கின்ற ஒரு போக்கு இந்த குடிமுறைமையில் இருப்பது சிறப்பாகும்.

இறுதியாக மட்டக்களப்பில் இக்குடிப்பெயர்கள் சார்ந்த அணிசேரல்களும் ஒட்டுறவுகளும் திருவிழாக்காலங்களில் மட்டும் களைகட்டுவதோடு நின்றுவிடுவதில்லை. ஒவ்வொரு தேர்தல்களின் போதும் மீண்டும் மீண்டும் இக்குடிப்பெயர்களும் பெருமைகளும் முன்னிறுத்தப்படுவது வழமையாகும். அதாவது வேட்பாளர் தேர்வுகளிலும் வாக்குச் சேகரிப்புகளுக்கான அணிதிரட்டல்களிலும் இந்த “குடி” முறைமையானது இன்றுவரை பாரிய செல்வாக்குச் செலுத்தி வருகின்றது. குறிப்பாக உள்ளூராட்சித் தேர்தலில் கிராமிய மட்டங்களில் அதிலும் குறிப்பாக படுவான்கரை பிரதேசத்திலும் பட்டிருப்பு தொகுதி போன்ற இடங்களில் எழுவான்கரை கிராமங்களிலும் கூட இக்“குடி”ப்பெயர் மேலோங்கி நிற்கும்.

தொடரும்

# மறக்கப்பட்டவர்களை நினைவுகூர்தல்

## ஜோர்ஜ் இ.குருஷ்சேவ்

தமிழ் இலக்கிய உலகில் எனக்குத் தெரிந்து, மனம் நிறைந்து மற்ற படைப்பாளிகளை பாராட்டி, அவர்கள் பற்றி மற்றவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற பெருமனதோடு அவர்களை அறிமுகப்படுத்துவோர் என்று அடையாளம் காட்ட முடிவது கவிஞர் இந்திரன் எனப்படும் இந்திரன் ராஜேந்திரனும், நான் டொக்டர் என்று அன்போடு அழைக்கும் நோயல் நடேசனும் தான்.

மற்றும்படி, நா.விச்வநாதன், முன்னைய படைப்பாளிகளை யாரும் மறந்து போகாதபடிக்கு அடிக்கடி நினைவூட்டிக் கொண்டிருப்பார். பேராசிரியர் அ.இராமசாமி அவ்வப்போது சிலரைப் பற்றி எழுதிக் கொள்வார்.

இத்தனைக்கும் இவர்கள் அறியப்பட்ட விமர்சகர்களும் இல்லை. (அ.இராமசாமி தவிர்ந்து) படைப்பாளிகள்.

தங்களை முன்நிலைப் படுத்தாமல், நல்ல படைப்பாளிகள் பரந்து பட்ட வாசக வட்டத்திற்குள் செல்ல வேண்டும் என்று நினைப்பவர்கள்.

இவர்கள் நால்வரும் எனது பேஸ்புக் நட்பு வட்டத்திற்குள் இருப்பவர்கள்.
அல்லது அவர்களின் நட்பு வட்டத்திற்குள் நான் இருக்கிறேன்.

இப்படி இது எனது வாசிப்புக்குள்ளும் பேஸ்புக் உறவுகளுக்குள்ளும் குறுகியது தான். இதையும் மீறி, வேறு யாராவது நல்லுள்ளங்கள் இருந்தால், அவர்களையும் எனக்கு அறிமுகப்படுத்தினால் மகிழ்ச்சியுறுவேன். அவர்களை நாங்கள் பெருமைப்படுத்தியே ஆக வேண்டும். அதை அபத்தத்தில் செய்ய வேண்டும் என்று விரும்புகிறேன். மற்றவர்களால் மறைக்கப்பட்ட, மறக்கப்பட்டவர்களை வெளிக் கொணர வேண்டும் என்பதில் அபத்தம் காட்டும் அக்கறையையும் முனைப்பையும் அறிந்திருப்பீர்கள்.

இங்கே ஓர்ஹான் பாமுக் முதல் பாப்லோ நெருடா வரைக்கும், ஹருகி முகாரமி முதல் மிஷேல் ஃபூக்கோ வரைக்கும் தாங்கள் வாசித்திருக்கிறோம் என்பதில் பெருமை கொள்ளும் பிரபலங்கள் பலரும் உள்ளூர் எழுத்தாளர்களை வாசித்ததாக சொல்வதை இழிவாகவே கருதிக் கொள்கிறார்கள்.

ஏன் என்றால், எனக்குத் தெரிந்து, தங்கள் முகாம்களுக்குள் உள்ளோரோடு பரஸ்பர முதுகு சொறிதல், தமக்கு கீழே இருப்போர் என்று நம்புகிறவர்களைப் பாராட்டுதல் தவிர, ‘எல்லாப் புகழும் என் ஒருவனுக்கே’ என்ற பெருந்தன்மையோடு அங்கீகாரத்துக்காக ஏங்கி அலைவோர் தான் அதிகமாக இருக்கிறார்கள். தங்களுக்குப் போட்டியானவர்கள், மேலானவர்கள், வெளியே தெரிந்தால் தங்கள் பிழைப்பில் மண் விழுந்து விடும் என்று கருதிக் கொள்பவர்களை திட்டமிட்டு மறைப்பதில் நம்ம ஆளுகள் பலே கில்லாடிகள்.

அதிலும் தங்களது வளர்ச்சிக்கு காரணமானவர்கள், தங்களது எழுத்துக்களுக்கு இடம் அளித்தவர்களையே இருட்டடிப்பு செய்யலாம் என்று நினைப்பவர்களை நான் ஆசிரியராக இருந்து நடத்திய தாயகத்தில் எழுதியவர்களிலேயே கண்டிருக்கிறேன்.

சில நேரங்களில் நாங்கள் வாசிக்கும் எதுவோ, ஏதோ ஒரு வகையில் எங்களில் அதிர்வலைகளை (Resonate) ஏற்படுத்தி விடுகிறது.

தற்போது பேஸ்புக்கில் கண்ட ஒரு பதிவு என்னை மிகவும் பாதித்த ஒன்றாக இருந்தது. நானும் அவ்வாறான ஒரு சூழ்நிலையில் என் வாழ்க்கையைத் தொலைத்தவன் என்பதும் காரணமாக இருக்கலாம்.

புதிய நம்பிக்கையும் பொன் விஜயனும் என்ற தலைப்பில் கணேஷன் குருநாதன் (பேஸ்புக்... மெய்யறிவன் மெய்யறிவன்) தமிழ்விங் தளத்தில் 2015இல் எழுதிய கட்டுரை ஒன்றை இந்திரன் ராஜேந்திரன் பகிர்ந்திருந்தார்.

புதிய நம்பிக்கை என்ற இதழை நடத்தி, பல படைப்பாளிகளுக்கு களம் அளித்த பொன் விஜயன் தன் வாழ்க்கையை இழந்ததைப் பற்றி கணேஷன் குருநாதன் எழுதியிருக்கிறார்.

பின்னர் அதை அ.ராமசாமியும் குறிப்பு ஒன்றோடு பகிர்ந்திருந்திருக்கிறார்.

பொன்.விஜயன் பற்றி நான் எதுவும் அறிந்ததுமில்லை. அவரது சஞ்சிகையில் எழுதிய பிரபலங்களும் அவருடன் தொடர்புடன் இருந்தவர்களும் அவரைக் கொண்டாடியிருந்ததாக என் கண்ணிலும் பட்டதில்லை.

ஆனாலும், இலக்கியத்தைப் பிழைப்பாகவும், பெயர் பெறுவதற்கான வழியாகவும் பயன்படுத்தும் இலக்கிய உலகில், இலக்கியத்திற்காக தன் வாழ்வைக் கெடுத்துக் கொண்டவர்கள் நினைவு கூரப்பட வேண்டியவர்கள்.

2015இல் எழுதப்பட்ட குறிப்பு இப்போது மறுபிறவி எடுத்து ஒரு சுற்று வந்திருக்கிறது. இது இப்படியே மறந்து போகப்பட்டு விடும். பிறகு இன்னொரு நாள் வேறு எவருக்காவது அது நினைப்பு வரும் போது, மீண்டும் உயிர்த்தெழும்.

அவ்வாறான நிலை இல்லாமல் இருக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு இங்கே பதிவாக்கி இருக்கிறோம்.

இவ்வாறாக இலக்கிய உலகில் பங்களிப்புகளை வழங்கியவர்கள் நினைவுகூரப்படும் விதத்தில் ஒரு தொகுப்பு ஒன்றை உருவாக்கவேண்டும் என்ற கருத்தை பேராசிரியர் அ.ராமசாமி அவர்கள் முன்வைத்திருக்கிறார்.

அவ்வாறான தொகுப்பு ஒன்று உருவாக்கும் முயற்சி முன்னெடுக்கப்படும் பட்சத்தில், எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாமல், அதற்கான முடிந்தளவு ஒத்துழைப்புகளை வழங்குவோம் என்று அபத்தம் சார்பில் உறுதியளிக்கிறோம்.



# இலக்கியத்தில் மறக்கப்பட்டவர் பொன்விஜயன்

**இலக்கியத்திற்காக வாழ்க்கைய வைத்து சூதாடிய பலரை நாம் மறந்து விடுகிறோம். அதில் மிக முக்கியமானவர் பொன் விஜயன். புதிய நம்பிக்கை எனும் இதழை நடத்திய பொன் விஜயன் என்னால் மறக்க முடியாதவர்.**

## கணேஷன் குரு

எழுத்தை மட்டும் நம்பி வாழ்க்கை நடத்துவதென்பது, தனக்குத்தானே சவக்குழியை தோண்டிக்கொள்கிற பிரியவதம் நிறைந்த வாழ்க்கை முறை.

எண்பதுகளின் இறுதியில், மாதம் ஐந்நூறு ரூபாய் இருந்தால் போதும், வாழ்க்கையை எந்த சங்கடமும் இன்றி கடந்துவிடலாம், என்கிற நம்பிக்கை எனக்கிருந்தது. அது எவ்வளவு தவறான விஷயம் என்பது இன்றைய நிலையில் எவரும் அறியக்கூடியதே. இப்போதெல்லாம், ஒரு மணி நேரத்தைக் கடத்தவே ஐந்நூறு ரூபாய் போதுமானதாக இல்லை.

இலக்கியத்தின் மீதும், புதிய விஷயங்களை அறிவதிலும், என்னையே மீளுருவாக்கம் செய்வதிலும் அதீத ஆர்வம் கொண்ட இளைஞனாக, எண்பதுகளின் இறுதியிலும், தொண்ணூறுகளில் தொடக்கத்திலும், புத்தகங்களுக்குள் வாழ்ந்தேன். அப்போது என்னுடைய ஆகப்பெரிய கனவு என்பது, மாதம்

ஐந்நூறு ரூபாய் சம்பாதிப்பதும், அதைக்கொண்டு ஒரு தரமான இலக்கிய சிற்றிதழ் நடத்துவது என்பதுமாகவே இருந்தது. ஆனால், இத்தகைய என் கனவுகளை நான் சந்திக்க நேர்ந்த இலக்கிய மனிதர்களின் வாழ்க்கைமுறை, கூறுபோட்டு என்னை வேறு திசை நோக்கி பயணிக்க செய்யும் என, நான் ஒருபோதும் கற்பனை செய்ததில்லை. அப்படியாக நான் சந்தித்த மனிதர்களில் ஒருவர் பொன் விஜயன்.

தொண்ணூறுகளில், சென்னை வரும்போது, நான் தங்கக்கூடிய இடங்களில் ஒன்று, பொன்விஜயனின் கோடம்பாக்கம் வீடு. முதல் தளத்தில், மொட்டைமாடி அகண்டதாகவும், அறை சிறியதாகவும் உள்ள வீடு. அந்த மொட்டைமாடியில் தங்குவது வழக்கம். அந்த வீடுதான் அவரது அச்சு கோர்ப்பகம் மற்றும் குடியிருப்பு. வாடகை வீடுதான். பிறகு, ஒரு இலக்கிய சிறுபத்திரிகையாளன் சென்னையில் சொந்த வீடா வைத்திருக்க முடியும்.


பொன் விஜயன், “புதிய நம்பிக்கை“ இதழின் ஆசிரியர். விடாப்பிடியாக அந்த இதழை தொடர்ந்து நடத்தியவர். அவரது பத்திரிகையில் என் கவிதைகள் வந்திருக்கின்றன. அந்த பழக்கத்தில், அவரிடம் நெய்வேலி நண்பர்கள் சிலர் இணைந்து நடத்திய “மீறல்“ இதழ்களை அச்சடித்து தர தந்திருந்தோம். இதன் நிமித்தமாக அவரது வீட்டிற்கு சிலமுறை சென்ற ஞாபகம். பிறகு சென்னை அம்பத்தூரில் வேலைக்கு சேர்ந்த போது, கொரட்டூரில் தங்கினேன். அந்நாட்களில், பொன் விஜயனின் வீட்டிற்கு அடிக்கடி செல்வது வழக்கம்.

**”நான் எழுதிய கதைகளில் அதிகமாக பிரபலமானது மாடன் மோட்சம். அது 200 பிரதிகள் அச்சிடப்பட்ட புதிய நம்பிக்கை வெளியிட்ட கதை” என்று ஜெயமோகன் தன் இணையபக்கத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.**

பொன்விஜயன், ஜென்னிராம் பிரின்டர்ஸ் என்கிற பெயரில் தான் அச்சுத்தொழில் நடத்திவந்தார். ஜென்னி என்பது அவருடைய மூத்த மகள் பெயர், ராம் என்பது அவருடைய இளைய மகன் பெயர். சில பெண்களை அவருடைய அச்சு கோர்ப்பு பணிக்கு நியமித்திருந்தார். கோர்ப்பு வேலைகள் முடிந்ததும், அந்த ஃபிரேமை சைக்கிளில் கட்டி, கோடம்பாக்கம் பாலத்துக்கு அடியில் இருந்த, சிறிய அச்சகரிடம் தருவார். அங்குதான் அவருடைய புத்தகங்கள் அச்சடிக்கப்பட்டன. தற்போது அவரது பிள்ளைகளுக்கு கிட்டதட்ட முப்பது வயது வரை ஆகியிருக்கலாம். எங்கே வசிக்கிறார்கள்? எப்படி இருக்கிறார்கள்? என்ன படித்திருக்கிறார்கள்? என்கிற விபரங்கள் எதுவும் எனக்கு தெரியவில்லை.

எந்த நம்பிக்கையில், புதிய நம்பிக்கை இதழை ஆசிரியராக இருந்து நடத்தினார் என்பது, இப்போது நினைத்துப்பார்த்தால் ஆச்சரியமாக இருக்கிறது. நிச்சயமாக அந்த சிற்றிதழ் மூலம் அவருக்கு வருமானம் வந்திருக்காது. ஆனால், தொடர்ந்து நடத்தினார். விக்கிரமாதித்யன் ஆரம்பித்த “நவீன கவிதை“ இதழையும், பொன்விஜயன் அச்சிட்ட ஞாபகம். விக்கிரமாதித்யன் விட்ட பிறகு, அந்த இதழுக்கும் ஆசிரியராக இருந்து சில இதழ்களை வெளியிட்டார்.

நான் பார்த்தவரை, கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாத வழ்க்கைதான் பொன்விஜயனுடையது. இதில், குடும்பத்தை எப்படி நடத்தினார் என்பது பற்றி சொல்ல எதுவுமில்லை. தில்லியில், நான் பணிபுரிந்த போது, பொன்விஜயன் நோய்க்கு ஆளாகி இறந்துவிட்டார் என்று அறிய நேர்ந்தேன். எதுவும் சொல்லவோ, செய்யவோ முடியாத நிலையாக உணர்ந்தேன். அவர் குடும்பம் சொந்த ஊருக்கு திரும்பி சென்று விட்டதாக பிறகு அறிந்தேன்.




கேள்விப்பட்டேன். இந்த விஷயத்தில், ராமலிங்கத்திற்கு சற்று மன வருத்தம் இருந்ததாகவும் ஞாபகம்.

பொன் விஜயன் கவிதைகள் எழுதியிருக்கிறார். சிறுகதை தொகுப்பும் வெளிவந்த ஞாபகம். என்பதுகளிலும், தொண்ணூறுகளிலும் எழுத தொடங்கிய பலருடைய கவிதைகளும், கதைகளும், கட்டுரைகளும் புதிய நம்பிக்கையில் வந்திருக்கின்றன. என்றாலும், இவரைப்பற்றி யாராவது குறிப்பிட்டிருக்கிறார்களா என இணையத்தில் தேடினால், முக்கியமான பதிவுகள் என்று எதுவும் என் கண்ணில் படவில்லை. மிக சில பதிவுகள் மட்டுமே பார்த்தேன்.

”நான் எழுதிய கதைகளில் அதிகமாக பிரபலமானது மாடன் மோட்சம். அது 200 பிரதிகள் அச்சிடப்பட்ட புதியநம்பிக்கை வெளியிட்ட கதை” என்று ஜெயமோகன் தன் இணையபக்கத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

”என் முதல் புத்தகத்தை, பொன் விஜயன்தான் வேர்கள் ராமலிங்கத்துடன் இணைந்து பதிப்பித்தார். அவர் இலக்கியம் மட்டுமன்றி சமூக அரசியல் பார்வையுடன் வெளியிட்ட புதிய நம்பிக்கை இதழையும் பல புத்தகங்களையும் அவரே அச்சுக் கோர்த்தார். தமிழில் சிறு பத்திரிகை

நடத்தி இலக்கிய மேம்பாட்டுக்காகத் தன் சொந்த வாழ்க்கையைக் காவு கொடுத்தவர்கள் பட்டியலில் விஜயனுக்கு நிச்சயம் முக்கியமான இடம் உண்டு" என்று ஞாநி தன்னுடைய சைக்கிள் கலாச்சாரம் பற்றியபகிர்வில்குறிப்பிட்டிருக்கிறார்.

மற்றபடி எந்த பகிர்வும் பொன் விஜயனைப்பற்றி காணக் கிடைக்கவில்லை.இவரதுபுகைப்படம் கிடைக்குமா என தேடிப்பார்த்தேன் எங்கும் எனக்கு கிடைக்கவில்லை. பிறந்த, இறந்த வருடம் பற்றிய தகவலும் இணையத்தில் என் கண்ணில் படவில்லை. தன் வாழ்வையே இலக்கிய சிறுபத்திரிகை நடத்தி பலி கொடுத்த ஒரு சிறுபத்திரிகையாளனை பற்றிய நம் கவனம் குறைவாகவே இருக்கின்றது. பொன் விஜயன், தேனி பகுதியை சார்ந்தவர். இயக்குனர் பாரதி ராஜாவின் "16 வயதினிலே" ஏற்படுத்திய பாதிப்பால், அதைப்போலவே தானும் இயக்குனராக வேண்டும் என சென்னைக்கு வந்ததாக சொல்லியிருக்கிறார். சென்னைக்கு வந்து, வாய்ப்பு தேடி அலைந்து, உணவகங்களில் சர்வராக வேலை பார்த்த அனுபவங்களை பகிர்ந்திருக்கிறார்.

சர்வராக இருந்ததைவிட, ஒரு சிறுபத்திரிகையாளனாக இருப்பதால் உண்டாகிற சிறு மகிழ்வே, வறுமையான நாட்களை கடக்க உதவுவதாக சொல்லியிருக்கிறார். அவரை சந்தித்த நாட்களில், ராம்ஜி சுவாமிநாதன் என்கிற நண்பர் அவ்வப்போது சிறு அளவில் பண உதவிகள் செய்ததாக குறிப்பிட்ட ஞாபகம் வருகிறது.

அவருடன், கோடம்பாக்கம் ராம் தியேட்டரில் பல திரப்படங்களை இரவுக்காட்சிக்கு சென்று பார்த்திருக்கிறேன். சிறிது நேரம் வறுமை சூழலை மறக்க அது அவருக்கு உதவி இருக்கிறது என இப்போது தோன்றுகிறது. பொன் விஜயனுக்கு மது பழக்கமோ, சிகரெட் பழக்கமோ கிடையாது. பணம் இருந்தால், ஏதாவதொரு ஓட்டலில் நன்கு சாப்பிலாம் வாங்க என கூறி செல்வார்.

**அந்த நாட்களில், அதாவது, தொண்ணூறுகளின் தொடக்கத்தில், கோணங்கியும் அவருடைய நண்பர் எஸ். ராமகிருஷ்ணனும் தேசாந்திரிகளாக இருந்ததாக ஞாபகம். இதில், எஸ். ராமகிருஷ்ணன் மட்டும் எழுத்தின் மூலம் எப்படி வாழ்க்கையை வெற்றிகரமாக நகர்த்துவது என்கிற கலையை கற்றுத் தேர்ந்திருப்பதை தற்போது காண முடிகிறது. கோணங்கி பற்றி அதிகம் தெரியவில்லை. எப்போதும் போல, மாஸ் மீடியாவுக்கும் தன் இயக்கத்திற்கும் சம்பந்தம் இல்லை என்று இருக்கிறாரோ என்னவோ?**

நெய்வேலிக்கு வந்தபோது, ஒரு முறை எங்கள் வீட்டிற்கு வந்தார். மதிய உணவு அருந்தினார். எங்கள் வீடும் சிறியதுதான். நீங்களும் என்னைய மாதிரியே பாட்டாளிதான் போலிருக்கு என்றார். ஆம், என்ன செய்ய, இலக்கியத்திற்கும் வறுமைக்கும் தான் உறவு நெருக்கமாக அமைந்துவிடுகிறது போலும்.

பொன் விஜயனின் மனைவி முகம் சுளித்து நான் பார்த்ததில்லை. அவர்கள் வீட்டில் என்ன இருக்கிறதோ அதை எனக்கும் உணவாக பகிர்ந்திருக்கிறார்கள்.

புதிய நம்பிக்கையின் மூலம் அவருக்கு வருமானம் எதுவும் கிடைத்ததாக தெரியவில்லை. ஒவ்வொரு இதழும் 100 பிரதிகள் விற்றிருந்தாலே பெரிய விஷயம் தான். தன்னிடம் வேலை பார்த்த பெண்களுக்கு ஏதேனும் வேலை கொடுக்கவேண்டும் என்பதற்காகவே தொடர்ந்து இதழை அச்சடித்தாரோ என்றும் இப்போது தோன்றுகிறது.

இலக்கியம் என்பதை, தமிழ் சூழலில், வார இறுதியில் ஓட்டலுக்குப்போய் சாப்பிடுகிற அளவுக்குமட்டுமேவைத்துக்கொள்ள வேண்டும் என்று என்னுள் மாற்றம் ஏற்பட நால்வருடைய வாழ்க்கைப் பார்க்க நேர்ந்ததுதான் காரணம் என்று கருதுகிறேன். ஒருவர் பிரமிள், மற்றொருவர் விக்கிரமாதித்யன், இன்னொருவர் பொன்விஜயன், பிறகு கோபிகிருஷ்ணன். இந்த நால்வரின் பொருளாதார வாழ்க்கை நிலையை ஓரளவு அறிந்ததன் விளைவு, கொஞ்சம் கொஞ்சமாக இலக்கிய விஷயங்களில் இருந்து நான் விடுபடத் தொடங்கினேன். பொருள் தேடி ஓடினேன். ஓரளவாவது சம்பாத்தியம் கிடைத்தபின்பே, இலக்கிய விஷயங்களுக்குள் தலைகாட்டுவது என்று தீர்மானம் எடுத்தேன்.

அந்த நாட்களில், அதாவது, தொண்ணூறுகளின் தொடக்கத்தில், கோணங்கியும் அவருடைய நண்பர் எஸ். ராமகிருஷ்ணனும் தேசாந்திரிகளாக இருந்ததாக ஞாபகம். இதில், எஸ். ராமகிருஷ்ணன் மட்டும் எழுத்தின் மூலம் எப்படி வாழ்க்கையை வெற்றிகரமாக நகர்த்துவது என்கிற கலையை கற்றுத் தேர்ந்திருப்பதை தற்போது காண முடிகிறது. கோணங்கி பற்றி அதிகம் தெரியவில்லை. எப்போதும் போல, மாஸ் மீடியாவுக்கும் தன் இயக்கத்திற்கும் சம்பந்தம் இல்லை என்று இருக்கிறாரோ என்னவோ?

ஒருநாள், பொன்விஜயன் தனக்கு எழுத்தாளர் இந்திரா பார்த்தசாரதி வீட்டில் கொஞ்சம் வேலை இருப்பதாகவும், உடன் வாருங்கள் என்றார். இருவரும் பொன்விஜயனின் சைக்கிளில் போயிருந்தோம். இந்திரா பார்த்தசாரதியின் வீடு கோடம்பாக்கத்தை ஒட்டிய பகுதியில் இருந்தது. ஏரியா பெயர் தற்போது நினைவிலில்லை. இந்திரா பார்த்தசாரதியின் வீடு பெரியது, வசதியானதாக இருந்தது. அவருடைய வசதியான வாழ்க்கை முறையும், பொன்விஜயனின் வாழ்க்கை முறையும், எதை வைத்தாலும்

எட்டாத மாதிரி தோன்றியது.

பொன் விஜயன் என்னை சம்பிரதாயமாக அறிமுகப்படுத்தினார். அவர்கள் இருவரும் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். விடைபெறும்போது, எப்படி வந்தீர்கள் என்று இந்திரா பார்த்தசாரதி கேட்டார். தம்பி வந்தாரு, அவரோட சைக்கிளில், அப்படியே வந்துவிட்டேன் என்றார் பொன்விஜயன். தன்னுடைய சைக்கிளில் வந்ததை வெளிப்படையாக சொல்ல முடியாத கூச்சம் அவரிடம் இருந்தது. வெளியே வந்ததும் இது பற்றி குறிப்பிட்டு வருந்தினார்.

பொன் விஜயனின் கவிதைகளும், கதைகளும் எவருடைய நினைவிலும் தற்போது இருக்காது என்று தோன்றுகிறது. அவைகள் அந்தளவுக்கு முக்கியமானவை இல்லை போலும். ஆனால், அவரது "புதிய நம்பிக்கை" இதழ் பல எழுத்தாளர்களுக்கு களமாக விளங்கியது. அவரது இலக்கிய பங்களிப்பு, ஒரு சிறுபத்திரிகையாளனாக மிகவும் குறிப்பிடத்தக்கது.

என் நினைவுகளிலிருந்து முடிந்தமட்டிலும் இதை எழுதியிருக்கிறேன். இன்னமும் சிறப்பாக, பொன் விஜயனுடன் பழகியவர்கள் அவரைப்பற்றி பகிரலாம்.

இன்றைய நிலையில் இலக்கிய களம் என்பது வெகுவாக மாறிவிட்டது. பிளாக்குகள், இணையதளம், ஃபேஸ்புக் என ஏராளமான வெளியீட்டு தளங்கள் தற்போது உள்ளது. எவரும் தன் ஆக்கங்களை எளிதில் மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ள முடியும். ஆனால், தொண்ணூறுகள் வரை இந்த நிலை இல்லை. காத்திரமான படைப்புகளுக்கு, மாறுபட்ட முயற்சிகளுக்கு சிறுபத்திரிகைகள் மட்டுமே ஆதர்சமாக இருந்தன. இதை அந்த காலகட்டத்தை கடந்த அனைத்து எழுத்தாளர்களும் அறிவார்கள். அந்தவகையில், பொன் விஜயன் ஒரு குறிப்பிடத்தகுந்த வெளியீட்டு களத்தை இந்த இலக்கிய உலகிற்கு அளித்தவர் என்பது, எப்போதும் நினைவில் இருக்கும்.

# நினைக்கப்பட வேண்டியவர்கள்







## பேராசிரியர் அ.ராமசாமி
## (பேஸ்புக் பதிவில்)

கலை இலக்கியத் திறனறி பார்வையாளரும் கவியுமான இந்திரனின் இந்தப்பதிவு 1980 களில் வந்த "புதிய நம்பிக்கை" என்ற இதழின் ஆசிரியர் பொன்.விஜயனைக் குறித்த நினைவுப்பதிவு. எனது நினைவிலும் அவர் இருக்கிறார். புதிய நம்பிக்கையில் எழுதியிருக்கிறேன். தீம்தரிகிட இதழைத் தொடங்கிய ஞாநியோடு இருந்த பழக்கம் பொன். விஜயனை அடையாளம் காட்டியது. தீம்தரிகிட இதழுக்கு அனுப்பிய ஒரு கட்டுரையை அவ்விதழ் தொடர்ந்து வராது என்ற நிலையில் பொன். விஜயனிடம் கொடுத்தார். அதனைப் புதிய நம்பிக்கையில் வெளியிடலாமா? என்று எனது சம்மதத்துடன் வெளியிட்டார். ஜெயந்தன், கவிதாசரண், ஆகியோருடன் பார்வையாளராக ஒரு கூட்டத்தில் கலந்துகொண்ட பிறகு அவரை ஜெயந்தன் அறிமுகம் செய்தார். அதன் பிறகும் நாடகவியல் கட்டுரைகளை எழுதச் சொன்னார். எழுதினேன்.

இந்தப் பதிவு ஒரு தொகுப்பை உருவாக்கும் எண்ணத்தை உருவாக்குகிறது. தமிழ் அறிவுத்தளத்தை உருவாக்கிய கலை, இலக்கியச் சிறுபத்திரிகைகளின் ஆசிரியர்களும் செயல்பாட்டாளர்களும் சொந்த வாழ்க்கையைப் பெரிதாக நினைக்காதவர்கள். தாங்கள் முன்னெடுத்த கருத்து, செயல், கலைவளர்ச்சி, திறனாய்வுப் பயிற்சி, எழுத்துமுறைமை, மொழிக்கான பங்களிப்பு எனப் பல தளங்களுக்காக வாழ்வை அர்ப்பணித்தவர்கள். அவர்களை இப்போது நினைத்துக்கொள்ளும் இதுபோன்ற கட்டுரைகள் எழுதப்படவேண்டும். எழுதிய கட்டுரைகள் தொகுக்கப்பட வேண்டும். தொகுக்கப்படும் அந்நூல்கள் தமிழ் இலக்கியவரலாற்றின் பகுதிகளாக அமையும்.



# எழுத்தாளர் பொன்விஜயன்

## தொகுப்பு ம.காமுத்துரை

*(தமிழ் எழுத்தாளர்கள் இணையத்தளத்தில் இருந்த பதிவு)*

முருகேசன் எனும் இயற்பெயர் கொண்ட எழுத்தாளர் பொன்விஜயன், தேனி மாவட்டம் அல்லிநகரத்தில் மிக மிகச் சாதரண வறுமைமிக்க குடும்பத்தில் 13.10.1954 இல் வீருச்சாமி பொன்னுத்தாய் இவர்களது மூத்த புதல்வனாய் பிறந்தார். தனது இடையறாத வாசிப்பின் வழியிலும் இலக்கியத்தின்பால் கொண்ட பற்றுதலாலும் தாயின் பெயரையும் தங்கை விஜயலட்சுமியின் பெயரயும் இணைத்து பொன்விஜயன் என தனது பெயரை தானே எழுதிக்கொண்டார். தனது தகப்பனாரை இளவயதிலேயே பறிகொடுத்தவர்.

பொன்விஜயன் அவர்களின் இணையர் பாண்டியம்மாள். மகள்கள் ஜென்னி, பிரிய தர்சினி. மகன் ராம் குமார் இளம் வயதிலேயே காலமாகிவிட்டார். இவர்களின் குடும்பம் தேனியில் வசிக்கின்றனர். தேனி - அல்லிநகரத்தில் பள்ளியிறுதி வகுப்பினை முடித்த இவர், தனது இரண்டு தம்பிகளையும் தானே வளர்த்தெடுத்தார். ஆரம்பத்தில் பஞ்சாலைத் தொழிலாளியாக, சாலையோரம் மிட்டாய் பிஸ்கட் பாக்கெட்களை வாங்கிவைத்து பெட்டிக்கடை வியாபாரியாக, பிழைப்பு ஓட்டியவர் அச்சகத்தில் சேர்ந்து அச்சுக்கோர்க்கும் வேலையை ஆர்வமாகக் கற்றுக்கொண்டார். அந்தப் பணியே அவரது இலக்கியப்பாடுகளுக்கு கிரியா ஊக்கியாகவும் அமைந்தது. தனக்கு மிகவும் பிரியமான கவிஞர் மு.மேத்தாவின் பாதிப்பால் இலக்கியம் கற்கத் துவங்கினார். வாசிப்பினை மூலதனமாக்கி இலக்கிய நண்பர்களுடனான தொடர்பினை இணைத்து “நம்பிக்கை” எனும் பெயரில் ஒரு சிற்றிதழைத் துவங்கினார். காலங்காலமாக சிற்றிதழ்களுக்கு எப்போதும் நேரும் விபத்து நம்பிக்கைக்கும் நேர்ந்தது. ஆம்! குறிப்பிட்ட காலத்திற்குப் பின் நின்று போனது.

பின்னாளில் நண்பர்களது உதவியால் சிறிய அளவில் அச்சுக்கோர்ப்பு கருவிகள் மட்டும் வாங்கிக்கொண்டு வரும் வேலைகளை வீட்டில் வைத்து அச்சுக்கோர்த்து, அதனை அச்சகங்களில் கொடுத்து அச்சடிக்கும் பணியில் ஈடுபட்டார். அப்போது தனது சிற்றிதழுக்கு மீண்டும் உயிரூட்டினார். இப்போதுதான் அதற்கு “புதிய நம்பிக்கை” என நாமகரணம் சூட்டி, சிற்றிதழ் உலகில் அதற்கென ஒரு தனிப்பெரும் இடத்தினை உருவாக்கினார். “இரக்கத்தை யாசிக்காதே, மனிதனாக இரு, நம்பிக்கையை இழக்காதே!” எனும் ஹென்றி ஷ ாரியரின் வாசகத்தினை ஒவ்வொரு இதழிலும் சுமந்து கொண்டு பயணித்த “புதிய நம்பிக்கை”. அவர் இருக்கும்வரை சுமார் எண்பது இதழ்கள் வரை வெளிவந்தது.

அவர் தனது தொடர்வாசிப்பின் வழியே சம்பாதித்த நண்பர்களை இணைத்து, 30 -11-1978 இல் தேனி அல்லிநகரத்தில் ந.சேதுராமன், அல்லிஉதயன், பா.ராமமூர்த்தி இன்னும் சிலரோடு இணைந்து தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்








**இப்பத்திரிகையில் இன்றைக்கு பிரபலமாக இருக்கும் ஜெயமோகன் துவங்கி, செ.யோகநாதன், பாவண்ணன், சுப்ரபாரதிமணியன், பிரளயன், ஹெச்.ஜி.ரசூல், தேனி சீருடையான், ம.காமுத்துரை, அல்லிஉதயன் எனும் படைப்பாளிகளது படைவரிசை அணிவகுத்து தங்கள் படைப்புகளை எழுதியுள்ளனர். அஸ்வகோசின் நாடகம் குறித்த தொடர் கட்டுரை ஒன்று வெளியானது. தவிர, கோணங்கியுடன் இணைந்து மார்க்வெசின் நூற்றாண்டின் தனிமை நூலுக்கான சிறப்பிதழையும், தகழி சிவசங்கரன் பிள்ளையின் சிறுகதைகள் குறித்த ஒரு சிறப்பிதழும் வெளியிட்டிருக்கிறார்.**

சங்கத்தின் இப்பகுதிக்கான முதல் கிளையை துவக்குகிறார்கள். அன்றைய ஒன்றுபட்ட மதுரை மாவட்டத்தின் மாவட்ட தலைவர் கவிஞர் புத்தூரான் - செயலாளராக இருந்த ப.ரத்தினம் ஆகியோரது வழிகாட்டுதலில் பொன்விஜயன், கிளைசெயலாளராகவும், மாவட்டச் செயற்குழுவிலும் அங்கம் வகிக்கிறார். செயல்பட ஒரு தளம் கிடைத்ததும் அவரது செயல்பாடு மேலும் விரிகிறது. மாதந்தர கூட்டங்கள் பதினைந்துநாள் கூட்டம் என அதிரடியாய் விரிகிறது. அருகிலுள்ள ஊர்களில் கிளைகள் அமைக்கவும் முயல்கிறார்கள்.

ஒவ்வொரு மாதாந்தரக் கூட்டங்களிலும் படைப்பரங்கம் நித்திய பேசுபொருளாக இடம் பெறும். கிளை உறுப்பினர்களை வாசிப்புப்பணியில் ஈடுபடுத்தி அவர்களைப் பாதித்த அந்தந்த மாதத்திய வாசிப்புகளைப் பேச வைக்கவும், புதிய புதிய படைப்பாளர்களை உருவாக்கும் நோக்கில் கவிதை, சிறுகதை என எழுதிவரச்செய்து அவைகளை விமர்சித்து மெருகேற்றுவதும் தலையாயப் பணியாக நடந்து வந்தது. அந்தநேரத்தில் எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. எல்லோரும் தங்களது படைப்புகளை தாளிலோ நோட்டுப்புத்தகத்திலோ எழுதிக்கொண்டு வந்து வாசிக்கும்போது, பொன்விஜயன், தனது ஒவ்வொரு படைப்பினையும் நினைவுகளில் இருந்தே ஒப்பிப்பார். ஆச்சர்யமாக இருக்கும் கவிதைகளைக்கூட மனப்பாடம் செய்து ஒப்பிக்கலாம். ஆனால் நானறிந்த வகையில் ஒரு கூட்டத்தில் அவர் “பகலில் ஒரு இருட்டு” எனும் சிறுகதையினை வாசிக்கிறார். (சொல்கிறார்). அப்போது மின்சாரம் தடைப்படுகிறது. ஆனால் அவரது வாசிப்பு தடைபெறவில்லை. அத்தைகைய ஆற்றல்மிகு தோழர். நிச்சயம் இன்றுவரை அவர் உயிரோடிருந்தால் மிகப்பெரும் ஜாம்பவான்களுக்கு ஈடுகொடுப்பவராக இருப்பார்.

அப்போது நிதர்சனா நாடக மன்றம் ஒன்றைத்துவங்கி நினைவுகளே சின்னங்கள், சொன்னா கேக்க மாட்டீங்க, யார்குற்றவாளி? போன்ற சமூக மேடை நாடகங்களை எழுதி இயக்கி உள்ளார். அதன் வழியே எஸ். எல்.சுப்புராஜ் போன்ற நடிகர்கள் அமைகிறார்கள். ஆனாலும் அவருக்கான அடையாளம் “புதிய நம்பிக்கை”தான்.

இப்பத்திரிகையில் இன்றைக்கு பிரபலமாக இருக்கும் ஜெயமோகன் துவங்கி, செ.யோகநாதன், பாவண்ணன், சுப்ரபாரதிமணியன், பிரளயன், ஹெச்.ஜி.ரசூல், தேனி சீருடையான், ம.காமுத்துரை, அல்லிஉதயன் எனும் படைப்பாளிகளது படைவரிசை அணிவகுத்து தங்கள் படைப்புகளை எழுதியுள்ளனர். அஸ்வகோசின் நாடகம் குறித்த தொடர் கட்டுரை ஒன்று வெளியானது. தவிர, கோணங்கியுடன் இணைந்து மார்க்வெசின் நூற்றாண்டின் தனிமை நூலுக்கான சிறப்பிதழையும், தகழி சிவசங்கரன் பிள்ளையின் சிறுகதைகள் குறித்த ஒரு சிறப்பிதழும் வெளியிட்டிருக்கிறார்.

“காசுகிடைக்குமெனில் விபச்சாரத்திற்கு தனது எழுத்துக்களை இரையாக்காத யோக்கியமான முற்போக்காளர்களுக்கு என்னால் இயன்ற எளிய ஒத்துழைப்பு” என்ற பிரகடனத்துடன் பாவெல் மற்றும் சக்தி பதிப்பகங்களை உருவாக்கி, பல புத்தகங்களையும் பதிப்பித்துள்ளார். அவருடைய நண்பர் ந.சேதுராமன் புதிய நம்பிக்கையின் துணை யாசிரியராகவும், பாவெல் பதிப்பகத்தின் இணை பதிப்பாளராகவும் பணியாற்றினார்.

குறிப்பாக கரிச்சான் குஞ்சுவின் காலத்தின் குரல் நாடகம், பொதியவெற்பன், மா.வளவன் தொகுத்த கே.டானியலின் இலங்கையிலிருந்து ஓர் இலக்கியக்குரல் கட்டுரைத் தொகுதி, ஞாநியின் பழையபேப்பர் கட்டுரைகள், சாந்தாதத்தின் சிறுகதை தொகுப்பு, பிருந்தாசாரதியின் கவிதைத் தொகுப்பு, பிரகாஷின் தொகுப்பில் வந்த தேனுகாவின் வண்ணங்கள் வடிவங்கள் எனும் தமிழின் முதல் ஓவிய விமர்சன நூல், விக்கிரமாதித்யனின் கவிதைத்தொகுப்பு என நூல்களை பொன் விஜயன் பதிப்பித்துள்ளார். இவைகள் கைக்குக் கிடைத்தவை மட்டும்தான். இவை போக இன்னும் பல நூல்களையும் பதிப்பித்துள்ளார்.

தமிழ் இலக்கிய உலகில் அன்றைய நவீன இலக்கிய வாதிகளுடனான தொடர்பு இவருக்கு பெரிய மரியாதையினை தந்தது. அ.மார்க்ஸ், பொதியவெற்பன், பெ.மணியரசன், தணிகைச்செல்வன், இவர்களோடு மட்டுமல்லாது திரைக்கலைஞர்கள் நாசரோடும், வாகை சந்திர சேகரோடும் தொடர்பில் இருந்ததாக நண்பர்கள் கூறுகிறார்கள்.

ஒரு கட்டத்தில் குடும்பத்தையே சென்னைக்கு இடம்பெயர்க்கும் சூழல் உருவாகிறது. சென்னையில் கோடம்பாக்கம் தெற்கு சிவன் கோவில் சந்தில் ஒரு சின்னஞ்சிறு வீட்டில் “ஜென்னிராம்” அச்சகம் ஒன்றை துவங்கினார். சொந்த ஊரில் நடத்தியது போல வெறும் அச்சுக்கோர்ப்பது மட்டும் செய்யும் பணியினை நம்பியும், சினிமா மீதான ஒரு கண்ணோடும் வாழ்ந்துவரும் வேளையில்,

எந்தவொரு சமரசத்திற்கும் நிற்காத இலக்கியவாதியான இவரால் பொருளாதாரத்தில் வெற்றிகாண முடியவில்லை. ஆனாலும், “புதிய நம்பிக்கை” தொடர்ந்து வந்து கொண்டிருந்தது.

எழுத்தை மட்டும் நம்பி வாழ்க்கை நடத்துவதென்பது தனக்குத்தானே சவக்குழியைத் தோண்டிக்கொள்கிற பிரியவதம் நிறைந்த வாழ்க்கைமுறை....

அப்படியாக நான் சந்தித்த மனிதர்களில் ஒருவர் பிரமிள், மற்றொருவர் விக்கிரமாதித்யன், இன்னொருவர் கோபிகிருஷ்ணன் பிறகு பொன்விஜயன். எனக்கூறும் அவரது நண்பர் கணேஷன் குருநாதன் தொடர்ந்த தனது கட்டுரையில் இவ்வாறு குறிப்பிடுகிறார்.

புதியநம்பிக்கையின் மூலம் அவருக்கு வருமானம் எதுவும் கிடைத்ததாகத் தெரியவில்லை. ஒவ்வொரு இதழும், நூறு பிரதிகள் விற்றிருந்தாலே பெரியவிசயம். தன்னிடம் அச்சுக்கோர்ப்பு வேலைபார்த்த பெண்களுக்கு ஏதேனும் வேலை கொடுக்கவேண்டும் என்பதற்காகவே தொடர்ந்து இதழை அச்சடித்து வந்தாரோ என்று இப்போதும் தோன்றுகிறது. (கணேஷன் குருநாதன் 13-05-2020. தமிழ்விங் இணைய இதழ்.)

“எனது முதல் புத்தகத்தை பொன்விஜயன்தான் வேர்கள் பதிப்பகத்துடன் இணைந்து பதிப்பித்தார். அவர் இலக்கியம் மட்டுமின்றி சமூக அரசியல் பார்வையுடன் வெளியிட்ட புதியநம்பிக்கை இதழையும், பல புத்தகங்களையும் அவரே அச்சுக் கோர்த்தார். தமிழில் சிறுபத்திரிகை நடத்தி இலக்கிய மேம்பாட்டுக்காக தன் சொந்த வாழ்க்கையைக் காவு கொடுத்தவர்கள் பட்டியலில் பொன்விஜயனுக்கு நிச்சயமாக முக்கியமான இடமுண்டு.” என்று ஞாநி தன்னுடைய சைக்கிள் கலாச்சாரம் பற்றிய பகிர்வில் குறிப்பிட்டுள்ளார்.

“நான் எழுதிய கதைகளில் அதிகமாக பிரபலமானது மாடன்மோட்சம். அது இருநூறு பிரதிகள் அச்சிடப்பட்ட புதியநம்பிக்கை வெளியிட்ட பத்திரிக்கை” என ஜெயமோகன் தன் இணையப் பக்கத்தில் குறிப்பிட்டிருக்கிறார். என்பது போன்ற பதிவுகள் பொன்விஜயனின் பணிக்கான சான்றாகும்.

கவிஞர் விக்கிரமாதித்யன் “நவீன கவிதை” எனும் கவிதைகளுக்கான இதழ் நடத்தி வந்தார். அதனை அச்சடித்துத்தரும் பணியினை பொன்விஜயன் மேற் கொண்டிருந்தார். ஒரு கட்டத்தில் விக்கிரமாதியன் அப்பத்திரிகையினை தன்னால் தொடரமுடியாது என விட்டுவிட, தனது தனித்த பத்திரிக்கையான புதியநம்பிக்கையுடன் சேர்த்து அதனையும் கொஞ்சநாள் பொன்விஜயன் நடத்திவந்தார் என கணேஷன் குருநாதன் குறிப்பிடுகிறார். சபைக்கு வந்தவை இவை இவர் தனது அச்சுக்கோர்க்கும் பலகையை மட்டும் வைத்துக்கொண்டு இன்னும் எத்தனையோ வேலைகள் செய்திருக்கலாம். அவைகள் அவரது இன்னும்பல இலக்கிய நண்பர்கள் வழியாக தெரியவரும்.

அவரது வயிற்றுப்பாட்டிற்கு மட்டும் இடையூறு இல்லாமல் ஏதேனும் ஒரு அரசு வேலையோ, நிரந்தரமான வருமானமோ கிடைத்திருப்பின் அவர் இன்றுவரை உயிர் வாழ்ந்திருப்பார் இலக்கியச் சாதனைகள் பலவும் நிகழ்ந்திருக்கும். அழகான, கம்பீரமான தோற்றமும் தெறிப்பான பேச்சும் வாய்க்கப்பெற்ற பொன்விஜயன் பல இலக்கிய கர்த்தாக்களைப் போலவே தனது நாற்பத்து நான்காம் வயதிலேயே 1998 இல் வயிற்று உபாதையினால் அவதிப்பட்டு சென்னை ஸ்டான்லி பொது மருத்துவமனையில் காலமானார்.

பொன்விஜயனின் கவிதைகளும் கதைகளும் எவருடைய நினைவிலும் தற்போது இருக்கலாம் இல்லாமலும் போகலாம் ஆனால், அவரது புதிய நம்பிக்கை இதழ் பல எழுத்தாளர்களுக்கு களமாக விளங்கியது. அவரது இலக்கியப் பங்களிப்பு அதுவும் ஒரு சிறு பத்திரிகையாளனாக அவர் தனித்து நின்றது மிகவும் குறிப்பிடத்தக்கது.,

பொன்விஜயனின் தனித்த படைப்புகள்

பூமிக்காக்கைகள் (கவிதைத்தொகுதி)

தவம் ( சிறுகதைத் தொகுதி)

ஆறறிவுச் சந்தை (நாவல்)

நினைவுகளே சின்னங்கள் (நாடகம்)

ஒரு மேதையின் ஆளுமை (கட்டுரை)

அச்சில் இருந்த படைப்புகள்

நித்தம் பல போதி மரங்கள் (கவிதைகள்)

ஆனந்தவேர்வை (சிறுகதைகள்)

வாழ்க்கை என்றொரு . . .(நாவல்)

பொன்விஜயன் தொகுத்த நூல்கள்

மண்ணைப்பாடும் மானுடப் பறவைகள் (பலரது கவிதைத் தொகுப்பு)

நம்பிக்கைக் கதைகள் (அறுவரது சிறுகதைத் தொகுப்பு)

குறிப்பாக கரிச்சான் குஞ்சுவின் காலத்தின் குரல் நாடகம், பொதியவெற்பன், மா.வளவன் தொகுத்த கே.டானியலின் இலங்கையிலிருந்து ஓர் இலக்கியக்குரல் கட்டுரைத் தொகுதி, ஞாநியின் பழையபேப்பர் கட்டுரைகள், சாந்தா தத்தின் சிறுகதை தொகுப்பு, பிருந்தாசாரதியின் கவிதைத் தொகுப்பு, பிரகாஷ் ின் தொகுப்பில் வந்த தேனுகாவின் வண்ணங்கள் வடிவங்கள் எனும் தமிழின் முதல் ஓவிய விமர்சன நூல், விக்கிரமாதித்யனின் கவிதைத்தொகுப்பு என நூல்களை பொன் விஜயன் பதிப்பித்துள்ளார். இவைகள் கைக்குக் கிடைத்தவை மட்டும்தான். இவை போக இன்னும் பல நூல்களையும் பதிப்பித்துள்ளார்.

**Read the fine print!**

## எழுதுங்கள்!

எழுத்துக்கள் மட்டும் தானாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை. உங்கள் ஆர்வங்கள் எதுவாக இருந்தாலும், அது ஒரு கலைவடிவமாக இருந்தால் அதைப் பற்றிய விபரங்கள், படங்களை எங்களுக்கு அனுப்புங்கள்.

ஓவியம், புகைப்படம் மட்டுமல்ல.

பின்னல், தையல் வேலையில் உங்கள் கைவண்ணம் இருந்தால், அந்தக் கலைவண்ணங்களையும் அந்தக் கலை பற்றிய விபரங்களையும் பிரசுரிப்பதில் எங்களுக்கு என்ன தடை?

நான் கூட ஒரு காலத்தில், மண்பாண்டக் கலை கற்றிருக்கிறேன். சிறுபானைகள், கொள்கலங்கள் வனைந்திருக்கிறேன். நேரம் கிடைத்தால் அவற்றின் படங்களும் வரும்.

மர வேலை, சிரட்டைகள் என்றெல்லாம் என் சேஷ்டைகள் அதிகம். அது பற்றியெல்லாம் வரும்.

உங்களுடைய கைவண்ணம் ஒரு கலைவடிவமாக இருந்தால், பெருமையோடு அனுப்புங்கள்.

ஓவியங்கள், புகைப்படங்கள் என்றால், சில மாதிரிகளை அனுப்புங்கள். தேவைப்படும் போது, மீதியை அனுப்பும்படி கேட்போம்.

வீட்டுத்தோட்டம் செய்வது கூட கலைதான்.

உலக தொல்லைகளிலிருந்து விலகி, மனதை ஒருநிலைப்படுத்தி, உருவாக்குவதும் படைப்பதும் தானே கலை.

பேஸ்புக்கில் ஆளாளுக்கு கவிதை எழுதுகிறீர்கள். எங்களுக்கு மட்டும் அனுப்ப மறுக்கிறீர்கள்.

பத்திரிகை நடத்திய காலத்தில் கவிதை அனுப்பிய எல்லாரையும் ஏதோ வகையில் பொலிஷ் பண்ணி பிரசுரித்திருக்கிறேன்.

இப்போதைய மின்னஞ்சல், உட்பெட்டிகள் இல்லாமல், காகிதத்தில் பேனாவால் எழுதி, தபாலில் அனுப்புகின்றவர்களுக்கு செய்த மரியாதை அது. அவ்வாறான ஒரு ஆர்வத்தை, தரம் என்ற பெயரில் எங்கள் மேதாவித்தனத்தைக் காட்டி நிராகரிக்கும் பழக்கம் எல்லாம் இருந்ததில்லை.

அவ்வாறு வந்த ஆர்வத்தால் எழுத எழுத எழுத்தும் கை வசப்படும். அப்படித் தான் பலரை தாயகத்தில் எழுத வைத்தோம்.

பிரபலங்களை எழுத வைத்து, அவர்களின் நிழலில் பெயர் தேடுகின்ற வித்தை நமக்குரியதல்ல.

நாங்கள் சொல்கிறது போல, ‘அங்க அனுப்பினா போட மாட்டினம்’ என்று நினைத்தால், எங்களுக்குத் தயக்கம் இல்லாமல் அனுப்புங்கள்.

நீங்கள் கவிதைகளை அனுப்பா விட்டால், என் கவிதைகளை வாசிக்க வேண்டி நேரிடும் என்பதை முன்னெச்சரிக்கையாகக் கூற வேண்டியது என் கடமை.

தாங்க மாட்டீர்கள்!

நாங்கள் அனுப்பிப் போடாததால் தான் அபத்தத்தை வெளியிட வேண்டி வந்தது. நீங்கள் அனுப்பியதை நாங்கள் போடாவிட்டால், நீங்களும் ‘அபச்சாரம்’ என்று ஒன்றைப் புதிதாகத் தொடங்கலாம். ஆட்சேபனை கிடையாது.

சரி,
எழுதி அனுப்ப விரும்புகிறீர்கள்.

சில விடயங்களை மனதில் வைத்துக் கொள்ளுங்கள்.

ஒவ்வொரு வசனமும் முடியும் போது, முற்றுப்புள்ளி ஒன்று இருக்கிறது. அதைக் குத்த வேண்டும். அதை அந்த வசனத்தில் கடைசி எழுத்திற்கு அடுத்ததாக குத்த வேண்டும். கடைசி எழுத்துக்கும் அந்த குற்றுப்புள்ளிக்கும் இடையில் இடைவெளி (space)இருக்கக் கூடாது.

அந்த முற்றுப்புள்ளி முடிந்து அடுத்த வசனத்தை ஆரம்பிக்க வேண்டும். அப்போது ஒரு இடைவெளி விட்ட பின்னால் ஆரம்பிக்க வேண்டும்.

அதற்கு அடுத்து, அரைத் தரிப்பு எனப்படும் comma இருக்கிறது.

தொடர்ந்து சொல்லப்படும் பெயர்ச்சொற்கள் போன்றவற்றின் பின்னால் வரும்.
அபத்தம், அபச்சாரம், அவதூறு போன்ற புலன் பெயர் சஞ்சிகைகள்...

இதில் அரைத்தரிப்பு சொற்களின் முடிவில் வரும், அடுத்த சொல் இடைவெளி விட்டுத் தொடங்கும்.

இதெல்லாம் உங்களுக்கு மூன்றாம் வகுப்பில் டீச்சர் அம்மாக்கள் சொல்லிக் கொடுத்திருக்க வேண்டும்.

அப்போது நீங்கள் செல்போனை நோண்டிக் கொண்டிருந்திருக்கக் கூடும்.
அல்லது வெள்ளி பார்த்திருப்பீர்கள்.

யாருக்குத் தெரியும்?
அடுத்த பக்கம் இருக்கும் எதிர்ப் பாலார் யார் மீதாவது கண் போயிருக்கும்.
கவனம் செலுத்தியிருக்க மாட்டீர்கள்.

இதெல்லாம் வடிவமைக்கும்போது, எனக்கு வரும் தலையிடிகள். என் நேரத்தை விழுங்கிக் கொள்கின்றன.

அபத்தம் தாமதமாக வந்தால், அதற்கான முழுப் பொறுப்பும் நீங்கள் தான்.

எனவே, எழுதுங்கள். இப்படி இலக்கண விதிகளையும் அறிந்து கொள்ளுங்கள்.

ஆக்கங்களை பதினைந்தாம் திகதிக்கு முன் அனுப்புங்கள்.

அனுப்ப வேண்டிய மின்னோலை விலாசம்
apaththam@gmail.com.

பேஸ்புக் மெசஞ்சரில் அனுப்ப வேண்டாம்.

அது உட்பெட்டிக் காதல் கடிதங்களுக்கானது.

பதில் அனுப்பும்போது, உங்களுக்கு மாறி அனுப்பி அல்லல்பட முடியாது.



# எழுத்தாளர் அ.ந.கந்தசாமி

## ஓர் அறிமுகம்.

எழுத்தாளர் அ.ந.கந்தசாமியின் நினைவு தினம் பெப்ருவரி 14. அவர் மறைந்து 55 ஆண்டுகள் ஆகிவிட்டன. இத்தருணத்தில் இலக்கியப் புலமை காரணமாக அறிஞர் அ.ந.கந்தசாமி என்றழைக்கப்பட்ட அவரது கலை, இலக்கியப் பங்களிப்பை நினைவு கூர்வதும் பொருத்தமானதே.

சிறுகதை, கவிதை, நாடகம், நாவல், இலக்கியத்திறனாய்வு, மொழிபெயர்ப்பு என இலங்கை மற்றும் உலகத் தமிழ் இலக்கியத்தின் பல்வேறு துறைகளிலும் காத்திரமான பங்களிப்பை நல்கியவர் அ.ந.க. அத்துடன் ஈழத்து முற்போக்கிலக்கியத்தின் முன்னோடிகளில் முக்கியமான ஒருவராகவும் கருதப்படுபவர். தன் குறுகிய வாழ்வில் தனக்குப் பின்னால் எழுத்தாளர் பரம்பரையையே உருவாக்கிச் சென்றவர். அத்துடன் சமூக, அரசியற் செயற்பாட்டாளராகவும் விளங்கியவர். நாற்பதுகளில் வில்லூன்றி மயான சாதிப் படுகொலை பற்றி முதற்தடவையாகத் துணிச்சலுடன் குரல் கொடுத்த கவிஞர் அ.ந.கந்தசாமியே.

தமிழ் இலக்கியத்துக்குக் காத்திரமான பங்களிப்பை நல்கிய அ.ந.க.வை விரிவாக இனம் காண்பது முக்கியம். அவரது பன்முகப் பார்வைகளையும் வெளிக்கொணரும் வரையில் அவரது படைப்புகள் முழுமையாக சேகரிக்கப்பட்டுத் தொகுப்புகளாக வெளிவருவதும் அவசியம். இது காலத்தின் கட்டாயம் மட்டுமல்ல அந்த மகத்தான எழுத்துக் கலைஞனின் தன்னலமற்ற , இலட்சிய வேட்கை மிக்க இலக்கியப்பணிக்கு செய்யப்பட வேண்டிய கைம்மாறுமாகும். இதுவரையில் அவரது இரு படைப்புகள் நூலுருப் பெற்றுள்ளன. அதுவும் அவரது இறுதிக் காலத்தில் தமிழகத்தில் வெளிவந்த "வெற்றியின் இரகசியங்கள்". அடுத்தது "மதமாற்றம்" மதமாற்றம் கூடத் தனிப்பட்ட ஒருவரின் நிதியுதவியின் மூலம் எழுத்தாளர் கூட்டுறவுப் பதிப்பகம் வெளியிட்ட நூல். "பதிவுகள்.காம்" பதிப்பில் அமேசன் - கிண்டில் மின்னூல்களாக மனக்கண் (நாவல்) , எதிர்காலச்சித்தன் பாடல் (கவிதைத்தொகுப்பு), நான் ஏன் எழுதுகிறேன்? (கட்டுரைத் தொகுப்பு) ஆகிய படைப்புகள் வெளிவந்துள்ளன.

ஆரம்ப வாழ்க்கை பற்றிய தகவல்கள்

யாழ் வண்ணார்பண்ணையில் 8-8-1924 பிறந்த அ.ந.க. 44 ஆண்டுகள் வாழ்ந்திருந்தார். பெப்ருவரி 14, 1968 அன்று மறைந்தார். அ.ந.க.வின் வாழ்நாள் பாரதியின் வாழ்நாளைப் போலக் குறுகியது. பாரதி 39 வருடங்களே வாழ்ந்திருந்தார். அ.ந.கவின் தந்தையாரான நடராஜா யாழ் வண்ணார்பண்ணையைச் சேர்ந்தவர். யாழ் சிறைச்சாலை மருத்துவராகப் பணி புரிந்தவர். தாயார் பெயர்: கௌரியம்மா. இவர் அளவெட்டியைச் சேர்ந்தவர். ஒரு சகோதரர் - நவரத்தினம். சகோதரி - தையல்நாயகி. ஆறுமுகம் நடராஜா பல சொத்துக்களின் அதிபதியாக விளங்கியவர்.

அ.ந.கவுக்கு ஐந்து வயதாயுள்ளபோது தந்தை இறந்து விட்டார். தாயாரும் தந்தை இறந்து 41ஆம் நாள் இறந்து விட்டார். குழந்தைகள் மூவரையும் நீதிமன்றம் சட்டரீதியான பாதுகாவலர் ஒருவர் பொறுப்பில் விட்டது. உண்மையில் கொழும்பிலிருந்த தந்தை வழி உறவினரொருவர் மூன்று குழந்தைகளையும் தன் பாதுகாப்பில் எடுத்துச் சென்றதாகவும், அ.ந.க.வின் பாட்டி நீதிமன்ற உதவியின் மூலம் தன்வசம் எடுத்துக் கொண்டதாகவும் அறியப்படுகிறது.ஸ சொத்துகள் முறையாகப் பராமரிக்கப்படவில்லையெனத் தெரிய வருகிறது.

தன் ஆரம்பக் கல்வியை யாழ் இந்துக் கல்லூரியில் கற்ற அ.ந.க. சிறிதுகாலம் அளவெட்டி சென்று உறவினர் சிலருடன் வாழ்ந்து வந்தார். அளவெட்டியிலிருந்த காலத்தில் அ.ந.க. தனது கல்வியினைத் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியில் தொடர்ந்தார். பின்னர் மீண்டும் யாழ் இந்துக் கல்லூரியில் எஸ்.எஸ்.எல்.சி கல்வி கற்று பின்னர் கொழும்பு சென்றார். அ.ந.க. பதினாலு வயதிலிருந்தே எழுதத் தொடங்கி விட்டார். ஈழகேசரி சிறுவர் பகுதியில் எழுத ஆரம்பித்தார். அச்சமயம் ஈழகேசரி நடத்திய பேச்சு, கதை, கட்டுரைப் போட்டிகளில் பங்குபற்றியுள்ளார்.

வ.ந.கிரிதரன்

கதைப்போட்டியில் முதற்பரிசும் பெற்றுள்ளதாக அறிகின்றோம்.


இள வயதிலேயே அ.ந.க வீட்டை விட்டு வெளியேறி கொழும்பு சென்று தன் வாழ்வை அமைத்துக்கொண்டார். கொழும்பில் இவ்விதம் இவர் வாழ்க்கையை ஆரம்பித்த காலகட்டத்தில் இவரது நெருங்கிய நண்பர்களிலொருவராக விளங்கியவர் எழுத்தாளர் சில்லையூர் செல்வராசன். அவர் தனது "கந்தனுடன் உள்ளம் கலந்த சுவைக் கணங்கள்" என்னும் 6-2-1986 வெளியான வீரகேசரிக் கவிதையில் இதனை விரிவாகப் பதிவு செய்துள்ளார். இவ்விதமானதொரு சூழலில் குறுகிய காலத்தில் அவர் நிறைய நூல்களைக் கற்று, இலக்கியத்தின் பல்வேறு துறைகளிலும் வெற்றிகரமாகக் கால் பதித்ததோடு, செயல்வீரராகவும் விளங்கியது அவரது ஆற்றலைத்தான் காட்டுகிறது.

அ.ந.க சிறிதுகாலம் கொழும்பு கறுவாக்காட்டுப் பகுதியில் மணமுடித்து வாழ்ந்திருந்ததாக அறியப்படுகின்றது. இவரது குடும்பவாழ்க்கை நீடிக்கவில்லை. சிறுவயதிலேயே வீட்டை விட்டுத் தனியாகக் கொழும்பு சென்ற அ.ந.க பட்டதாரியல்லர். ஆனால் கலாநிதிகள் தமது நூல்களை அவருக்கு அர்ப்பணிக்குமளவுக்குப் புலமை வாய்ந்தவர். கலாநிதி கைலாசபதி தனது "ஒப்பியல் இலக்கியம்" என்னும் நூலினை அறிஞர் அ.ந.கந்தசாமிக்கு அர்ப்பணித்துள்ளது குறிப்பிடத்தக்கது. தமிழில் மட்டுமல்ல ஆங்கிலத்திலும் மிகுந்த புலமை வாய்ந்தவர். "ட்ரிபியூ"பில் ஆங்கிலக் கட்டுரைகள் பல எழுதியுள்ளார்.

மேற்படி "கந்தனுடன் உள்ளம் கலந்த சுவைக்கணங்கள்" கவிதையில் சில்லையூர் செல்வராசன் அ.ந.க.வுடனான தனது நட்பு பற்றியும், அவரது பன்முக ஆளுமை பற்றியும் விரிவாகவே பின்வருமாறு பதிவு செய்திருக்கின்றார்:

"பேனா நிமிர்த்திப் பிடிக்கின்ற வல்லமையைத் தானும் பெறுகின்ற தருணத்தில், தன்னோடு நானும் பெறுமாறு நல்வழிகள் காட்டியவன்
"கந்தன்" எனச் செல்லக்கனிவுப் பெயர் கொண்டு பந்தமுடன் நான் அழைத்த பரிவு மனமுடையான்.
எந்தக் கணமும் இலக்கியத்துக்கே உயிரைச் சொந்தம் கொடுத்துச் சுகம் அழித்துக் கொண்டமகன்!
வாழ்வு முழுவதையும் வைத்தான் கலைக்கென்றே!
தாழ்வென்று மற்றோர்கள் தள்ளும் பழக்கங்கள்
ஒழுக்க வழக்கங்கள் என்கின்ற வேறுபாடான நெறித்
தடங்கள் அவன் சிந்தனைக்குத் தடங்கல் புரிந்ததில்லை!
சடங்கு முறையான சம்பிரதாயங்கள் எல்லாம்
தூக்கியெறிந்து, துணிந்து,புதுவேக
நோக்கும், நடப்பும், நுணுகிப் பொருள் ஆய்ந்து
பார்த்துச் "சரி இந்தப் பார் உயர" என்றுணர்ந்த
நேர்த்திக் கருத்தை, நின்று நெற்றிக்கு நேராக
ஓங்கி எறிந்து அடித்தே உறைப்பாகச் சொல்திறனும்
ஆங்காரம் இன்றி உண்மை அறிவு நெறிமாணவனாய்
எந்தக் கணமும் இருக்கின்ற தன்னிறைவும்
நிந்தை கலவாமல் நேர்மையுடன் கண்டிப்புச்
செய்கின்ற போதும் திகழ்கின்ற கண்ணியமும்
வைகின்ற பேர்களையும் வாசாலகமாக
வாதாடி நா மடங்க வைக்கின்ற வல்லமையும்
தீதாடிச் சமூகத்தில் திரியும் பிற்போக்குகளைக்
கண்டால், உளம் உயிர் மெய்க் கரணங்கள் அத்தனையும்
விண்டு ஆடிப்போனது போல் வெந்து வெந்து போராடும்
உண்மை உளக்கலப்பும் ஒருங்கே திரண்ட பெரும்
திண்மை, அவன் "நடத்தை"- கலைச்சிருஷ்டி இரண்டினிலும்
தோய்ந்திருக்கக் காணக்கொடுத்து வைத்த பாக்கியன் நான்.

ஓய்ந்திருக்கான். வாடி, உடல் நோயில் ஆழ்ந்திருந்த
வேளையிலும் நோய்க்கட்டில் மீதிருந்து கால் மீது
தாளை வைத்து நூலெழுதித் , தாழாதுளம் நாட்டெழுத்து
மேன்மை விளங்க விடாமல் உழைத்தவன்! செந்
தேன் போற் கருத்துத் தெறிக்கும் அவன் படைப்பில்!
"ஸோலா"வின் "நானா" சுவைத் தமிழில் தந்தநாள்
மேலானதென்று ஈ.வே.ரா.பெரியார் பாராட்டி,
"விடுதலை"யிலே தொடராய் வெளியிட்ட ஆய்வு சுடர்
விடும் சிலம்புக் கட்டுரைகள் விநோதப் புனை நாமம்
பண்டிதர் திருமலைராயர் என்று பூண்டெழுதிக்
கண்டாய் அளித்திட்ட காலம் திருச்சியிலே
வானொலியில் இலக்கண வரம்பு முறை பற்றித்
தேனொலிகள் செய்த தினம் என்றிவ்வாறாக
"எதிர்காலச் சித்தன்" எனும் பாடல் சிந்தனைகள்
முதிரக் கடவுளையே முந்த முந்தத் தன்னுடைய
"சோர நாயகன்" என்று சொல்கின்ற தீம்பனுவல்
வேறெதிக மேதகைமை மிளிரும் படைப்புகளும்,
"மனக்கண்", "களனிவெள்ளம்" மற்றும் வெளியாகாப்
புனைப்புகள் பற்பலவும் புத்தறிவு போதிக்கும்
"வெற்றியின் இரகசியங்கள்" விளக்கும் நூல் "மதமாற்றம்"
முற்றிலும் நாடகத்துறை முதிர்விக்கக் கூர்தமிழில்
செய்தளித்துச் சென்ற திருக்கலைஞன் கந்தனது
மெய்யாம் திறமைகளை மிகவும் தெரிந்தவன் நான்.
பந்தமுடன் ஒன்றாய்ப் பணியாற்றிப் பல்லாண்டு
சிந்தைகலந்து ஒரே வீட்டிற் சேர்ந்திருந்தும் வந்ததனால்
கந்தன் எழுதாத காவியங்கள் நானறிவேன்!
சிந்தையுடன் கொண்டு சென்ற செய்திகளும் நானறிவேன்."




மறுமலர்ச்சிக்காலகட்டமும் அ.ந.க.வும்

மறுமலர்ச்சிக் குழுவின் உருவாக்கத்துக்குரிய முக்கிய காரணகர்த்தாக்களில் ஒருவர் அ.ந.க. ஏனையவர்கள்: தி.ச.வரதராசன், பஞ்சாட்சர சர்மா, நாவற்குழியூர் நடராசன். இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் தோற்றத்துக்கு முக்கியமானவர்களிலொருவர் அ.ந.க. அதன் சங்கக் கீதத்தை இயற்றியவரும் அவரே. மறுமலர்ச்சிக் காலகட்டம் என்னும் பொழுது "மறுமலர்ச்சி" என்னும் சஞ்சிகையின் காலகட்டத்தை மட்டும் கருதுவது தவறு. மறுமலர்ச்சி அமைப்பினரால் வெளியிடப்பட்ட சஞ்சிகையே "மறுமலர்ச்சி" சஞ்சிகை என்பதை நினைவில் வைத்துக் கொள்வது அவசியம். அ.ந.கந்தசாமி மறுமலர்ச்சி சஞ்சிகையில் சிறுகதைகள் எழுதாவிட்டாலும் "மறுமலர்ச்சி" அமைப்பு உருவாவதற்குரிய முக்கிய காரணகர்த்தாக்களிலொருவர்.இந்த வகையில் அ.ந.க.வை மறுமலர்ச்சி எழுத்தாளரென்று கூறுவதில் எந்தவிதத் தவறுமில்லை.

மறுமலர்ச்சி இயக்கத்தை உருவாக்கிய இளைஞர்கள் பற்றிக் குறிப்பிடுகையில் ஜனவரி 2007 ஞானம் சஞ்சிகையில் வெளியான "ஒரு காலத்தின் காலாக அமைந்தவர்" என்னும் கட்டுரையில் அ.ந.கந்தசாமியின் பங்களிப்பை மறக்காமல் பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் பின்வருமாறு

நினைவு கூர்வார்: “1940களில் மறுமலர்ச்சிச் சங்கம் நிறுவப்பட்டது. இதனை வரதராசன், சோ.தியாகராசா, நாவற்குழியூர் நடராஜன், பஞ்சாட்சர சர்மா, அ,ந,கந்தசாமி ஆகியோர் நிறுவினர்”. ஆனால் இங்கு பேராசிரியர் அ.செ.முருகானந்தனைத்தவற விட்டு விட்டார். சோ.தியாகராஜாவுக்குப் பதிலாக அ.செ.மு என்றிருக்க வேண்டும்.

எழுத்தாளர் பஞ்சாட்சரசர்மா 1987இல் வெளியிட்ட “பஞ்சாஷரம்” தொகுப்பு நூலில் “மறுமலர்ச்சிக்காலத்து மறக்க முடியாத நண்பர்” என்னும் கட்டுரையில் வரதர் மறுமலர்ச்சிச் சங்கத்தை உருவாக்கிய ஐவர்களாக அ.செ. முருகானந்தன், தி.ச.வரதராசன், க.செ. நடராசா, அ.ந.கந்தசாமி, பஞ்சாட்சரசர்மா ஆகியோரைக் குறிப்பிடுவார். ஆனால் 2007இல் அவர் “ஞானம்” சஞ்சிகைக்கு அளித்த நேர்காணலில் அவர் அ.ந.கந்தசாமி பற்றி நேர் காணலில் எங்குமே குறிப்பிடவில்லை.

இது திட்டமிட்ட இருட்டடிப்பாகவே நான் கருதுகின்றேன். அந்தச் சங்கத்தை உருவாக்கியதில் அ.ந.கந்தசாமியின் பங்கு முக்கியமானது. அவரே பஞ்சாட்சர சர்மாவுக்குக் கடிதம் எழுதிச் சங்கத்துக்குள் கொண்டு வந்தவர். அதனைப் பஞ்சாட்சர சர்மா வெளியிட்ட “பஞ்சாஷரம்” தொகுப்பு நூலிலுள்ள அ.ந,கந்தசாமி பஞ்சாட்சர சர்மாவுக்கு 10.6.1943 எழுதிய கடிதத்தின் மூலம் அறியலாம்.

இவ்விதம் உருவாக்கிய மறுமலர்ச்சிச் சங்கத்தின் இணைக்காரியதரிசிகளாக இருந்தவர்கள் அ.ந.கந்தசாமியும், வரதருமே. இதனை மார்ச் 1970 மல்லிகையில் வெளியான அ.ந.கந்தசாமி எழுதிய கடிதத்தில் காணலாம்.

உண்மையில் ஆரம்பத்தில் அ.ந.க மாணவனாக இருந்த சமயம் மறுமலர்ச்சி கையெழுத்துச் சஞ்சிகையாக வெளியாகியுள்ளது. பின்னர் அப்பெயரில் அமைப்பு உருவானபோது அவர் அதன் இணைச்செயலாளராக இருந்துள்ளார். அப்பொழுது அவர் யாழ் இந்துக்கல்லூ ரி மாணவனும் கூட. மறுமலர்ச்சி அமைப்பு முதலில் மறுமலர்ச்சி என்னும் கையெழுத்துச் சஞ்சிகையை வெளியிட்ட காலம் 1943 -1946. பின்னரே மறுமலர்ச்சி அச்சிதழாக (1946 -1948) வெளியானது.

மறுமலர்ச்சி அமைப்பு, அதன் பங்களிப்பு மற்றும் மறுமலர்ச்சி சஞ்சிகை பற்றிய ஆராய விரும்பும் எவரும் மறுமலர்ச்சி கையெழுத்துச் சஞ்சிகை, மறுமலர்ச்சி அமைப்பு, மறுமலர்ச்சி அச்சிதழ் என ஆய்வினை விரிவு படுத்த வேண்டியது அவசியம் என்பதையே இத்தகவல்கள் எடுத்துக்காட்டுகின்றன.

### அ.ந.கந்தசாமியின் சிறுகதைகள்.

அறிஞர் அ.ந.கந்தசாமி சுமார் 60 சிறுகதைகளாவது எழுதியிருப்பாரென அறியக் கிடக்கின்றது. இவற்றில் உதவி வந்தது (பாரதி இதழ்) , வழிகாட்டி (பாரதி இதழ்) , .இரத்த உறவு (பாரதி) , புதுப் புனல் ( உதயம் மலரில்), .நாயினும் கடையர் ( வீரகேசரி), காளிமுத்து இலங்கை வந்த கதை ( தேசாபிமானி), .பாதாள மோகினி (சுதந்திரன்), நள்ளிரவு (சுதந்திரன்), ஐந்தாவது சந்திப்பு (சுதந்திரன்), பரிசு (சுதந்திரன்), குருட்டு வாழ்க்கை, உலகப் பிரவேசம், ஸ்ரீதனம், பிக்பொக்கட், சாகும் உரிமை, கொலைகாரன், சாவுமணி போன்றவை பற்றிய தகவல்களையே பெற முடிந்தது. இவற்றிலும் ஒரு சிலவற்றையே பெற முடிந்தது. ஏனையவை ஆங்காங்கே பத்திரிகை, சஞ்சிகைகளில் சிதறிக் கிடக்கின்றன. இவற்றில் எத்தனை காலத்தால் அழியுண்டு போயினவோ நாமறியோம். இந்நிலையில் இயலுமானவரையில் அவை சேகரிக்கப்பட வேண்டும். ஆவணப் படுத்தப்பட வேண்டும்.

இவரது சிறுகதைகள் பற்றித் தனது “ஈழத்துத் தமிழ்ச் சிறுகதை மணிகள்” நூலில் அண்மையில் மறைந்த எழுத்தாளர் செம்பியன் செல்வன் “இரத்த உறவு (மறுமலர்ச்சி), நாயிலும் படையர் (வீரகேசரி), காளிமுத்து இலங்கை வந்த கதை (தேசாபிமானி) பாதாள மோகினி, நள்ளிரவு, ஐந்தாவது சந்திப்பு (சுதந்திரன்), பரிசு, குருட்டுவாழ்க்கை, உலகப்பிரவேசம், ஸ்ரீதனம், பிக்பொக்கட், சாகும் உரிமை, கொலைகாரன், உதவிவந்தது, வழிகாட்டி ஆகிய கதைகளை அ.ந.க. தனது நல்ல கதைகள் எனக் குறிப்பிட்டுள்ளார். இரத்தஉறவு, ஐந்தாவது சந்திப்பு, நாயிலும் கடையர்,” ஆகிய கதைகள் இவருக்குப் பெரும் புகழீட்டிக் கொடுத்தன. முதலிரு கதைகளும் சிங்கள மொழியில் பெயர்க்கப்பட்டு புகழ்பெற்றவை. தேயிலைத் தோட்டவாழ்வு பற்றிய நாயிலும் கடையர் “மிகச் சிறந்த தமிழ்ச் சிறுகதை என பல்வேறு ஈழத்து விமர்சகர்களால்




பாராட்டப்பட்டதொன்று”. அத்துடன் வாழ்வின் உயிர் நாடியான சமூகப்பிரச்சினையான இவற்றைப் பொருளாகக் கொண்டு இவரின் கதைகள் எழுந்தன. சமூக ஆராய்வின்போது எழும் முடிவுகள் ”தத்துவஞானிக்குத் தத்துவங்களாகவும், எழுத்தாளனுக்கு கதைகளாகவும் வெளியாகின்றன. உண்மையில் சிறந்த எழுத்துக்கள் வாழ்வின் நடப்பியல்பில் பிறப்பன அல்ல. அவ்வியல்புகளின் ஆராய்வின் முடிவிலேயே பிறக்கின்றன என்பதற்கு இவரின் கதைகள் சிறந்த உதாரணங்களாகும்” என்று கூறுவது கவனிக்கத் தக்கது. பேராசிரியர் கா.சிவத்தம்பி “அ.ந.க.வின் இரத்த உறவு போன்ற கதைகள் சமூகத்தை வன்மையாகச் சாடுபவை” என்பார்.

### அ.ந.கந்தசாமியின் கவிதைகள்

கவீந்திரன், பண்டிதர் திருமலைராயர், கலையரசன், சிப்பி, புருனே என்னும் புனைபெயர்களிலும் எழுதிக் குவித்தவர். இவரது கவிதைகள் தமிழமுது, தேன்மொழி, ஈழகேசரி, வசந்தம், வீரகேசரி, பாரதி, தினகரன், மல்லிகை, நோக்கு, இளவேனில், சுதந்திரன், ஸ்ரீலங்கா போன்ற பத்திரிகை, சஞ்சிகைகளில் வெளிவந்திருக்கின்றன. அ.ந.க.வின் கவிதைகள் வெளிவந்த பத்திரிகைகள், சஞ்சிகைகள் மற்றும்

அவர் பங்கு பற்றிய கவியரங்குகள் பற்றிய விரிவான ஆய்வொன்று மேற்கொள்ளப்படவேண்டியதவசியம்.

மரபுக் கவிதை எழுதுவதில் மிகுந்த பாண்டித்தியம் மிக்கவர் அ.ந.க. ஆனால் இவரது மரபுக்கவிதைகள் ஏனைய பண்டிதர்களின் மரபுக்கவிதைகளைப் போன்றவையல்ல. துள்ளு தமிழ் கொஞ்சுபவை. அன்றொருநாள் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த வள்ளிப்பிள்ளை என்பவரின் பிரேதத்தை நகரசபைக்குச் சொந்தமான வில்லூ ன்றிமயானத்தில் புதைப்பதற்காகத் தலைமை தாங்கிச் சென்ற ஆரியகுளத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி என்பவர் சாதி வெறியர்களால் கொல்லப்பட்ட நிகழ்வை இவரது “வில்லூன்றி மயானம்” என்னும் கவிதை சாடுகிறது. இச்சம்பவம் நிகழ்ந்த காலத்தில் ஏனைய கவிஞர்கள், எழுத்தாளர்களெல்லாம் அதனை விமர்சிக்கப் பயந்திருந்த நிலையில் அறிஞர் அ.ந.க அதனை வன்மையாகக் கண்டித்தார். தீண்டாமைக்கெதிராக வெடித்திட்ட புரட்சித்தீயாக அதனைக் கண்டார்.

“சிறுகதையைப் போலவே, கவிதைத் துறையிலும் இவர் வெற்றியீட்டினார். எதிர்காலச் சித்தன் பாட்டு, துறவியும் குஷ்டரோகியும், சத்திய தரிசனம் என்பன சிறந்தவை” என்பார் எழுத்தாளர் செம்பியன் செல்வன். இவரது ஆரம்பக் கவிதைகளிலொன்றான சிந்தனையும், மின்னொளியும் நல்லதொரு கவிதை. ஈழத்துச் சாகித்திய அமைப்பின் இலக்கிய நிகழ்வொன்றில் பாடப்பட்ட இவரது “கடவுள் என்சோரநாயகன்” என்ற கவிதையைக் கேட்ட, தென் புலோலியூர் மு.கணபதிப்பிள்ளை “ஒரு நூற்றாண்டிற்கு ஒருமுறைதான் இப்படிப் பட்ட நல்ல கவிதை தோன்றும்” என்று கூறியதாக அநதனி ஜீவா, செம்பியன் செல்வன் போன்ற பல எழுத்தாளர்கள் தமது கட்டுரைகளில், ஆய்வு நூல்களில் பதிவு செய்துள்ளார்கள். எழுத்தாளர் காவலூர் ராஜதுரையும் அ.ந.க.பற்றியத் தினகரனில் எழுதிய கட்டுரையில் “சாகித்திய மண்டலத்தின் பா ஓதல் கவி அரங்கிலும் கந்தசாமியின் குரல் ஒலித்தது. கடவுள் என் சோர நாயகன் என்னும் தலைப்பில் அவர் ஓதிய பா, அவரே குறிப்பிட்டதுபோல, தமிழுக்கே புதியது. நாயகனாகவும், நாயகியாகவும், குழந்தையாகவும் மற்றும் பலவாறாகவும் கடவுளைத் தமிழ்க் கவிஞர் பலர் பாவித்திருக்கின்றார்கள். ஆனால் எவராவது சோர நாயகனாகப் பாவித்ததிண்டோ? என்றார் கந்தசாமி” என்று குறிப்பிட்டுள்ளார். இவையெல்லாம் அ.ந.க ஈழத்துக் கவிதையுலகில் தவிர்க்கப்படாத முக்கிய படைப்பாளியென்பதை உறுதி செய்யும்.

இவரது ஆரம்ப காலத்துக் கவிதைகளிலொன்றான , ஈழகேசரியில் வெளிவந்த, “சிந்தனையும், மின்னொளியும்” என்ற கவிதை முக்கியமான கவிதைகளிலொன்று. “அர்த்த இராத்திரியில் கொட்டுமிடித் தாளத்துடனும், மின்னலுடனும் பெய்யும் மழையைப் பற்றிப் பாடப்படும் இக்கவிதையில், அந்த இயறகை நிகழ்வு கூடக் கவிஞரிடம் சிந்தனையோட்டமொன்றினை ஏற்படுத்தி விடுகின்றது. கணப்பொழுதில் தோன்றி அழியும் மின்னல் கூட ஒரு சேதியைக் கூறிவிடுகிறது. அது என்ன?

ஈழத்துச் சாகித்திய அமைப்பின் இலக்கிய நிகழ்வொன்றில் பாடப்பட்ட இவரது “கடவுள் என்சோரநாயகன்” என்ற கவிதையைக் கேட்ட, தென் புலோலியூர் மு.கணபதிப்பிள்ளை “ஒரு நூற்றாண்டிற்கு ஒருமுறைதான் இப்படிப் பட்ட நல்ல கவிதை தோன்றும்” என்று கூறியதாக அநதனி ஜீவா, செம்பியன் செல்வன் போன்ற பல எழுத்தாளர்கள் தமது கட்டுரைகளில், ஆய்வு நூல்களில் பதிவு செய்துள்ளார்கள்.

எழுத்தாளர் காவலூர் ராஜதுரையும் அ.ந.க.பற்றியத் தினகரனில் எழுதிய கட்டுரையில் “சாகித்திய மண்டலத்தின் பா ஓதல் கவி அரங்கிலும் கந்தசாமியின் குரல் ஒலித்தது. கடவுள் என் சோர நாயகன் என்னும் தலைப்பில் அவர் ஓதிய பா, அவரே குறிப்பிட்டதுபோல, தமிழுக்கே புதியது. நாயகனாகவும், நாயகியாகவும், குழந்தையாகவும் மற்றும் பலவாறாகவும் கடவுளைத் தமிழ்க் கவிஞர் பலர் பாவித்திருக்கின்றார்கள். ஆனால் எவராவது சோர நாயகனாகப் பாவித்ததிண்டோ? என்றார் கந்தசாமி” என்று குறிப்பிட்டுள்ளார்.



இடமிருந்து வலமாக- மதமாற்றம் இயக்குனர்லடீஸ் வீரமணி, அ.ந.க, தயாரிப்பாளர் காவலூர் இராசதுரை

கொட்டுமிடித்தாளம் இசைய நடம் செய்யும்
மட்டற்ற பேரழகு வான்வனிதை போல் மின்னல்
தோன்றி மறைந்ததுவே சிந்தனையின் தரங்கங்கள்
ஊன்றியெழுந்தன இவ் வொளிமின்னல் செயல்
என்னே?
வாழ்வோ கணநேரம் கணநேரம் தானுமுண்டோ?
சாவும் பிறப்புமக் கணநேரத் தடங்குமன்றோ?
ஜனனப் படுக்கையிலே ஏழைமின்னல் தன்னுடைய
மரணத்தைக் கண்டு துடிதுடித்து மடிகின்ற
சேதி புதினமன்று....

இவ்விதமாகக் கணப்பொழுதில் தோன்றி மறையும் மின்னல் கூறும் சேதிதானென்ன? அதன் சோதிதான் அதன் சேதி. சிறுகணமே வாழ்ந்தாலும் அம்மின்னல் உலகிற்கு ஒளி வழங்குவதன் மூலம் நல்லதொரு சேவையைச் செய்து விட்டுத்தான் ஓடி மறைகிறது. மனித வாழ்வும் இத்தகைய மின்னலைப் போன்றுதான் விளங்க வேண்டும். இதுதான் மண்ணின் மக்களுக்கு கணப்பொழுதில் தோன்றி மறையும் மின்னல் சொல்லும் சேதி. இதுதான் கவிஞரிடத்தில் அவ்வியற்கை நிகழ்வு தூண்டிவிட்ட சிந்தனையின் தரங்கங்கள்.

....அச் சேதியிலே நான் காணும்
சோதி கொளுத்திச் சோபிதத்தைச் செய்துவிட்டு
ஓடி மறைகிறது. வாழும் சிறு கணத்தில்
தேடி ஒரு சேவை செகத்திற்குச் செய்ததுவே!
சேவையதன் மூச்சு அச்சேவை யிழந்தவுடன்
ஆவிபிரிந்து அகல்வானில் கலந்ததுவே!
என்னே இம் மின்னல(து) எழிலே வென்றிருந்தேன்.
மண்ணின் மக்களுக்கு மின்னல் ஒரு சேதி
சொல்லும்.
வாழும்சிறு கணத்தில் வைய மெலாம் ஒளிதரவே
நாளும் முயற்சி செய்யும் நல்லசெயல் அதுவாகும்.

மேற்படி சிந்தனையும் மின்னொளியும்

என்னும் அ.ந.க.வின் ஆரம்பகாலக் கவிதை அ.ந.கவிற்கு மிகவும் பிடித்ததொரு கவிதை. மேற்படி மின்னலைப் போலவே தோன்றி குறுகிய காலமே வாழ்ந்து ஒளி வீசி மறைந்தவர் அ.ந.க. மின்னல் கூறிய பாடத்தினையே பின்பற்றி வாழ்ந்தவர் அவரென்பதை அவரது தேசாபிமானி பத்திரிகையில் வெளிவந்த கட்டுரையான நான் ஏன் எழுதுகிறேன்? என்னும் கட்டுரை புலப்படுத்துகிறது. (வ.ந.கிரிதரனை இதழாசிரியராக கொண்டு வெளிவந்த மொறட்டுவைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கத்தினரின் நுட்பம் (1981) வருடாந்தச் சஞ்சிகையிலும் இக்கட்டுரை மீள்பிரசுரம் செய்யப் பட்டிருக்கின்றது.

ஜோர்ஜ் இ.குருஷேவை ஆசிரியராகக் கொண்டு வெளியான தாயகம் பத்திரிகையிலும் மேற்படி அ.ந.க.வின் கட்டுரை மீள்பிரசுரமாகியுள்ளதுஸ அக்க்ட்டுரையில் மேற்படி தனது ஆரம்பகாலக் கவிதையினைக் குறிப்பிடும் அ.ந.க. மேலும் தொடர்ந்து கூறுவார்:

....இம்மின்னல் எனக்குணர்த்தும் செய்தி என்ன? சில நாட்களே நீ இவ்வுலகில் வாழ்ந்தாலும் மக்களுக்கும், உலகுக்கும் பயனுள்ளவனாக வாழ். இன்று நீ இருக்கிறாய். நாளை இறந்து விடலாம். ஆகவே நன்றே செய்க. அதையும் இன்றே செய்க. இது தான் மின்னல் சொல்லித் தரும் பாடம். இருளை விரட்டி ஒளியைப் பரப்பும் மின்னல் சமுதாயத்தில் சூழ்ந்துள்ள மடமை, வறுமை முதலான இருள்களை நீக்கி, அறிவையும் ஆனந்தத்தையும் பரப்பும்படி எனக்குப் பணித்தது. வாழ்க்கையையே இதற்காக அர்ப்பணிக்கவேண்டும் என்ற ஆசை மேலிட்ட நான் என் எழுத்தையும் அத்துறைக்கே பயன்படுத்த வேண்டும் என்று நினைத்ததில் வியப்பில்லை அல்லவா?...

இதன் மூலம் அ.ந.கவின் ஆரம்பகாலக் கவிதையான சிந்தனையும், மின்னொளியும் கவிதை அவரது எதிர்கால இலக்கிய வாழ்வின் அடித்தளமாக, உந்து சக்தியாக விளங்குவதைக் காணமுடிகிறது. அவரது படைப்புகள் எல்லாமே மேற்படி அவரது இலட்சிய வேட்கையைப் புலப்படுத்துவனவாகவேயிருக்கின்றன.

சாகாத இலக்கியத்தின் சரித்திர நாயகன் என்னும் தினகரனில் வெளிவந்த தொடர்கட்டுரையில் எழுத்தாளர் அநதனி ஜீவா அ.ந.க. ஆரம்பகாலத்தில் கவீந்திரன் என்னும் பெயரில் நிறைய எழுதியிருப்பதாகக் குறிப்பிடுவார். தேசபக்தன் பத்திரிகையில் கசையடிக் கவிராயர் என்னும் பெயரில் அ.ந.க இலக்கிய உலகின் மோசடிகளைச் சாடிக் கவிதைகள் பல எழுதியுள்ளதாகவும் மேற்படி அந்தனி ஜீவாவின் கட்டுரை தெரிவிக்கின்றது.

தேயிலைத் தோட்டத்திலே என்ற இவரது கவிதை பாரதி சஞ்சிகையில் கவீந்திரன் என்னும் புனைபெயரில் வெளிவந்தது. காலையில் விழித்தெழுந்து, குழந்தைக்குப் பாலூட்டி விட்டு, அக்குழந்தை பற்றிய எதிர்காலக் கனவுகளில் மூழ்கி, பழையதை உண்டுவிட்டு, மூங்கிற் கூடையினை முதுகினில் மாட்டிவிட்டு வேலைக்குச் செல்லும் தோட்டத் தொழிலாளப் பெண்ணொருத்தியைப் பற்றிப் பாடும் கவிதையிது.

பானையிலே தண்ணீரில இட்டிருநத
பழயதனை எடுத்தே உண்டுமிஞ்ச
மானைநிகர் கண்ணாள் தன் மணவாளர்க்கு
மற்றதனை வைத்துவிட்டு விரைந்து சென்று
கானகத்து மூங்கிலிலே வேய்ந்த கூடை
கழுத்தினிலே பின்புறமாய்த் தொங்கவிட்டு
தானெழுந்து விரைவாள் தன் வேலைக்காடு!
தன் கண்ணின் ஓரத்தைத் துடைத்துக்கொள்வாள்!

இது போல் இன்னுமொரு கவிதையான முன்னேற்றச் சேனை (மேற்படி இரு கவிதைகளும் பாரதி என்னும் சஞ்சிகையில் வெளிவந்தவை) மூடத்தனம் யாவு நிர் மூலமாகி வீழ்ந்திட , மங்கி நிற்கும் பாசிசத்தை மண்ணிடத்தே புதைத்திடப் புறப்பட்ட முன்னேற்றச் சேனை பற்றிப் பாடும்.

அ.ந.க.வின் எதிர்காலச் சித்தன் பாட்டு தேன்மொழி கவிதை சஞ்சிகையின் முதலாவது இதழில் (புரட்டாசி 1955) வெளியான கவிதை. நிகழ்கால மனிதன் எதிர்கால மனிதனின் இருப்பிடத்துக்குக் காலம் தாண்டிச் சென்று, சந்தித்து, உரையாடி மீண்டு வருவதைக் கூறும் கவிதை. நிகழ்கால மனிதனொருவன் காலத்தைத் தாண்டி எதிர்காலச் சித்தன் வாழும் உலகிற்கு வந்துவிடுகின்றான். நாடு, மதம், மொழி, இனம், ஏழை, பணக்காரன், சாதியென்று பிளவுண்டு, போர்களினால் சூழப்பட்டிருக்கும் நிகழ்கால உலகிற்கு எதிராகப் பிரிவினைகளற்ற, பேதங்களற்ற மனிதர்களென்றவொருநீதியில் அன்புடன் வாழும் சமுதாயமொன்றில் வாழும் எதிர்காலச்சித்தனொருவனின் உலகினைச் சித்திரிக்கும் கவிதையிது. அருமையான கவிதை. எதிர்காலச் சித்தனிற்கும், நிகழ்கால மனிதனுக்குமிடையில் நிகழும் உரையாடலாக அமைந்துள்ள நீண்ட கவிதை.

அரசெல்லாம் ஒழிந்துலகில் ஓரரசே யுண்டாம்
அறங்கூறும் ஒருமதமே உலகெல்லாம் ஆகும்
விரசமொடு விகற்பங்கள் வளர்க்குமொழி எல்லாம்
வீழ்ந்துவிடும் ஒருமொழியே அவ்வுலகில் உண்டாம்
சரசமொடு உலகத்து மககளெல்லாம் தம்மைச்
சமானர்கள் மனிதகுலம் என்ற இன மென்பார்
அரசர்கள் ஏழைபணக்காரனென்ற பேதம்
அத்தனையும் ஒழிந்து விடும் எதிர்கால உலகில்.

என்று எதிர்காலச் சித்தன் கூறுவான்.

அத்துடன் அச்சித்தன் வாழும் புதுயுகத்தில் மானிடர்கள் இனம், மதம், நாடு போன்ற எல்லைகளைக் கடந்து மனிதர்களென்ற ஓரினமாகவும், ஒரே மொழிபேசுபவர்களாகவும் விளங்குவர். அவ்வெதிர்காலச் சித்தன் வாழும் உலகு காலம் தாண்டிச் சென்ற நிகழ்கால மனிதனுக்கு மிகுந்த உவகையினைக் கொடுத்தது. அதன் விளைவாக அவன் எதிர்காலச் சித்தனைப் பார்த்து,

எதிர்காலச் சித்தா உன் இனியமொழி கேட்டேன்.
எண்ணங்கள் விரிவடையும் என்னுடன் நீவந்து
மதி கெட்டார் வாழ்கின்ற வையகத்தில் புதிய
வாழ்வேற்றிச்செல்வாயோ.? என்றிறைஞ்சி நிற்கிறான்.

அதனைக் கேட்டதும் எதிர்காலச்சித்தனின் இதழ்களிலே குஞ்சிரிப்பொன்று பிறக்கின்றது. அச்சிரிப்பினூடு காலத்தின் கடல்தாவி நீ இங்கு வந்த காரணத்தால் ஏதறிவு என்பதை நீ கண்டாய். ஆனால் உன்னுலகில் நிகழ்கால மயக்கத்தில் வாழ்வோர் இந்த ஞானத்தினைக் காண்பாரோ? இல்லை. இத்தகையதொரு நிலையில் காலத்தை நான் தாண்டிக் காசினிக்கு வந்தால் விடத்தைத் தந்து சோக்கிரதரைக் கொண்ட உன் சோதரர்கள் கட்டாயம் என்னை ஏற்றி மிதித்திடுவார்கள் என்கின்றான். அதனால் நிகழ்கால மனிதா! நான் அங்கு வரேன். நீ போவாய் என்கின்றான். எனவே ஏமாற்றத்துடன் மீண்டும் நிகழ்கால உலகிற்கே நிகழ்கால மானுடன் திரும்புகின்றான். திரும்பியவனை நடைபெறும் மடைமைப் போர்களும், நடம் புரியும் தீதுகளும் திடுக்கிட வைக்கின்றன. என்றிவர்கள்

உண்மை காண்பாரோ? என ஏக்கமுற வைக்கின்றன. அதனையே கவிஞர் பின்வருமாறு கூறுவார்:

புதுயுகத்தின் குரல்போல் எதிர்காலச் சித்தன் புகன்றமொழி கேட்டபின்னர் யானவனைப் பார்த்து
எதிர்காலச் சித்தா உன் இனியமொழி கேட்டேன். எண்ணங்கள் விரிவடையும் என்னுடன் நீவந்து மதி கெட்டார் வாழ்கின்ற வையகத்தில் புதிய வாழ்வேற்றிச்செல்வாயோ என்றிறைஞ்சி நிற்க மெதுவாகச் செவ்விதழ்கள் திறந்ததையுமங்கே மென்னிலவுக் குஞ்சிரிப்புப் பிறந்ததையும் கண்டேன்.

காலத்தின் கடல் தாவி நீங்கு வந்த
காரணத்தால் ஏதறிவு என்பதை நீ கண்டாய்
ஞாலத்தில் நிகழ்கால மயக்கத்தி லுள்ளோர்.
ஞானத்தைக் காண்பாரோ? காணார்களப்பா
காலத்தை யான்தாண்டிக் காசினிக்கு வந்தால்
கட்டாயம் ஏனையவர்கள் ஏற்றிமிதித்திடுவார்
ஆலத்தைத் தந்தன்று சோக்கிரதரைக் கொன்ற
அன்பர்களுன் மனிதச் சோதரர்களன்றோ?

ஆதலினால் நிகழ்கால மனிதா அங்கு
யான்வரேன் நீபோவாய் என்றான் ஐயன்
காதலினால் கால்களென்னும் கமலம் தொட்டுக்
கண்ணொற்றி விடைபெற்றேன் திரை நீங்கிற்று.
பாதகர்கள் முழுமடைமைப் போர்கள் சூழும்
பாருக்கு நிகழ்காலம் வந்தேன் எங்கும்
தீதுகளே நடம்புரியும் நிலைமை கண்டு
திடுக்கிட்டேன் என்றிவர்கள் உண்மைகாண்டல்?

மேற்படி கவிதையினை நவீனத்தமிழ்க் கவிதையுலகில் வெளிவந்த முதலாவது விஞ்ஞானக் கவிதையெனக் குறிப்பிடலாமா? ஆய்வாளர்கள்தான் பதிலிறுக்க வேண்டும். ஆயினும் நான் அவ்விதம்தான் கருதுவேன். மேற்படி எதிர்காலச் சித்தன் கவிதை நிகழ்கால மனிதன் காலம் கடந்து செல்வதை மட்டும் குறிக்கவில்லை. அ.ந.க கண்ட இலட்சிய உலகினையும், கனவினையும் கூடவே வெளிப்படுத்தி நிற்கின்றது. நவீனத்தமிழ்க் கவிதையுலகில் குறிப்பிடத்தக்க முக்கியமான கவிதைகளிலொன்றாக இதனை நான் இனங்காணுகின்றேன். அ.ந.க.வையே மேற்படி கவிதையில் வரும் எதிர்காலச்சித்தனாகவும் நான் உணருகின்றேன். அவரது உள்ளத்தில் கனன்று கொண்டிருந்த இலட்சியக் கனவின் வடிவமாகவே எதிர்காலச் சித்தன் விளங்குகின்றான். அத்துடன் அ.ந.க.வின் சிந்தனைத் தெளிவினையும், கவி புனையும் ஆற்றலையும் கூட மேற்படி கவிதை விளக்கி நிற்கின்றது.

அ.ந.கந்தசாமி அவ்வப்போது கவியரங்கங்களிலும் பங்குபற்றித் தலைமை வகித்துள்ளார் கவிதைகள் பாடியிருக்கின்றார். இவ்விதமாக அவர் பங்குபற்றிய கவிதையரங்கொன்றுதான் வேலணையூர்த் தொல்காவிய மன்றில் நடைபெற்ற தமிழ்மறை விழாக் கவியரங்கு. தமிழ் மறையாம் திருக்குறளினை வழங்கிய வள்ளுவர் பற்றிய நீண்ட கவிதை தமிழ்க் கவிதையுலகில் திருவள்ளுவர் பற்றி வெளிவந்த அற்புதமான கவிதைகளில் நானறிந்த வரையில் முதன்மையானது. மேற்படி கவிதை வள்ளுவரின் சிறப்பினையும், கூடவே அ.ந.க அவர்மேல் வைத்திருந்த அபிமானத்தையும் புலப்படுத்தி நிற்கும். அத்துடன் அழகாகச் சொற்களை அடுக்கிச் சிந்தனையைத் தூண்டும் வகையில், மனதினை ஈர்க்கும் வகையில் கவிபுனையும் அ.ந.க.வின் ஆற்றலுக்கு எடுத்துக்காட்டாகவும் விளங்குகின்றது.

மதங்களை அடிப்படையாக புலவர்கள் கொள்ளுமொரு காலகட்டத்தில் வள்ளுவரோ மன்னுலக வாழ்வை மட்டுமே அடிப்படையாகக் கொள்கின்றார். மற்றவரோ வீடென்றும், மோட்சமென்றும் புனைய வள்ளுவரோ இல்வாழ்வுக்குரிய அறம், பொருள், இன்பம் பற்றி உரைத்திடுகின்றார்.

இவ்விதம் கூறும் அ.ந.க
இது நல்ல மாற்றமென இங்கெடுத்துச் சொல்வோம்.
இவர் குறளைக் கையேந்தி இவ்வுலகை வெல்வோம் என்கின்றார்.

அத்துடன் வறுமையினை ஒழித்திடுதல் வேண்டுமெனும் நெஞ்சினை வள்ளுவனார் கொண்டிருந்தார் என்பதை
வேந்தரது அரண்சிறப்புச் சொல்லவந்தபோது
உறுபசியும் பிணிநோயும் செறுபகையும் சேரா(து)
உற்றிடுதல் ஒன்றல்ல நாடென்று கேட்டார்

என்று குறிப்பிடும் அ.ந.க மேலும்
பெரும்பசியை முதற்குற்ற மெனஎடுத்துச் சொன்னார் பெரும்புலவர் வள்ளுவனார் ஏழைகளின் தோழன்என்று விபரிக்கும் அ.ந.க மேலும் தொடர்ந்து வள்ளுவனார் வழிவந்த பாரதியார் தனி யொருவனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம் என்றார். ஆனால் வள்ளுவரோ தள்ளுவதோவாழ்க்கையினைப் பிச்சைஎடுத் திங்கே? அவ்விதமேல் சாய்கஅந்த ஆண்டவனும என்று பல்லாண்டுகளுக்கு முன்னர் குறிப்பிட்டதைச் சுட்டிக் காட்டுவார்:

வள்ளுவனார் வழிவந்த பாரதியார் சொன்னார் வையத்தை அழித்திடுவோம் தனிமனிதன் ஒருவன்
உள்ளநிறை வோடுண்ண உணவில்லை என்று உளம்வருந்து வானாயின் என்பதவர் பாட்டு. வள்ளுவர் தாமும்பல் லாண்டுகட்கு முன்னர் வழுத்தினார் இதன் பொருளை ஆவேசத்தோடு தள்ளுவதோ வாழ்க்கையினைப் பிச்சைஎடுத் திங்கே?
அவ்விதமேல் சாய்கஅந்த ஆண்டவனும் என்றார்.

இவ்விதமாக வள்ளுவரை மக்கள் கவிஞ்னாக, ஏழைகளின் தோழனாக அவனது குறட்பாக்களினூடு காணும் கவிஞர்

கலைக்காகக் கலைஎன்று கதறுபவர் உண்டு
கருத்துக்கே முதன்மை தரும் வள்ளுவனார்கண்டு
கலைஇந்தச் சமுதாய வளர்ச்சிக்கே என்று
கருத்துடையார் உணரட்டும் காசினியில் அன்று
விலையில்லாத் திருக்குறளைத் தந்திட்ட மேதை
வியனுலகில் காட்டுகின்றார் பாதையதே பாதை.
கலைஞர்களே எழுந்திடுங்கள் வள்ளுவனார் காட்டும்
கவினுடைய பாதையிலே பேனாவை ஓட்டும்

என்று மேலும் பாடி, வள்ளுவரை கருத்துக்கு முக்கியம் தரும் கலை படைக்குமொரு சமுதாயச் சிந்தனை மிக்க படைப்பாளியாகச் சித்திரிப்பார். கலை கலைக்காக என்று கருதுபவர்கள் கலை இந்தச் சமுதாய வளர்ச்சிக்கே என்று வள்ளுவரைப் பார்த்து உணரட்டுமென்கின்றார். அவர் காட்டும் பாதையிலே பேனாவை ஓட்டட்டுமென்கின்றார். மக்களுக்காக இலக்கியம் படைப்பதையே தனது இலட்சியமாகக் கொண்டு செயலாற்றிவந்த அ.ந.க. வள்ளுவரையும் அத்தகையதொரு கோணத்திலேயே அவனது குறட்பாக்களினூட் இனம் காண்கின்றார். மக்களுக்காக இலக்கியம் படைத்த் படைப்பாளியாகவே இனங்காண்கின்றார். அதனால்தான்

நெசவுசெயும் தொழிலாளி நேர்மையுள நெஞ்சன் செய்திட்ட நிறைநூ லில் பெய்திட்ட எண்ணம் இசைவுடனே காலத்தை வென்றிங்கு வாழும்! எல்லைகளைக் கடந்திங்கு உலகெல்லாம் சூழும் என்கின்றார்.

அ.ந.க. வை வள்ளுவரைப் போல் மகாதமா காந்தியின் மனைவி அன்னை கஸ்தூரிபாயும் மிகவும் கவர்ந்தவர். அவரது மறைவையொட்டி அவர் எழுதிய அன்னையார் பிரிவு என்னும் ஈழகேசரியில் வெளியான நினைவுக் கவிதையொன்றே அதற்குச் சான்று. அதிலவர் அன்னை பற்றி

ஒப்பரிய காந்தியரி னொப்பில்லாத
ஓர்மனைவி செம்மையறங் காத்த சீர்மைச்
செப்பரிய பெரும்புகழாள் தேய மெல்லாம்
தாயெனவே செப்பிடுமோர் இல்லின் தெய்வம்

எனவும்

சீதையும் சாவித்திரியாம் தேவி மற்றும்
சிறப்புள்ள நளாயினி என்போரெல்லாம்
காதையிலே உலாவுகின்ற கன்னியர்கள்
கடுகேனும் உண்மையங்கு இல்லை யென்று
ஓதியவர் தலைநாணச் செய்து பெண்மைப்
பெருங்குலத்தின் உயர்வுதனை நாட்டினாய்

எனவும் குறிப்பிடும் அ.ந.க, அன்னையார் இறந்த செய்தியினை மாரியினிலே பெருமழைதான் கொட்டுகின்ற காரிரவில் பல்லிடிகள் பின்னே வந்த பேரிடியாய் உணருகின்றார்.

இவ்விதமாகக் கவீந்திரனின் கவிதைகள் ஈழத்துத் தமிழ்க் கவிதையுலகில் முக்கியமான படைப்புகளாக விளங்கி நிற்கின்றன. அ.ந.க. வின் கவிதைகள் எல்லாமே போர்ச்சுவாலைகளாகத்தான் இருந்தன என்பதற்கில்லை, அவ்வப்போது காதல் போன்ற மென்மையான மானுட உள்ளத்துணர்வுகள் பற்றியும் பாடியுள்ளார்.

## அ.ந.க.வின் நாவல், நாடக முயற்சிகள்.

அ.ந.க.வின் ஒரேயொரு நாவல் மனக்கண் தினகரனில் 1967இல் தொடராக வெளிவந்து வாசகர்கள் மத்தியில் பலத்த வரவேற்பினைப் பெற்றது. இதன காரணமாகவே பின்னர் அ.ந.க.வின் உற்ற நண்பர்களிலொருவரான சில்லையூர் செல்வராசனால் வானொலி நாடகமாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுஸ்தாபனத்தினரால் ஒலிபரப்பப் பட்டது. பதிவுகள் இணைய இதழிலும் இந்நாவல் அண்மையில் தொடராக வெளிவந்திருந்தது. இந்த நாவல் முடிந்தபொழுது அ.ந.க. தனது முடிவுரையினை நாவல் பற்றியதொரு நல்லதொரு ஆய்வுக்கட்டுரையாக வடித்துள்ளார். அதிலவர் மனக்கண் பற்றிய தனது எண்ணங்களையும் பகிர்ந்து கொண்டுள்ளார். இது தவிர அ.ந.க. தனது இறுதிக்காலத்தில் களனி வெள்ளம் என்னுமொரு நாவலினையும் தோட்டத்தொழிலாளர்களை மையமாக வைத்து எழுதிக் கொண்டிருந்ததாகவும், அவர் இறந்ததும் எழுத்தாளர் செ.கணேசலிங்கனிடமிருந்த அப்பிரதி 1983 கலவரத்தில் எரியுண்டு போனதாகவும் அறிகின்றோம். செ.கணேசலிங்கன் அ.ந.க.வின் இறுதிக் காலத்தில் அவரைப் பராமரித்தவர்களிலொருவர். அதுபற்றித் தனது குமரன் சஞ்சிகையில் அ.ந.க.வின் இறுதிக்காலம் பற்றிய தொடர் கட்டுரையொன்றினையும் எழுதியுள்ளது குறிப்பிடத் தக்கது.

மனக்கண் சுவையான, சிந்தையைக் கவரும் கதைப்பின்னல், குறை, நிறைகளுடன் யதார்த்தபூர்வமாகப் படைக்கப்பட்ட பாத்திரங்கள், நடை, ஆங்காங்கே ஆசிரியரின் புலமையினை வெளிப்படுத்தும் வகையில் பரவிக்கிடக்கும் தகவல்கள் மற்றும் நாவல் கூறும் பொருள் ஆகியவை காரணமாக வாசகர்கள் மத்தியில் தினகரனில் தொடராக வெளியானபோது மிகுந்த வரவேற்பினைப் பெற்றது. மனக்கண் தொடராக வெளியானபோது அதற்கு அழகான ஓவியங்களை வரைந்திருந்தார் ஓவியர் மூர்த்தி.

அ.ந.க. தாஜ்மகால் பற்றிய கடைசி ஆசை, அமர வாழ்வு போன்ற குறுநாடகங்கள் சில எழுதியுள்ளதாக அறிகின்றோம். ஆயினும் 1967இல் கொழும்பில் நான்கு தடவைகள் மேடையேற்றப்பட்டுப் பலத்த வாதப்பிரதிவாதங்களை ஈழத்து இலக்கிய உலகில் எழுப்பிய மதமாற்றம் என்னும் நாடகம் அவரது காத்திரமான பங்களிப்பினை என்றும் வெளிப்படுத்தி நிற்கும். இந்நாடகம் கலாநிதி கைலாசபதி அவர்களை மிகவும் கவர்ந்த நாடகங்களிலொன்று. அது பற்றி அவர் இதுவே தமிழில் இதுவரை எழுதப்பட்ட நாடகங்களில் ஆகச்சிறந்தது என்று குறிப்பிட்டுள்ளது இதனைப் புலப்படுத்தும். இது பற்றி அ.ந.கந்தசாமியே விமர்சனக் கட்டுரையொன்றினை இலங்கையிலிருந்து வெளிவந்த ராதா என்னும் பத்திரிகையில் எழுதியுள்ளார்.

அ.ந.க.வின் மதமாற்றம் நாடகத்தை இயக்கியவர் கலைஞர் லடீஸ் வீர்மணி. தயாரித்தவர் எழுத்தாளர் காவலூர் இராசதுரை. இந்நாடகம் முதலில் பேராசிரியர் கா.சிவத்தம்பியின் இயக்கத்திலும் மேடையேற்றப்பட்டிருந்ததாயினும், லடீஸ் வீரமணியின் இயக்கத்தில் வெளியானபோது மிகுந்த வரவேற்பைப் பெற்றதுடன் கொழும்பில் பல தடவைகள் மேடையேறியதென்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்நாடகம் எழுத்தாளர் கூட்டுறவுப் பதிப்பகம் மூலம் 1989இல் நூலுருப்பெற்றபோது அதற்குச் சிறப்பானதொரு அனிந்துரையினை எழுத்தாளர் செ.கணேசலிங்கன் எழுதியிருக்கின்றார்.

அதிலவர் பின்வருமாறு குறிப்பிடுவார்:

நிலப்பிரபுத்துவ சமுதாயத்தில் மேலாதிக்கம் செலுத்தும் கருத் தியல் (Ideology) மதம் என்றும் முதலாளித்துவத்தில் கல்வி என்றும் நவ மார்க்சிய அறிஞர் அல்துரசர் கூறுவார். கலை, இலக்கியத்தில் கருத்தியல்கள் உடைக்கப்பட்டு விஞ்ஞான ரீதியான சிந்த னையைக் கொணர வேண்டும் என்பதும் அன்னாரின் கோட்பாடாகும். அத்தோடு இத்தகைய போக்கு பண்டைய நாடகங்கள், இலக்கியங் களில் காணமுடியாதது அவற்றின் பயனற்ற தன்மையைக் காட்டுகிறது என்பதும் அவரது கூற்றகும். கந்தசாமி மதம் என்ற கருத்தியலை இந் நாடகத்தில் சாடி இருப்பது இந் நாடகத்தின் தனிச் சிறப்பாகும். அதுவும் நேரடியாகத் தாக்கவில்லை. பார்வையாளர் எம் மதத்தவராயினும் நகைச்சுவையுடன் நாடகத்தைப் பார்ப்பர். அதன் பின்புறத்தில் மதத்தின் பொய்மையை ஆசிரியர் உடைத்தெறிவதை சிந்தண்மூலம் அறிவர். இராமலிங்கம் என்றேர் பாத்திரத்தை ஆசிரியர் தன் பகுத்தறிவுக் கருத்துக்களையும் தருக்க நியாயங்களையும் கூறுவதற்காக நாடகத்தில் கொண்டு வந்துள்ளார். இராமலிங்கம் என்ற பாத்திரம் கந்தசாமியே. கதாநாயகன் அசல் கிறிஸ்தவன் கதாநாயகி சைவப் பழம். காதலுக்காக இருவரும் மதம் மாறுகின்றனர். மாறிய மதத்தை இறுகத் தழுவி காதலைக் கைவிடுகின்றனர். இதுவே கதையின் கருவான போதும் மதம், காதல் என்ற பொய்மைகளை கந்தசாமி சாடும் திறமை அபாரம். மதமே பொய். இருவரும் பொய்களை நம்புகிறார்கள். ஆனல் வெவ்வேறு பொய்கள் - கந்தசாமி இராமலிங்கம் என்ற பாத்திரம் மூலம் கூறுகிறார், நல்ல நாடகம் சமூக முரண்பாடுகளைக் கையாள வேண்டும். சிந்தனையில் மோதலை ஏற்படுத்துவதோடு தன்னை உணர்ந்து கொள்ள உதவ வேண்டும். நாடகம் பார்க்கும் வேளை நடிகனாக இருந்தவன் நாடகம் முடிந்ததும் புது நடிகனாக வேண்டும், வாழ்க்கையில். இந் நாடகம் மேடையில் நடிப்பதற்காக எழுதப்பட்டபோதும் படித்துச் சுவைப்பதற்குமாக அமைந்திருப்பது அதன் தனிச் சிறப்பாகும். புதிதாக நாடகம் எழுதுவோருக்கும் காட்சி அமைப்பையும் கருத்தின் ஆழத்தைக் கையாளும் முறையையும் கற்பிக்கத் தக்கதாக இந் நாடகம் உள்ளது.

எழுத்தாளர் அந்தனி ஜீவா தினகரனில் அ.ந.க. பற்றி எழுதிய சாகாத இலக்கியத்தின் சரித்திர நாயகன்

என்னும் தொடரில் எதிர்காலத்தில் ஈழத்து நாடகத்தைப் பற்றி விமர்சகர்கள் விமர்சிக்கும் பொழுது அ.ந.க.வின் மதமாற்றத்தை மைல்கல்லாக வைத்துத் தான் கணக்கிடுவார்கள் என்று குறிப்பிடுவது மிகையான கூற்றல்ல. இது பற்றிய விமர்சனக்கட்டுரையொன்றினை ஆங்கில ஏடான ட்ரிபியூனில் இலங்கையின் பிரபல இலக்கியத் திறனாய்வாளர்களிலொருவரான கே.எஸ். சிவகுமாரனும் எழுதியிருக்கின்றார். மேற்படி அ.ந.க.வின் நாடகத்தைப் பற்றிய தனது டெய்லி மிரர விமர்சனத்தில் விமர்சகர் அர்ஜுனா அ.ந.க.வின் நாடகத் திறமையினை ஆங்கில அறிஞர் பெர்னாட்ஷாவோடு ஒப்பிட்டு விமர்சித்திருப்பது அ.ந.க.வின் நாடகப் புலமையினை வெளிப்படுத்தும்.

### அ.ந.கவும் உளவியலும்

வெற்றியின் இரகசியங்கள் என்ற அ.ந.கந்தசாமியின் உளவியல் நூலினைப் பாரி பதிப்பகத்தினர் தமிழகத்தில் வெளியிட்டுள்ளனர். மேற்படி நூலில் பல்வேறு உளவியற் கோடுபாடுகள் பற்றியெல்லாம், அவற்றை வாழ்வின் வெற்றிக்கு எவ்வகையில் பாவிக்கலாம் என்பது பற்றியெல்லாம் தனக்கேயுரிய துள்ளுதமிழ் நடையில் அ.ந.க. விபரித்திருப்பார். எம்.எஸ்.உதயமூர்த்தி போன்றவர்கள் தமிழில் இத்தகைய வாழ்வின் வெற்றிக்கான நூல்களை எழுதத்தொடங்குவதற்கு முன்னரே அ.ந.க இத்துறையில் கவனத்தைச் செலுத்தியதும் , எழுதியதும் முக்கியத்துவம் வாய்ந்தது. சிக்மண்ட் ஃபிராய்ட், கார்ல் ஜுங், அல்ஃபிரெட் அட்லர் போன்ற மேனாட்டு உளவியல் அறிஞர்கள்தம் கோட்பாடுகளையெல்லாம் சாதாரண வாசகர்களும் புரியும் வகையில் எழுதப்பட்டுள்ள நல்லதொரு நூல் வெற்றியின் இரகசியங்கள்.

### அ.ந.க.வின் மொழிபெயர்ப்பு முயற்சிகள் மற்றும் இதழாசிரியப் பங்களிப்புகள்..

1943 இலிருந்து 1953 வரை இலங்கைத் தகவற் திணைக்களத்தில் மொழிபெயர்ப்பாளராகப் பணிபுரிந்தார். அச்சமயம் பல ஆங்கில நூல்களைப் பணிநிமித்தம் மொழிபெயர்த்துள்ளார். (அந்தனி ஜீவா தனது சாகாத இலக்கியத்தின் சரித்திர நாயகன் என்னும் கட்டுரையில் அ.ந.க இலங்கை அரச தகவற் துறையில் 12, 13 வருடங்கள் பணியாற்றி ஓய்வு பெற்றதாகக் குறிப்பிடுவார். தகவற்துறையில் பணிபுரிந்த் காலகட்டத்தில் தகவற்துறையினால் வெளியிடப்பட்ட ஸ்ரீலங்கா இதழாசிரியராகவும் அ.ந.க.வே விளங்கினார்). அதன் பின்னர் தோட்டத் தொழிலாளர் சங்கத்தில் முழுநேர ஊழியராகப் பணியாற்றினார். தனியார் நிறுவனங்களுக்கு ஆங்கில நூல்களை மொழிபெயர்க்கும் பணியினையும் செய்து வந்தார். ஒப்சேவரில் புருவ் ரீடராகவும் சில காலம் வேலை பார்த்துள்ளார். வீரகேசரி ஆசிரியர் குழுவில் பணியாற்றியுள்ளார். கம்யூனிஸ்ட் கட்சியின் முழுநேர ஊழியராக விளங்கிய அ.ந.க தேசாபிமானி பத்திரிகையின் ஆரம்பகால ஆசிரியர்களில் ஒருவர். பின்னர் அக்கட்சியிலிருந்து வெளியேறினார். அக்காலகட்டத்தில் சுதந்திரன் பத்திரிகையில் சேர்ந்து அதன் ஆசிரியராகச் சிறிது காலம் பணியாற்றினார். ஆங்கிலப் பத்திரிகையான டிரிபியூனில் சிலகாலம் பணியாற்றினார். அச்சமயம் நிறைய திருக்குறள் பற்றிய ஆங்கில ஆய்வுக் கட்டுரைகளை எழுதினார்.

எமிலிசோலாவின் நாவலான நானாவைச் சுதந்திரனில் மொழிபெயர்த்து அ.ந.க. வெளியிட்டபோது அது பெரும் வாதப்பிரதிவாதங்களைக் கிளப்பியதை சுதந்திரனில் பிரசுரிக்கப்பட்டுள்ள கடிதங்களிலிருந்து அறியமுடிகின்றது. அ.ந.க.வின் மொழிபெயர்ப்பில் எமிலி சோலாவின் நானா சுதந்திரனில் 21-10-51தொடக்கம் -28-8-1952 வரையில் மொத்தம் 19 அத்தியாயங்கள் வெளிவந்துள்ளன. முதலாவது அத்தியாயம் முதலிரவு என்னும் தலைப்பிலும், பத்தொன்பதாவது அத்தியாயம் போலிஸ் என்னும் தலைப்பிலும் வெளிவந்துள்ளன. பத்தொன்பதாவது அத்தியாயம், தொடரும் அல்லது முற்றும் என்பவையின்றி, ஓசையின்றி முடிந்துள்ளதைப் பார்க்கும்போது நானாநாவல் அத்துடன் முடிவு பெற்றுள்ளதா அல்லது நடுவழியில் வாதப்பிரதிவாதங்கள் காரணமாக நிறுத்தப்பட்டுள்ளதா என்பதை மூல நூல் பார்த்துத்தான், நாவலை வாசித்துப் பார்த்துத்தான் முடிவு செய்யவேண்டும்.

நாவல் வெளிவந்தபோது வெளிவந்த வாசகர் கடிதங்களிலிருந்து பெரும்பாலான வாசகர்களை நானா அடிமையாக்கி விட்டாளென்றுதான் தெரிகின்றது. எதிர்த்தவர்கள் கூட அ.ந.க.வின் மொழிபெயர்ப்பினைப் பெரிதும் பாராட்டியிருப்பதையும் அவதானிக்க முடிகிறது. நாவலை அ.ந.க தனக்கேயுரிய அந்தத் துள்ளுதமிழ் நடையில் மொழிபெயர்த்துள்ளார்.

நாவல் காரணமாகச் சுதந்திரனின் விற்பனை அதிகரித்துள்ளதையும், நானாவை வாசிப்பதில் வாசகர்களுக்கேற்பட்ட போட்டி நானா வெளிவந்த சுதந்திரனின் பக்கங்களைக் களவாடுவதில் முடிந்துள்ளதையும் அறிய முடிகிறது. மூத்த எழுத்தாளர் டொமினிக் ஜீவா நானா பற்றி சுதந்திரனுக்கு எழுதிய வாசகர் கடிதமொன்றில் நானா கதை சுதந்திரனில் வெளிவரத் தொடங்கிய பின்பு மார்க்கெட்டில் சுதந்திரன் பத்திரிகைக்கே தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. பலர் கடைகளுக்குச் சென்று பத்திரிகை கிடைக்காமல் வெறுங்கையுடன் திரும்பிச் சென்றுள்ளதை நான் கண்ணாரக் கண்டேன். அதனால் பலர் சேர்ந்து ஒரு பத்திரிகையை வாசிக்க வேண்டிய நிர்ப்பந்தமும் ஏறபட்டுள்ளது. தமிழாக்கம் அபாரம் என்று தனது கருத்தினைப் பதிவு செய்திருக்கின்றார். இலங்கையிலிருந்தும் மட்டுமல்ல தமிழகத்திலிருந்தும் பலர் நானா பற்றிய தமது எண்ணங்களைப் பகிர்ந்து கொண்டிருக்கின்றார்கள். இதுபோல் பண்டிதர் திருமலைராயர் என்னும் பெயரில் அ.ந.கந்தசாமி எழுதிய கண்ணகி பாத்திரம் பெண்மையின் சிறப்பைக் காட்டுகிறதா? பெண்ணடிமையின் சிகரம் என்பதே சாலப் பொருந்தும் என்னும் கட்டுரையும் பலத்த வாதப்பிரதிவாதங்களைக் கிளப்பி விட்டுள்ளதை அன்றைய சுதந்திரன் இதழின் பக்கங்கள் நமக்குத் தெரிவிக்கின்றன.

### அ.ந.க. என்றொரு விமர்சகர்.

சிறுகதை, கவிதைகள், நாடகம், நாவல், மொழிபெயர்ப்பு என்றெல்லாம் எழுத்தில் கால் பதித்த அ.ந.க. பல்வேறு அரிய இலக்கியக் கட்டுரைகளை, விமர்சனக் கட்டுரைகளை, நூல் மதிப்புரைகள் மற்றும் சினிமா பற்றிய விமர்சனக் கட்டுரைகள்,தேசிய இலக்கியம், கவிதை, நாடகத் தமிழ், சிலப்பதிகாரம் என்றெல்லாம் பல்வேறு விடயங்கள் பற்றி எழுதிய படைப்புகள் பல்வேறு சிற்றிதழ்கள், பத்திரிகைகளிலெல்லாம் வெளிவந்திருக்கின்றன. வெண்பா பற்றிய தொடர் கட்டுரைகளை வீரகேசரியில் எழுதியுள்ளதாகவும் அறிகின்றோம். இதனால் அ.ந.க.வை

ஈழத்துத் தமிழ் இலக்கியத்தின் முக்கிய விமர்சகர்களிலொருவராகவும் ஆய்வாளர்கள் பலர் குறிப்பிட்டுள்ளனர்.

பண்டிதர் திருமலைராயர் என்னும் பெயரில் இவர் சுதந்திரனில் எழுதிய சிலப்பதிகாரம் பற்றிய ஆய்வுக் கட்டுரைகள் தமிழகத்திலும், இலங்கையிலும் வாதப்பிரதிவாதங்களைக் கிளப்பின. பெரியாரின் குடியரசு பத்திரிகையிலும் இவற்றில் சில மீள்பிரசுரம் செய்யப்பட்டதாக அறியப்படுகிறது.

தமிழ் மட்டுமின்றி ஆங்கிலத்திலும் மிகுந்த புலமை பெற்ற அ.ந.க. ஆங்கிலத்திலும் சிலப்பதிகாரம், திருக்குறள், கௌடில்யரின் அர்த்தசாத்திரம் பற்றியெல்லாம் விமர்சனக் கட்டுரைகளை எழுதியுள்ளார். இவை டிரிபியூன் போன்ற ஆங்கில சஞ்சிகைகளில் வெளிவந்துள்ளதாகவும் அறியப்படுகிறது.

### அ.ந.க.வும் சிறுவர் இலக்கியமும்!

சிறுவர் இலக்கியத் துறையில் அ.ந.க தன் பால்ய காலத்தில் ஈழகேசரி மாணவர் மலரில் எழுதியுள்ளதாக அறிகின்றோம். இவையும் சேகரிக்கப்பட வேண்டுமெனக் கருதுகின்றோம். இது தவிர சங்கீதப் பிசாசு என்றொரு சிறுவர் நாவலொன்றினையும் அ.ந.க எழுதியுள்ளார். எழுபதுகளின் இறுதியில் யாழ்ப்பாணத்திலிருந்து சிரித்திரன் ஆசிரியர் சிவஞானசுந்தரத்தால் வெளியிடப்பட்ட கண்மணி என்னும் சிறுவர் சஞ்சிகையில் அந்நாவலின் சில அத்தியாயங்கள் வெளிவந்துள்ளன. பின்னர் கண்மணி நின்று விடவே அந்நாவலும் குறையுடன் நின்று விட்டது. அந்நாவல் முதன் முதலில் சிரித்திரனில் வெளிவந்ததது.

### அ.ந.க.வின் உரைநடை

அ.ந.க என்னும் கிணறினைத் தோண்டத் தோண்டப் பெருகிவரும் இலக்கிய ஊற்று எம்மைப் பெரிதும் பிரமிக்க வைக்கின்றது. அவருக்குப் பெருமை சேர்க்குமின்னுமொரு விடயம் அவரது அந்தத் துள்ளுதமிழ் உரைநடை. இது பற்றிய செம்பியன் செல்வனின் ஈழத்தமிழ்ச் சிறுகதை மணிகள் "இவரின் படைப்புக்களின் வெற்றிகளுக்கு இவரின் உரை நடையும் முக்கிய காரணம் எனலாம். எளிய வாக்கியங்களாக கருத்துக்களை வெளியிட்டார். அக் கருத்துக்களை உவமை, உருவகச் சொல்லாட்சிகளினால் அழகுபடுத்தியும், கம்பீரத் தொனியேற்றியும், எல்லாருக்கும் புரியும்வண்ணம் மக்கள் முன் வைத்தார். இப் பண்பு சிறுகதைகளில் மட்டுமல்லாது, ஆராய்ச்சிக் கட்டுரைகளிலும், கொள்கை விளக்கக் கட்டுரைகளிலும் எல்லாரையும் வசீகரிக்கும் வண்ணம் அழகழகான, ஆழமான, எளிய உவமை உருவங்களை அமைத்து எழுதுவார். சாதாரணமாக ஒரு சிறு கட்டுரையிற் கூட குறைந்தது பத்தோ பதினைந்து உவமை உருவங்களைக் காணலாம்." என்று குறிப்பிடும்.

### வானொலியில் அ.ந.க.

இலங்கை வானொலியின் கலைக்கோலம் நிகழ்ச்சியிலும் மாதந்தோறும் அ.ந.க.வின் விமரிசனங்கள், உலக நாடகாசிரியர்கள் பற்றிய அறிமுகவுரைகள் ஒலிபரப்பப்பட்டதாகவும் அறிகின்றோம். அவரது இறுதிப் படைப்பாக மொழிபெயர்ப்பு நாடகமொன்று ஒலி பரப்பப்பட்டதாகவும் அறிகின்றோம். அ.ந.க.வின் வானொலி முயற்சிகளைப் பற்றி இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்திலும் இவர் பற்றிய தேடலினைத் தொடர வேண்டிய தேவையினை இது வலியுறுத்தும்.

இவை தவிர பேச்சுக் கலையிலும் வல்லவர் அ.ந.க. அத்துடன் பல கவியரங்குகளிலும் பங்கு பற்றிய அன்றைய காலத்து இலக்கிய வானில் நட்சத்திரமாக மின்னியவர் அ.ந.க என்பதைத்தான் அவர் பற்றிய கட்டுரைகள், நூல்கள் தெரிவிக்கின்றன.

### செயல் வீரர் அ.ந.க!

அ.ந.க. எழுதியதுடன் மட்டும நின்று விட்டவரல்லர். செயல் வீரரும் கூட. தான் கொண்ட கொள்கைகளுக்காக இறுதி இறுதி வரையில் போராடியவர். "வீரகேசரியில் பணிபுரிந்தபோது, இவரின் கடமை, எழுத்துடன் மட்டும் நின்றுவிடாது. செயல் முறையிலும் தீவிரமடைந்தது. வீரகேசரியில் முதன் முதலாகத் தொழிற் சங்கம் ஒன்றினைத் தாபித்து தொழிலாளர் உரிமைக்காகப் பாடுபட்டவர்" என்று தனது ஈழத்துச் சிறுகதை மணிகள் நூலில் குறிப்பிடுவார் எழுத்தாளர் செம்பியன் செல்வன். இது பற்றிய அந்தனி ஜீவாவின் சாகாத இலக்கியத்தின் சரித்திரன் நாயகன் வீரகேசரி ஆசிரியர் குழுவில் பணியாற்றினார். வீரகேசரியில் பணியாற்றிய காலத்தில் அச்சகத் தொழிலாளர்கள் படும் துன்பத்தைக் கண்டு மனம் நொந்தார். அவர்களின் நலனில் அக்கறை கொண்டார். பொதுவுடைமைக் கருத்துகளில் ஊறிப்போயிருந்த அ.ந.க. அச்சகத் தொழிலாளர்களுக்காகப் போராடத் தயங்கவில்லை. அதனால் அச்சக முதலாளிகளின் வெறுப்பினைச் சம்பாதித்துக் கொண்டார். அதனால் வீரகேசரியிலிருந்து விலக்கப் பட்டார் என்று பதிவு செய்யும்.

மேற்படி கட்டுரையில் அந்தனி ஜீவா அ.ந.க.வின் மார்க்சிய ஈடுபாடு பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுவார்:

பின்பு கம்யூனிஸ்ட் கட்சி முழுநேர ஊழியரானார். கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்ப் பத்திரிகையான தேசாபிமானியின் முதலாவது ஆரம்பகால ஆசிரியர் அ.ந.கந்தசாமியே. தேசாபிமானியின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டார். அப்பத்திரிகையில் அவர் எழுதிய சிறுகதைகள், அரசியற் கட்டுரைகள் அனைவரின் கவனத்தையும் கவர்ந்தன. கம்யூனிஸ்ட கட்சியின் முழுநேர ஊழியராகக் கடமையாற்றிய காலத்தில் அ.ந.கந்தசாமி தொழிற்சங்க இயக்கங்களில் பெரும் ஈடுபாடு கொள்ளத் தொடங்கினார். மலையகத்தின் எல்பிட்டி என்னுமிடத்தில் சிலகாலம் தோட்டத் தொழிலாளர்கள் பிரதிநிதியாகக் கடமையாற்றினார். உழைப்பையே நம்பி வாழும் தோட்டத் தொழிலாளர்களின் நலனில் அக்கறை காட்டித் தீவிரமாக உழைத்தார். அவர்களின் இன்ப துன்பங்களில் பங்கு கொண்டார். அ.ந.கந்தசாமி மலைநாட்டு உழைக்கும் தொழிலாளர்கள் மீது எப்பொழுதும் பெருமதிப்பு வைத்திருந்தார். தொழிலாளர்களினுரிமைப் போராட்டத்தில் முன்னின்று உழைத்துள்ளார். அவர்களின் உரிமைக்காகத் தோட்ட நிர்வாகத்தினரிடம் நியாயம் கோரியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற பிரசித்தி பெற்ற டிராம் தொழிலாளர்களின் போராட்டம் வெற்றி பெற உழைத்தவர்களில் முக்கியமான ஒருவராக அ.ந.கந்தசாமி கணிக்கப் படுகின்றார். தொழிற்சங்க ஈடுபாடு கொண்ட காலங்களில் தொழிலாளர்களின்

வாழ்க்கை நிகழ்ச்சிகளை வைத்து அமர இலக்கியங்களைச் சிருஷ்டித்துள்ளார். கம்யூனிஸ்ட கட்சிக்குள் நடந்த போராட்டத்தின் காரணமாக அ.ந.கந்தசாமியும் அவரைச் சார்ந்த ஏழெட்டுப் பேரும் வெளியேற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

அ.ந.க.வின் இலக்கியக் கோட்பாடுகள்!

மக்கள் இலக்கியம் என்ற கருத்தும் சோஷலிஸ்ட் யதார்த்தம் என்பனவுமே என் மனதைக் கவர்ந்த இலக்கிய சித்தாந்தங்களாக விளங்குகின்றன எனத் தனது பிரசித்தி பெற்ற நான் ஏன் எழுதுகிறேன் என்னும் கட்டுரையில் குறிப்பிடும் அ.ந.க. பின்வருமாறு தான் எழுதுவதன் நோக்கம் பற்றி விபரிப்பார்:

எழுத்தாளன் வாழ்க்கையை விமர்சிப்பதுடன் நின்று விடக்கூடாது. அந்த விமர்சனத்தின் அடிப்படையில் வாசகர்களுக்கு எதிர்காலத்தில் நம்பிக்கை ஊட்டவேண்டும். அவ்வித நம்பிக்கையில்லாவிட்டால் முன்னேற்றமில்லை. வாழ்வே இல்லை. இவ்வித பிரக்ஞையில் பிறக்காமல் வெறுமனே யதார்த்தத்தை ஒரு சுத்த இலட்சியமாகக் கொண்டு எழுதும்போது நம்பிக்கைக்குப் பதில் அவநம்பிக்கையின் தொனிகளே கேட்க ஆரம்பிக்கலாம். நைந்த உள்ளத்தின் சோகக்குரலாகக் கேட்கும் எழுத்தால் பயனில்லை. நொந்த உள்ளத்தின் செயல் துணிவுகொண்ட வேகக் குரலாக அது ஒலிக்க வேண்டும். வாழ்வதற்கு நேரடியாகவோ, குறிப்பாகவோ, மௌனமாகவோ வழிகாட்டும் எழுத்தே எழுத்து. இந்தக் கருத்துகள் என்னை உந்துகின்றன. அவற்றுக்காகவே நான் எழுதுகின்றேன்.

மனிதன் சமுதாயத்தின் ஒரு அங்கம். அவனுக்கு சமுதாயப் பொறுப்பொன்று உண்டு. வெறுமனே உண்ணுவதும், உறங்குவதும், புலனுகர்ச்சிகளில் ஈடுபடுவதும் வாழ்க்கையாகாது. அறிவு வளர்ச்சி பெற்ற மனிதன் இவற்றோடு வேறு சில காரியங்களையும் செய்ய விரும்புவான். மற்றவர் முகத்தின் புன்னகை தோட்டத்தில் பூத்துக் குலுங்கும் முல்லைமலர் போல் அவனுக்கு இன்பத்தையூட்டும். இன்று நாம் வாழும் சமுதாயத்தில் நாம் புன்னகையைக் காணவில்லை. துன்பமும், துயரமும், அழுகையும், ஏக்கமும், கண்ணீரும், கபலையுமாக நாம் வாழுமுலகம் இருக்கிறது. ஏழ்மைக்கும், செல்வத்துக்கும் நடக்கும் போரும், அடிமைக்கும், ஆண்டானுக்கும் நடக்கும் போரும், உயர்சாதியானுக்கும் தாழ்ந்த சாதியானுக்கும் நடக்கும் போரும், அசுரசக்திகளுக்கும், மனித சக்திகளுக்கும் நடக்கும் போரும் இன்று உலகையே கலங்க வைத்துக் கொண்டிருக்கின்றன. இப்போர்களினால் வாழ்வே ஒரு சோககீதமாகிவிட்டது. இப்போர்களை எவ்வளவு விரைவில் ஒழிக்க முடியுமோ அவ்வளவு விரைவில் ஒழித்துவிட வேண்டும். அதன்ப பின்தான் போரொழிந்த சமத்துவ சமுதாயம் பூக்கும். அதைப் பூக்க வைக்கும் பணியில் எழுத்தாளன் முன்னோடியாகத் திகழ வேண்டும் என்ற கருத்தை உலகின் புகழ்பெற்ற பேனா மன்னர்கள் என் மனதில் தோற்றுவித்தனர்.

பிரெஞ்சுப் புரட்சி கண்ட ரூசோ, வால்டயர் தொடக்கம் மார்சிம் கோர்க்கி, எஹ்ரென்பேர்க் வரைக்கும் எல்லா நல்ல எழுத்தாளர்களும் இந்தச் செய்தியையே எனக்குக் கூறினர். பேர்னாட் ஷாவின் எழுத்துகளும் இன்றைய பேட்ரண்ட் ரசல் எழுத்துகளும் கூட சமுதாய முன்னேற்றத்துக்குரிய பிரச்சினைகளுக்குத் தீர்ப்பு காணும் பணியை அலட்சியம் செய்துவிடவில்லை. வங்கக் கவிஞர் தாகூரும், தமிழ்க் கவிஞன் பாரதியும் தாம் வாழ்ந்த சமுதாயத்தின் உடனடிப் பிரச்சினைகளைத் தீர்க்கும் பணிக்குத் தமது பேனாக்களை அர்ப்பணம் செய்ய மறக்கவில்லை. உலகப் பண்பாட்டுப் பாடிய பாரதிதாசனும் சமுதாய ஊழல்களைச் சுட்டெரிக்கும் பணிக்குத் தன்னாளான சேவையைச் செய்திருக்கின்றான்.

தேசாபிமானியில் வெளிவந்த மேற்படி கட்டுரை எண்பதுகளில் மொறட்டுவைப் பல்கலைக் கழகத் தமிழ்ச் சங்க வெளியீடான நுட்பம் சஞ்சிகையிலும் மீள்பிரசுரம் செய்யப்பட்டது. அ.ந.க மறைந்தபொழுது அவரது மேற்படி கட்டுரையினைப் பிரசுரித்த தேசாபிமானி போர்ச்சுவாலை அமரச் சுடராகியது என்றொரு ஆசிரியத் தலையங்கத்தினையும் வரைந்து தனது அஞ்சலியினைச் செலுத்தியது.

அ.ந.க.வின் இறுதிக்காலம்

அவரது இறுதிக்காலத்தில் அவர் நோயுற்றிருந்த வேளை வில்லிசைக் கலைஞரும், நாடக இயக்குநருமான லடீஸ் வீரமணியும், அவரது மனைவியும். எழுத்தாளர் செ.கணேசலிங்கனும் அவரை நன்கு பராமரித்தார்கள். அவரது இறுதிக்காலம் பற்றிய நினைவுகளை செ.கணேசலிங்கன் தனது குமரன் சஞ்சிகையில் கட்டுரைத் தொடரொன்றில் பதிவு செய்துள்ளார். அத்துடன் அவரது வெற்றியின் இரகசியங்கள் நூலைத் தமிழகத்தில் வெளியிடவும் உதவி செய்திருக்கின்றார். அ.ந.க.வின் மதமாற்றம் நூலுருப்பெற்றபோது அவரது குமரன் அச்சகத்திலேயே அச்சிடப்பட்டது.

அ.ந.க பற்றி மேலும் சில...

எழுத்தாளர் அந்தனி ஜீவா அவர்களின் அ.ந.க பற்றிய தினகரன் கட்டுரைத்தொடரான சாகாத இலக்கியத்தின் சரித்திர நாயகன் அ,ந.க.வை இன்றுள்ள தலைமுறையும் அறிவதற்கு வழி செய்த முக்கிய தொடர். எழுத்தாளர் அகஸ்தியரும் பல கட்டுரைகளில் அ.ந.க பற்றிய தனது நினைவுகளைப் பகிர்ந்திருக்கின்றார். எழுத்தாளர் டொமினிக் ஜீவாவும் மல்லிகை சஞ்சிகையின் அட்டைப்படமாக அ.ந.கவை வெளியிட்டிருப்பதுடன், அவர் பற்றிய கட்டுரைகளை வெளியிட்டு நினைவு கூர்ந்துள்ளார். தனது நேர்காணலொன்றில் தான் படித்த பல்கலைக்கழகமாக அ.ந.க.வைக் குறிப்பிட்டிருக்கின்றார். பதிவுகள்.காம் அ.ந.கந்தசாமியை இன்றுள்ள தலைமுறை அறிவதற்கு முக்கிய பங்காற்றியுள்ளது. அவரது கவிதைகள், கட்டுரைகள், கதைகள் பலவற்றை வெளியிட்டுள்ளதுடன், மனக்கண் நாவலைத் தேடியெடுத்துத் தொடராக் வெளியிட்டதுடன் மின்னூலாகவும் வெளியிட்டுள்ளது.

இவையெல்லாம் ஈழத்துத் தமிழ் இலக்கியத்தில் அறிஞர் அ.ந.க.வின் அளப்பரிய பங்களிப்பினைத் தெளிவாக விளக்கி நிற்கின்றன. இன்று அ.ந.க பற்றிக் குறிப்பிடும் ஒரு சில எழுத்தாளர்கள் அவரது பன்முக ஆற்றலின் பின்னணியில் அவரை ஆய்வு செய்ய மறந்து சில சமயங்களில் மேலோட்டமாகக் கருத்துகளைத் தெரிவிப்பது அவர்களது அறியாமையின் விளைவே. அ.ந.க. பற்றிய போதிய ஆய்வுகளின்றி அவர் பற்றிய கருத்துகளைத் தெரிவிப்பதை தவிர்த்து விடுவது நல்லது. “அ.ந.க. ஈழத்தமிழிலக்கிய உலகின் பல்வேறு துறைகளிலும் ஈடுபட்டு மற்றையோரால்

மறுக்கவோ மறைக்கவோ முடியாதளவிற்கு சிறந்த தொண்டாற்றினார். நவீன தமிழ்க்கலை வடிவங்களாக உருவகித்த சிறுகதை, நாவல், விமர்சனம், மொழி பெயர்ப்பு என்பனவற்றுடன் நாடகம், கவிதை ஆகிய துறைகளையும் புத்தாற்றல் நிரம்பிய ஆக்ரோஷ வேகத்துடன் சமூகச் சீர்கேடுகளைக் கெல்லி எறியவும், புதியதோர் உலகு அமைக்கவும் ஏற்றகருவிகளாக்கினார்" என்று குறிப்பிடும் செம்பியன் செல்வன் இவரைப்பற்றிய உண்மையான மதிப்பீடு பல் துறைகளையும் தழுவியதாகவிருந்தாலன்றி முழுமையடையா" வென்று குறிப்பிடுவதை மேற்படி அரைகுறை ஆய்வாளர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். அத்துடன் இது பற்றிய தனது வேதனையினை "அ.ந. கந்தசாமி சுமார் நாற்பது சிறுகதைகள் வரையே எழுதியிருப்பார் என அவரின் நெருங்கிய இலக்கிய நண்பர்களால் அறியவருகின்றது. அவை யாவும் ஆங்காங்கே அவர் பணியாற்றிய பத்திரிகைகளிலும், கையெழுத்துப் பிரதிகளிலும் சிதறிக்கிடக்கின்றன. அவரது சிறுகதைகள் இன்றுவரை தொகுப்பாக வெளிவராதிருப்பது விந்தையான வேதனையே, அவரால் உற்சாகப் படுத்தப்பட்டும் உயர்த்தப்பட்டும் உருவாக்கப்பட்ட இலக்கியவாணர்கள் எத்தனையோ பேர் இன்று ஈழத்தமிழிலக்கிய உலகில் மட்டுமல்லாது சமூக நிலையிலும் உயர்நிலை பெற்று விளங்குகின்றனர். அவர்களோ அன்றிப் பிற பதிப்பங்களோ, அ.ந. கந்தசாமியின் படைப்புக்களை நூலுருவில் கொணர முயலவேண்டும். அவர் தன் ஆயுட்காலம் முழுவதும் தொடர்பு கொண்டிருந்த இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கமாவது இவ்விடயத்தில் ஆழ்ந்த கவனம் செலுத்தவேண்டும்" என்றும் வெளிப்படுத்துவார்.

அன்றைய காலகட்டத்தில் வெளிவந்த தமிழமுது என்னுமோர் சிற்றிதழின் ஆசிரியரான சரவணையூர் மணிசேகரன் தனது "அ.ந.க.வும் அவர் சிருஷ்டிகளும்" என்னும் ஆசிரியத் தலையங்கத்தில் அவர் சாகும்போதும் இலக்கியப் பெருமூச்சு விட்டுத்தான் இறந்தார். அவரைச் சந்திக்கப் போனால் எந்த நேரமும் எங்களோடு பேசிக்கொள்வது தமிழ் இலக்கியம்தான். அவர் தமிழ் இலக்கியத்துக்காக தன் உடல், பொருள், ஆவி அத்தனையும் அர்ப்பணித்தார். ஏ குளிகைகளே! சமூகத்துக்காக அவர் சிருஷ்டித்தவர். அவர் சிருஷ்டிகளை புத்தக உருவில் கொண்டுவர முயற்சிக்காத இந்த நன்றி கெட்ட சமூகம் போலவா நீ அவர் உயிரைப் பிடித்து வைக்காது துரோகம் செய்து விட்டாய்? தமிழமுது அழுகின்றாள். அவள் கண்களில் நீர் துளிக்கின்றது. அவர் படத்தை (அமரர் அ.ந.கந்தசாமி) முகப்பில் தாங்கியபின்புதான் அவள் மனம் கொஞ்சம் சாந்தியடைகின்றது என்று சாடியிருப்பார்.

இவ்விதம் ஈழத்துத் தமிழ் இலக்கிய உலகிற்குப் பல்துறைகளில் அரிய பங்காற்றிய அறிஞர் அ.ந.க.வின் படைப்புகளை இனியாவது இன்றைய தமிழ் உலகு வெளிக்கொணர முயற்சிகள் செய்ய வேண்டும். ஆங்காங்கே சிதறிக் கிடக்கும் அவரது படைப்புகளைச் சேகரிக்க உதவினாலே அதுவேயொரு மிகப்பெரிய சேவையாகவிருக்கும்.

### அ.ந.கந்தசாமியின் வெளிவந்த நூல்கள்

1. வெற்றியின் இரகசியங்கள் (உளவியல் கட்டுரைகள்) - பாரி நிலையம் , தமிழ்நாடு, 1968
2. மதமாற்றம் (நாடகம்) - தேசிய கலை, இலக்கியப் பேரவை

பதிவுகள்.காம் அமேசன் - கிண்டில் பதிப்புகளாக வெளியிட்ட மின்னூல்கள்

1. மனக்கண் (நாவல்) - அமேசன் கிண்டில் மின்னூல் பதிப்பு. பதிவுகள். காம் வெளியீடு.
2. எதிர்காலச்சித்தன் பாடல் - அமேசன் கிண்டில் மின்னூல் பதிப்பு. பதிவுகள். காம் வெளியீடு.
3. நான் ஏன் எழுதுகிறேன்?: அ.ந.கந்தசாமியின் கட்டுரைத் தொகுப்பு! - - அமேசன கிண்டில் மின்னூல் பதிப்பு. பதிவுகள்.காம் வெளியீடு.

### நூலுருப்பெறாத நாவல்கள்

1. மனக்கண் (தினகரனில் வெளிவந்த நாவல் - நூலாக இன்னும் வெளியாகவில்லை. ஆனால் மின்னூலாக வெளிவந்துள்ளது. பதிவுகள் இணைய இதழிலும் தொடராக மீள்பிரசுரமாகியுள்ளது.
2. நாநா (மொழிபெயர்ப்பு, பிரெஞ்சு எழுத்தாளரான எமிலி சோலாவின் புதினம், சுதந்திரனில் அக்டோபர் 21, 1951 முதல் ஆகத்து 28, 1952 வரையில் மொத்தம் 19 அத்தியாயங்கள் வெளிவந்துள்ளன).
3. சங்கீதப் பிசாசு (சிரித்திரனில் வெளிவந்த சிறுவர் தொடர் புதினம்). இதன் அத்தியாயங்கள் முழுமையாகக் கிடைக்கவில்லை.
4. களனி வெள்ளம் (நாவல் ) - மலையகத் தமிழரை மையமாகக் கொண்ட நாவல். இந்நாவலின் மூலப்பிரதியை எழுத்தாளர் செ.கணேசலிங்கன் வைத்திருந்தார். 83 ஜூலைக் கலவரத்தில் அதனை அவர் இழந்து விட்டது மிகப்பெரிய இழப்பு.

### உசாத்துணைப்பட்டியல்


1. சாகாத இலக்கியத்தின் சரித்திர நாயகன் - அந்தனி ஜீவா (தினகரன் தொடர்)
2. அறிஞர் அ.ந.கந்தசாமியின் பன்முக ஆளுமை! - வ.ந.கிரிதரன் (இலக்கியப் பூக்கள் தொகுப்பு 1)
3. நான் ஏன் எழுதுகிறேன்? - தேசாபிமானி பத்திரிகையில் அ.ந.க.வின் மறைவையொட்டி மீள்பிரசுரமான கட்டுரை.
4.ஈழத்துத் தமிழ்ச் சிறுகதை மணிகள் - செம்பியன் செல்வன்
5. தமிழமுது சஞ்சிகையின் ஆசிரியத் தலையங்கம்
6. தேன்மொழி கவிதை இதழ் 1955. எழுத்தாளர் வரதர் வெளியிட்டது.
7. வெற்றியின் இரகசியங்கள் - அ.ந.கந்தசாமி , பாரி நிலையம்
8. மதமாற்றம் (நாடகம்) - அ.ந.கந்தசாமி , எழுத்தாளர் கூட்டுறவுப் பதிப்பகம் , 1989
9. அ.ந.கந்தசாமியின் படைப்புகள் பற்றிய செல்வி ஜுவானா (யாழ் பல்கலைக்கழகம்) ஆய்வுக்கட்டுரை.
10. கவிதை - கந்தனுடன் சில கணங்கள் (வீரகேசரி) - சில்லையூர் செல்வராசன்.
11. அ.ந.கந்தசாமியின் மனக்கண் நாவல்! ஓர் அறிமுகம்! - வ.ந.கிரிதரன் (முகரம், பதிவுகள்)
12. பஞ்சாட்சர சர்மாவின் பஞ்சாஷரம் (நூல்)
13. அ.ந.க.வின் கட்டுரைகள், கவிதைகள், கதைகள் வெளியான பதிவுகள்.காம்
14.1951இல் அ.ந.க சுதந்திரனின் ஆசிரியப்பீடத்திலிருந்தபோது எழுதிய கட்டுரைகள், கவிதைகள் , மொழிபெயர்ப்பு நாவல்




# ‘மைக்’ மோகன்கள்!

பேரறுஞர் கல்லாநிதி கியூறியஸ் ஜி

கழிஞர் மனுஷ்யபுத்திரன் சமீபத்தில் மேடைகளில் உரையாற்றுகிறவர்கள் தரும் துன்பங்கள் குறித்து பொங்கிக் குமுறியிருந்தார். தன் மேல் மையல் கொண்ட பெண் ஒருவர் தன் கிறங்க வைக்கும் பேச்சைக் கேட்கக் காத்திருந்து சலித்துப் போய், எழுந்து போன கடுப்பில், அந்தக் காதலை நிறைவேற முடியாமல் தடுத்தாட் கொண்ட, ‘இன்னும் ஒன்றை மட்டும் கூறிக் கொண்டு, எனது உரையை முடித்துக் கொள்ள விரும்புகிறேன்’ என்று முப்பத்தி ஏழாவது தடவையாக உறுதிமொழிவழங்கியஒருநாவலரேறு பற்றிக் கொதிப்படைந்திருந்தார்.

அது நேர முத்திரை குத்தப்பட்ட கவிதையா, குறிப்பா என்பது ஞாபகம் இல்லை.

அதனால் என்ன? குறிப்பாக இருந்தால், வரிகளை முறித்து, வாசித்த நேர முத்திரையைக் குத்திக் கொள்ள வேண்டியது தான்.

அந்தக் காதலி கிடைக்காமல் போனதால் அவருக்கும், இதயம் எல்லாம் சுக்குநூறாகி பெரிய பாதிப்பு எதுவும் நிகழ்ந்து விடவும் போவதுமில்லை.

அந்த முன்னூற்றி ஏழாவது காதலிக்காக ஒரு நினைவுக் கவிதையை எழுதி விட்டு, முன்னூற்று எட்டாவதற்கு நேர முத்திரையை தூக்க வேண்டியது தான்.

ஒரு காதல் கிடைக்க வேண்டித் தவம் இருக்கிறவர்களும், ஒரே ஒரு காதலை வைத்துக் கொண்டு அல்லல்படுகிறவர்களும் அவருடைய கவிதைகளைத் தூக்கிக் கொண்டு அலைவது, என்னைப் போன்ற வேலி பாயும் வேங்கைகளுக்குச் சிரிப்பாகத் தான் இருக்கும்.

அதுவும் சரி தான்.

நாங்கள் கும்பிடா விட்டாலும்...

கிருஷ்ணருக்காக ஒரு மதமே இருக்கிறது.

கிடைத்த அரிய சந்தர்ப்பத்தை நழுவ விடக் கூடாது என்பதற்காகவே, பேச நினைத்ததை எல்லாம் பேசிமுடிக்காமல் இறங்காத அளவுக்கு இங்கே மைக் மீது மோகம் கொண்ட மோகன்கள் ஏராளம்.

மோகிகள் பெரும்பாலும் குறைவு தான்.

இப்படி நீட்டி முழக்குகிறவர்கள் குறித்து ஒரு மொக்கை ஜோக் உண்டு.

மேடையில் பேசிக் கொண்டிருந்தவருக்கு, அவருடைய மனைவி KISS என்று துண்டு எழுதி அனுப்பியதால் அவர் பேச்சை பாதியில் நிறுத்தியதாக ஆங்கில ஜோக் ஒன்றுண்டு.

Keep It Simple, Stupid!.

இந்த துன்பம் எங்கள் புலன் பெயர்ந்த தமிழர்களின் மேடைகளில் தான் என்று தான் நாளிது வரை நினைத்திருந்தேன். இந்த வியாதி ஒட்டுமொத்த தமிழர்களுக்குமானது தான் போலிருக்கிறது.

தமிழ்நாட்டில் மேடைகளில் நிகழும் இந்தத் துன்பியல்

> “தமிழர்களுக்கு கடனையோ மைக்கையோ கொடுக்கக் கூடாது.
>
> ‘தாறம், தாறம்’ என்று சொல்வார்களே தவிர, தரவே மாட்டார்கள். கொடுத்த நாங்களே கெஞ்சி மன்றாடி வாங்கினால் தான் உண்டு.
>
> அதிலும் கொடுத்த Money ஐ திரும்ப வாங்க முடிந்தாலும், மைக்கை வாங்குவது என்பது தலையால் மண் கிண்டும் முயற்சி.”

சம்பவங்கள் எல்லாம் அது பற்றி வரும் ஊடகச் செய்திகளில், எடிட்டர்களால் வெட்டிக் கபளீகரம் பண்ணப்பட்டிருக்கக் கூடும் என்பதால், புலன் பெயர்ந்த எனக்கு அந்தச் செய்திகள் ஹலாலாகவே இருந்தன.

இந்த துன்பத்தினால் தான் முன்பு ஒரு முறை அதை ஒரு மேடையிலேயே சொல்லியிருக்கிறேன்.

தமிழர்களுக்கு கடனையோ மைக்கையோ கொடுக்கக் கூடாது. 'தாறம், தாறம்' என்று சொல்வார்களே தவிர, தரவே மாட்டார்கள். கொடுத்த நாங்களே கெஞ்சி மன்றாடி வாங்கினால் தான் உண்டு.

அதிலும் கொடுத்த Money ஐ திரும்ப வாங்க முடிந்தாலும், மைக்கை வாங்குவது என்பது தலையால் மண் கிண்டும் முயற்சி.

இதை எங்கே சொன்னேன் என்றால்...

நான் ஆசிரியராக இருந்த தாயகம் பத்திரிகையில் எழுதிய எழுத்தாளர் ஒருவரின் சினிமா விமர்சனங்கள் அடங்கிய, காலச்சுவடு வெளியிட்ட, புத்தக வெளியீட்டு விழா ஒன்றில் பேச அழைத்திருந்த போது சொன்னேன்.

(அகழ் மின்னிதழுக்கு வழங்கிய நேர்காணலிலும் சொல்லியிருக்கிறேன். 'நானும் ஒரு யாழ்ப்பாணி. நான் சொல்ல வேண்டியதைச் சொல்லி முடிக்கும் வரைக்கும் மைக்கைத் திருப்பித் தர மாட்டேன்!')

அழைத்த போது கூட, புத்தகம் சினிமா பற்றியது, நான் புத்தகம் பற்றிப் பேச மாட்டேன், நீண்ட உரையாக இருக்கும் என்று சொல்லியும் இருந்தேன். அதற்கான நீண்ட தயாரிப்புகளோடு, ஒரு வெற்றிகரமான சினிமாவிற்கு என்ன அம்சங்கள் எல்லாம் இருக்க வேண்டும் என்பது பற்றிய உரை ஒன்றை நிகழ்த்தியிருந்தேன்.

ஆனால், எனக்கு சபைப் பண்பு தெரிந்திருக்கவில்லை.

வெளியீட்டு விழாவிற்கு அழைத்தால், அந்த எழுத்தாளரை, அவர் தான் உலகத்தில் சிறந்த எழுத்தாளர், அடுத்த இயல் விருது அண்ணனுக்குத் தான் கொடுக்கப்பட வேண்டும் என்று புகழ்ந்திருக்க வேண்டும். அதைத் தவிர வேறு எதையும் பேசுவதற்காக அங்கு யாரும் அழைக்கப்படுவதில்லை.

"ஆனால், எனக்கு சபைப் பண்பு தெரிந்திருக்கவில்லை.

வெளியீட்டு விழாவிற்கு அழைத்தால், அந்த எழுத்தாளரை, அவர் தான் உலகத்தில் சிறந்த எழுத்தாளர், அடுத்த இயல் விருது அண்ணனுக்குத் தான் கொடுக்கப்பட வேண்டும் என்று புகழ்ந்திருக்க வேண்டும். அதைத் தவிர வேறு எதையும் பேசுவதற்காக அங்கு யாரும் அழைக்கப்படுவதில்லை.

அவ்வாறு புகழ்ந்து பேசிக் கொண்டிருந்தால், அவர்களே சோடாவும் கொண்டு வந்து தருவார்கள்."

அவ்வாறு புகழ்ந்து பேசிக் கொண்டிருந்தால், அவர்களே சோடாவும் கொண்டு வந்து தருவார்கள்.

'இன்னொன்றைக் கூறிக் கொண்டு எனது உரையை முடித்துக் கொள்ள விரும்புகிறேன்' என்று சொல்ல வேண்டிய கட்டாயமும் எல்லாம் இல்லை...

அந்தப் புத்தகத்தை வாசித்திருக்க வேண்டிய கட்டாயம் இல்லாத மாதிரி!

மற்றும்படி, வெளியீட்டு விழாவுக்கான அழைப்புகள் எல்லாமே முதல் பிரதிக்கு மொய்யோடு வரும்படியான அழைப்புகள் தான்.

மொய் எழுதுவோருக்கு, வடையும் டீயும் இலவசம்!

இந்த சபைப் பண்பு தெரியாததால், அவர்களே நான் பேசிய பேச்சை இடையில் நிறுத்தும்படி துண்டைக் கொண்டு வந்து தந்ததோடு, எனது பேருரை பாதியில் இனிதே நிறைவு பெற்றது.

எனவே, துண்டு அனுப்பி முடித்து வைக்கும் பாரம்பரியத்தின்படி, அந்தப் பேருரை இடையில் நிறுத்தப்பட வேண்டி வந்ததற்கு, அந்த எழுத்தாளருக்கு முன்பிருந்தே, தாயகத்தில் நான் ஆங்கிலம் மற்றும் பிறமொழி உலக சினிமா பற்றிய விமர்சனங்கள் எழுதியதைப் பற்றியும், அவரும் அவரது நண்பரும் என்னைக் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, நான் ஆர்வத்தோடு பார்க்கும் கலைப்படங்களுக்கு அவர்களை அழைத்துச் சென்றதையும் பற்றிச் சொன்னதும், பத்தகத்தில் இருந்த, சினிமா பற்றிய பெரும் கருத்து, தரவுப் பிழை ஒன்றைச் சுட்டிக் காட்டியதும், தாயகத்தில் எழுதிய அந்த எழுத்தாளர் தனது புத்தகத்தில், தான் எழுதிய வெளியீடுகளின் பெயர்களில் தாயகத்தைத் தவிர்த்திருந்ததைச் சொன்னதும் காரணமாக இருக்கலாம் என்பதை நம்பாமல் இருக்க விரும்புகிறேன்.

மற்றும்படி, என்னைப் பற்றித் தெரிந்து, நான் எதைப் பற்றிப் பேசுவேன் என்றும் தெரிந்து, எதைப் பற்றிப் பேச வேண்டும் என்று அறிவுறுத்தலும் இன்றி, யுத்தம் முடிந்த பின்னால், நண்பர் கற்சுறா நடத்திய 'பன்முகவெளி' நிகழ்வில், இந்த யுத்தம் முடிந்த பின்னால் இலங்கைத் தமிழினம் என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றி நிகழ்த்திய உரை தான் இன்றைக்கு அமசோன் கிண்டில் வெளியீடாக வந்திருக்கும், 'அழிந்தும் அழிய மறுக்கும் யாழ்ப்பாணம்!'.

அந்த நீண்ட உரையை, குறைந்த அளவிலாயினும் வந்திருந்தோர் ஆர்வத்தோடும் பொறுமையோடும் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

இதைத் தான் யேசு கிறிஸ்து சொன்னார்.

பன்றிகளின் முன் முத்துக்களை வீசாதீர்கள்!

இருந்தாலும், அந்தப் புத்தக வெளியீட்டில் ஆற்றிய (அல்லது ஆற்ற முற்பட்ட!) உரை, பின்னர் தாயகம் இணையத் தளத்தில்

வெளியாகியிருக்கிறது. பின்னால் அபத்தத்திலும் அதைப் பிரசுரிப்பதாக உத்தேசம்.

கூத்துகளில், காட்சி மற்றும் உடைமாற்றங்களின்போது, திரைக்கு முன்னால் நின்று பொழுதைப் போக்க வைக்கும் கதைக்கு சம்பந்தமில்லாத விதூஷகர்கள் நேரத்தைப் போக்கடிக்க வருவதுண்டு.

பின்னர், அரசியல் மேடைகளில் பிரசாரப் பீரங்கிகள் ஆங்காங்கே மேடைகளில் குண்டு வீச்சு நடத்தி, சிறுவர்களான நாங்கள் மணலில் தூங்கி வழிந்து கொண்டிருக்கும்போது வந்து சேரும் வரைக்கும், சிரிக்க வைக்கும் உள்ளூர் கோவில் மேளங்களை சிறுவயதில் கண்டதுண்டு.

தமிழரசுக் கட்சி மேடைகளில் இதற்காக ஒரு தனி இராணுவப் பிரிவே இருந்தது. அந்தக் காலத்தில் மு.திருநாவுக்கரசு என்று ஒரு சட்டத்தரணி நகைச்சுவையாகப் பேசுவார். உணர்ச்சி கொந்தளிக்கப் பேசி, இரத்தத் திலகம் வைக்க உசுப்பேத்திய மற்றப் பேச்சாளர்கள் பேசியதெல்லாம் பின்னாளில் எனக்கு நகைச்சுவையாகத் தான் தோன்றியது.

மரம் பழுத்தால் வௌவால் வரும்!

எல்லா மேடைகளிலும் இவர்கள் பேசுவது ஒன்றைத் தான்.

அங்கே காவலுக்கு நிற்கும் பொலிசாருக்கு சவால், சிங்களவர்கள் பற்றிய மொக்(கு)கை ஜோக்குகள் என, இந்த யாழ்ப்பாணிப் புத்திசீவிகள் விளாசுவார்கள்.

'கரகோஷம் விண்ணைப் பிளக்கும்!'

நம்புங்கள், நாளை தமிழீழம் மலரும் என்று நம்பத் தொடங்கிய காலம். இந்தப் பேச்சுக்களாலேயே ஐ.நாவில் ஈழம் கிடைக்கும் என்று நம்பிய காலம்.

இன்றைய அண்ணன் காசி கவிதை வேறு பாடுவார். அண்ணி வேறு உளம் உருகவும் பாடுவார்.

முப்பது வயது அண்ணன் காசிக்காக, முப்பதாண்டு அரசியல் ராஜதுரையைப் பகைத்த அமிர்தலிங்கத்தைக் கொன்ற முப்பது வயதுப் பிரபாகரனுக்கு காசி தற்போது உயிர்ப்பு அளிக்கும் எழுப்புதல் கூட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார் என்பது தான் வரலாற்றின் முரண்நகைச் சுழற்சி!

பின்னர் 'அண்ணை அடிச்சுப் பறிப்பார்' ஈழத்தில் மைக் மோகன்கள் மறைந்து விட்டனர்.

இத்தனை அண்ணன்மார் கையில் இருந்த மைக்குகள் எல்லாம் ஒரு அண்ணன் கையில் இருந்த துப்பாக்கியைக் கண்டு...

சூரிய தேவனைக் கண்ட பனியன்களாகினர்!

மைக் பிடித்து உசுப்பேத்திய அரசியல்வாதிகள் எல்லாம் ஒன்றில், மண்டையில் போடப்பட்டார்கள். அல்லது மைக்கைக் காணும் போதெல்லாம், பிச்சை வேண்டாம், மைக்கைப் பிடி என்று தலைதெறிக்க ஓடியிருப்பார்கள்.

வாயைத் திறந்தால் வெடி விழும் என்ற நிலையில், மைக்கைக் கொடுத்தாலும், பிச்சை வேண்டாம், நாயைப் பிடி என்று தலைதெறிக்க ஓடுகின்ற நிலை. போராட்டம் நடக்கும் போது யாழ்ப்பாணிக்கு கம்பரசம் பருக்கிய வாரிதி, 'நாங்கள் உயிரைக் குடுத்துப் போராடுறம், உனக்கு கம்பரசம் கேக்குதோ?' என்று மிரட்டி விரட்டப்பட்டதாக கதை.

ஆனாலும், கிட்டு, மாத்தயா, பிரபாகரன் என்று அந்தந்தக் காலங்களில் துப்பாக்கியோடு இருந்தவர்களுக்குப் பாடிப் பரிசில் பெற முடியா விட்டாலும், கொடுத்த மைக்கில் நாலு வார்த்தை சொல்லி, மேடையில் உவந்தளித்த 'தமிழீழ மண் முடிப்போடு' தலை தப்பியது தம்பி...ரான் புண்ணியம் என்று உயிரைக் காத்துக் கொண்டவர்கள் பலர்.

அவர்கள் எல்லாம், 'நீங்களும் ஒருக்கா அண்ணை, தளபதி, பிரதித் தலைவரைப் பற்றி நாலு வசனம் பேசுங்கோ' என்று நீட்டும்போது, மைக்கைத் வாங்கிக் கொள்வதையே அரிகண்ட, எமகண்டத் துன்பமாக நினைத்திருக்கக் கூடும்.

வாய் தவறி எதையாவது சொல்லப் போனால்...

மின் கம்பங்களுக்குக் கீழேயே தான் கூட்டமே நடக்கிறது.

முகாமுக்கு கொண்டு போய் விசாரிக்க வேண்டிய கஷ்டமும் இல்லை.

அந்த மின்கம்பத்திலேயே கட்டி, நெற்றியில் இரத்த திலகமும் வைத்து விடுவார்கள்.

இதனால் அண்ணையின் கையில் துப்பாக்கியும், ஹி... ஹி... தமிழ்ச்செல்வன், பாலேய்ங்கம் கையில் மைக்குமாகத் தான் போராட்டம் நடந்தது!

பிறகு புலன் பெயர்ந்த நாடுகளில் இந்த மைக் மோகம் தனிப் பரிமாணம் எடுத்தது. பாராட்டு விழாக்கள், வெளியீட்டு விழாக்கள், நினைவு தினங்கள் என்றெல்லாம் ஆரம்பித்தன.

விடுதலை பெற்று, வாயைத் திறந்து, சுதந்திரக்காற்றை சுவாசிக்கும் நிலைக்கு யாழ்ப்பாணிகள் வந்தார்கள்.

பிறகென்ன? வாங்கிய கடன் மாதிரி, மைக்கும்...!

> அவர்கள் எல்லாம், 'நீங்களும் ஒருக்கா அண்ணை, தளபதி, பிரதித் தலைவரைப் பற்றி நாலு வசனம் பேசுங்கோ' என்று நீட்டும்போது, மைக்கைத் வாங்கிக் கொள்வதையே அரிகண்ட, எமகண்டத் துன்பமாக நினைத்திருக்கக் கூடும்.
>
> வாய் தவறி எதையாவது சொல்லப் போனால்...
>
> மின் கம்பங்களுக்குக் கீழேயே தான் கூட்டமே நடக்கிறது. முகாமுக்கு கொண்டு போய் விசாரிக்க வேண்டிய கஷ்டமும் இல்லை.
>
> அந்த மின்கம்பத்திலேயே கட்டி, நெற்றியில் இரத்த திலகமும் வைத்து விடுவார்கள்.

ஆனால், புலிவால்கள் எல்லாம் இந்த மைக்குகள் பற்றி அக்கறைப்படாமல் உண்டியலிலேயே கண்ணாக இருந்தார்கள். இதனால் சில கோவில் மேளங்கள் தவிர, அங்கு பேச்சாளர்கள் என்று இருந்ததாக நினைவில்லை.

புலிவால்களும் என்ன வைச்சுக் கொண்டா வஞ்சகம் பண்ணினார்கள்? வாயைத் திறந்தால், பொன்மொழிகள் உதிர்க்கும் இயக்கப் பாணியில் அவர்களும் உரையாற்ற புறப்பட்டால்... பு... என்பதைத் தவிர வேறு எதுவும் வாயில் வந்திருக்காது.

மற்றும்படி, ஒற்றைக் கையை நெஞ்சிலும் மற்றக் கையால் ஹிட்லர் சலூட்டும் அடித்து, தேசிக்காய் தலையருக்கு பிரமாணிக்க உறுதிமொழி எடுக்கும் போது மட்டும் இவர்கள் வாயைத் திறந்திருக்கக் கூடும்.

இந்த இலக்கியச் செம்மல்களின் விழாக்கள் தான் கொஞ்சம் சூடு பிடித்து, தலைவர் பெண் கவர்ந்த புங்குடுதீவைப் ‘பெண் கொடு தீவு’ ஆக்கிய திரு மிருக கிருபானந்த வாரியார்கள் கொஞ்ச நாள் அமர்க்களம் செய்தார்கள்.

இதில் இந்த பெண் கொடு தீவு விற்பன்னர்களின் வரலாறு எனக்குத் தெரிந்ததால் இந்தக் காலக் கொடுமையை மறந்து போக முடியவில்லை.

புலிகளால் அமிர்தலிங்கம் கொல்லப்பட்ட போது, கனடாவில் அஞ்சலிக் கூட்டம் நடந்தது. தாயகம் முதலாவது இதழ் அப்போது தான் வெளிவந்திருந்தது. எனவே, நானும் விழாவுக்குப் போயிருந்தேன். புலிக் காடையர்கள் பின்னால் நின்று, உரை நிகழ்த்தியவர்களையும், அஞ்சலி செலுத்த வந்தவர்களையும் மிரட்டும் தோரணையில் வில்லனின் அடியாட்கள் போல பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அங்கேயும் மைக் பிடித்தல் என்பது அரிகண்ட, எமகண்டமாகத் தான் இருந்தது. வெளியே வந்தால் அடி விழும் என்ற நிலைமை தான் அன்றைக்கு இருந்தது.

மைக் மோகன்களுக்கு ஊரில் மண்டையில் போடப்படலாம் என்ற நிலைமை, கனடாவில் இருட்டடி விழலாம் என்ற நிலைமைக்கு வந்து முடிந்தது.

அங்கே பேசிய அமிர்தலிங்கத்தின் நெருங்கிய சகாவான ஒரு சட்டத்தரணி, ‘என் தலைவன் இறந்து விட்டான், அவனை நினைத்து அழுவதற்க உரிமை தாருங்கள்’ என்று அழுதபடி அந்தக் காடையர்களை யாசித்த கொடுமையும் என் கண்களை விட்டு இன்னமும் அகலவில்லை.

அங்கே பேசிக் கொண்டிருந்த தமிழரசுக் கட்சியின் பிரசாரப் பீரங்கியாக இருந்த சட்டத்தரணிகளில் ஒருவர், பின்னால் இருந்த காடையர் கூட்டத்தைப் பார்த்து, ‘இளைஞர்களே, உங்களைத் தான் நம்பியிருக்கிறோம்’ என்று மன்றாட்டமாகக் கேட்டுக் கொண்டார்.

பின்னாளில் அதே அவர் தான், ‘பெண் கொடு தீவு’ பெருமை பேசிக் கொண்டிருந்தவர்.

இப்படி மேடைக்குத் தகுந்த மாதிரி பிளேட்டை மாற்றிப் பாடும் மைக் மோகன்களும் உளர்.

இந்தக் கொடுமைகள் நடந்து, கடைசியில் தங்கள் தலைவன் இறந்ததைக் கண்டு கேட்டு, அழ முடியாமல் விக்கித்துப் போய், ஒப்பாரி வைத்ததையும் காணும் பாக்கியம் எங்களுக்கு எல்லாம் கிடைத்தது.

இந்த வரலாற்றுச் சுழற்சி முரண்நகையையெல்லாம் வைத்து தாயகம் இணையத் தளத்தில் ஏடு இட்டோர் இயல் கூட எழுதியிருந்தேன்.

தமிழ்நாட்டில் மைக்கைத் தூக்குவது என்பது இப்படியெல்லாம் தலை போகிற பிரச்சனையாக பெரும்பாலும் இருப்பதில்லை.

கட்சிகள் மாற்றுமுகாம் கோட்டைகளுக்குள் தாக்கப் பட்டிருக்கலாம். சில நேரங்களில் வெட்டுக் கொத்துகளில் கூட முடிந்திருக்கலாம்.

இலக்கியக் கூட்டங்களில் தர்ம அடி நடந்ததாகக் கேள்விப்பட்டதுண்டு.

இலக்கியகாரர்கள் ஆச்சே!? தனித்து அறிக்கை விடப் பயந்து முகாம்களின் பாதுகாப்புக்கு மத்தியில், மத்திய குழு கூட்டறிக்கை விட்ட பழக்கமாக இருக்கக் கூடும்.

இப்படி இலக்கியகாரர்கள் மைக்கையோ, ‘டீ குடிக்க பத்து ரூபா கிடைக்குமா, புரோ!?’ என்று கடனையோ வாங்குவதிலோ, ‘இன்னொன்றை மட்டும் கூறிக் கொண்டு, நன்றி வணக்கம் கூறி விடை பெறும் வரைக்கும் மைக்கைத் தர மாட்டோம்’ என்று சொல்வதிலோ எனக்கு எந்தப் பிரச்சனையும் இல்லை.

அல்லது வந்திருக்கும் ஆர்வலர்களை விட, மேடையில் அதிகமானோர் இருப்பது கூட எனக்குப் பிரச்சனையில்லை.

ஆனால், மைக்கை வாங்கியவுடன் தன்னுடைய அதிமேதாவித் தனத்தை அங்கீகரித்துத் தான் அந்த மைக், ஒரு விருது போல, வழங்கப்பட்டிருப்பது போலவும், தனக்கு எல்லாம் தெரியும், தன்னுடைய பேச்சுக்கு மறுபேச்சில்லை என்பது போலவும் பீலா விடுவது தான் எனக்கு கடுப்பு ஏற்றுகிற விடயம்.

*2023* தமிழ்நாட்டு இலக்கியத் திருவிழா, புத்தகச் சந்தையில், புலன் பெயர் இலக்கியம் பற்றி, எங்கள்

> **இப்படி இலக்கியகாரர்கள் மைக்கையோ, ‘டீ குடிக்க பத்து ரூபா கிடைக்குமா, புரோ!?’ என்று கடனையோ வாங்குவதிலோ, ‘இன்னொன்றை மட்டும் கூறிக் கொண்டு, நன்றி வணக்கம் கூறி விடை பெறும் வரைக்கும் மைக்கைத் தர மாட்டோம்’ என்று சொல்வதிலோ எனக்கு எந்தப் பிரச்சனையும் இல்லை. அல்லது வந்திருக்கும் ஆர்வலர்களை விட, மேடையில் அதிகமானோர் இருப்பது கூட எனக்குப் பிரச்சனையில்லை.**

இலக்கிய மேதகுக்கள் ஆற்றிய உரையைப் பார்த்தேன்.

நான் தானே 'உதெல்லாம் பார்ப்பதில்லை, பார்க்க மாட்டேன்' என்று விரதமோ, வீரசபதமோ பிடிக்காதவன். இதையெல்லாம் பார்க்காவிட்டால், எனக்கு எழுதுவதற்கான கருப்பொருட்கள் எங்கேயிருந்து வரும்?

கொடுக்கப்பட்ட இருபது நிமிடத்தைக் கூடப் பயன்படுத்தாமல், பெருந்தன்மையோடு இரத்தினச் சுருக்கமாப் பேசி முடித்தது அவர்களின் அவையடக்கம் என்றெல்லாம் நீங்கள் வியாக்கியானம் கொடுக்கத் தேவையில்லை.

கையிருப்பு அவ்வளவுதான்.

புலன் பெயர் இலக்கியம் என்றால் நாங்கள் தானே!?
புதிதாகச் சொல்ல எதுவும் இல்லை!

புலன் பெயர் இலக்கியம் பற்றி நல்லதொரு ஆழமான அறிமுகத்தைத் தந்திருக்கக் கூடிய சந்தர்ப்பம் அது. அதை எந்த வித தயாரிப்பும் இல்லாமல் சொதப்பியிருந்தார்கள்.

என்னைப் போல ஒரு பேருரையோடு போயிருந்தால் கூட யாரும் துண்டோடு வந்து தடுத்தாட் கொண்டிருக்க மாட்டார்கள்.

ஏனெனில், புலன் பெயர்ந்த இலக்கியம் அங்கீகாரங் களுக்காகவோ, புளிச்சல் ஏப்பம் விடுவதற்காகவோ தொடங்கப்பட்ட ஒன்றல்ல.

ஒரு இனத்தின் எதிர்காலம் சூனியமாக்கப்பட போகின்றது என்ற உண்மையை, கொலைப் பயமுறுத்தல்களுக்கும் மத்தியில் சொல்வதற்காகத் தொடங்கியது.

விலையாக உயிர்களையும் வாழ்வுகளையும் கொடுத்துத் தான் அதை முன்னெடுக்க முடிந்தது.

அந்த முன்கதைச் சுருக்கத்தை மட்டுமே கொடுத்திருந்தால், உட்கார்ந்திருந்தவர்கள் பிரமிப்போடு இருந்திருக்கக் கூடும்.

அதெல்லாம் இல்லாமல், தங்களை அழைத்தவர்களையும் அவமதித்தது போல, சும்மா போகிற போக்கில் அடித்து விடுவதையெல்லாம் பார்த்துக் கொண்டு கடந்து போக வேண்டிய கட்டாயம் எனக்கு இப்போது இல்லை.

அயோக்கியர்களின் அலப்பறைகள் வரலாறு ஆவதற்கான காரணமாக இனியும் இருக்கப் போவதில்லை.

முப்பது வருடத்தில் அறுபது பிரதிகள் விட்டு இலக்கியம் செய்த ஒருவர், வருடத்திற்கு 52 பிரதிகள் என்று ஐந்து வருடங்களுக்குத் தொடர்ந்து பத்திரிகை, சஞ்சிகை வெளியிட்ட என்னை, ஒரு கம்பியூட்டர் வைத்திருந்த சின்னப் பையன் என்றும், எனக்கு தான் தான் வழி காட்டிய மாதிரியாகவும், பிறகு வழி தவறிய ஆடு மாதிரி வேற மாதிரிப் போய் விட்டது என்றும் அங்கே அவிழ்த்து விட்டார் இல்லையா!?

அது தான் இந்த மைக்கை கையில் ஏந்தியவுடன் அடித்து விடுவதற்கு இந்த மைக் மோகன்களுக்கு கிடைக்கும் துணிச்சல்.

யாழ்ப்பாண மொழியில் சொன்னால்...

எல்லாம் காலம் தான்!

மைக் என்பது தலையை வீங்க வைக்கும் போதைவஸ்து.

தன் நிலை அறியாமல் புலம்பவும் பிதற்றவும் வைக்கக் கூடியது.

> முப்பது வருடத்தில் அறுபது பிரதிகள் விட்டு இலக்கியம் செய்த ஒருவர், வருடத்திற்கு 52 பிரதிகள் என்று ஐந்து வருடங்களுக்குத் தொடர்ந்து பத்திரிகை, சஞ்சிகை வெளியிட்ட என்னை, ஒரு கம்பியூட்டர் வைத்திருந்த சின்னப் பையன் என்றும், எனக்கு தான் தான் வழி காட்டிய மாதிரியாகவும், பிறகு வழி தவறிய ஆடு மாதிரி வேற மாதிரிப் போய் விட்டது என்றும் அங்கே அவிழ்த்து விட்டார் இல்லையா!?
>
> அது தான் இந்த மைக்கை கையில் ஏந்தியவுடன் அடித்து விடுவதற்கு இந்த மைக் மோகன்களுக்கு கிடைக்கும் துணிச்சல்.

அதையும் விட, கேட்பவன் கேனயன் என்ற கணக்கில், கேட்கப் பேரில்லை என்ற நினைப்போடு, இங்கே நாம தான் எல்லாம் போன்ற கதைகளையும் அவிழ்த்து விட வைக்கக் கூடியது.

முன்பெல்லாம் இப்படிப்பட்ட உரைகள் நிகழ்ந்தால், விகடனிலோ, குமுதத்திலோ, வருடத்திற்கு இரண்டு முறை வரும் ஏதாவது ஒரு காலாண்டிதழிலோ, எடிட்டர்களால் வெட்டிக் கபளீகரம் பண்ணப்பட்டு, உப்பு, புளி சேர்த்து 'திரண்டிருந்த இலக்கிய ஆர்வலர்களின் விண்ணை முட்டும் பலத்த கரகோஷங்களுக்கு மத்தியில் புலன் பெயர் இலக்கிய இமயங்கள் பேருரை நிகழ்த்தினார்கள்' என்று செய்தி வந்திருக்க, பிரமித்துப் புல்லரித்துப் போயிருப்போம்.

இப்போது இந்த உருட்டு உல்டாக்களையெல்லாம் உலகின் மறுபக்கத்திலிருந்து நேரடியாகவே பார்க்கும் அளவுக்கு, காலம் மாறி விட்டது என்ற உண்மை இவர்களுக்குத் தெரியவில்லை என்பது தான் இன்றைய பரிதாபம்.

அதெல்லாம் கிடக்க, இன்னொரு விடயத்தை மட்டும் கூறி எனது உரையை முடித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தனது காதல், மொட்டியிலேயே கருகிப் போனதால் துயருற்ற மனுஷ்யபுத்திரன் தனக்கு முன்னால் பேசி, நேரத்தைக் கடத்தியவர்களைத் திட்டியிருந்தார் இல்லையா!?

அவர் தொலைக்காட்சிகளில் திமுக பிரசாரப் பீரங்கியாக வந்து அருள் பாலிப்பதைப் பற்றி இணைய உடன்பிறப்பு ஒன்று பதிவிட்டிருந்ததை, எனது பேஸ்புக் அன்பு ஒன்று பகிர்ந்திருந்ததை பேஸ்புக்கில் பார்த்தேன்.

'அத்தனை திமுக பேச்சாளர்களும் நிதானம் தவறி கருத்து சொல்றாங்க. இந்த மனுஷ்யக் கவிஞர் வந்தாலே ஒரே கத்தல் தான்.. ஆரோக்கியமான விவாதம் இல்லை.'


ஆக, கவிஞர்களுக்குக் கூட, மைக் கிடைத்தால் அது போதை மட்டுமல்ல, கழி பேருவகை தான்.

நன்றி, வணக்கம்!










# உலகெங்கும் அமசோனில்....

| | |
|---|---|
| இந்தியாவில்... | www.amazon.in |
| அமெரிக்காவில்... | www.amazon.com |
| கனடாவில்... | www.amazon.ca |
| இங்கிலாந்தில்... | www.amazon.co.uk |
| ஜேர்மனியில்... | www.amazon.de |
| பிரான்சில்... | www.amazon.fr |
| நெதர்லாந்தில்... | www.amazon.nl |
| அவுஸ்திரேலியாவில்... | www.amazon.com.au |
| இத்தாலியில்... | www.amazon.it |

## ஜோர்ஜ் இ.குருஷ்சேவ்
## என்ற வார்த்தையைத்
# தேடுங்கள்...
# கண்டடைவீர்கள்!